
17

# பல்சுவை விருந்து



கலைமாமணி

டாக்டர் ந.சுப்புரெட்டியார்

# பல்சுவை விருந்து

'அருங்கலைக்கோன்' 'ஸ்ரீ சடகோபன் பொன்னடி'
'வைணவ இலக்கிய மாமணி', கலைமாமணி 'ஆய்வுத் தமிழ் அரசு',
'தமிழ் வாகைச் செம்மல்' 'தமிழ்ச் செம்மல்', 'பொதுமறைச் செம்மல்'
பேராசிரியர்

**டாக்டர் ந. சுப்புரெட்டியார்**

M.A., B.Sc., L.T., Vidwan, Ph.D., D.Lit

(1) வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்
தமிழ் இலக்கியத்துறை செ.ப.க.

(2) மதிப்பியல் இயக்குநர் தெற்கு
தென்கிழக்கு ஆசிய நாடுகளின்
மரபுவழிப் பண்பாட்டு நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகம்

புதிய இலக்கு புதிய தடம்

**நிவேதிதா பதிப்பகம்**

எண். 1, 3-ஆவது மாடி, புதூர் 13-ஆவது தெரு,
அசோக் நகர், சென்னை - 600 083.
போன் : 23 71 90 10

PALSUVAI VIRUNDHU

*by*

N. SUBBU REDDIAR ©

RS. 65.00

First Edition 2002

*Published by*

NIVETHITHA PATHIPPAGAM
No 1, 3rd Floor,
Pudhur 13th Street, Ashok Nagar,
Chennai - 600 083.
Ph: 2371 90 10

*Laser by*

SRI SATHYA SAI GRAPHICS
Chennai - 17.

*Wrapper designed by*

NAGARAJ

*Printed at*

J.M. PROCESS & PRINTS
Chennai - 600 005.

# இந்நூலாசிரியர் பற்றி S.K. இராமராசன்[1]

மாறுபா டில்லா இலக்கியம் வளர
மாண்புறும் அறிவியல் வளர
நூறுநூல் தந்தார்; இன்னும்பன் நூல்கள்
நுட்பமாய் வரைந்திட உள்ளார்;
கூறுபா டுற்ற அகத்தெழு நினைவுக்
குமிழிகள் உணர்வினில் சமைத்தார்;
தேறுசீர் சான்ற அப்பெரு நூற்குள்
சிந்தனைச் செல்வங்கள் உளவால்!

சிரிக்கச் சிரிக்கப் பகருப மானத்தால்
சிந்த னைக்குமெட் டாத பொருளினை
விரித்துக் காட்டித் தெளிவிக்க வல்லவர்
வெகுளி யோடு பகையினைச் சாடுங்கால்
எரிக்கும் காண்டவத் தீயொப்பர் என்னினும்,
இதயம் மேவும் அமைதியைக் காப்பவர்;
அரிக்கும் வஞ்சகம் சற்றும் புகுந்திடா
ஆண்மை மிக்கவர்; பண்புறு வானவர்!

1. திரு S.K. இராமராசன் (கம்பராமன்) கம்பன் நிலையம்,
12 சுப்பிரமணியபுரம் திருவரங்கம்,திருச்சிராப்பள்ளி - 620 006

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. *(குறள்-423)*



இந்திய அரசின் திட்டச் சிறப்புக்குழு உறுப்பினர்
டாக்டர். K.**வேங்கட சுப்பிரமணியம் அவர்கள்**

---

1. 'அறிவு அறங் காக்கும்' என்ற தாம் படைத்த நூலால் புகழைப் பெற்ற பெரும் பேராசிரியப் பெருந்தகை.


முன்னைய தமிழகக் கல்லூரிக் கல்வித் துறை இயக்குநரும், முன்னைய பாண்டிச்சேரி மத்திய பல்கலைக்கழக முதல் துணை வேந்தரும் இந்திய அரசின் திட்டச் சிறப்புக் குழு உறுப்பினருமாகிய டாக்டர் K. வேங்கட சுப்பிரமணியம் அவர்கட்கு,

அன்புப் படையல்

ஒப்பரும் புகழ்சால் வள்ளுவர் குறளில்
உவப்புடன் தோய்ந்தவர் என்றும்
செப்பமார் கல்வித் துறையினை உயர்த்தும்
செம்மலார் புதுவைமா நிலத்தின்
ஒப்பரும் சீர்சால் பல்கலைக் கழகத்
துயரிய நற்றுணை வேந்தர்
சுப்பிர மணியம் என்றுல கோதும்
தூயவர்க் குரியதிந் நூலே.

# அணிந்துரை

## (அரிமா துரை, சுந்தரராஜுலு)



'தமிழ்ச்செம்மல்', 'கலைமாமணி', 'ஆய்வுத் தமிழரசு', 'பொதுமறைச் செம்மல்', 'தமிழ் வாகைச் செம்மல்' பேராசிரியர் ந. சுப்புரெட்டியார் அவர்கள் எண்ணற்ற நூல்களை எழுதி, மக்கள் மத்தியிலே பெரும் நன் மதிப்பை பெற்றவர். ஏறத்தாழ 120 நூல்களுக்கும் மேல் எழுதிய இவர் ''பல்சுவை விருந்து'' என்ற நூலினைத் தமது பட்டியலில் இணைத்துள்ளார். தனது 87 வயதிலும் தளரா உழைப்போடு இடையறாது தமிழ்ப்பணி ஆற்றிவரும் இவர், இந்த நூலின் அணிந்துரையை எழுத என்னைப் பணித்துள்ளார். நான் புத்தகங்கள் நிறைய படிப்பவன் என்றாலும், இப்படிப்பட்ட பணி எனக்குப் புதியது. முயன்று இருக்கிறேன். அண்ணா நகர்த் தமிழ்ச்சங்கத்தின் தலைவராக இருக்கும் இந்நூலாசிரியர், அச்சங்கத்தின் செயலாளராக உள்ள என்னிடம் இப்பொறுப்பை ஒப்படைத்திருப்பது நான் பெற்ற பெரும் பேறாகக் கருதுகிறேன். 'பல்சுவை விருந்து' என்னும் இந்நூல் 13 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை, ''ஒன்றே குலம் - ஒருவனே தேவன்'', 'வழிகாட்டும் வள்ளுவம்', 'பாவேந்தர் பாடல்களில் படிமங்கள்', 'விண்வெளிப்பயணம்' 'தமிழில் நகைச்சுவை', 'புதுக்கவிதை - சமுதாய நோக்கில்', 'ஔவாமை', 'வரலாறு எழுதுவது எப்படி', 'திருக்குறள் - வாழ்வுச் செல்வம்', 'காமராசர் பற்றிய நினைவுகள்', 'இராஜாஜி பற்றிய நினைவுகள்', 'சாதி ஒழிப்பு', 'வைணவச் சிகரப் பேரொளி' என்பனவாம். பல்வேறு நிலைகளில் தாம் எழுதியதும், பேசிய சொற்பொழிவுகளைத் தொகுத்து இந்த 13 கட்டுரைகளில் வடித்துத் தந்திருக்கிறார்.

---

செயலர், அண்ணாநகர்த் தமிழ்ச்சங்கம், 101 எல்.பிளாக், அண்ணாநகர் கிழக்கு, சென்னை - 600102. தொ.பேசி. 6633322

சாதிப்பாகுபாட்டினையும், குலப்பாகுபாட்டினையும் வேறு படுத்தி இவை அவரவர்கள் மேற்கொண்ட தொழில் ரீதியாக ஏற்பட்டது என்பதைக் கூறும்போது, சாதிகளை ஒழிப்போம் என்று சொல்லிக்கொண்டே, சாதிகளை அரசே வளர்க்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி இருக்கிறார். சங்க காலத்திலே சமயம் என்பது இல்லை என்று கூறும் ஆசிரியர், ஞானசம்பந்தர், அப்பர் காலத்திலும், ஆழ்வார் பாசுரங்களிலும் சைவ, வைணவ சமய மோதல்கள் இருந்தன என்று விளக்குகிறார். அந்தக் காலத்தி லேயே 'மத மாற்றம்' இருந்ததைக் கூறும் இவர், தாயுமான அடிகள், மற்றும் வடலூர் வள்ளலார் போன்றவர்கள் சாதி சமய எண்ணம் ஒழிய வேண்டும் என்ற தங்கள் ஆதங்கத்தையும் வெளிப்படுத்துவதைக் காட்டுகின்றார். இப்பூசல்களிலிருந்து விடுபட, சாதிக் குழப்பங்களாலும், சமயப் பூசல்களாலும் அலைக்கழிக்கப்பெறும் சமுதாயம் நல்வழிப்பட 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற திருமூலரின் கருத்தினை வலியுறுத்து வதுதான் இன்றைய சமுதாய சீர்கேடுகளினின்றும் மீள்வதற்கு ஒப்பற்ற வழி என்று கூறுகிறார்.

பல்வேறு அறிஞர் பெருமக்கள், புலவர்கள் கூறியதை கூறும் இவ்வாசிரியர் 'வாழ்க்கைக்கு வழிகாட்டும் திருக்குறள்' என்ற கட்டுரையில், சங்கப் புலவர் பரணர் கூறியதையும், மனிதன் பெறவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பொருள்களையும் பற்றி நக்கீரர் கூறியதைப் பற்றியும் குறிப்பிட்டு இருக்கிறார். அனைத்தைப்பற்றிக் கூறிய வள்ளுவர், வீடு பற்றித் தெளி வாகக் குறிப்பிடவில்லை என்று கூறுவோரும் உண்டு. ஆனால்,

"அறனறிந்தேம், ஆன்ற பொருள் அறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்"

என்று திருவள்ளுவ மாலையில் கூறியிருப்பதை இங்கே கையாண்டிருப்பது நமக்கு தெளிவுபெறச் செய்கிறது. திருக்குறளை ஒரு பெட்டகத்தோடு ஒப்பிட்டு விளக்கியிருப்பதும்,

குறளைக் கையாண்டவர்களில் கம்பன், திருத்தக்கதேவர், இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார், புகழேந்தி போன்ற புலவர்கள் முக்கியமானவர்கள் எனக் கூறியிருப்பதும் சிந்திக்கத் தக்கதாகும். திருக்குறள் ஒரு வைட்டமின் மாத்திரைக்கு நிகரானது எனக் கூறும் ஆசிரியர், உரை எழுதுபவர்கள் முன்னுக்குப் பின்னான முரணான கருத்துக்களை கூறுவதற்கு ஆதங்கப்படுகிறார். இருப்பினும் இந்நூல் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைகிறது என்பது மறுக்க முடியாத ஒன்று.

பல்சுவைகளைத் தன்னகத்தே அடக்கியுள்ள பாவேந்தர் பாடல்களில் படிமங்கள் சிலவற்றை - அதாவது - கட்புலப் படிமங்கள், செவிப்புலப்படிமங்கள், சுவைப்புலப் படிமங்கள், நாற்றப்புலப் படிமங்கள், தொடுபுலப் படிமங்கள், இயக்கப்புலப் படிமங்கள், கலவை நிலைப் படிமங்கள், மின்வெட்டுப் போன்ற மணிமொழிப் படிமங்கள் போன்றவைகளைக் குறிப்பிட்டு, அண்டங்கள் கோடி கோடி அனைத்தையும் தன்னகத்தே கொண்ட ஒரு பெரும்புறத்தில் கூத்தாடுகிறது காற்று, அது தென்றலாக உருவெடுப்பதைப் 'பொதிகைமலை விட்டெழுந்து சந்தனத்தின்'..... என்ற பாடலின் மூலம் இப்புலப் படிமங்கள் ஒருங்கே அமைந்திருப்பதை சுட்டிக் காட்டியுள்ளார். மின்வெட்டு போன்ற மணிமொழிப் படிமத்தில், ஆசிரியர் கையாண்டிருக்கும் சொற்களும், கருத்துகளும் மின்வெட்டினைப் போன்று நறுக்குத் தெறித்தாற் போல அமைந்துள்ளது வியக்கத்தக்கதாகும். படிப்போர் உள்ளத்தைக் கொள்ளை கொள்கின்றன என்றால் அது மிகையாகாது.

ஆசிரியர் அடுத்து வானவெளியில் உள்ள மண்டலங்களைத் தெளிவாகச் சொல்லி இராக்கெட்டு எவ்வாறு அமையப்பெறுகின்றது, இயக்கப்பெறுகின்றது போன்ற துல்லியமான விவரங்களைக் கூறி, விண்வெளிப் பயணம் மேற்கொள்பவர்கள் எதிர்நோக்கும் இடர்கள், நெருக்கடிகள் குறித்தும் விரிவாக விவாதிக்கிறார். இக்கட்டுரையைப் படிக்கும் போது ஏதோ நாமே விண்வெளியில் பயணம் செய்வது போன்ற அனுபவம் ஏற்படுகிறது.

சுவை என்றால் உணவு சம்பந்தப்பட்டு ஒருவிதமான உணர்ச்சி என்று தான் இதுகாறும் கருதி வந்துள்ளோம். ஆனால் 'சுவை' என்ற சொல்லுக்கு இவ்வளவு விரிந்த, பரந்த பொருள் உண்டு என்பது இக்கட்டுரையைப் படித்த பின்னர் உணர முடிகிறது. காதலுக்குக் காரணமாகவும், நடிகர்களின் அபி நயத்தின்போது எதிர்ப்படும் 'விபாவம்', 'அநுபாவம்', 'சஞ்சாரி பாவம்' இவைகளெல்லாம். 'ரஸம்' அல்லது 'சுவை' என்று அறியும்போது வியப்படையச் செய்கிறது. எத்தகைய சுவையாக இருப்பினும், அவை சிருங்காரம் (உவகை) கருணம் (அழுகை) வீரம் (பெருமிதம்) ரௌத்திரம் (வெகுளி) ஹாஸ்யம் (நகை) பயானகம் (அச்சம்) பீபத்ஸம் (இழிவரல்) அற்புதம் (மருட்கை) சாந்தம் (நடுவுநிலை) என்ற 9 உணர்ச்சிகளுக்குள்ளேயே பாகு படுத்தியுள்ளனர் என்பதை தெளிவாக எடுத்துக்கூறுகிறார். ஆசிரியர் நகைச்சுவையை 'முறுவலித்து நடுதல்', 'அளவே் சிரித்தல்', 'பெருகச்சிரித்தல்' என்று பாகுபடுத்தித் தக்க விளக்கங்களுடன் கூறியுள்ளார். 'எள்ளல்' பற்றியும், 'இளமை' பற்றியும், 'பேதமை' பற்றியும் 'மடமை' பற்றியும் வரும் நகைச் சுவைகளை சரித்திரச் சான்றுகளுடன் எடுத்துக் கூறியிருக்கிறார். நகைச்சுவையோடு இது நின்றுவிடாமல், சிந்தனைக்கும் விருந்தாக அமைகிறது என்றால் அது மிகையல்ல.

'புதுக்கவிதையை'ப் பொறுத்த வரையில் சமுதாயத்தில் எந்த அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை சுட்டிக்காட்டியுள்ளார். அவர் மேற்கோளாக காட்டியிருக்கும் புதுக்கவிதைகளின் தலைப்புகள், ''சுதந்திரம்'', ''காதல்'', ''ஆட்சிமுறை'', ,''விலைவாசி'', ''கல்லூரிகளின் நிலை'' , ''குடிப்பழக்கம்'', ''விபசாரம்'', ''வறுமை'' போன்றவை சமுதாயத்தில் பிணைந்து நிற்கக் கூடியவைகள். சுதந்திரத்தைப் பற்றிக் கூறும்போது, காந்தி அடிகளின் புன்னகையைப் பற்றி குறிப்பிடுகிறார். காதலைப்பற்றிக் கூறும்போது ''ரோகிணி'' செயற்கோளை காதலியாக உருவகப்படுத்திக் கூறுகிறார். ஆட்சி முறையைப்பற்றிக் குறிப்பிடுகையில் ''தண்டியாத்திரையையும்

தற்போது நடக்கும் ''கிண்டியாத்திரையையும்'' பற்றிக் குறிப் பிட்டு ஒப்புநோக்குகிறார். ''நீ எமர்ஜென்சி பூசாரிக்குத்தான் அடங்குவாயா'' என விலைவாசியைப் பற்றிக் குறிப்பிடுகிறார். ''தன் குடலுக்குத் தானே தீ மூட்டிக் கொள்வதில் அப்படி என்ன போர்க்கால வேகமும் வெறித்தனமும்'' என்ற வரிகளைப் படித்த பின்னரும் ஒருவனுக்குக் குடிக்கத் தோன்றுமா என்ன? விபசாரத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் ''கண்ணகி கல்யாண மண்டபக் கட்டிடத்திற்கு நிதி வசூல் செய்கிறேன்'' என்றும், 'பரத்தைகள்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட கவிதை அடிகள், தரையிலே ஓடும் ரயில்கள் என்ற கவிதைத் தொகுப்பு இவற்றைத் தொகுத்து 'விபசாரம்' என்ற தலைப்பிலே எழுதியுள்ள ஆசிரியர், 'போனது போலீசார் மட்டும்தானா, தோளோடு தோள் இணைந்து நீதியும் நெடும் பயணம் போனது அவரோடு' என்று சொல்லப்பட்ட அடிகள், மாமூல் வாங்குவதை நாசூக்காகவும், நாகரிகமாகவும் குறிப்பிட்டுள்ளார். ''அவர்கள் விடியலின் விரோதி கள், கல்யாணப் பந்தலில் நுழைய முடியாத நித்திய கல்யாணிகள், கண்ணீர் புத்திரிகள்'' என்ற அடிகள், படிப் போரின் நெஞ்சத் தைப் பிழிய வைக்கின்றன. சமுதாயத்தோடு ஒட்டி வருகின்ற இந்தக் கவிதைகள் ஆசிரியரால் தொகுக்கப்பட்டு வெளி வந்திருப்பது உள்ளத்தை உருக வைக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒவ்வாமையைப் (Alergy) பல்வேறு கோணங்களில் சித் திரித்துப் பாமரர்களும் புரிந்து கொள்ளும் அளவிற்கு தொகுத்து தந்துள்ள ஆசிரியர் பாராட்டுக்குரியவர். உணவுப்பழக்க வழக் கங்கள் எவ்வாறு இருக்கவேண்டும், ஒவ்வாமை வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும், வந்திடின் கையாள வேண்டிய முறைகள் என்ன என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

'வரலாறு எழுதுவது எப்படி' என்று இக் கட்டுரையைப் படித்த பின் தெளிவடைபவர்கள் ஏராளம். சிலர் எழுதும் வரலாறு, வரலாறாகவே இருப்பதில்லை என்பதும் மறுக்க இயலாத ஒன்று. வரலாற்றில் தான் எத்தனை வகை. தன் - வரலாறு, வாழ்க்கை வரலாறு, மொழி வரலாறு, இலக்கிய

வரலாறு, அறிவியல் வரலாறு, நாட்டு வரலாறு போன்ற தலைப்புகளில் சீரிய கருத்துகளைக் கூறியுள்ளதோடு, பல்வேறு தலைவர்கள், அரசியல் அறிஞர்கள் - காந்தி, நேரு, டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர், இராஜாஜி போன்றவர்கள் எழுதிய தன் - வரலாறு, நாட்டிற்கே வழிகாட்டியாக அமைந்தது என்றால் மிகையல்ல. அதே போன்ற தமிழ்நாட்டில் 'டாக்டர் கலைஞர்' அவர்கள் எழுதிய 'நெஞ்சுக்கு நீதி' என்ற நூல் அவரது வாழ்க்கை வரலாற்றை மட்டுமல்ல, தமிழகத்தின் வரலாற்றையும் விளக்குகிறது என்பது என் கருத்தாகும்.

இந்நூலாசிரியர் பேராசிரியர் முனைவர் ந. சுப்புரெட்டியார் அவர்களும் தன் - வரலாறு 'நினைவுக் குமிழிகள்' (ஐந்து தொகுதிகள்) எழுதியுள்ளார். வாழ்க்கையை எவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதை தெளிவாகக் குறிப் பிட்டுள்ளார். நடந்ததை நடந்தபடியே எழுதுவதுதான் வரலாறு. ஆனால் ஒருசிலர் தங்களுக்குப் பாதகமான செய்திகளை விட்டுவிட்டு, சாதகமான செய்திகளை மட்டும் எழுதுவதை நான் கண்டிக்கிறேன். தமிழ் மொழி வரலாறு எழுதிய சூரியநாராயண சாஸ்திரியும், மொழி வரலாறு எழுதிய டாக்டர் மு.வ. அவர் களும் இங்கே நினைவு கூரத் தக்கவர்கள். ஒவ்வொரு முறையும் ஆட்சிக்கு வருபவர்கள், தங்களுக்கு முன்பிருந்த ஆட்சியாளர் களின் வரலாற்றை மறைத்து எழுதுவதையும் நாம் காண்கிறோம். இவ்வழக்கம் ஒழிக்கப்பட வேண்டும். ஜவகர்லால் நேரு எழுதிய "Discovery of India" என்ற வரலாற்று நூல் இத்தகையவர் களுக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது என்பது கண்கூடு.

2000 ஆண்டுகளுக்கு முன்னர் தெய்வப்புலவர் திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் இன்றைக்கு உள்ள சூழ்நிலைக்கும் பொருத்தமாக இருக்கிறது என்பதில் இருவேறு கருத்துகள் இருக்க முடியாது. இந்நூலாசிரியர் வாழ்க்கைக்கு இன்றியமையா ததான அறிவியல், வேளாண்மை, மருத்துவம், நிலையாமை, அரசியல் போன்ற தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து வாழ்க்கைக்கு அவை எவ்வாறு பயன்படுகின்றன என்பதை விளக்கிக் கூறி

இருக்கிறார். வள்ளுவர் கூறிய இல் வாழ்க்கையை அமைத்துக் கொள்பவர்கள் சீரிய வாழ்க்கைக்குச் சொந்தக்காரர்கள். அதில் இல்லாததே இல்லை என்று சொன்னால் அது மிகையாகாது. அதனால்தான் - மதுரைத் தமிழ்நக்கனார் என்ற சங்கப்புலவர் -

**"எல்லாப் பொருளும் இதன்பால் உளதென்பால்**
**இல்லாத எப்பொருளும் இல்லை"**

என்று கூறியுள்ளார்.

அத்தகைய சிறப்புமிக்க இந்நூல் வாழ்க்கைக்கு வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

கல்விக்கண் திறந்தவர், படிக்காத மேதை என்று அனைவ ராலும் பாராட்டப்பட்ட கர்மவீரர் காமராசரைக் குறித்து ஆசிரியர் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார். தாம் வாய் திறந்து பேசாமல் தன்னைவிட அதிகம் படித்தவர்களிடம் பெற வேண்டிய பணிகளை செவ்வனே பெற்று சீரிய முறையில் ஆட்சி செய்தார். ஏழைபங்காளர் என்று இன்றும் பேசத் தக்க அளவுக்கு மக்களுக்கு நன்மை செய்து வந்தார். மிகச் சிறந்த தேசிய வாதியான இவர், பள்ளி செல்லும் குழந்தைகள் பகலுணவு கிடைக்காமல் கஷ்டப்படுவதை அறிந்து 'மதிய உணவுத் திட்டம்' கொண்டு வந்தார். கோப்புகளை எவ்வாறு பார்த்து, வேண்டிய வர்கள், வேண்டாதவர்கள் என்ற பாகுபாடு இன்றி, உதவ வேண்டியவர்களுக்கு எவ்வாறு உதவினார் என்பதை இந்நூலாசிரியர் விளக்கியிருப்பது மற்றவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய ஒன்று. அத்தகைய தன்னலம் கருதாத, தனிச் சிறப்பு வாய்ந்த இவரது வாழ்க்கை மற்றவர்களுக்குப் பாடமாக அமை யட்டும்.

இராஜாஜி அவர்களோடு தமக்கிருந்த தனிப்பட்ட நெருக் கத்தை நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இராஜாஜியைப் பொறுத்த வரையில், அவர் ஒரு தலைசிறந்த நிர்வாகி, தேசபக்தர், நகைச்சுவையோடு பேசுவதில் வல்லவர். அழிவை நோக்கி சென்ற காங்கிரசைக் காப்பாற்றுவதற்காகவே, முதலமைச்சர்

பதவியை ஏற்றவர். விடுதலை அடைந்த இந்தியாவின் முதல் கவர்னர் - ஜெனரலாகப் பதவியேற்றார். தமது கொள்கைக்கு நேரெதிர் கொள்கைகளைக் கொண்ட, பெரியார், அண்ணா இவர்களின் நெருங்கிய நண்பர். நட்புக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்கள். இராஜாஜி அவர்கள் மரணப்படுக்கையில் இருந்தபோது, கண்களில் நீர் மல்க தந்தை பெரியார் அவர்கள் படுக்கை அருகில் அமர்ந்திருந்த காட்சி உள்ளத்தை உருக்கு வதாய் இருந்தது. அண்ணா அவர்கள் ஆட்சி பொறுப்பேற் பதற்கு முன் தந்தை பெரியார் மூதறிஞர் இராஜாஜி போன்ற வர்களிடம் ஆசி பெற்றதை மறக்க முடியுமா? இவர் முதல்வராக இருந்தபோது அரசியல் வாதிகள் தலையீட்டை வெகுவாகக் குறைத்து, தலைமைச் செயலக வராண்டாவைச் சுத்தமாக வைத்திருக்க ஆணை பிறப்பித்தது இவரது நேர்மைக்குச் சான் றாகும். இவரைப்போன்று தொலைநோக்குப் பார்வையோடு அனைவரும் செயல்பட்டால் தமிழகம் முன்னேற்றப்பாதையில் செல்லும் என்பதில் ஐயமில்லை.

'சாதிகள் இல்லையடி பாப்பா' என்ற பாரதியின் வாக்கும், 'சாதி இரண்டொழிய வேறில்லை' என்ற முதுமொழியும் இன்று கடைபிடிக்கப்பட வில்லை என்பது கண்கூடு. ஆசிரியரும் தமது ஆவேசமான கருத்துக்களை வெளியிட்டுள்ளார். சாதியை ஒழிப்போம் என்று ஒருபுறம் கூறும் அரசு, மறுபக்கம் சாதியின் பெயரால் பள்ளி, கல்லூரிகளில் சேர்த்தல், வேலைவாய்ப்பு அளித்தல், பதவி உயர்வு அளித்தல் போன்ற காரியங்களில் ஈடு படுவதைச் சுட்டிக்காட்டியுள்ளார். ஆசிரியர் குறிப்பிட்டதைப் போல, தெருக்களில் சாதிப் பெயரை நீக்குவதில் ஏற்படும் குளறுபடிகள், பத்திரப்பதிவில் சாதிப்பெயர் வைப்பது வேடிக்கை. இதைவிடக் கொடுமை, தம்பெயரோடு 'ரெட்டியார்' என்று சேர்ந்திருப்பதால், அவர் அறக்கட்டளை துவங்க அனுப்பிய ரூ. 25,000/-ஐ ஒரு பல்கலைக்கழகம் திருப்பியனுப்பியது என்பதை எண்ணும் போது எந்தளவுக்கு சாதி வெறியர்கள் இருக்கிறார்கள் என்பதை வேதனையோடு குறிப்பிடுகிறார். அனைத்து அரசியல்

கட்சிகளும் சாதியின் பெயரால் இயங்குவதைக் கண்ட ஆசிரியர், தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் சாதி ஒழிபிற்காகப் போராடியதை சுட்டிக்காட்டுகின்றார். இந்நிலை மாற, மக்கள் தெளிவுபெற வேண்டும், சாதியின் பெயரைச் சொல்லி ஆதாயம் தேடுபவர்களை ஒழிக்க வேண்டும் என்பது என் அவா.

இந்நூல், சிறந்த கல்வியாளரும், தமிழக அரசின் கல்வித்துறையின் முன்னாள் முதல் இயக்குநரும், புதுவைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தருமான டாக்டர். கி. வேங்கடசுப்பிரமணியன் அவர்கட்கு அன்புப் படையலாக அர்ப்பணிக்கப்பட்டிருப்பது சாலச்சிறந்த ஒன்றாகும். இந்திய அரசின் திட்டக் குழு உறுப்பினராக தற்போது பணியாற்றும் இவர், காமராஜர் கொண்டு வந்த 'மதிய உணவுத்' திட்டத்திற்கு கால்கோள் நாட்டியவர். இவரது அறிவுரையின் பேரில்தான் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கல்வித்துறையில் படிப் படியாக உயர்ந்து தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துக் கொண் டிருப்பவர். எந்தக் கருத்தையும் வெளிப்படையாக கூறும் இவர், அரசியல் இலாபத்திற்காக தம்மை மாற்றிக் கொள்ளாத ஒரு நேர்மையான அதிகாரியாக இருந்தார். மிக நகைச்சுவையாகப் பேசும் இவர், தீர்க்க சிந்தனையோடு, தெளிவான கருத்துகளைக் கூறுவதில் வல்லவர். இந்நூல் இவர் பெயரில் அர்ப்பணம் செய்யப்பட்டிருப்பது, நூல் ஆசிரியர் திரு. சுப்புரெட்டியார் அவர்கள் இவர்பால் கொண்டுள்ள மதிப்பும், மரியாதையும் எத்தன்மைத்தது என்று காட்டுகிறது. இரு பெரியாரும் பல்லாண்டு வாழ்ந்து பல்துறைப் பணிபுரிய என் அன்பு வாழ்த்துகள்.

அண்ணாநகர் கிழக்கு
சென்னை - 600 102

**- துரை சுந்தரராஜுலு**

# நூல் முகம்

துடித்தலோர் மகனை தந்தைஈண்டு அடித்தால்
தாயுடன் அணைப்பள்; தாய் அடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன்; இங் கெனக்குப்
பேசிய தந்தையும் தாயும்
பொடித்திரு மேனி அம்பலத் தாடும்
புனிதநீ ஆதலால் என்னை
அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்
அம்மைஅப் பா!இனி ஆற்றேன்[1]

*- இராமலிங்க வள்ளல்*

**'பல்சுவை விருந்து'** என்ற இந்நூல் பல்வேறு சந்தர்ப் பங்களில் ஆழ்ந்த சிந்தனையுடன் எழுதப் பெற்ற **பதின்மூன்று** கட்டுரைகளின் தொகுப்பாகும். 'ஒன்றேகுலம் ஒருவனே தேவன்' என்பது முதல் கட்டுரை; 'வைணவசிகரப் பேரொளி' என்பது இறுதிக் கட்டுரை, எழுதப் பெற்ற சந்தர்ப்பங்கள் அந்தந்த கட்டுரையின் கீழ்க் குறிக்கப் பெற்றுள்ளன.

இலக்கிய ஆய்வு, அறிவியல், வள்ளுவர் பெருமான் கருத்துக் கருவூலம், சுவை பற்றிய கருத்து, சீர்திருத்தம், புதுக்கவிதை, பெரியார்கள் பற்றிய நினைவுக் குறிப்புகள் ஆகிய பல்வேறு பொருள்களைப் பற்றிய கட்டுரைகள் கொண்டு இலங்குவதால் **'பல்சுவை விருந்து'** என்ற திருநாமம் பெற்று வாசகர்களிடையே உலா வருகின்றது. கட்டுரைகள் தனித்தனிப் பொருளைத் தாங்கி முடிவு பெறுவதால் படிப்போர் எதை வேண்டுமானாலும் எடுத்துப் படித்து ஒவ்வொரு கட்டுரையைப் படித்தலால் முழு மனநிறைவு பெறலாம். வாயினால் உண்ணப் பெறும் விருந்து புலன்கள்மூலம் மனத்திற்கு எட்டி மகிழ்ச்சி தரும்; மனத்தினால் நேரே உண்ணப்படும் இக்கட்டுரை விருந்து நேரே மனத்திற்கு மகிழ்வூட்டும். முன்னைய விருந்து தெவிட்டும்; பின்னைய விருந்து தெவிட்டாது.

அறையில் 'அறிதுயிலுடன்' உறங்கிக் கிடந்த இந்த நூலின் கைப்படியை தமிழ்ப்பணியே தெய்வப் பணி என்ற குறிக் கோளை முன் வைத்துப் பணியாற்றி வரும் நிவேதிதா பதிப்பகம் அன்புடன் ஏற்று அச்சு வடிவத்தால் அம்பலத்திற்குக் கொணர்ந்து நாடெங்கும் நடையாடவிட்டமைக்கு சத்துவ குணமும் இறையுணர்வும் இயல்பாகக் கொண்ட பதிப்பக அதிபர் திரு. எஸ்.ஆர். சுவாமிநாதன் அவர்கட்கும் அவருடன் இணைந்து சிறப்புடன் பணியாற்றும் திருமதி தேவகி அவர்கட்கும் என் அன்பு கலந்த நன்றி என்றும் உரியது.

இந்த நூல் அச்சாகும் போது மூலப்படியுடன் பார்வைப் படியை ஒப்பிட்டுத் திருத்தம் செய்து உதவிய என் அபிமான புத்திரி டாக்டர் **மு.ப. சியாமளாவுக்கு** என் ஆசி கலந்த நன்றி என்றும் உரியது.

இந்த நூலுக்கு அரியதோர் அணிந்துரை வழங்கியவர் **அரிமா துரை சுந்தர ராஜுலு** அவர்கள் தமிழக அரசில் பல்வேறு நிலைகளில் சிறப்புடனும் திறமையுடனும் பணியாற்றி (1960-1977) நற்புகழ் ஈட்டித் தமிழ் நாடு சட்டமன்றச் செயலகத்தில் இணைச் செயலராக ஓய்வு பெற்றவர். IAS ஆகியிருக்க வேண்டியவர்; அது கிட்டாதது தீயூழே. எனினும் IAS அதிகாரியை விடப் பன்மடங்கு திறமை வாய்க்கப் பெற்றவர் என்பதை அரசும் அறியும்; மக்களும் அறிவர். அரசுப் பணியிலிருக்கும் போதே மக்கள் தொண்டே மகேசுவரன் தொண்டாக மதித்துப் பணியாற்றியவர். ஓய்வு பெற்றபின் அரிமாசங்கம், அண்ணாநகர் நல்வாழ்வு மன்றம், சின்மயா நற்பணிமன்றம், ஓய்வூதியப் பெருமக்கள் மன்றம், அண்ணாநகர் தமிழ்ச்சங்கம் போன்ற பல்வேறு நிறுவனங்களில் வாழ்நாள் உறுப்பினராக இருந்து கொண்டு பல்வேறு நிலைகளில் நற் பணியாற்றிப் புகழ் ஆரங்கள் சூட்டப்பெற்றவர். அண்ணாநகர் தமிழ்ச்சங்க செயலாளராகப் பணியாற்றிய குறுகிய காலத்தி லேயே இவர்தம் ஒப்பு உயர்வற்ற தன்னலமற்ற அற்புதப் பணி அறிஞருலகத்தையே மருள வைத்து விட்டது. ஓரிலட்ச ரூபாய் சங்கத்திற்குச் சொத்தாகச் சேர்த்த திறம் அனைவரையும்

வியப்படையச் செய்து விட்டது. வயது முதிர்ந்து தளர்ச்சியுற்ற அடியேனைப் பல இடங்கட்கும் இட்டுச் சென்ற உதவி என் ஆயுள் உள்ளவரை மறக்க ஒண்ணாதது. இத்தகைய திறமை மிக்க ஒல்லும் வகையெல்லாம் உவப்புடன் பணியாற்றி வருபவரும் அறிஞர் உலகின் பாராட்டுதலைப் பெற்றவரும் இறையன்பும் பண்பாடும் மிக்க இந்தப் பெருமகனாரின் அணிந்துரை பெற்றது இந்த நூலின் பேறு; அடியேனின் பேறுங்கூட. அணிந்துரை வழங்கிய பெருமகனாருக்கு என் உளங்கனிந்த நன்றி என்றும் உரியது.

டாக்டர் **கி. வேங்கட சுப்பிரமணியன்** அவர்களை அறியாத தமிழர்களே இலர். பல்வேறுவகைப் பதவிகளில் இருந்து செயலாற்றும்போது விருப்பு வெறுப்பற்று, சாதி சமய வேறுபாடுகளைக் கருதாது 'பணியே பரமன் பணித்த தெய்வப் பணி' என்று கருதி ஆற்றிவந்ததைத் தமிழகம் நன்கு அறியும்; ஏன்? பாரத பூமியே தெளிவாக அறியும். மாவட்டக் கல்வி அதிகாரியாகப் பதவியேற்று (1950களில்) படிப்படியாக பதவிகளில் உயர்ந்து கல்வித்துறை இயக்குநராகப் பணியாற்றிய நாளிலிருந்து அடியேன் நன்கு அறிவேன். காமராசர் ஆட்சியில் தாமரைச் செல்வர் **நெ.து. சுந்தரவடிவேலு** அவர்களுடன் இணைந்து பணியாற்றியபோது உயர்நிலைப் பள்ளி வரை இலவசக் கல்வி, சீருடை - மதிய உணவுத் திட்டங்களைச் செயற் படுத்தி ஆற்றிய அற்புதப் பணியை நாடாளுமன்றமே போற்றிப் புகழாரம் சூட்டியதை நாடே நன்கு அறியும். அக்காலத்தில் ஒரு சிலவற்றில் அடியேனையும் இணைத்துக் கொண்டார். அடுத்து பாண்டிச்சேரி மத்தியப் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பதவியேற்றுப் பணியாற்றிய போது அதனை நாடே போற்றும் வகையில் பணியாற்றிப் படிப்படியாக அதனைப் பன்முக வளர்ச்சியடையச் செய்து இந்திய நாட்டின் கவனத்தை ஈர்க்கச் செய்ததை நாம் அறிவோம். இந்தப் பல்கலைக் கழகம் தொடங்கிய நாள்தொட்டு அடியேனைப் பல்வேறு குழுக்களில் பொறுப்புகளைத் தந்தமையால் இவர்தம் செயலாற்றும் திறனை நேரில் கண்டு மகிழ அடியேனுக்கு வாய்ப்பு இருந்தது. வேங்கட மேய விளக்கின் திருவருள் என்று

கருதி அடியேனால் இயன்றவரை அவருடன் ஒத்துழைத்து உவப்புடன் பணியாற்றி மகிழ்ந்தேன். சிறுவயது முதற்கொண்டே அடியேன் ஆற்றிய பல்வேறு பொறுப்புள்ள பணிகளை ஆற்றும் போது அடியேனின் பொதுநலப் போக்கினைக் கவனித்தவராதலால் அடியேனுக்குப் பல குழுக்களில் இடம் தந்து பணியாற்றச் செய்தார். இவர்தம் தெய்வப் பணி உலகளாவிய நாடுகளும் பெற்று புகழாரங்களை ஈட்டியுள்ளன. இவற்றால் பல்வேறு விருதுகளும் இவரை அடைந்து சிறப்பெய்தின. இறையன்பும் பண்பாடும் மிக்க இந்தப் பெரியாரிடம் மதிப்பும் மரியாதையும் கொண்ட அடியேன் இந்த அரிய நூலை அப்பெருமகனாருக்கு அன்புப் படையலாக்கி மகிழ்கின்றேன். இவருடைய ஆசியால் இந்நூலும் அனைத்துலக நாடுகளிலும் உலாப்போகும் என் நம்பிக்கை என்றும் என்பால் உண்டு.

பல்வேறு காலத்துப் பல்வேறு நிலையில் பல்வேறு பொருளைப் பற்றி சிந்திக்கவும் அச்சிந்தனைகட்கு உருவங் கொடுக்கவும் பேரருள் சுரந்து கருணை காட்டிய அருட்பெருஞ்சோதியை உள்ளத்தில் நிறுத்தி அஞ்சலி செய்து அமைகின்றேன்.

**இருளைக் கெடுத்தென் எண்ணமெலாம்**
**இனிது முடிய நிரம்புவித்து**
**மருளைத் தொலைத்து மெய்ஞ்ஞான**
**வாழ்வை அடையும் வகைபுரிந்து**
**தெருளைத் தெளிவித் தெல்லாஞ்செய்**
**சித்தி நிலையைச் சேர்வித்தே**
**அருளைக் கொடுத்தென் தனைஆண்டோய்!**
**அடியேன் உன்றன் அடைக்கலமே.**[2]

- இராமலிங்க வள்ளல்

**"வேங்கடம்"**
AD - 13, அண்ணாநகர்
சென்னை - 600 040
10-12-2002

**ந. சுப்புரெட்டியார்**
**(வள்ளலார் அடிப்பொடி)**

---

2. ஆறாம் திருமுறை - அடைக்கலம் புகுதல் - 11

# உள்ளுறை

அன்புப் படையல்

அணிந்துரை

நூல் முகம்

| | | |
|---|---|---|
| 1. | ஒன்றே குலம் - ஒருவனே தேவன் | 1 |
| 2. | வழிகாட்டும் வள்ளுவம் | 10 |
| 3. | பாவேந்தர் பாடல்களில் படிமங்கள் | 31 |
| 4. | விண்வெளிப் பயணம் | 51 |
| 5. | தமிழில் நகைச்சுவை | 66 |
| 6. | புதுக்கவிதை - சமுதாய நோக்கில் | 87 |
| 7. | ஒவ்வாமை நிலை | 120 |
| 8. | வரலாறு எழுதுவது எப்படி? | 132 |
| 9. | திருக்குறள் - வாழ்வுச் செல்வம் | 148 |
| 10. | காமராசர் பற்றிய நினைவுகள் | 158 |
| 11. | இராஜாஜி பற்றிய நினைவுகள் | 166 |
| 12. | சாதி ஒழிப்பு | 176 |
| 13. | வைணவ சிகரப் பேரொளி | 192 |

பின்னிணைப்பு

பயன்பட்ட நூல்கள்

பேராசிரியர் டாக்டர் சுப்புரெட்டியாரின் நூல்கள்

# பதிப்புரை

தொன்மை வாய்ந்த தமிழ் இலக்கிய ஆய்வாள ராகவும், சமூக, சமய, சமுதாய வித்தகராகவும் ஒரே நேரத்தில் பரிமளித்து பன்னெடுங் காலமாக எழுத்துப் பணியாற்றிவரும் கலைமாமணி பேராசிரியர் **ந. சுப்புரெட்டியார்** அவர்கள் தனது எண்ணக் களஞ்சியங்களை வண்ணக் கலவை யாக்கி 'பல்சுவை விருந்து' என்ற பெயரில் இங்கே தொகுத்துத் தந்துள்ளார்.

தனது 87 வயதிலும் எழுத்து யாகத்தைத் தொடர்ந்து நடத்தி வரும் அவரது இந்த நூல் பல்வேறு கோணங்களில் பார்வையைப் பதித்து, புதிய பரிமாணங்களில் சுவைபடத் தயாராகி யுள்ளது.

சங்கத் தமிழ் இலக்கியங்களிலிருந்து, சமய சச்சரவுகளில் தொடர்ந்து - மூதறிஞர் ராஜாஜி, பெருந் தலைவர் காமராஜர் வரையிலான அனைத்து சிறப்பம்சங்களையும் உள்ளடக்கிய இந்த நூல் தமிழ் கூறும் நல்லுலகிற்கு மிகப் பெரிய பயனளிக்கும் என்பது திண்ணம்.

இந்த நூல் வெளிவர உதவிய நிவேதிதா பதிப்பகத்தின் பங்குதாரர் திருமதி தேவகி இராமலிங்கம் அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

அன்புடன்

**எஸ்.ஆர்.- சுவாமிநாதன்**

# பல்சுவை விருந்து

## 1. ஒன்றே குலம் ஒருவனே தேவன்*

"சாதியிலே மதங்களிலே, சமயநெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகில்
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல் அழகலவே[1]"

என்று இராமலிங்க அடிகள் அவர்காலத்து மக்களை நினைந்து கழிவிரக்கம் கொள்ளுகின்றார். அவர்காலத்துச் சமுதாயத்தை விட இன்றைய சமுதாயம் மிகவும் சீர்கெட்டு சீரழிந்து கிடக்கின்றது. இத்தகு சீரழிவு மேலோங்கி நிற்பதற்கு முதல் காரணம் சாதி மத வேற்றுமை தான். இதைப் பூண்டோடு அழிப்பதில் இன்றைய நம் அரசியல் தலைவர்களும், அரசியல்வாதிகளும் பொது நோக்குடன் செயல் பட்டாலே இந்த 'சாதி' என்ற சொல்லை தமிழ் அகராதியிலிருந்து நீக்கி விடலாம்.

இந்தச்சாதி என்ற சொல் எப்படித் தமிழ் மொழியில் தமிழ் இலக்கியங்களில் புகுந்தது என்பது அறியக் கூடவில்லை. பண்டைய தொல்காப்பிய இலக்கணத்தை ஊன்றிப்படிப்போர் ஆசிரியர் பிறப்பினால் சாதிப்பிரிவு செய்யவில்லை என்றும், செய்தொழில் வேற்றுமையால்தான் அப்பிரிவு அமைந்தது என்றும் அறிவர். தொல்காப்பியத்தில் அகத்திணை யொழுக லாற்றுக்குரிய மக்களை வகைப்படுத்திக் கூறிய நிலையிலும் புறத்திணையொழுகலாற்றில் வாகைத்திணைப் பகுதிகளை விரித்துரைத்த நிலையிலும் மக்களை ஆசிரியர் தொல்காப்பியனார் அவர்கள் வாழும் நிலத்தாலும் அவர்கள் மேற்கொண்ட தொழில் வகையாலும் பகுத்துரைத்தனரேயன்றிப் பிறப்பு வகையால் அன்று என்பது பெறப்படும்.

---

*மாநாட்டு மலர் ஒன்றுக்கு எழுதியது.

1. 133. புனிதகுலம் பெறுமாறு புகலல் 1

''பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமை யான்'' (972) என்ற வள்ளுவர் வாக்கும் இது பற்றியே என்பதும் ஈண்டு சிந்திக்கத்தக்கது. தொல் காப்பியத்தில் காணப்பெறும் அந்தணர் அரசர், வணிகர், வேளாளர் என்ற குலப் பாகுபாடு (சாதிப்பாகுபாடு அன்று) காணப்படுகின்றது. இப்பாகுபாடு அவரவர்கள் மேற்கொண்ட தொழிலால் ஏற்பட்டது.

''சாதி'' என்ற சொல் தொல்காப்பியத்தில் காணப்பெறினும் அது நீரில் வாழும் உயிர்களையே குறிப்பதற்கு ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். ''நீர்வாழ் சாதியுள் அறுபிறப்பு உரிய'' (மரபு 44) ''நீர் வாழ் சாதியுள் நந்தும் நாகே'' (மரபு - 64) என்ற நூற்பாக்களை நோக்கினால் இது புலனாகும். இன்று ''சாதி'' என்னும் சொல் பிறப்பிலேயே வேற்றுமை உண்டு என்பதைக் குறிப்பாக வழக்கில் உள்ளது. ''சாதி மதங்களைப் பாரோம்'' ''ஆயிரம் உண்டிங்கு ஜாதி'' (ஜாதீய கீதம்) என்று பாரதியார் ''சாதி'' என்பதற்குப் பதிலாக ''ஜாதி'' என்பதைக் கையாளு கின்றார். ''சாதி சண்டை வளர்க்க தக்க இதிகாசங்கள்'' என்பது பாவேந்தர் வாக்கு. பிறப்பினால் உயர்வு தாழ்வு உண்டு என்ற கொள்கை தொல்காப்பியர் காலத்தில் தமிழ்நாட்டில் இல்லை. தொழில், ஒழுக்கம், கல்வியறிவு திறமை என்ற இவற்றின் காரண மாகவே வகுப்புப் பிரிவுகள் தோன்றின. (ஆசிரியர் தொல் காப்பியர் சாதிப்பிரிவு செய்யவில்லை என்றாலும் உரையாசிரி யர்கள் சாதிபற்றிய கொள்கையை வற்புறுத்தி எழுதியுள்ளனர்). நாளடைவில் மக்கள் செய்யும் தொழில்களில் சிறுமை பெருமை பாராட்டத் தொடங்கினர். இவையே உயர்வு தாழ்வுகட்கு உறை விடமாயின. வேத உபநிடத சுமிருதிகளும் இவ்வுண்மையை ஒப்புக் கொள்கின்றன. சாதிப் பிரிவுகள் தமிழகத்தில் தாமே தோன்றியனவே யன்றி, யாராலும் புகுத்தப் பெறவில்லை என்றே தோன்றுகிறது. ''நால்வகைச் சாதியை இந்நாட்டினில் நாட்டினீர்'' என்ற கபிலரகவலைச் சான்றாகக் கொண்டு வேண்டாதார்மீது வீண் பழி சுமத்துவது அறிவுடைமையன்று;

அழகுமன்று. இன்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு குலத்தவரும் குலப்புராணம் பாடும் இயல்புடையவராக மாறிவிட்டனர். எனவே, சாதிப்பிரிவிற்கு எந்தஒரு வகுப்பினரும் பொறுப்பல்லர் என்றே தோன்றுகிறது.

ஒரு காலத்தில் சாதிப்பெயரைத் தம் பெயருடன் பின்னொட்டாகச் சேர்த்துக் கொள்ளும் வழக்கம் பெரு வழக்கமாக இருந்தது. இன்று அந்த வழக்கை வெறுக்கும் போக்கு தோன்றியுள்ளது. (என்றாலும் சில சந்தர்ப்பங்களில் வாருங்கள் முதலியார்வாள்'' ''வாருங்கள் அய்யர்வாள்'' என்று மரியாதையாக அழைக்கும் போக்கு அத்தி பூத்தமாதிரி இருந்தும் வருகின்றது.) ''முன்னைய ஓர் அரசின்'' ''சாதி ஒழிப்புக் கொள்கை'' ''விநோதமாகச் செயற்பட்டது. தெருவில் உள்ள பெயர்களின் சாதிப் பகுதியை அழிக்கும் திட்டம் மேற்கொள்ளப் பெற்றது. காஞ்சிபுரத்தில் ஒரு தெரு ''அய்யர் தெரு'' என்றும், பாண்டிச்சேரியில் ஒரு தெரு, ''செட்டித் தெரு'' என்றும் இருப்பதை எவரும் அறிவர். இந்த இடங்களில் சாதிப் பெயரை நீக்கினால் தெருப்பெயர் ''தெருவில்'' தான் நிற்கும். புதிதாக இடத்தைத் தேடி வரும் மக்கள் திண்டாடுவர். ஆனால் இந்த அரசு வாக்காளர் பட்டியலில் சாதிப் பெயர்களை நீக்குவதற்கு ஏன் துணியவில்லை என்பதன் காரணம் வெளிப்படை. இந் நிலையில் ''சாதி'' என்பதற்குப் பதிலாக ''குலம்'' என்ற சொல்லை வழங்குவது பொருத்தமாகும். ஆனால் இந்தக் குலப் பெயரைக்கூட மணிவாசகப் பெருமான்,

**"சாதிகுலம் பிறப்பென்னும் சுழிபட்டுத் தடுமாறும்**
**ஆதமிலி நாயேனை அல்லலறுத் தாட்கொண்டு"[2]**

என்ற பாடலில் வெறுப்பதைக் காணலாம். தாயுமான அடிகள் கூட,

2. திருவா. கண்டபத்து - 5

''சாதிகுலம் பிறப்பிறப்பும் பந்தம் முத்தி
அருவுருவத் தன்மை நாமம்
ஏதுமின்றி எப்பொருட்கும் எவ்விடத்தும்
பிரிவறநின் றியக்கம் செய்யும் சோதியை''[3]

என்று வெறுப்பதைக் காணலாம். இவையெல்லாம் கடந்த நிலை - பரம்பொருள் நிலை - என்ற பேருண்மையை உணர்த்துவதையும் காணலாம். குலம் என்பதை ''மனித குலமாகக்'' கொண்டால் இழுக்கில்லை. சாதி என்பதன் உண்மைப் பொருள். சாதி - ஜாதி, ஜம் - பிறப்பு; ஜனித்தல் - பிறத்தல்; ஜன்மம் - பிறப்பு (வட சொல்)

சங்க காலத்தில் ''சமயம்'' என்ற அமைப்பு இல்லை. கடல் சூழ்ந்த பூமியை நான்கு நிலங்களாகப் பகுத்தும் அந்நிலங்கட்குத் தெய்வங்களை வகுத்தும் போந்ததை,

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்[4]

என்று தொல்காப்பிய நூற்பா குறிப்பிடும். நாளடைவில் இந்திரன், வருணன் வழிபாடு இல்லாதொழிந்தது. இலக்கியங்களில் செவ்வேள், திருமால் (மாயோன்) பற்றிய குறிப்புகளே உள்ளன. பிற பண்பாடு தமிழ்ப்பண்பாட்டுடன் கலக்கத் தொடங்கிய நாள் தொட்டுத் தமிழர் வாழ்வில் மாறுபாடு தென்பட்டது. வீரத்திலும் காதலிலும் ஈடுபட்டிருந்த தமிழர் கருத்தில் ஒழுக்க உணர்ச்சியும் தெய்வ பக்தியும் சிறப்பிடம் கொள்ளலாயின. பௌத்த சமயமும் சமண சமயமும் தமிழ்நாட்டில் செல்வாக்கு பெற்றிருந்தன. இவர்கள் அரசர்களின் செல்வாக்குப் பெற்றுத் தங்கள் மதத்தைப் பரப்பலாயினர். பக்தி இயக்கம் வீறு பெற்றுச் சிறப்புற்றோங்கிய காலத்தில் சைவமும் வைணவமும்

3. தாயுமானவர் பாடல்

4. தொல்.பொருள் - அகத்திணை - 5

புத்துயிர் பெறலாயின. சைவ சமய குரவர்களும் ஆழ்வார் பெருமக்களும் தத்துவம் பொதிந்த தேனினும் இனிய தோத்திரப் பாக்களைப் பாடிக் குவித்தனர். பொதுமக்கள் ஆதரவைப் பெரிய அள்வில் பெற்றனர்.

ஞானசம்பந்தர் காலத்திலும் அப்பரடிகளின் காலத்திலும் சைவ சமயப் பூசல்கள் ஓயாமல் நடைபெற்ற வண்ணம் இருந்தன. மதுரையில் சமணர்கள் கழுவேற்றப்பட்ட வரலாறும் உண்டு. ஆழ்வார் பாசுரங்களிலும் வைணவ சமய மோதல்கள் பற்றிய குறிப்புகளைக் காண்கின்றோம். சைவ - வைணவ பூசல்கள், வைதிக கிறித்தவ மோதல்கள் எங்கும் நிகழ்ந்த வண்ணம் இருந்தன. அத்வைத சண்டமாருதங்கள், தருக்கக் குடாரங்கள், ஆபான நிரசனங்கள், அருட்பா - மருட்பாப் போர்கள் மக்களது அறிவைச் சூறையாடின. சிவஞான முனிவர், அரசஞ் சண்முகனார், ஆறுமுக நாவலர் போன்ற பேரறிஞர் களும் இவ்வித விநோத விளையாட்டுகளில் பங்கு கொண்டனர். வயிரக்குப் பாயங்கள் அமைத்தனர். கண்டன கண்டனங்கள் இயற்றினர். இலக்கணச் சூறாவளிகள் எழுந்தன. தமிழ் நாடெங்கும் வாதீய சிங்கங்களும் பரசமய கோளரிகளும் தருக்கப் புலிகளுமாக நிரம்பிய வண்ண மிருந்தனர். எங்குப் பார்த்தாலும் சொல்மாரிகள் நடைபெற்ற வண்ணமிருந்தன. அறிவு ப்ற்றிய அனைத்திலும் சமயம் கொடுங்கோலாட்சி புரிந்து வந்தது எனலாம். வடமொழி தருக்க சாத்திரங்களும் மெய் விளக்க நூல்களும் இக்கொடுங்கோ லாட்சிக்குத் துணை புரிந்தன. எரிகின்ற நெருப்பில் எண்ணெய் வார்த்தது போன்ற நிலையை உண்டாக்கின. அறிவு விளக்கத்தை நாடிச் சென்றவர்கள் இருட்படலத்தில் சிக்கிக் கொண்டு தத்தளித்தனர். குளிக்கப் போய்ச் சேற்றை வாரிப்பூசிக் கொண்டது போன்ற நிலையை மக்கள் அடைந்தனர்.

**ஆறு கோடி மாயா சக்திகள்**
**வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின.**
**ஆத்த மானார் அயலவர் கூடி**
**நாத்திகம் பேசி நாத்தழும்பேறினர்.**

...... ...... ....... ...... ...... .......
விரத மேபர மாகவே தியரும்
சரத மாகவே சாத்திரம் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களே
அமைவ தாக அரற்றி மலைத்தனர்.
மிண்டிய மாயா வாதம் என்னும்
சண்ட மாருதம் சுழித்தடித் தாஅர்த்து
உலோகா யதம்எனும் ஒண்திறல் பாம்பின்
கலாபே தத்த கடுவிடம் எய்தி
அதிற்பெரு மாயை எனைப்பல சூழவும்[5]

என்று மணிவாசப்பெருமான் காட்டிய சூழ்நிலை இங்கும் காணப் பெற்றது. விதண்டாவாதப் போர்களில் மக்கள் காலம் கழித்தனர். எம்மருங்கும் குதர்க்கமயம்; விதண்டாவாதங்கள். தங்கள் சமயமே உயர்ந்தது என்று வாதமிட்டதற்கு சிவஞான சித்தியார் பரபக்கம் (சைவத்திற்கும்) வேதாந்த தேசிகரின் ''பரமத பங்கம்'' (வைணவத்திற்கும்) எடுத்துக்காட்டுகள்.

வெள்ளையர் ஆட்சியில் கிறித்துவசமயம் செழிப்புற்றது. அரசும் எத்தனையோ சலுகைகள் மதமாற்றத்திற்குக் காட்டின. இன்றும் வெளிநாட்டு அமைப்புகள் மூலம் ஏராளமான பணம் வருவதால் மதமாற்றச் செயல்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே உள்ளன. இந்து சமயத்தினரால் தாழ்த்தப்பெற்றுப் பழிக்கப் பெற்று வரும் அரிசன மக்கள் இதற்குப் பலியாகி வருகின்றனர். இந்த மத மாற்றத்தாலும் சாதி வேறுபாடு ஒழிய வில்லை. அய்யர் - கிறித்துவர், நாடார் - கிறித்தவர், முதலியார் - கிறித்தவர் போன்ற, வேறுபாடுகள் மார்க் கண்டமயம் பெற்றுத் திகழ்கின்றன. இஸ்லாமியர் படையெடுப்புடன் இஸ்லாமிய மதமும் இறக்குமதி ஆகியது. அவர்களும் சில பகுதிகளில் மதமாற்றத்தில் இறங்குகின்றனர். அடிக்கடி கிறித்துவ - இஸ்லாமிய மோதல்கள் இந்து - இஸ்லாமிய சச்சரவுகள்

5. திருவா. போற்றித் திரு அகவல் - அடி 44-57

நடைபெற்ற வண்ணம் உள்ளன. சமயச் சார்ப்பில்லாப் போர்வையைப் போர்த்திக்கொண்டு அரசும் இதில் தலையிடாமல் கையைப் பிசைந்து கொண்டும் ஊமைபோல் பார்த்துக் கொண்டும் வாளா இருக்கின்றது.

நம் நாட்டுத் தருக்கப்பூசல்களையும் பிறவற்றையும் கண்ட தாயுமான அடிகள்,

**கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்,**
**கற்றும்அறி வில்லாத என்**
**கன்மத்தை என் சொல்கேன்? மதியை என் சொல்லுகேன்?**
**கைவல்ய ஞான நீதி**

**நல்லோர் உரைக்கிலோ கர்மமுக் கியமென்று**
**நாட்டுவேன் கர்மம் ஒருவன்**
**நாட்டினா லோபழைய ஞானமுக் கியமென்று**
**நவிலுவேன் வடமொழியிலே**

**வல்லான் ஒருத்தன்வர வும், திரா விடத்திலே**
**வந்ததா விவகரிப் பேன**
**வல்லதமிழ் அறிஞர்வரின் அய்யனே வடமொழியின்**
**வசனங்கள் சிறிது புகல்வேன்**

**வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகைவந்த**
**வித்தையென் முத்திதருமோ?**
**வேதாந்த சித்தாந்த சமரசநன் நிலைபெற்ற**
**வித்தகர்ச் சித்தர் கணமே[6]**

என்று தெளிவாக எடுத்துரைப்பது நன்கு கருதத்தக்கது.

சாதி சமயம் எனும் அளறிலும் சாத்திரச் சேற்றிலும் தான் சிக்கிக் கொள்ளாதிருக்கும் நிலையைத் தான் அறியவில்லையே என்று அங்கலாய்க்கின்றார் வடலூர் வள்ளல்,

---

6. தா.பா. சித்தர்கணம் - 10

சாதிமதம் சமயம் எனும் சங்கடம் விட்டறியேன்
சாத்தி ரம்சே றாடுகின்ற சஞ்சலம்விட் டறியேன்[7]

என்ற பாடற் பகுதியில் இதனைக் காணலாம் பிறிதொரு பாடலில்,

சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தேன்
சாத்திரக் குப்பையும் தவிர்த்தேன்[8]

என்றும், மற்றொரு பாடலில்,

சாதிகுலம் சமயமெலாம் தவிர்த்தெனை மேல் ஏற்றித்
தனித்ததிரு அமுதளித்த தனித்தலைவனம் பொருளே[9]

என்றும், இன்னுமொரு பாடலில்,

சாதிசம யங்களிலே வீதிபல வகுத்த
சாத்திரக்குப் பைகள் எல்லாம் பாத்திரம்அன் றெனவே
ஆதியில்என் உளத்திருந்தே அறிவித்த படியே
அன்பால் இன் றுண்மைநிலை அறிவிக்க அறிந்தேன்.[10]

என்றும் இவற்றினின்றும் தாம் விடுபட்ட நிலையை உணர்ந்து களிப்பெய்துகின்றார்.

சாதிக் குழப்பங்களாலும் சமயப் பூசல்களாலும் அலைக்கழிக்கப் பெறும் சமுதாயத்திற்கு நல்வாழ்க்கை அமைய,

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"[11]

---

7. ஆறாம் திருமுறை - முறையீடு - 7
8. மேலது - ஆன்ம தரிசனம் - 7
9. மேலது - அருள் விளக்க மாலை - 23
10. மேலது - அனுபவ மாலை - 92
11. திருமந்திரம் - ஏழாம் தந்திரம் - கீதோபதேசம் - 3

என்று திருமூலரின் வாக்கே சிறந்த மாமருந்து; மன்பதையை உய்விக்கும் பெருமருந்து, அமைதியுடன் வாழ்க்கை அமைய அறிவிக்கும் அருமருந்து. எல்லாச் சமயத்திற்கும் ஏற்ற சஞ்சீவி மருந்து. சைவர்கள், வைணவர்கள், இஸ்லாமியர்கள், கிறித்த வர்கள் தாம் ஒரே மனித குலத்தைச் சார்ந்தவர்கள் என்று உரிமை கொண்டாடலாம். சைவர்கள் சிவபெருமானைத் தான் தம் தேவன் எனலாம். வைணவர்கள் நாராயணன் ஒருவனே தம் தேவன் என்று சொல்லிக் கொள்ளலாம். இஸ்லாமியர்கள் நபி நாயகம் ஒருவரே தம் தேவன் என்று சாற்றலாம். கிறித்தவர்கள் இயேசுவே தம் தேவன் என்று இயம்பிக் கொள்ளலாம். எவரும் பிறர் தேவர்களை எண்ண வேண்டியதில்லை. பரிகசிக்க வேண்டியதில்லை. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற திருமூலரின் மருந்துக் குளிகையை இவ்வாறு அனுபானம் செய்து பாவிக்கலாம். இன்றைய சமுதாய சீர்கேடுகளினின்றும் மீள்வதற்கு இஃதொன்றே ஒப்பற்ற ஒரே வழி.

# 2. வழிகாட்டும் வள்ளுவம்*

நாம் அனைவரும் இன்று ஈண்டு தமிழ்த் திருநாள் கொண்டாடுவதற்குக் குழுமியிருக்கிறோம். நாடு விடுதலை பெற்ற பிறகு எங்கும் தமிழ் முழக்கம் கேட்கப்படுகிறது. சில ஆண்டுகளாக எங்கும் தமிழ்த்திருநாளைத் தமிழ் மக்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாட ஆரம்பித்திருக்கிறார்கள். தமிழுணர்ச்சி தோன்றியிருக்கிறது. எம் மருங்கும் தமிழ் மணம் கமழ்கிறது. இளைஞர்கள் ஆசையாகத் தமிழ் இலக்கியங்களைப் படிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். கண்கவர் வனப்புடன் பல தமிழ் நூல்கள் வெளி வந்திருக்கின்றன. நாள்தோறும் வெளிவந்து கொண்டுமிருக்கின்றன. இம்மாதிரியாகக் கொண்டாடப்பெறும் தமிழ்த் திருநாட்களில் பல புதிய நூல்கள் அரங்கேற்றப்பட வேண்டும். தமிழ் அறிஞர்கள் புதிய நூல்கள் எழுதவும், தமிழ் மக்கள் அவற்றை அச்சிட்டு வழங்கவும் வாங்கவும் ஆதரவு காட்ட வேண்டும். தமிழ் மக்கள் பெருவாரியாகக் குழுமியுள்ள இத்திருநாளில் தமிழ் மக்களின் வாழ்க்கைக்கு வழி காட்டி யாகவும், மக்கட் கூட்டத்திற்கே பொதுவாகவும் உள்ள நூலைப் பற்றி, ஒன்றிரண்டு கருத்துகளை உங்களிடம் கூறவும், பல கருத்துகளை உங்களிடமிருந்து பெறவும் வந்திருக்கிறேன். மனித சமூகத்திற்கே வாழ்க்கை நூலாக இலங்கும் ஒரு நூலைப் பற்றி இக்குறுகிய காலத்தில் அதிகம் ஒன்றும் கூற முடியாவிட்டாலுங் கூட, சில மணித்துளிகள் நாம் எல்லோரும் நல்ல சிந்தனையி லிருக்கவாவது வாய்ப்பளிக்கட்டும் என்ற கருத்துடன் இப்பொருள் பற்றிப் பேச எண்ணினேனேயன்றி, அதிகமாக ஒன்றும் விளக்குவதற்கு அன்று என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

---

* 20-1-52ல் பட்டுக் கோட்டையில் நடைபெற்ற தமிழ்த் திருநாளில் ஆசிரியர் நிகழ்த்திய சொற் பொழிவு. (குமரிமலர் சென்னை - மார்ச்சு - 1952)

இவ்வுலகில் வாழும் பல வகை உயிரினத்திலும் தலை சிறந்தது மனித இனம், ஏனைய இனங்களெல்லாம் தாம் வாழு மிடம் சூழ்நிலைக் கேற்றவாறு தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு உண்டு உறங்கி இனவிருத்தி செய்து வாழ் நாளைப் போக்கி வருவதையும், மனித இனம் மட்டிலும் இச் செய்கைக ளுடன், அறிவையும் விருத்தி செய்து கொண்டு வருவதையும் நாம் அறிகிறோம். ஏனைய இனங்களெல்லாம் அறிவு நிலையில் மார்க்கண்ட நிலையிலிருக்க, மனித இனம் மட்டிலும் அறிவு நிலையில் வளர்ந்து வருவதையும் காண்கிறோம். ஆடு, மாடு, குதிரை, காக்கை, கழுகு போன்ற பிராணிகள் பல நூற்றாண்டு கட்கு முன்பு இருந்தது போலவே இன்றும் அறிவு நிலையி லிருப்பதையும், மனிதன் மட்டிலும் எல்லாத் துறைகளிலும் வளர்ந்து வருவதையும் நாம் பார்க்கிறோம். இன்னொரு சிறப்பு மனிதனிடம் அமைந்திருக்கிறது. ஏனைய பிராணிகளிடம் அமையப் பெறாத நுட்பமான குரல்வளையைப் பெற்றிருக்கும் காரணத்தால் மனிதன் கருத்துகளை உணர்த்தவும் உணரவும் வல்ல மொழியை ஒரு சிறந்த கருவியாக வளர்த்துக் கொண் டிருக்கிறான். இம்மொழியை எடுத்துக் கலையாகவும் வளர்த்துத் தனது கருத்துகளை கல்லிலும் செம்பிலும் ஏட்டிலும் பொறித்து வைக்கும் பண்பாட்டையும் வளர்த்திருக்கின்றான். இக் காரணத் தால் காலத்தாலும் இடத்தாலும் செம்மையுற்றிருக்கும் மனிதன் தனது கருத்துகளையும் அநுபவங்களையும் வருங்கால சந்ததி களுக்கு உணர்த்தவும், தனது முன்னோரின் கருத்துகளையும் அநுபவங்களையும் உணரவும் முடிகிறது. இந்த அநுபவங்களும் கருத்துகளும்தான் பல்வேறு நூல்களாகவும் வடிவு கொண்டிருக் கின்றன.

இம்மாதிரியாகக் குவிந்து கிடக்கும் முன்னோரின் அறிவுச் செல்வத்தையெல்லாம் ஒவ்வொரு மனிதனும் அறிய வேண்டி யிருக்கின்றான். மனிதனை யொழிந்த ஏனைய பிராணிகள் இவ்வாறு முன்னோர்களின் அறிவுச் செல்வத்தை அறிந்து கொள்ள முடியாது; முன்னோர் அறிவுச் செல்வத்தைத் திரட்டி

வைக்கவும் இல்லை; திரட்டி வைக்கும் சாதனமும் அவற்றிடம் தோன்றி வளர வில்லை. முன்னோரின் அறிவுச் செல்வத்தை யெல்லாம் பெறுவதற்கேற்றவாறு மனிதனது மூளையமைப்பு இயற்கையிலேயே அமைந்து கிடக்கிறது. இது பற்றியேதான், மனிதனின் இளமைப் பருவம் ஏனைய பிராணிகளின் இளமைப் பருவத்தைக் காட்டிலும் நீடித் திருக்கிறது. ஒரு பசுவின் கன்று பிறந்த பதினைந்து நாட்களில் புல்லைத்தின்ன ஆரம்பிக்கிறது; பிறந்த சிலமணி நேரத்திலேயே நடக்கவும் ஓடவும் ஆரம்பித்து விடுகிறது. ஆனால் மனிதன் குழந்தையாக இருக்கும்போது நிமிர்ந்து நிற்கவே ஓராண்டு தேவையாக இருக்கிறது; ஓராண் டிற்குப் பிறகுதான் சோறு உண்ணும் நிலையினையேயடை கிறான். மனிதனின் இளமைப் பருவம் தனது மூதாதையரின் அறிவுச் செல்வத்தை யெல்லாம் பெற்று தன்னைச் சிக்கலான இவ்வுலக வாழ்க்கைக்குத் தயாராக்கிக் கொள்வதற்காகவே அமைந்திருக்கிறது என்றுகூட நினைக்க இடம் இருக்கிறது.

இவ்வுலகில் மனிதன் வாழும் வாழ்க்கையே ஒரு கலை யாகும். ஒரு குறிப்பிட்ட வருமானத்தைக் கொண்டு ஒரு குறிப் பிட்ட எண்ணிக்கையுள்ள நபர்களைக் கொண்ட குடும்பத்தை எல்லோருக்குமே சரிவர நடத்தத் தெரியாது என்பதை நாம் நமது வாழ்க்கையில் காணும் உண்மையாகும். எடுத்துக்காட்டாக ஓர் இரு பெற்றோர் அடங்கிய ஒரு குடும்பத்தை எடுத்துக் கொள் வோம். அவர்கட்கு மாதம் முன்னூறு ரூபாய் வருமானம் இருப்ப தாகவும் கருதுவோம். இவர்கள் அறநூலில் சொல்லியுள்ளபடி வையத்தில் வாழ்வாங்கு வாழ்கிறதாகவும் கொள்வோம். இப்படிப்பட்ட பல குடும்பங்கள் நமது நாட்டிலிருந்தால், எல்லோராலும் திருப்தியாகக் குடும்பத்தை நடத்த முடிகிற தில்லை; நடத்தவும் தெரிகிறதில்லை. ஏன்? கணவன், மனைவி சரியாக அமைகிறதில்லை. அமைந்தாலும் அவர்கள் இருவ ரிடமே எல்லா பண்பாடுகளும் அமைவதில்லை. உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இந்நிலைமை ஏற்பட்டு தான் இருக்க வேண்டும். ஆங்காங்கு தோன்றிய அறிஞர்கள் இதைப்பற்றிச்

சிந்தித்து தான் இருப்பார்கள். தாம் எழுதிய நூல்களில் சுட்டியு மிருப்பார்கள். இருந்தாலும், மனிதன் 'வாழப் பிறந்தவன்', வையத்தில் வாழ்வாங்கு வாழ்வது எப்படி! என்ற விஷயங்களை யெல்லாம் தொகுத்து உலகின் எப்பகுதியிலாவது ஒரு நூல் என்றேனும் வெளிவந்திருக்கிறதா என்று வினாவினால், 'இல்லை!' என்ற விடையைத் தான் கொள்ள வேண்டியிருக்கும். ஆனால் தமிழ் நாட்டில் மட்டிலும் அவ்விதமான ஒரு நூலைத் தோற்றுவித்த பெருமை இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னதாகவே ஏற்பட்டு விட்டது. அந்நூல் தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவரால் அருள்ப்பட்ட திருக்குறளாகும்; அதைத் த்தான் 'வாழ்க்கை நூல்' என்று யான் குறிப்பிடுகிறேன். இத்திருக்குறளைப்பற்றிதான் ஒன்றிரண்டு கருத்துகளை உங்களிடம் சொல்லலாம் என்று நினைத்து வந்திருக்கிறேன்.

இத்திருக்குறளை ஏதாவது ஒரு நூல் வகையில் சேர்த்து எண்ண முடியாது. அதில் இல்லாத பொருளே இல்லை என்று கூடச் சொல்லி விடலாம்; அதாவது வாழ்க்கைக்கு வேண்டிய அத்தனை அம்சங்களும் அதில் அமைந்திருக்கின்றன.

**"எல்லாப் பொருளும் இதன்பால் உள; இதன்பால்**
**இல்லாத எப்பொருளும் இல்லையால்"[1]**

என்று மதுரைத் தமிழ் நாகனார் என்ற சங்கப்புலவர் ஒருவரே குறிப்பிட்டிருப்பது ஈண்டு அறியற்பாலது. இந்நூல் அறத்தினை அறிய வேண்டுவார்க்கு ஒரு பேரற நூல்; அரசியலை ஆராய விரும்புவார்க்கு ஒரு அரசியல் நூல்; ஞானத்தை அடைய விரும்புவார்க்கு ஒரு ஞான நூல்; கவிச் சுவையை விரும்பு வார்க்கு ஒரு காவியக் கருவூலம்; காமச் சுவையை விரும்பு வார்க்கு ஒரு காம நூல்; பேரின்பம் விரும்புவார்க்கு ஒரு பேரின்ப நூல்; வாழ்க்கை நெறியறிய விரும்புவார்க்கு ஒரு வாழ்க்கை வழிகாட்டி நூல்; ஒருவர் எந்தக் கோணத்தில் அதை நோக்கினாலும் அவர் அடைய விரும்பும் அத்துணை

1. திருவள்ளுவமாலை - 29

செய்திகளும் அதில் அடங்கியிருப்பதை அறிவார். இத்துணைச் சிறப்பு வாய்ந்த ஒரு நூல் தமிழில் அமைந்துள்ளதைப் போல் வேறு எந்த மொழியிலும் தோன்றவில்லை என்பதைத் தமிழன் அறியும்போது சற்றுப் பெருமிதங்கொள்ள வேண்டியவனாகத் தானிருக்கிறான். இக்கருத்தைத் தான் பரணர் என்ற சங்கப் புலவர்,

**"மாலும் குறளாய் வளர்ந்(து) இரண்டு மாண்அடியால்**
**ஞாலம் முழுதும் நய்ந்(து) அளந்தான் - வால் அறிவின்**
**வள்ளுவரும் தன்குறள்வெண் பாவடியால் வையத்தார்**
**உள்ளுவவெல் லாம்அளந்தார் ஓர்ந்து[2]"**

என்று குறிப்பிட்டிருக்கிறார். திருமால் வாமனாவதாரம் எடுக்கும் போது குறுகித் தோன்றி, பிறகு வளர்ந்து தனது இரண்டு பெரிய அடியால் இவ்வுலகை (புற உலகை) அளந்தார். நாயனாரோ தனது குறளாகிய இரண்டு சிறிய அடியால் வளராமலேயே மனிதனுடைய கருத்துலகையெல்லாம் (அக உலகை) அளந்து விட்டார். 'அறன் எனப்பட்டதே இல் வாழ்க்கை' யில் வாழ்ந்த வள்ளுவர், செந்நெறியில் நின்று வாழ்ந்து காட்டியவர்; தாமாகவே வாழ்க்கையின் அம்சங்களையெல்லாம் அநுபவத் தால் அறிந்து தெள்ளிய தீந் தமிழால் ஆன குறட்பாவினால் மனிதன்பெற வேண்டிய பெரும் பொருளாகிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கு பொருள்களையும் எளிய முறையில் அருளியிருக்கிறார் என்று நற்றமிழர் போற்றும் நக்கீரர் நவின்றிருக்கிறார் . வீட்டைப் பற்றித் தனியாக ஆசிரியர் கூறா விடினும், திருக்குறளைத் தெளிவாகக் கற்பவர்கள் வீட்டைப் பற்றிக் குறிப்பாக உணர்த்தியிருப்பதை அறிவார்கள். அந்நூலினை நன்கு கற்ற புலவர் ஒருவர்,

**"அறன்அறிந்தேம் ஆன்ற பொருள்அறிந்தேம் இன்பின்**
**திறன்அறிந்தேம் வீடு தெளிந்தேம்"[3]**

2. திருவள்ளுவமாலை - 6

3. திருவள்ளுவமாலை - 50

கூறியிருப்பது ஈண்டு எண்ணற்பாலது. அறத்தையும் பொருளை யும் இன்பத்தையும் சரியாக அறிந்தவர்கட்கு வீடு தெளிவுறும்; கட்டாயம் தெளிவுறத்தான் வேண்டும்.

திருக்குறளை ஓர் உயர்ந்த மணிகள் வைக்கப்பட்டிருக்கும் பெட்டகத்திற்கு ஒப்பிடலாம். திருக்குறளாகிய பெட்டியில் நான்கு பெரிய அறைகளும் 133 சிறிய அறைகளும் இருக் கின்றன.. பாயிரம் என்ற முதலாவது அறையில் கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்ற நான்கு சிறிய அறைகளும் இருக்கின்றன. அறத்துப்பால் என்ற இரண்டாவது அறை மூன்று பகுதியாகத் தடுக்கப் பட்டிருக்கிறது. முதல் பகுதியாகிய இல்லற இயலில் இல் வாழ்க்கை முதல் புகழ் இறுதியாக இருபது சிறிய அறைகளும், இரண்டாவது பகுதியாகிய துறவறவியலில் அருளுடைமை முதல் அவா வறுத்தல் ஈறாக 13 சிறிய அறைகளும் இருக் கின்றன. நான்காவது பகுதியோ ஊழ் என்ற பகுதி; ஒரு சிறிய தனிஅறையாக உதவுகிறது. மூன்றாவது அறையாகிய பொருட் பால் என்ற அறையும் மூன்று சிறிய பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. முதற் பகுதியாகிய அரசியலில் இறை மாட்சி முதலாக இடுக்கண் அழியாமை ஈறாக 25 சிறிய அறைகளும், இரண்டாம் பகுதியாகிய அங்க இயலில் அமைச்சு முதல் மருந்து ஈறாக 32 சிறிய அறைகளும், மூன்றாவது பகுதியாகிய ஒழிபியலில் குடிமை முதல் கயமை ஈறாக 13 சிறிய அறைகளும் இருக்கின்றன. நான்காவது அறையாகிய காமத்துப்பாலும் இரண்டு பகுதியாகத் தடுக்கப்பட்டிருக்கிறது. முதற் பகுதியாகிய களவியலில் தகையணங்குறுத்தல் முதலாக அலரறிவுறுத்தல் ஈறாக ஏழு சிறிய அறைகளும், இரண்டாவது பகுதியாகிய கற்பியலில் பிரிவாற்றாமை முதல் ஊடலுவகை ஈறாகப் பதினெட்டு சிறிய அறைகளும் இருக்கின்றன.

இந்த 133 சிறிய அறைகளிலும் அறைக்குப் பத்தாக விலை மதிக்க முடியாத. 1330 அழகிய குறள் மணிகள் இருக்கின்றன.

ஒவ்வொரு குறள் மணியும் ஓதற் கெளிதாகவும் உணர்தற் கரிதாகவும் வேதப் பொருளைவிட மிக விழுமியதாகவும் இருக்கிறது. அதைச் சிந்திக்கச் சிந்திக்க உள்ளத்தை எல்லாம் உருக்கிக் கொள்ளைகொள்ளும் தன்மையுடையதாக இருக்கிறது. மிளகு மிட்டாயை (PepperMint) வாயில் போட்டுக் கொண்டு உமிழ்நீர் சுரக்கச் சுரக்க இனிமை தருதல் போல, ஒரு குறள் மணியைச் சிந்திக்கச் சிந்திக்கக் கருத்தின்பம் உண்டாவதை அறியலாம். இவ்வாறு சிந்தித்தால் நூலைக் கற்போரது அறிவும் வளரும். இக் கருத்தை உருத்திரசன்ம கண்ணர் என்ற புலவர்,

**மணற்கிளைக்க நீரூறும்; மைந்தர்கள் வாய்வைத்(து)**
**உணச்சுரக்கும் தாய்முலை ஒண்பால்; - பிணக்கிலா**
**வாய்மொழி வள்ளுவர் முப்பால் மதிப்புலவோர்க்கு**
**ஆய்தொறும் ஊறும் அறிவு**[4]

என்று கூறியிருக்கின்றார். தொட்டனைத்தூறும் மணற் கேணியைப் போலவும், மதலைகள் வாய் வைத்து உண்ணுந்தோறும் தாய் முலை தீம்பால் சுரப்பது போலவும், திருக்குறளை ஆராயுந் தோறும் ஆராய்வோரின் அறிவு வளர்ச்சி அடையும். மற்றும், குறள் மணிகளை சாக்கரின் மாத்திரைகளுக்கு (Saccarine pills) ஒப்பிடலாம். சாக்கரின் என்றபொருள் உலகத்திலேயே மிகவும் இனிப்பான பொருள். சர்க்கரையை விட 400 மடங்கு இனிப்பு அதிகமுடையது என்று வேதியியற் புலவர்கள் கணக்கிட் டிருக்கிறார்கள். அந்த மாத்திரையை வாயில் போட்டால் கசக்கும். ஏன்? அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சுதானே! அதிக இனிப்பு கசப்புச் சுவையைத் தருகிறது. அதையே அதிகமான நீரில் கரைத்து நெகிழ்த்துப் பருகினால், இனிமையாக இருப்பதை அறியலாம். அதுபோலவே சில குறள்களின் பொருள்கள் மேலாகப் பார்ப்பவர்க்குத் தெளிவாக விளங் காது.சிந்தித்துப் பார்த்தால் அவை கொண்டிருக்கும் பொருள் வளம் புலனாகும். சான்று ஒன்று தருகிறேன்.

---

4. திருவள்ளுவ மாலை - 31

"நாள்என ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்
வாள்அ(து) உணர்வாற் பெறின்" *(334)*

என்ற குறள் மக்களின் வாழ்க்கை நிலையாமையைக் குறிக்கிறது. நீர்மேற் குமிழி போன்ற வாழ்க்கையின் சிறுமையை வள்ளுவர் உணர்த்தியிருக்கும் பெற்றியைச் சிந்திக்குந்தோறும் இன்பம் பயக்கிறது.

மனித வாழ்க்கையின் அளவைக் கணக்கிடுவதற்குக் கருவியாக இருப்பது காலம் என்னும் அருவப் பொருளாகும். காலத்தை அளக்க முடியாது என்பதை உணர்ந்தவர்கள் ஒரு சிலரே. ஆனால் பெரும்பாலோர் அளந்து விட்டதாக இறுமாந்திருக்கிறார்கள். உருவப் பொருளை அளப்பது எளிது. உருவப் பொருளை நீட்டல் அளவை, முகத்தல் அளவை, நிறுத்தல் அளவை, எண்ணல் அளவை ஆகிய அளவைகளால் அளக்க முடியும். உலகத்தில் மக்கள் துணியை முழக்கோலாலும் நெல்லைப் படி அல்லது மரக்காலாலும், சருக்கரையைத் தராசாலும் பணத்தை எண்ணிப்பார்த்தும் அளப்பதை யாவரும் அறிவார்கள். இங்கு எந்தப் பொருள் அளக்கப்பட வேண்டுமோ அந்தப் பொருள் நேராக அளக்கப்படுகின்றது. காலத்தை இங்ஙனம் நேராக அளத்தல் முடியாது. அது ஞாயிறுபோன்ற கோள்களின் இயக்கத்தாலும், கடிகாரம் போன்ற கருவிகளாலும் கணக்கிடப்படுகிறது. ஞாயிற்றினது இயக்கத்தால் இவ்வளவு நாழிகை ஆயிற்று என்றும், கடிகாரத்தின் முட்கள் சுற்றுவதால் இவ்வளவு மணி ஆயிற்று என்றும் கூறப்படுகிறதேயன்றி காலம் என்னும் அருவப் பொருள் துணி, நெல், சருக்கரை, பணம் என்ற உருவப் பொருள்கள் அளக்கப்படுவனபோல் நேராக அளக்கப் படுவதில்லை என்பது ஈண்டு அறிதற்பாலது. இதைத்தான் பரிமேலழகர் "காலமென்றும் அருவப் பொருள் உலகியல் நடத்தற்பொருட்டு ஆதித்தான் முதலிய அளவைகளால் கூறுபட்டதாக வழங்கப்படுவதல்லது தானாகக் கூறுபடாமையின் நாளென ஒன்று போல்" என்று தெரிவிக்கிறார்.

இன்று எத்தனையோ மக்கள் தமக்குப் பொழுது போகவில்லை என்றும், எத்தனையோ மக்கள் பொழுது விரைவாகப் போய்விடுகிறதென்றும் கூறுவதை நாம் அறிகிறோம். பல துறைகளிலும் இவ்வாறு கூறும் மக்கள் இருக்கத் தான் செய்கிறார்கள். எடுத்துக்காட்டாக, பிற்பகல் 12 மணிக்குக் கிளம்பும் இருப்பூர்தியைப் பிடிப்பதற்குக் காலை 10 மணிக்கே நிலையத்திற்கு வந்து விடுபவர்களுக்குக் காலம் விரைவாகப் போவதில்லை; வண்டி புறப்படுவதற்குப் 10 நிமிடங்களுக்கு முன்னர் வருபவர்களுக்கு கியூ வரிசையில் நின்று பயணச் சீட்டு வாங்கி வண்டியைப் பிடிப்பதற்குள் காலம் வேகமாகப் பறந்து விடுகிறது. காலம் விரைவாகச் செல்லுவதும் மந்தமாகச் செல்லுவதும் அவ்வப்போது அவரவர் மனப் பான்மையைப் பொறுத்தது. ஆனால் இருவருமே தமது வாழ்நாளில் ஒருபகுதி இவ்வாறு கழிகிறது என்பது உணர்வதில்லை. நாள், மணி என்பதெல்லாம் நாம் கொண்ட மயக்கம் என்பதை மெய்யுணர்வு பெற்றவர்களால்தான் அறிய முடியும். நாள் என்றும் மணி என்றும் கொள்ளுவது கானலை நீர் என்று கொள்ளுவது போலாகும். இதைப் பரிமேலழகர், 'அது தன்னை (காலத்தை) வாள் என்று உணரமாட்டாதார் நமக்குப் பொழுது போகா நின்றது என்று இன்புறுமாறு நாளாய் மயக்கலிற் காட்டி' என்று நாயனார் நவின்றிருப்பதாக எடுத்துக் காட்டுகிறார்.

நாள் என்று நாம் கொள்ளும் காலப் பகுதி நமது வாழ் நாளை இடைவிடாது அறுக்கக் கூடிய வாள் என்பதை நம்மில் பெரும்பாலோர் உணர்வதில்லை. ஒரு மரத்தையோ பிற பொருளையோ அறுக்கும் வாளுக்கு ஓய்வு உண்டு. அறுப்பவர் கைகள் தளர்ச்சியுறும் போதும், அறுப்பவர் உணவு கொள்ளும் போதும், உறங்கும் போதும் பிற நேரங்களிலும் வாள் அறுக்காது நிற்கிறது. ஆனால் காலத்தின் பகுதியாகிய நாள் என்ற வாள் அல்லும் பகலும் ஓய்வின்றி நமது வாழ்நாளை அறுத்துக் கொண்டேயிருக்கிறது. இங்ஙனம் இடைவிடாது அறுத்துக் கொண்டிருப்பதை மக்கள் கூட்டம் உணர்வதே இல்லை.

இதையே பரிமேலழகர் 'இடை விடாது ஈந்தலால் வாளின் வாய தென்றும், அஃது ஈர்கின்றமையை உணர்வார் அரியராகலின் உணர்வாற் பெறின்' என்றும் கூறினார், (வள்ளுவர்) என்று கூறியிருப்பது இவ்விடத்தில் கருதத் தக்கது. யோசித்துப் பார்த்தால் பலவியத்தகு பொருள்களை எல்லாம் தரவல்ல பல குறள்மணிகள் திருக்குறள் என்ற பெட்டியினுள் இருக்கின்றன.

'வாழப் பிறந்தோம்!' என்ற உண்மையை எல்லாமக்களும் அறிந்துதான் இருக்கிறார்கள். எல்லோருமே உயிரை வெல்லம் போலக் கருதுகிறார்கள் என்பதும் நாம் அறிந்ததே. அதிகச் சம்பளம் வேண்டும் என்று இன்று கூட்டங்கள் போட்டுக் கதறு கின்ற மக்கள் கூட்டங்களை நாம் காணத் தானே செய்கிறோம்! எத்தனை கட்சிகள்! எவ்வளவு கொள்கைகள்! எத்தனை விதமான திட்டங்கள்! குறிக்கோள்கள்! அம்மம்ம! அவை சொல்லுந்தரமன்று. பொருளாதார நிலை சரிப்பட்டு விட்ட தாகவே கொள்வோம். எவ்வளவு பேர் வள்ளுவர் காட்டிய வாழ்க்கை நெறியில் செல்ல வேண்டும் என்று எண்ணுகிறார்கள்! பெரிய செல்வ நிலையில்தான் இருப்பவர்கள் வள்ளுவர் காட்டிய நெறி நின்று வாழ்கிறார்களா? ஆகவே, யோசித்துப் பார்த்தால் வையத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு பொருளாதார நிலை ஒரு காரணமல்ல. வாழவேண்டும் என்ற மனப்பான்மை தான் வேண்டும். அதற்கு என்ன செய்யவேண்டும்? நல்லோர் தொடர்பும் நற்சிந்தனையும் வேண்டும்; வள்ளுவர் அருளிய நூலை நன்கு படிக்க வேண்டும். படித்து விட்டால் மட்டும் போதுமா? நன்கு சிந்திக்கவும் வேண்டும்.

உயிர்நூல் போன்ற அறிவியல் அறிவின்படி இவ்வுலகில் உயிர் இயங்கத் தொடங்கியதிலிருந்து ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஒலி ஆகிய ஐந்துணர்வுகளும் முறையே ஓரறிவு பிராணி முதல் ஐயறிவுள்ள பிராணி வரையில் உண்டாயிற்று என்றும் இவை தோன்றும்போது தான் அதற்கேற்றவாறு அப்பிராணிக ளிடம் இவற்றை அறியும் புறக்கருவிகளும் அகக் கருவிகளும் உடலில் தோன்றத் தொடங்கின என்றும் நாம் அறிகிறோம்.

இவ்வாறு பன்னெடு நாட்கள் சென்ற பிறகு உயிர் மனம் என்னும் சிறந்த கருவியைப் பெற்றது. இந்தக் கருவியைப் பெற்றிருக்கும் மனிதன்தான் இன்று இவ்வுலகிலுள்ள அனைத்தையும் அடக்கி ஆளுகின்றான். இத்தகைய ஒரு சிறந்த மனத்தைப் பண்படுத்துவதற் காகத்தான் வள்ளுவர் நூல் துணையாக நிற்கிறது. இவை உலகில் இருநூறு கோடி மக்கள் வாழ்கிறார்கள். இவர்களில் மக்களாய் வாழ்வோரின் தொகை மிகவும் குறைவு; பெரும்பாலோர் மக்க ளாக மட்டிலும் காணப்படுகிறார்கள். டாக்டர் மு. வரதராசன் அவர்கள் கூறுகிறபடி* பலர் மர வாழ்க்கையில் நிற்கிறார்கள் பலர் நத்தைகளாய் வாழ்ந்து நகர்கிறார்கள்; பலர் எறும்புகளாய் ஊறுகிறார்கள்; பலர் வண்டுகளாய் அலைகிறார்கள்; பலர் விலங்குகளாய்த் திரிகிறார்கள்; சிலரே மன உணர்வைப் பண்படுத்தி மக்களாய் வாழ்கிறார்கள். அறிவை மட்டிலும் வளர்த்துக் கொண்டால் போதாது என்பது வள்ளுவர் கருத்து.

**அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண் பில்லாத வர்** *(997)*

என்று அவர் கூறியுள்ளது ஈண்டு எண்ணற் பாலது. தொல்காப்பியரும்,

**உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே;**
**அஃறிணை எனமனார் அவரல பிறவே.**[5]

என்று திணை வகுத்த நயத்தையும் இவ்விடத்தில் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ''ஈண்டு மக்கள் என்றது மக்கள் என்னும் உணர்வை. எனவே, மக்களேயாயினும் மக்கள் என்று சுட்டாது பொருளென்று சுட்டிய வழி உயர்திணை எனப்படாது'' என்று சேனாவரையரும் இதனை விரித்தோதுகிறார்.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த திருக்குறள் பிற்காலத்தில் எழுந்த நூல்களுக்கெல்லாம் அடிப்படையாகவும் அமைந்துள்ளது.

---

* திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்: பக். 3.

5. தொல் - சொல் - கிளவியா. 1

பல கவிஞர்கள் இந்நூலிலுள்ள பல குறள்மணிகளை யெடுத்துத் தமது நூல்களில் பதித்து அழகு செய்திருக்கிறார்கள். சிலர் குறளின் கருத்துக்களை நன்கு குழைத்துத் தமது கவிதைகளில் பூசிக் கொண்டிருக்கிறார்கள். தமிழனுடைய சிறந்த காவியக் கோவிலாகிய இராமாயணத்தை அருளிய கம்பன் திருக்குறளில் ஓர் அகப்பையும், சிந்தாமணியில் ஓர் அகப்பையும் முகந்து கொண்டுதான் தனது காவியத்தை அமைத்ததாகக் கூறுகிறான். சிந்தாமணியைப் பாடியருளிய திருத்தக்க தேவரும் பல குறள் மணிகளைத் தமது நூலில் பதித்து வைத்திருக்கிறார். இளங்கோ அடிகளும் சீத்தலைச் சாத்தனாரும் இதற்கு விலக்கில்லை. அவர்களும் தமது நூல்களில் திருக்குறள் பாக்களை எடுத்தாண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு சமயத் துறையில் மாறுபட்ட பெரியார்கள் எல்லாரும் திருக்குறளை ஒரு தலை சிறந்த நூலாக எடுத்தாண் டிருக்கிறார்கள் என்றால் அதன் பெருமையைச் சொல்லவும் வேண்டுமோ?

திருக்குறள் மணிகளை விட்டமின் மாத்திரைகளுக்கு ஒப்பிடலாம். இவ்விட்டமின் சத்து உடலுக்கு மிகவும் அவசியம் என்று இன்று மருத்துவர்கள் சொல்லுகிறார்கள். மருந்துகளை விளம்பரப்படுத்தும் ஒவ்வொரு விளம்பரங்களிலும் இச்சத்தின் இன்றியமையாமையை உணர்த்தப்படுவதை நாள், வார, பிறை மாத இதழ்களைப் புரட்டிப் பார்த்தாலே தெரியும். இச்சத்து உடலில் இன்மை காரணமாகத்தான் உடலில் பல நோய்கள் உண்டாகின்றன என்று சொல்லப்படுகிறது. அந் நோய்களை Deficiency diseases என்று ஆங்கிலத்தில் குறிக்கிறார்கள். இன்று எல்லா மருந்துக்கடைகளிலும் விட்டமின் மாத்திரைகள் விற்கப்படுகின்றன. எல்லா டானிக்குகளிலும் இச்சத்து சேர்க்கப் படுகிறது. விட்டமின் மாத்திரைகள் உடலுக்கு நோய்கள் வராமல் தடுப்பது போலவே திருக்குறளை ஓதித் தமது வாழ்க்கையில் அதனைக் கடைப்பிடிப்பார்க்கு அக்குறள் மணிகள் உயிரைத் தொடரும் நோய்கள் அணுகாமற் காக்கின்றன என்று

சொல்லலாம். அதைப் போலவே பல காவியங்களிலும் இம் மணிகள் எடுத்தாளப்பட்டிருக்கும் காரணத்தால் அக்காவியங்கள் மிக வளமையாக அமைந்திருக்கின்றன என்று கூடச் சொல்ல வேண்டும். காவிய நிகழ்ச்சிகளுடன் கலந்து ஒரு பாத்திரத்தின் வாயிலாகவோ, கவி கூற்றாகவோ குறள் மணியோ அதன் கருத்தோ எடுத்தாளப்படுங்கால் அது துப்பாக்கியில் வைத்துச் செலுத்தப்படும் தோட்டாவின் வன்மையைப் பெற்றுவிடுகிறது. படிப்போர் உள்ளத்தில் நன்கு பதியும் பான்மையைப் பெற்று விடுகிறது. காவியங்களில் அது எவ்வாறு எடுத்தாளப்பட்டிருக் கிறது என்பதற்கு ஒன்றிரண்டு சான்றுகளைக் காண்போம்.

திருவள்ளுவர் 'புதல்வரைப் பெறுதல்' என்ற அதிகாரத்தில்,

**ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்** *(69)*

என்று கூறியிருக்கிறார். பிள்ளையைப் பெற்ற பொழுது தாய் பட்டபாடெல்லாம், பிள்ளையைப் பெற்று விட்ட பிறகு மறைந்து விடுகிறது. இம் மகிழ்ச்சியினும் பெரியதோர் மகிழ்ச்சி பிற் காலத்தில் அத்தாய்க்கு உண்டாகும். தன் மகனைச் சார்ந்தோன் என்றும், உயர்ந்தோன் என்றும் உலகோர் சொல்லக் கேட்டதாய், பிள்ளையைப் பெற்ற பொழுது அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் பெருமகிழ்ச்சியை அடைவாள் என்பது நாயனார் கருத்தாகும். ஆனால் பரிமேலழகர் 'கேட்டதாய்' என்ற சொற் றொடருக்குப் 'பெண் இயல்பால் தானாக அறியாமையில்' என்ற தொடரை முன்னர் கூட்டி வலிந்து பொருள் கொண்டிருத்தல் தவறு. 'பேதமை என்பது மாதர்க்கு அணிகலம்' என்ற பிற்காலத் தார் கொள்கை ஆசிரியர்க்கு உடன்பாடு அன்று என்று கொள்ளு தலே தகையுடைத்து. ''தீங்கிழை இராவணன் செய்த தீமைதான் ஆங்கொரு நரையதாக அணுகிற்றாமெனத்'' தசரதனுக்கு நரை தட்டுகிறது. மந்திரக் கிழவர்களையும் தந்திரத் தலைவர்களையும் கூட்டி தான் அரசைத் துறந்து இராமனுக்கு முடி சூட்ட வேண்டும் என்ற செய்தியை ஆராய்கிறான். மந்திரிமார் அனைவரும் அரசன் கருத்துக்கு உடன் படுகிறார்கள். வசிட்டர் அறத்தின்

மூர்த்தி வந்து அவதரித்ததனால் தாம் கவலை கொள்ள வேண்டியதில்லை என்றும், அரசைத் தாங்கும் இராமன் அதைச் சிறப்பாகக் காப்பான் என்றும் கூறி, இராமனுடைய குண நலன்களை யெல்லாம் எடுத்து உரைக்கிறார். வசிட்டனுடைய உரைகளைக் கேட்ட தசரதனுக்குப் பெருமகிழ்ச்சி உண்டாகிறது. பன்னெடுங்காலமாக மகப்பேறு இல்லாது அப்பேறு உண்டான பிறகு தசரதனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியை விடவும் இவ்வையத்து மன்னர் யாவராலும் நாணேற்ற முடியாத சிவதனுசு தன் மகன் நாணேற்றும் போது ஒடிந்து விட்டது என்ற செய்தியைக் கேட்டபோது ஏற்பட்ட மகிழ்ச்சியைக் காட்டிலும், இருபத்தொரு தலைமுறையாக சத்திரியர்களைக் கருவறுத்து நின்ற பரசுராமன் தன் மகனிடம் தோல்வியடைந்த நாளில் தனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சியைக் காட்டிலும், அதிகமாக மகிழ்ச்சி ஏற்பட்டது என்று கம்பன் கூறுகிறான்.

**மற்ற வன்சொன்ன வாசகங் கேட்டலும் மகனைப்**
**பெற்ற வன்றினும் பிஞ்ஞகன் பிடிக்குமப் பெருவில்**
**இற்ற வன்றினும் எறிமழு வாளவன் இழுக்கம்**
**உற்ற வன்றினும் பெரியதோர் உவகையன் ஆனான்**[6]

என்பது கம்பன் வாக்கு. துன்பம் பேசக் பேசக் குறைதல் போல இன்பம் பிறர் பேசப்பேசப் பெருகும் இயல்புடையது. ஆதலால், தசரதன் பிறர் இராமனைப்பற்றிப் புகழும்போது, அதுவும் தனது குரு வசிட்டரே புகழும்போது, அதிக மகிழ்ச்சியை யடைந்தான் என்பது ஈண்டு அறிதற் பாலது.

பிறர் தனக்குச் செய்த நன்றியை மறத்தலாகாது என்பது தமிழனின் தனிப் பண்பு. 'செய்ந்நன்றியறிதல்' என்ற அதிகாரத்தில் இதுபற்றித் திருவள்ளுவர் பலவிதமாக விளக்குகிறார். அனைத்திற்கும் சிகரமாக,

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு** *(110)*

---

6. கம்பாரா - அயோ. காண் - மந்திரப் - 44

என்று கூறுகிறார். பெரிய அறங்களைச் சிதைத்தவர்க்கும் கழுவாய் உண்டு. ஆனால் ஒருவர் செய்த உபகாரத்தை மறந்தவர்க்குக் கழுவாய் இல்லை என்பது இதன் கருத்து. உரை கூறிய பரிமேழலகர் பெரிய அறங்களைச் சிதைத்தற்கு ஆன்முலை யறுத்தல், மகளிர் கருவினைச் சிதைத்தல், பார்ப் பார்த் தபுதல் முதலிய பாதகங்களைச் சான்றாகக் காட்டுகிறார்.

**ஆன்முலை யறுத்த அறனில்லோர்க்கும்**
**மாணிழைமகளிர் கருச்சிதைத்தோர்க்கும்**
**பார்ப்பார்த் தப்பிய கொடுமையோர்க்கும்**
**வழுவாய் மருங்கிற் கழுவாயுமுளவென**
**நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்**
**செய்தி கொன்றார்க் குய்தியில்லென**
**அறம் பாடிற்றே[7]**

என்ற புறநானூற்று அடிகளை நினைவிற் கொண்டுதான் பொருள் கூறுகிறார் என்றுதான் கொள்ள வேண்டும். மேற்கூறிய குறளை மிக நன்றாகத் தனது நூலில் கையாண்டிருக்கிறான் கம்பன். கார் காலங் கழித்து தனது வானரச் சேனையைக் கொண்டு சீதை யிருக்கும் இடத்தைக் கண்டறிவதாகச் சொன்ன சுக்கிரீவன் தான் குறிப்பிட்ட காலத்தில் வரவில்லை. இராமன், கோபங்கொள்ளு கிறான். நிலையினை அறிந்து வருவதற்கு இலக்குவனைக் கிட்கிந்தை நகருக்கு அனுப்புகிறான். கோபங் கொண்டு வரும் இலக்குவன் மகளிர் கூட்டத்துடன் வந்து சந்தித்த தாரையால் மனம் மாற்றம் அடைகிறான்.

**தாமரை வதனம் சாய்த்துத்**
**தனுநெடுந் தரையின் ஊன்றி**
**மாமியர் குழுவின் வந்தான்**
**ஆம் என மைந்தன் நிற்ப.[8]**

---

7. புறம் - 34

8. கம்பரா - கிட்கிந் - கிட்கிந்தைப் - 48 .

என்றபடி ஆய் விடுகிறான். அவன் கோபமும் தணிந்து விடுகிறது. இலக்குவனுடைய கோபம் தணிந்தமை கண்டு அநுமான் மெதுவாக அவன் அருகில் வருகிறான். இலக்குவன் அவனைநோக்கி,

**அந்தமில் கேள்வி நீயும்**
**அயர்த்தனை யாகும் அன்றே**
**முந்தின செய்கை?[9]**

என்று கேட்கிறான். அதனைக் கேட்ட சொல்லின் செல்வனான அநுமான், செய்ந்நன்றி கொன்றவர்க்கு அப்பாவத்தை ஒழிக்கும் வழி கூட இருக்கிறதா? என்று கேட்கிறான். தாய், தந்தை, குரு, அந்தணர், பசு, பெண், இவர்களைக் கொன்றவர்கள் யாவருமே கழுவாய் தேடிக் கொள்ளலாம். செய்த உபகாரத்தை மறந்தவர் கட்கு உய்யும் வழியே இல்லை என்று உணர்த்துகிறான். அநுமான் வாய்மொழியாகக் கம்பன்,

**சிதை(வு)அகல் காதல் தாயைத்**
**தந்தையைக் குருவைத் தெய்வப்**
**பதவிஅந் தணரை ஆவைப்**
**பாலரைப் பாவை மாரை**
**வதைபுரி குநர்க்கும் உண்டாம்**
**மாற்றலாம் ஆற்றல்; மாயா**
**உதவிகொன் றார்க்(கு)ஒன்(று) எனும்**
**ஒழிக்கலாம் உப்பாயம் உண்டோ?[10]**

என்று கூறுகிறான். 'எந்நன்றி கொன்றார்க்கும்' என்ற திருக்குறளடிக்கு 'சிதைவு அகல் காதல் தாய், முதலியவர்களைக் கொல்லும் பாவங்களை எடுத்துக்காட்டுகளாகத் தருகிறான் என்றுதானே சொல்ல வேண்டும்?

---

9. ஷை - ஷை - ஷை - 61
10. ஷை - ஷை - ஷை - 62

குறிப்பறிதல் என்ற பண்பு அரசனுக்கு மிகவும் இன்றியமை யாதது. முகத்திலிருந்து அகத்திலுள்ளவற்றை அறிந்து கொள்ள முடியும். இதனை வள்ளுவர்,

**அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்**
**கடுத்தது காட்டும் முகம்** *(706)*

என்று கூறியுள்ளார். தன்னையடுத்த பொருளது நிறத்தைப் பளிங்கு காட்டுவது போல உள்ளக்கிடக்கை முகத்தில் பிரதி பலிக்கும். இதனைக் கம்பன் எவ்வாறு கையாண்டிருக்கிறான் என்பதனைக் காண்போம். பலவிதங்களில் சீதையைக் கொண்டு விட்டுவிடும்படிக் கூறியும் இராவணன் பிடிவாதமாக விருக்கவே, வீடணன் இராமனிடம் அடைக்கலம் புக வந்து விடுகிறான். மாற்றார் பக்கத்திலிருந்து வந்தவனைச் சேர்த்துக் கொள்ளலாமா என்ற ஆராய்ச்சி நடைபெறுகிறது. சுக்ரீவன்; சாம்பவான் முதலியோர் 'கூடாது' என்ற முடிவு கூறுகின்றனர். அநுமன் சேர்த்துக் கொள்ளலாம் என்ற முடிவு கூறி அதற்குரிய காரணங்களையும் தெரிவிக்கிறான். வீடணன் முகத்திலிருந்தே அவன் உள்ளத்தை அறிந்து கொள்ளலாம் என்று கூறும் அநுமன்,

**உள்ளத்தின் உள்ளதை உரையின் முந்துற**
**மெள்ளத்தம் முகங்களே விளம்பும்; ஆதலால்**
**கள்ளத்தின் விளைவெலாம் கருத்தில் ஆம்இருள்**
**பள்ளத்தின் அன்றியே வெளியிற் பல்குமோ?**[11]

என்று தெரிவிக்கிறான். இவ்வாறு பல இடங்கள் உள.

கம்பராமாயணத்திற்கு முற்பட்ட நூலாகிய சிந்தாமணியிலும் திருக்குறள் எடுத்தாளப் பட்டிருக்கிறது. அந்நூலிலிருந்து ஓர் எடுத்துக்காட்டை மட்டிலும் பார்ப்போம். கனக மாலையை விட்டுச் சீவகன் தன் நண்பர்களுடன் தண்டாரண்யத்தில் தவப் பள்ளியிலுள்ள தாய் விசயையைக் காண்கிறான். தண்டாரண் யத்தை நோக்கி வரும்போது நந்தட்டன் பதுமுகனிடம் அவன்

11. கம்ப. யுத்த - வீடணன் அடைக். 91

எவ்வாறு சீவகனுக்கு மெய் காப்பாளனாகவிருந்து அவனைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறுகிறான். பகைவர்களைத் தெளிவது அருமை என்று கூறுமுகத்தான்,

**தொழுதுதம் கையின் உள்ளும்**
**துறுமுடி அகத்தும் சோர**
**அழுதகண் நீரின் உள்ளும்**
**அணிகலத்(து) அகத்து மாய்ந்து**
**பழுதுகண் அரிந்து கொல்லும்**
**படையுடன் ஒடுங்கும் பற்றாது**
**ஒழிகயார் கண்ணும் தேற்றம்;**
**தெளிகுற்றார் விளிகுற் றாரே**[12]

என்று கூறுகிறான். இதில்,

**தொழுதகை யுள்ளும் படைஒடுங்கும்; ஒன்னார்**
**அழுதகண் நீரும் அனைத்து** *(828)*

என்ற குறளின் கருத்து அமைந்திருத்தல் காண்க.

புகழேந்தியும் நளவெண்பாவில் சில குறள் மணிகளைப் பொதிந்து வைத்திருக்கிறார். ஒன்றை மட்டிலும் பார்ப்போம். சுயம்வர மண்டபத்தில் ஒவ்வொரு அரசனாக தமயந்திக்கு அறிமுகப் படுத்திக்கொண்டு வரும் தோழி, அவந்தி நாட்டரசனை,

**வண்ணக் குவளை மலர்வவ்வி வண்டெடுத்த**
**பண்ணிற் செவிவைத்தப் பைங்குவளை - உண்ணாது**
**அருங்கடா நிற்கும் அவந்திநா டாளும்**
**இருங்கடா யானை இவன்.**[13]

என்று அறிமுகம் செய்து வைக்கிறாள். நடுப்பகலில் அலைந்து திரிந்த எருமைக்கடா ஒன்று இரை கிடைக்காது ஒரு குளத்திற்கு வருகிறது. அத்தடாகத்திலுள்ள மலர்களுடன் கூடிய குவளைக் கொடியை உண்ண விரும்பி நீரில் இறங்குகிறது. குவளைக்

---

12. சீவக 1891 (விமலை - 3)

13. நளவெண்பா - சுயம்வரக் காண்டம் - 141

கொடியை இழுத்தவுடன், தேன் எடுக்கும் தேனீக் கூட்டம் 'ஞொய்' என்ற ஒலியுடன் பறக்கிறது. அந்த இனிய ஒலியைக் கேட்ட எருமைக்கடா அதன் சுவையில் ஈடுபட்டு, குவளைக் கொடியை 'மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்' சிலையுருவம்போல் நின்று விடுகிறது. இவ்வாறு ஐயறிவுள்ள எருமைக் கடாவும் இசையிலீடுபடும் நாட்டின் தலைவன் என்று தோழி அவந்தி நாட்டரசனை அறிமுகப்படுத்தி வைக்கிறான். இதில்,

**செவிக்(கு)உணவு இல்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப் படும்** *(412)*

என்ற குறளை 'பாலொடு தேன் கலந்தது போல்' மிக நயமாகக் குழைத்து அமைத்திருப்பது அறிந்து மகிழ்தற் குரியதாகும். இவ்வாறு பின்னர் எழுந்த நூல்கள் யாவும் திருக்குறளைப் பொன்னே போல் போற்றி வந்துள்ளதை அறியலாம்.

பொதுவாக நூல்களை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். முதல் வகை தம் காலத்திற்கு நம்மை அழைத்துச் சென்று மகிழ்ச்சியூட்டும். இரண்டாவது வகை நம் காலத்திற்குத் தான் வந்து உதவும். முதல்வகை நூல்களைப் பயிலும் போது நாம் கற்பனையில் அக் காலத்து மக்களாக நம்மை நினைத்துக் கொண்டு பயிலவேண்டும். இரண்டாவது வகை நூல்களைக் கற்கும்போது வாழும் காலத்திற்கே வழிகாட்டும் படியாக அந்நூல்களைக் கற்கிறோம்.

திருக்குறள் இரண்டாவது வகையைச் சார்ந்த நூலாகும். அது காலத்தாலும் இடத்தாலும் பிரிக்கப்பட்ட எல்லா நாட்டு மக்கட்கும் எல்லாக் காலத்திலுள்ளவர்கட்கும் பொருந்தும். இதனாலன்றோ அஃது இன்று உலகிலுள்ள நாகரிக மொழிகளி லெல்லாம் மொழி பெயர்த்து எழுதப்பட்டிருக்கிறது? எல்லா மதத்தினரும் அதன் கருத்துகளை மறுப்பின்றி அப்படியே ஒத்துக் கொள்கின்றனர்.

**பிறப்(பு) ஒக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்(பு) ஒவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யால்** *(972)*

என்பன போன்ற குறள் மணிகள் அறிஞர்களின் நெஞ்சை அப்படியே அள்ளுகின்றன. அனைத்தும் மனித இனத்திற்கே பொதுவாய் அமைந்தவை. இதனால் தானே பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள்,

**வள்ளுவர்செய் திருக்குறளை**
**மறுவறநன்(கு) உணர்ந்தோர்கள்**
**உள்ளுவரோ மனுவாதி**
**ஒருகுலத்துக்(கு) ஒருநீதி?**

என்று கூறுகிறார்?[14]

எந்தத் துறையிலிருக்கும் மக்களுக்கு வேண்டுமானாலும் இந்நூல் யோசனை கூறும். இல்வாழ்வோன், துறவி, அரசன், அமைச்சன், தூதன், வீரன், உழவன் முதலிய அனைவரும் இதனைக் கற்றுப் பயன் அடையலாம். இவ்வுலக வாழ்க்கையின் பொற் சரடு போல் இருந்து வரும் ஒழுங்கு முறையை வள்ளுவர் ஊழ் என்ற அதிகாரத்தில் நன்கு விளக்குகிறார். அந்த அதிகாரத்தை நன்கு பயில்பவர்கள் செல்வம் திரட்டுதல் அதனை நுகர்தல் போன்று புற வாழ்க்கையில் ஊழ் தலையிடுவதைப் போல், அறிவு, ஒழுக்கம், அடக்கம் போன்ற நற்பண்புகளைப் பெற முயலும் அக வாழ்வின் பகுதியில் ஊழ் தலையிடா திருத் தலை அறியலாம். இது குறித்து பல அறிஞர்கள் பலவாறான கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்கள்.

இத்தகைய பலசிறப்புகளையும் பெற்றுள்ள இந்நூலை இன்று பலர் பாழ்படுத்தி வருகிறார்கள். ஒவ்வொருவரும் தாம் விரும்பிய வாறெல்லாம் பொருளுரைக்கத் தலைப்பட்டிருக் கிறார்கள். தம் கருத்துகளுக்கேற்ற வாறெல்லாம் வலிந்தும் நலிந்தும் பொருள் காண்கிறார்கள். பெரும்பாலான உரைகள் நூலாசிரியர் கருத்துக்கு முரணாக இருப்பதை அறியலாம். இம் மாதிரியெல்லாம் இந்நூலைப் போட்டுக் குழப்பி இந்நூலுக்குப் பெருமை தேடுவது அறிவுக்குப் பொருத்தமான தல்ல. எவரும் எதையும் செய்யலாம் என்ற சுதந்திரம் கொண்டு இம்மாதிரி

14. மனோன்மணீயம் - தமிழ்த்தாய் வாழ்த்து

செய்வது தவறு என்பதைத் தமிழ் மக்கள் உணர வேண்டும். அங்ஙனம் உணரும் நாள் எந்நாளோ?

இறுதியாக ஒருவார்த்தை. இந்த அரிய பெரிய கருத்துகளை யெல்லாம் சுருங்கச் சொல்லி விளக்க வைத்த பெற்றியைக் கண்டு கபிலர் என்ற ஒரு புலவர்,

**'தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட**
**பனையளவு காட்டும் படித்தான்.'**[15]

என்று உவமை கூறுகிறார். இடைக்காடர் என்ற புலவர்,

**'கடுகைத் துளைத்(து), ஏழ் கடலைப் புகட்டிக்**
**குறுகத் தறித்த குறள்'**[16]

என்று சொல்லுகிறார். ஔவையார் கடுகு பெரிய பொருள் என்று நினைத்து, கடுகுக்குப் பதிலாக அணுவை உவமை யாக்குகிறார். இத்தகை சிறந்த நூலை உலக மக்கள் சாதிய சமய பேதமின்றி ஒப்புக் கொண்ட காரணத்தால், மகாகவி பாரதியார்,

**வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து**
**வான்புகழ் கொண்ட தமிழ் நாடு**[17]

என்று கூறிப்போந்தார். இவ்வாறு எல்லா நாட்டினரும், எல்லா சமயத்தினரும், எல்லா நிலையினரும் தழுவக் கூடிய ஒரு நூலை 'வாழ்க்கை நூல்' என்று சொல்லுவது பொருத்தமுடைய தல்லவா?

---

15. திருவள்ளுவமாலை - 5
16. மேலது - 60
17. பா.க. செந்தமிழ் நாடு - 7

# 3. பாவேந்தரின் பாடல்களில் படிமங்கள்*

இயற்கைப் பொருள்கள் இன்பமயமான அமைதி நிலையில் அடங்கிக் கிடக்கின்றன. அவை நம்முடன் பேசுவது கூடத் தம் இன்பத்திற்கு இடையூறாகி விடும். அவற்றின் அமைதி நிலையைக் கலைக்காமலிருப்பதே - குலைக்காமலிருப்பதே - நமக்கு ஒரு பேறாகும். அந்த அமைதி நிலையில் நாம் கலந்து கொள்ள வேண்டும். அங்ஙனம் கலந்து கொள்ளும் இயல்பு உடையவனே கவிஞன். அவன் இயற்கையோடு பழகும் திறன் வாய்ந்தவன். இயற்கையை அவன் தழுவும் விதமே தனி. உறங்கும் குழந்தையைத் தாய் அணைவதை நாம் கவனித்திருக்கின்றோம் அல்லவா? குழந்தையைத் தன் மார்போடு தழுவிக் கொள்வாள் அவள். என்றாலும், குழந்தையின் உறக்கம் கெடுவதில்லை. அடுத்தக் கணத்தில் அவளும் தன்னை மறந்து விடுவாள். அவ்விதமே கவிஞனும் இயற்கையை அதன் இன்பகரமான அமைதி நிலை கலையாமல் தழுவுவான். தன்னையும் உடனே மறந்து விடுவான். அந்த இன்பப் பெருக்கில் அவன் மிதப்பான். அதிலிருந்து வெளிப் போந்தவுடன் இன்ப வெறி பிடித்தவன் போல் சில சமயம் பாடுவான்; சில சமயம் ஆடுவான். இவை எல்லாம் கலைகள் ஆகின்றன. அவன் அநுபவித்த இன்பப் பெருக்கில் ஒன்றிரண்டு திவலைகள் அவன் பாடிய பாட்டிலும் ஆடிய கூத்திலும் இல்லாமல் போகாது. அதைப் பார்த்தே நாம் 'கலைகள்!' 'கலைகள்!' என்று கொண்டாடி உள்ளம் பூரிக்கின்றோம். அவற்றில் ஆழங்கால் பட்டு நம்மையும் மறக்கின்றோம். இதுவே முருகியல் நிலை. இதுவே உலகத்திற்கு மூலமாய் நிற்கும் இன்பப் பெருக்கில் ஒன்றுபட்டு வாழ்வதாகும்.

---

*1978-இல் பாவேந்தர் படைப்புகள் பற்றிய கருத்தரங்கில் படிக்கப்பெற்றது (திருப்பதி)

இதுவே நம்மை உயர்த்தும். நம்மை அறியாமல் நமது உள்ளம் தேடித் திரியும் நிலையும் இதுவேயாகும்.

பாரதிதாசனின் பாடல்களில் இத்தகைய ஓர். அநுபவ நிலையைக் காணலாம். இயற்கையையும் பிறவற்றையும் அவர் அநுபவித்ததைப் போலவே அவர் பாடல்களின் மூலம் நம்புலன் களின் துணைகொண்டு நாமும் அநுபவிக்கலாம். கவிஞன் தன் அநுபவத்தைத் தேர்ந்தெடுத்த சொற்களால் உணர்வூட்டி நமக்குத் தருகிறான். படிமங்கள் (Images) சிந்தனை இவற்றின் குறியீடு களாகச் (Symbols) சொற்கள் பணிபுரிகின்றன என்பதை நாம் அறிவோம். பர்ட்டன் என்ற திறனாய்வாளரின் கருத்துப்படி கவிதையின் படிமங்களின் மூலம் நம் புலன்களைத் தொடு கின்றது. புலன்களின் மூலம் படிப்போரின் உணர்ச்சிகளும் அறிவும் விரைவாகத் தூண்டப்பெறுகின்றன. இதன் காரணமாகக் கவிதையில் படிமம் அதிகமாக பயன்படுத்தப் பெறுகின்றது.[1] அவர் மேலும் கூறுவது: ''செலுத்தப் பெறும் புலன்களுக்கேற்பப் படிமங்கள் வகைப்படுத்தப் பெறுகின்றன. ஆகவே நாம் பெறுவது கட்புலப்படிமங்கள் (Visual images); இவற்றில் வண்ணப் படிமங்களும் வடிவப் படிமங்களும் அடங்கும்; செவிப்புலப் படிமங்கள் (Auditory images) சுவைப்புலப் படிமங்கள் (Gustatory images) நாற்றப் புலப் படிமங்கள் (Olfactory images) ஊறு அல்லது தொடு புலப் படிமங்கள் (Tactual images). இவற்றைத் தவிர இயக்க நிலைப் படிமங்கள் (Kinaesthetic images) மரபுநிலைப் படிமங்கள் (Conventional images) என்பவையும் உள்ளன.[2] இவை தனியாகவும், ஒன்று இரண்டு பலவுமாக இணைந்தும் கலவைப் படிமங்களாகவும் கவிதையில் அமைகின்றன. மேலும் குறியீடுகளாக அமையும் சொற்கள் 'கட்டுண்ட' (Tied) படிமங்களையும் 'விடுதலை'ப் (Free) படிமங்களையும் உண்டாக்கிப் படிப்போரிடையே

---

1. Burton.S.N.: The Crticism of Poetry (Longmans Green and Co.Ltd, London) p. 97.

2. ஷை - பக் 99

ஒத்துணர்வுத் துலங்கலையும் ஒட்ட உணரும் துலங்கலையும் எழுப்புகின்றன. இவற்றால் கவிதையநுபவம் - முருகுணர்ச்சி - கொடு முடியை எட்டுகின்றது. இந்தக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு பாவேந்தரின் பாடல்களை ஆராய்வோம். அப்பெருமகனாரின் நோக்கு அவர்தம் கவிதைகளில், எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும் காண்போம்!

**கட்புலப் படிமங்கள்:** உதாரன் விண்ணில் தோன்றும் முழு நிலாவினை நோக்கி இவ்வாறு பாடுகின்றான்.

நீலவான் ஆடைக்குள் உடல்ம றைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளிமு கத்தைக்
கோலமுழு தும்காட்டி விட்டால் காதல்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ? நீதான்!
சொக்கவெள்ளிப் பாற்குடமோ அமுத ஊற்றோ!
காலைவந்த செம்பரிதிக் கடலில் மூழ்கிக்
கனல்மாரிக் குளிரடைந்த ஒளிப்பி ழம்போ![3]

அழகிய நங்கையொருத்தி தன் உடல் முழுவதையும் நீலவான் ஆடைக்குள் மறைத்துக் கொண்டு முகத்தை மட்டிலும் காட்டுகின்றாளாம். அதுவே நிலாவாம். இது கட்புலப் படிமம். இந்தப் பாடலில் இதனைத் தவிர, வானச் சோலையிலே பூத்த தனிப் பூ, சொக்க வெள்ளிப் பாற்குடம், காலை வந்த செம்பரிதி கடலில் மூழ்கிக் கனல் மாரிக் குளிரடைந்த ஒளிப் பிழம்பு போன்ற ஏனைய கட்புலப் படிமங்களும் ஒருங்கிணைந்து ஓர் அற்புதக் கலவைக் காட்சியினை நம் மனத்தகத்தில் தோற்றுவித்து அதனைப் பூரிப்படையச் செய்கின்றன. இன்னும் இதே கவிதையில்,

பழகும் இருட்டினில் நானிருந்தேன்-எதிர்
பால்நில வாயிரம்போல் - அவள்
அழகு வெளிச்சம் அடித்த தென்மேல்
அடியேன் செய்த தொன்று மில்லை.[4]

---

3. 'புரட்சிக் கவி'

4. ஷை - ஷை

என்ற பகுதியிலும் கட்புலப் படிமங்களைக் கண்டு அநுபவிக் கலாம்.

மேலும், அடியிற் காணும் பாடற் பகுதிகளில் உள்ள படிமங் களையும் அநுபவித்து மகிழ்வோம்.

ஆயிரம் ஆயிரம் அம்பொற் காசுகள்
ஆயிரம் ஆயிரம் அம்பிறை நிலவுகள்
மரகத உருக்கின் வண்ணத் தடாகம்
ஆனஉன் மெல்லுடல்.[5]

தாமரை பூத்த குளத்தினிலே - முக்த்
தாமரை தோன்ற முழுகிடுவாள்! - அந்தக்
கோமள வல்லியைக் கண்டுவிட்டான் - குப்பன்
முகிலைக் கிழித்து வெளிக்கிளம்பும் - ஒரு
முழுமதிபோல நனைந்திருக்கும் - தன்
துகிலினைப் பற்றித் துறைக்கு வந்தாள்![6]

இவற்றில் நிற, வடிவக் கட்புலப் படிமங்களைக் கண்டு மகிழலாம்.

முருகு அல்லது அழகு எங்கெங்கெல்லாம் காணப்படுகிறது என்று கூறுகிறார் கவிஞர் ஒரு கவிதையில்,

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன் அந்தச்
சோலையிலே, மலர்களிலே, தளிர்கள் தம்மில்
தொட்டஇடம் எலாம்கண்ணில் தட்டுப் பட்டாள்.
மாலையிலே மேற்றிசையில் இளகு கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள்! ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனில்அந்த அழகென்பாள் கவிதை தந்தாள்.[7]

---

5. ஷெ - மயில்

6. ஷெ - மாந்தோப்பில் மணம்.

7. அழகின் சிரிப்பு - அழகு.

இக்கவிதையில் காலை இளம்பரிதி, கடற்பரப்பு, ஒளிப் புனல், சோலை, மலர், மேற்றிசையில் இளகுகின்ற மாணிக்கச் சுடர், ஆலஞ்சாலை, கிளியின் கூட்டம் இவற்றில் உள்ள சொல் அல்லது தொடர்களால் உணர்த்தப் பெறும் வண்ண, வடிவக் கட்புலப் படிமங்களைக் கண்டு மகிழ்க.

இரவு வரும் காட்சி இனிதாகக் காட்டப் பெறும் பாடற்பகுதி இது:

**மேற்றிசைக் கதிர்ப்ப ழத்தை**
**விருந்துண்டு நீல ஆடை**
**மாற்றுடை யாய்உ டுத்து**
**மரகத அணிகள் பூண்டு**
**கோற்கிளை ஒடுங்கும் புட்கள்**
**கோட்டிடும் இறகின் சந்தக்**
**காற்சிலம் பசையக் காதற்**
**கரும்பான இரவு தன்னைத்**
**திருவிளக் கேற்றி வந்து**
**தெருவினில் வரவேற் கின்றாள்.**[8]

மேற்றிசைக் கதிர் பழம், கரும்பான இரவு, திருவிளக்கு இவற்றில் கட்புலப் படிமங்களைக் கண்டு களிக்கலாம்.

சின்னஞ் சிறுகிளியை - அரும் பெரும் தவத்தால் பெற்ற பெண் குழவியை - வேடப்பன் காண்கின்றான்.

**இளகிய பொன்ச ருக்கின்**
**சிற்றுடல், இருநீ லக்கண்**
**ஒளிபடும் பவளச் செவ்வாய்**
**ஒருபிடிக் கரும்பின் கைகால்**
**அளிதமிழ் உயிர்பெற் றங்கே**
**அழகொடும் அசையும் பச்சைக்**
**கிளியினைக் காணப் பெற்றான்.**[9]

---

8. குடும்ப விளக்கு - ஒரு நாள் நிகழ்ச்சி.

9. ஷை - மக்கட்பேறு.

'பேசும் பொற் சித்திரமாக' வளரப் போகும் பச்சைக் கிளியின் மேனியழகினைக் காட்டும் பாங்கில் கட்புலப் படிமங்களில் ஈடுபடுகின்றோம்.

எள்ளிளஞ் சிறிய பூவை
எடுத்துவைத் திட்ட மூக்கும்
வள்ளச்செந் தாம ரைப்பூ
இதழ்கவிழ்ந் திருந்த வாய்ப்பின்
அள்இரண் டும்சி வப்பு
மாதுளை சிதறச் சிந்தும்
ஒள்ளிய மணிச்சி ரிப்பும்
உவப்பூட்டும் பெண்கு ழந்தை.[10]

என்ற பகுதியில் வேடப்பனின் 'செல்வக் களஞ்சியம்' காட்டப் பெறுகின்றது. குழவியின் எள்ளுப் பூ போன்ற மூக்கின் கட்புல வடிவ படிமங்களிலும் தாமரை இதழ் போன்ற சிவந்த உதடுகளின் கட்புல வண்ணப் படிமத்திலும் நம் உள்ளம் பறி போகின்றது.

மாலை நேரக் காட்சியை,

மேற்றிசையில் வானத்தில் பொன்னுருக்கு
வெள்ளத்தில் செம்பரிதி மிதக்கும் நேரம்![11]

என்ற அடிகளில் கட்புலப் படிமங்களைக் கண்டு மகிழலாம். வயலில் பகல் நேரத்தில் இயற்கைக் காட்சியை,

கடல்மிசை உதித்த பரிதியின் நெடுங்கதிர்
வானெலாம் பாய்ந்தது! பறந்தது வல்லிருள்!
புவியின் சித்திரம் ஒளியிற் பொலிந்தது
இயற்கை தந்த எழிலிடை நடந்தேன்.[12]

என்ற அடிகளில் கட்புலப் படிமங்களை அநுபவித்து மகிழலாம்.

10. குடும்ப விளக்கு - மக்கட்பேறு.

11. பா.தா.க. - 33 எழுச்சியுற்ற பெண்கள்.

12. ஷை - 56. வியர்வைக் கடல்.

செவிப்புலப் படிமங்கள்: பாவேந்தரின் முருகியல் நோக்கு செவிப் புலப் படிமங்களைப் படைப்பதிலும் செல்லுகின்றது.

**கேளோடும் கிளம்பிவரும் பன்றி - நிலம்**
**கீண்டுகிழங் கேளடுத்த தன்றி - மிகு**
**தூளிபடத் தாவுகையில்**
**ஊளையிடும் குள்ளநரி**
**குன்றில் புகும்**
**ஒன்றி.[13]**

என்ற பாடற் பகுதியில் நரி ஊளையிடும் நிகழ்ச்சி காட்டப் பெறுகின்றது. இதிலுள்ள செவிப் புலப் படிமத்தால் நரி ஊளை யிடும் ஒலி நம் உள் மனத்தில் கேட்கின்றது.

அகப் பொருள் இலக்கணத்தில் காதலன் - காதலி சந்திக்கும் இடத்தைக் 'குறியிடம்' என்பார்கள். பூங்கோதை இச்செறிப்பில் இருக்கும் காலத்தில் பொன்முடியும் பூங்கோதையும் இரவில் சந்திப்பதற்காகக் குறியிடம் அமைத்துக் கொள்ளுகின்றனர். நள்ளிரவில் பூங்கோதை வீட்டின் தோட்டத்தில் புகுகின்றான் பொன்முடி. அத்தருணத்தில் காதலன்தான் வருகின்றான் என்று வழி மேல் விழி வைத்துக் காத்திருக்கின்றாள் பூங்கோதை. பலகணியின் அருகிருந்து,

**வீணையிலோர் தந்தி மெதுவாய் அதிர்ந்ததுபோல்**
**ஆணழகன் என்றெண்ணி 'அத்தான்' என்றாள் நங்கை.[14]**

வீணையின் தந்தி அதிர்வினால் கேட்கப் பெறும் 'த்தான்' என்ற இனிய ஒலி போலவே, மெதுவாய் கூப்பிடும் பூங்கோதையின் 'அத்தான்' என்ற ஒலியும் அமைகின்றது. 'அத்தான்' என்ற சொல்லில் செவிப் புலப் படிமம் அமைந்து வீணையின் தந்தி ஒலியையும் பூங்கோதையின் குரல் ஒலியையும் கேட்கும் வாய்ப்பாக அமைகின்றது.

---

13. பா.தா.க. - 7. காடு

14. எதிர் பாரா முத்தம் - நள்ளிருளில் கிள்ளை வீட்டிற்கு

வானம் பாடியின் இசையில் ஈடுபட்ட கவிஞர்,

வானந்தான் பாடிற்றா? வானிலவு பாடிற்றா?
தேனை அருந்திச் சிறுதும்பி மேலேறி
நல்லிசை நல்கிற்றா? நடுங்கும் இடிகுரலும்
மெல்லிசை பயின்று மிகஇனிமை தந்ததுவோ?

வானூர்தி மேலிருந்து வல்ல தமிழிசைஞன்
தேனூதும் வேய்ங்குழலா? யாழா? தனியொருத்தி
வையத்து மக்கள் மகிழக் குரலெடுத்துப்
பெய்த அமுதா?[15]

என்ற கவிதையைத் தருகின்றார். இதில் பல்வேறு செவிப் புலப் படிமங்கள் நம்மை வியக்க வைக்கின்றன.

**சுவைப்புலப் படிமங்கள்:** இவ்வகைப் படிமங்கள் புரட்சிக் கவிஞரின் பாடல்களில் அதிகமாகக் காணப் பெறவில்லை. இவற்றையும் தேடிக் காண்போம்.

சின்ன மலர்வாய் சிரித்தபடி பால்குடித்தாய்
கன்னலின் சாறே கனிரசமே கண்ணுறங்கு![16]

என்ற கண்ணியில் குழந்தையையும் காண்கின்றோம்! கன்னல் சாறு, கனியின் ரசம் இவற்றின் சுவையையும் துய்க்கின்றோம்.

வீட்டின் உட்புறத்து விளைந்த தான
இனிய யாழிசை கனிச்சாறு போலத்
தலைவன் தலைவியைத் தழுவ லாயிற்று.[17]

என்ற அடிகளில் கனிச்சாறு போல இனிக்கும் யாழிசையைக் கேட்டாலும் கனிச்சாறின் சுவை நாவில் இனிக்கின்றது; சுவைப் புலப் படிமத்தைத் துய்க்கின்றோம்.

---

15. பா.தா.க. - (2) - 6. வானம்பாடி.
16. பா.தா.க. - 41. ஆண்குழந்தை தாலாட்டு.
17. ஷை - இரண்டாம் தொகுதி - 16. பெற்றோர் இன்பம்.

புதிய நெறிப் 'பாஞ்சாலி சபதம்' போலே
தேனினிப்பில் தருபவர் யார்?[18]

என்ற அடிகளில் 'பாஞ்சாலி சபதம்' சுவைப் புலப் படிமங்களாக நாவில் தேன் இனிப்பதை உணர்கின்றோம்.

வாய்ம ணக்கவே உடல்ம ணக்கவே
வட்டில் நெய்யொடு கட்டித்தயிர் ஏடு
நிறையப் பால்தரும் கறவை.[19]

கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு.[20]

தெள்ளு தமிழில் இசைத்தேனைப் பிழிந்தெடுத்துத்
தின்னும் தமிழ் மறவர்.[21]

ஆனை அடிபோல் அதிரசத்தைச் சுட்டடுக்கித்
தேனில் துவைத்தெடுத்து தின்என்று தாரேனோ.[22]

தேரடியில் கண்ட அவள்
தேனிதழைத் தந்தவுடன்
'ஊருக்கெனைக் கூட்டிச் செல்க' என்றாள்.[23]

என்ற அடிகளிலும் சுவைப்புலப் படிமங்களைத் துய்த்து மகிழலாம்.

நாற்றப் புலப் படிமங்கள்: இந்த வகை படிமங்களும் பாவேந்தரின் பாடல்களில் அமைந்து முருகுணர்ச்சியை நல்குகின்றன.

---

18. ஷை - ஷை - 26. மகாகவி.
19. இசையமுது - கறவை.
20. ஷை - எழுச்சி.
21. ஷை - இன்பத்தமிழ்.
22. ஷை - தாலாட்டு.
23. காதல் நினைவுகள் - அவள் மேற் பழி

மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசு கின்ற
காடு, மணக்கவரும் கர்ப்பூரப் பெட்டகமே.[24]

இந்த அடிகளில் மூடத்தனத்தின் முடை நாற்றம் நம் மூக்கில் படுவதையும், கர்ப்பூரத்தின் வாசனையை உணரும் நிலையில் அழகிய பெண் குழந்தையையும் கண்டு மகிழ்கின்றோம்.

குப்பை மணக்கக் குடித்தெருவெல் லாம்மணக்க
அப்பம் நிலாப்போல அடுக்கிவைக்க மாட்டேனா.[25]

நகைமுத்தை மலர்பெய்த நன்னீ ராட்டிக்
குறைவிற நறும்புகை குழலுக் கூட்டி
மணக்குநெய் தடவி வாரிப்பூப் பின்னி.[26]

ஓவியப் பாயின் மீதில்
 உட்கார்ந்தோர் மின்இ யக்கத்
தூவிசி றிக்காற் றோடு
 சூழ்பன்னீர் மணமும் பெற்றார்.[27]

என்ற பாடற் பகுதிகளில் நாற்றப் படிமங்களைக் கண்டு தெளியலாம்.

தொடுபுல (நொப்புல)ப் படிமங்கள்: இந்த நுண்ணிய படிமங்கள் ஒன்றிரண்டு பாவேந்தரின் பாடல்களில் தட்டுப்படுகின்றன.

அன்னத்தின் தூவி அனிச்ச மலரெடுத்துச்
சின்ன உடலாகச் சித்திரித்த மெல்லியலே![28]

அள்ளி அணைத்திட வேண்டிய பெண் குழவிக் காட்சியில் அன்னத்தின் தூவி, அனிச்ச மலர் இவற்றின் மென்மையையும் உணர்கின்றோம்.

---

24. பா.தா.க. - 42. பெண் குழந்தைத் தாலாட்டு.

25. இசையமுது - தாலாட்டு.

26. குடும்ப விளக்கு - மூன்றாம் பகுதி - மணவாழ்த்தும் வழியனுப்பும்

27. ஷை - மக்கட்பேறு.

28. ஷை - 42. பெண் குழந்தைத் தாலாட்டு.

**திடுக்கென்று கண்விழித்தேன் என்தோள் மீது**
**செங்காந்தள் மலர்போலும் அவள் கை கண்டேன்.**[29]

என்ற அடிகளில் தொடுபுலப் படிமம் தென்படுகின்றது.

**உன்அரும் உருவம் காணேன்**
**ஆயினும் உன்றன் ஒவ்வோர்**
**சின்னநல் அசைவும் என்னைச்**
**சிலிர்த்திடச் செய்யும்.**[30]

என்ற பாட்ற் பகுதியில் இந்தப் படிமத்தைக் கண்டு மகிழலாம். தென்றல் என்ற 'மெல்லிய பூங்காற்று' நம் உடலைத் தொட்டுப் போவது போன்ற உணர்ச்சியைப் பெறுகின்றோம்.

இயக்கப் புலப் படிமம்: இவ்வகைப் படிமங்களைப் பாவேந்தரின் பாடல்களில் பல இடங்களில் கண்டு மகிழலாம்.

**படிகத்தைப் பாலாபி ஷேகம் செய்து**
**பார்ப்பதுபோல் அமுதவல்லி கண்ணீர் வெள்ளம்**
**அடிசோர்தல் கண்டார்கள் அங்கிருந்தோர்**[31]

அமுதவல்லியின் கண்ணீர் வெள்ளம் அவள் உடல் எல்லாம் பாய்ந்து அவள் காலடி வரையில் ஒழுகி வருவதைக் கண்டு மகிழலாம். இதில் இயக்கப் புலப் படிமம் தென்படுகின்றதன்றோ?

**வாளெயிற்று வேங்கையெலாம்**
**வால்சுற்றிப் பாயவரும்**
**காடு - பள்ளம்**
**மேடு!**[32]

---

29. பா.தா.க. - இரண்டாம் தொகுதி - 15. மெய்யன்பு
30. அழகின் சிரிப்பு - தென்றல்
31. பா.தா.க. - புரட்சிக்கவி.
32. ஷை - 7. காடு

இதில் மேடு பள்ளம் நிறைந்த காட்டில் வேங்கையின் இயக்கத்தைக் காணலாம்.

கீச்சென்று கத்தி - அணில்
கிளையொன்றில் ஓடிப் - பின்
வீச்சென்று பாய்ந்துதன் காதலன் வாலை
வெடுக்கென்று தான்க டிக்கும்
ஆச்சென்று சொல்லி - ஆண்
அணைக்க நெருங்கும் - உடன்
பாய்ச்சிய அம்பென கீழ்த்தரை நோக்கிப்
பறந்திடும் பெட்டை அணில்!
மூச்சுடன் ஆணோ - அதன்
முதுகிற் குதிக்கும் - கொல்லர்
காய்ச்சும் இரும்பிடை நீர்த்துளி ஆகக்
கலந்திடும் இன்பத்திலே.[33]

அணிலின் ஆணும் பெண்ணும் அங்கும் இங்கும் ஓடி இறுதியில் இன்பக் கலவியில் ஆழங்கால் படுவதில் இயக்க நிலைப் படிமங்கள் நம்மை மகிழ்வூட்டுகின்றன.

நள்ளிரவின் அமைதியிலே மணிவி ளக்கும்
நடுங்காமல் சன்னலுக்குள் புகுந்த தென்றல்
மெல்லஉடல் குளிரும்வகை வீசா நிற்கும்
வீணைஇல்லை காதினிலே இனிமை சேர்க்கும்.[34]

இப்பகுதியில் தென்னாடு பெற்ற செல்வத் தென்றலின் இயக்கம் தெள்ளிதின் புலனாகின்றது. இயக்க படிமத்தால் நம் உடலும் தடவப் பெறுவது போன்ற உணர்ச்சியால் பூரிக்கின்றோம். அன்னையின் அன்பினைக் கண்ணிற் காணாமல் அவளின் செயலில் காண்பதுபோல உருவம் காணப் பெறாத தென்றலின் ஒவ்வொரு சின்ன நல் அசைவிலும் நம்மைச் சிலிர்த்திடச் செய்யும் செயல்களைக் கண்டு பரவசப்படுகின்றோம்.

33. ஷை - மக்கள் நிலை - அணில்.

34. குடும்ப விளக்கு - ஒருநாள் நிகழ்ச்சி.

விலக்காத உடையை நீபோய்
விலக்கிலும் விலக்கார் உன்னை![35]

என்ற பாடற் பகுதியில் தென்றலின் குறும்பைக் காட்டி இயக்கப் புலப் படிமத்தை அநுபவிக்கச் செய்கிறார் கவிஞர் பெருமான்.

கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்.[36]

இப்பாடற் பகுதியில் குரங்கின் இயக்கத்தைக் காட்டுபவர் விளக்கினைத் தோட்ட பிள்ளையின் வெடுக்கென இயங்கும் கையின் இயக்கத்தையும் பெற வைக்கின்றார். நாம் இங்கு இரண்டு இயக்கப் புலப் படிமங்களை அநுபவிக்கின்றோம்.

அகன்றவாய்ச் சட்டி ஒன்றின்
விளிம்பினில் அடிபொ ருந்தப்
புகும்தலை; நீர்வாய் மொண்டு
நிமிர்ந்திடும்; பொன்இ மைகள்
நகும்;மணி விழிநாற் பாங்கும்
நாட்டிடும்; கீழ்இ றங்கி
மகிழ்ச்சியாய் உலவி வைய
மன்னர்க்கு நடைகற் பிக்கும்.[37]

புறாக்களின் செயல்களைக் காட்டும் இப்பாடற் பகுதியில் சட்டியில் நீர் பருகும் அதன் போக்கு, தலையை அசைத்து நாற் புறமும் செலுத்தப்பெறும் அதன் பார்வை, சட்டியை விட்டுக் கீழிறங்கி

---

35. அழகின் சிரிப்பு - தென்றல்

36. ஷை - ஆல்.

37. அழகின் சிரிப்பு - புறாக்கள்.

"இராஜ நடை" போடும் அதன் அழகு காட்டும் போக்கு ஆகிய பல்வேறு இயக்கப் புலப் படிமங்களில் நம்-மனம் ஈடுபட்டு மகிழ்கின்றது. இங்ஙனமே புறாவின் தாயன்பு - தந்தையன்பு காட்டும் பகுதியில்,

தாய்இரை தின்ற பின்பு
　　தன்குஞ்சைக் கூட்டிற் கண்டு
வாயினைத் திறக்கும்; குஞ்சு
　　தன்வாய்க்குள் வைக்கும் மூக்கை;
தாய்அருந் தியதைக் கக்கித்
　　தன்குஞ்சின் குடல்நி ரப்பும்;
ஓய்ந்ததும் தந்தை ஊட்டும்!
　　அன்புக்கோர் எடுத்துக் காட்டாம்.[38]

என்ற பாடற் பகுதியிலும் பல இயக்கப்புலப் படிமங்களில் ஆழங்கால் படுகின்றோம்.

கட்டுக்குள் அடங்கா தாடிக்
களித்திடும் தனது செல்வச்
சிட்டுக்கள்[39]

என்ற பாடற் பகுதியில் 'குறுகுறு'வென்று கொஞ்சு நடை பயிலும் சிறார்களின் நடை காட்டப் பெறுகின்றது. 'சிட்டுக்கள்' என்ற சொற் படத்தில் சிறார்களையும் காண்கின்றோம்; கோழி, புறா - இவற்றின் பார்ப்புகளையும் பார்க்கின்றோம்.

நுணுக்கம் அறியாப் பண்டாரம் பூங்கோதையின் நிலையைக் கணக்கர் முதலியோர் சூழ இருந்த பொன்முடியிடம் 'அவள் ஒரு வெள்ளை நூல் போல் ஆய்விட்டாள்', 'கவலைதான் அவள் நோய்' என்றெல்லாம் உணர்த்தத் தொடங்கியபோது,

"குறிப்பறி யாமல் நீவிர்
குண்டானிற் கவிழ்ந்த நீர்போல்
கொட்டாதீர்" என்றான்[40]

---

38. ஷை - ஷை

39. குடும்ப விளக்கு - ஒருநாள் நிகழ்ச்சி.

40. எதிர்பாரா முத்தம் - நுணுக்கமறியாச் சனப்பன்.

பொன்முடி. குண்டான் கவிழும்போது அதில் சிறிதும் நீர் இருப்ப தில்லை. அதுபோல் பண்டாரம் சிறிதும் அஞ்சாமல் பொன்முடியின் 'காதல் மறையை' அம்பலத்தில் அவிழ்த்து விடுகின்றான். நீர் கொட்டும் காட்சியில் இயக்கப்புலப் படிமத்தைக் கண்டு மகிழலாம்.

இந்தப் படிமத்திற்கு ஒரு முத்தாய்ப்பு வைத்தது போல்,

**எல்லாம் அசையச் செய்தாய் - உயிர்கள்**
**எதிலும் அசைவைச் சேர்த்தாய்**
**சொல்லால் இசையால் இன்பம்**
**துய்க்கச் செய்தாய்! அடடா!**
**கல்லாமயில், வான்கோழி - புறவுகள்**
**காட்டும் சுவைசேர் அசைவால்**
**அல்லல் விலக்கும் 'ஆடற் கலை' தான்**
**அமையச் செய்தாய் வாழி![41]**

என்ற பாடலில் காட்டுகின்றார் கவிஞர்.

**கலவை நிலைப் படிமங்கள்:** சில பாடல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட படிமங்கள் அமைந்து பொலிவூட்டி முருகுணர்ச்சியை மிகுவிக்கின்றன.

**புறப்பட்ட மங்கைதன், பூங்கொடி என்பவள்**
**நிறப்பட் டாடை நெகிழ்ந்தது காற்றில்.**

**பாதச் சிலம்பு பாடிற்று! நிலாமுகம்**
**சீதளம் சிந்திற்றாம்! செவ்விதழ் பின்னிற்றாம்[42]**

பூங்கொடியின் வருகையைச் சித்திரிக்கும் இவ்வடிகளில் நிறப் பட்டாடையிலும் நிலா முகத்திலும் செவ்விதழ் மின்னுவதிலும், கட்புலப் படிமங்களும் அதன் நெகிழ்ச்சியில் இயக்கப் புலப் படிமமும், சிலம்பு பாடுவதில் செவிப் புலப் படிமமும், முகம் சீதளம் சிந்துவதில் தொடு புலப் படிமமும் அமைந்து பூங்கொடி யின் அழகிற்குப் பொலிவூட்டுவதைக் கண்டு மகிழலாம்.

41. பா.தா.க. - 4. இயற்கைச் செல்வம்.

42. எதிர்பாரா முத்தம்.

அழகு என்பவளின் இருப்பிடங்களைக் காட்டும் கவிதை இது:

சிறுகுழந்தை விழியினிலே ஒளியாய் நின்றாள்;
திருவிளக்கிற் சிரிக்கின்றாள்; நாரெ டுத்து
நறுமலரைத் தொடுப்பாளின் விரல்வ ளைவில்
நாடகத்தைச் செய்கின்றாள்; அடடே செந்தோட்
புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
புதுநடையில் பூரித்தாள்; விளைந்த நன்செய்
நிறத்தினிலே என்விழியை நிறுத்தினாள்; என்
நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்.[43]

இதில் கட்புலப் படிமங்களும் (சிறு குழந்தை விழி, திருவிளக்கு, நன்செய் நிறம்), இயக்கப் புலப் படிமங்களும் (மலர் தொடுப்பாளின் விரல் வளைவின் அசைவு, உழவனின் புது நடை) அமைந்து இருப்பதைக் காண்க.

இந்தப் படிமங்கள் கவிஞன் உள்ளத்தில் இடம் பெற்றது போல் படிமங்கள் அமைந்த பாடலும் நம் உள்ளத்தில் நிலையான இடம் பெற்று விடுகின்றது.

அண்டங்கள் கோடி கோடி அனைத்தையும் தன்னகத்தில் கொண்ட ஒரு பெரும் புறத்தில் கூத்தாடுகின்றது காற்று. அது தென்றலாய் உருவெடுப்பதை அடியிற் காணும் பாடற் பகுதிகளில் காணலாம்.

பொதிகைமலை விட்டெழுந்து சந்த னத்தின்
புதுமணத்தில் தோய்ந்துபூந் தாது வாரி
நதிதழுவி அருவியின்தோள் உந்தித் தெற்கு
நன்முத்துக் கடலலையின் உச்சி தோறும்
சதிராடி, மூங்கிலிலே பண்எ ழுப்பித்
தாழையெலாம் மடற்கத்தி சுழற்ற வைத்து
முதிர்தெங்கின் இளம்பாளை முகம்சு வைத்து
முத்துதிர்த்துத் தமிழகத்தின் வீதி நோக்கி;

43. அழகின் சிரிப்பு.

அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச் செந்நெல்
அடிதொடரும் மடைப்புனலும் சிலிர்க்க என்றன்
சிந்தைஉடல் அணுஒவ்வொன் றும்சி லிர்க்கச்
செல்வம்ஒன்று வரும்; அதன்பேர் தென்றற் காற்று.[44]

இப்பாடற் பகுதியில் நாற்றப் புலப் படிமம், தொடு புலப் படிமம், இயக்கப் புலப் படிமம், செவிப் புலப் படிமம், சுவைப் புலப் படிமம் ஆகியவை அமைந்துள்ள நேர்த்தி எண்ணி எண்ணி மகிழத் தக்கது.

கவிதையை ஓர் அழகிய அணங்காகக் கற்பனை செய்யும் பாடல்களில் இது ஒன்று.

தண்ணிலவும் அவள்முகமோ! தாரகைகள் நகையோ
தளிருடலைத் தொடும்உணர்வோ நன்மணஞ்சேர் குளிரும்
விண்ணீலம் கார்குழலோ! காணும் எழிலெல்லாம்
மெல்லியின்வாய்க் கள்வெறியோ! அல்லிமலர்த் தேனின்
வண்டின்ஒலி அன்னவளின் தண்டமிழ்த்தாய் மொழியோ
வாழியஇங் கிவையெல்லாம் எழுதவரும் கவிதை!
கண்டெடுத்தேன் உயிர்ப்புதையல்! அதோவந்து விட்டாள்
கண்டெழுத முடியாத நறுங்கவிதை அவளே![45]

இதில் கட்புலப் படிமம், தொடுபுலப் படிமம், நாற்றப் புலப் படிமம், சுவைப் புலப் படிமம், செவிப்புலப் படிமம் ஆகிய ஐந்து வகைப் படிமங்களும் கலந்த நிலையை அநுபவித்து மகிழலாம்.

மெய்யுற வாய்சு வைக்க
விழிஅழ குண்ண மூக்கு
வெய்யசந் தனத்தோள் மோப்ப
விளைதமிழ் காது கேட்க
ஐயன்பால் புலன்கள் ஐந்தால்
அழிந்தள்ள வேண்டும்![46]

---

44. பா.தா.க. - இரண்டாம் தொகுதி. தென்றல்

45. பாரதிதாசன் கவிதைகள் - 14 எழுதாக் கவிதை.

46. குடும்ப விளக்கு - முதியோர் காதல்

இப்பாடற் பகுதியும் ஐந்துவகை படிமங்களையும் கொண் டிலங்குகின்றது.

**மின் வெட்டுப் போன்ற மணிமொழிப் படிமங்கள்:** மேற் கண்ட படிமங்களைத் தவிர பல்வேறு இடங்களில் கவிஞரின் சொற்களிலும், சொற்றொடர்களிலும் மின்வெட்டுகள் போன்ற பல்வேறு படிமங்கள் பாங்குற அமைந்திருப்பதையும் கண்டு மகிழலாம். அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் காட்டுவோம். செப்புச் சிலை போல் நிற்றல் (குப்பன்), வாடாத பூ முடித்த வஞ்சி (வள்ளி), நெஞ்சம் மூலிகை இரண்டின் மேல் மொய்த் திருத்தல், மூலிகையில் ஆசை மோதிடுதல், அச்சுப்பதுமை (வள்ளி), கிட்டரிய காதற் கிழத்தி இடும் வேலை விட்டெறிந்த கல்லைப் போல் மேலேறிப் போதல், தேன் சுரக்கப் பேசுதல், சாக்குருவி வேதாந்தம், கனிமுத்தம், கடுகளவும் ஆடாமல் கண்ணாடிப் பாத்திரத்தைக் கல் தரையில் வைப்பதைப் போல், ஆளிவாய்ப் பாகவதன், வெல்லத் தமிழ் நாடு, தென்றலில் மெல்லச் சிலிர்க்கும் (சிரிக்கும்) முல்லை, கன்னல் தமிழ், வானத்தை வெண்ணிலா வந்து தழுவுதல், பாளைச் சிரிப்பு, ஆணிப்பொன் மேனி, அன்னத்தைத் (அமுதவல்லி) தூக்கி ஆரத் தழுவுதல், அழகு வெளிச்சம், நவமணிக் களஞ்சியம், இருட் கதவை உடைத்தெறிந்தான் பரிதி, தணல் அள்ளும் பெருவெளி, அமுதப்பண், குத்து விளக்கினைப் போன்ற குழந்தைகள், கெண்டை விழிகள் மூடாக் கிளிமகள், அணையாத காதல், சதிராடு தேவடியாள் போல், பாதச் சிலம்பு பாடிற்று, இதழ் நிலத்தில் கனஉதட்டை ஊன்றி விதைத்தான் முத்தம், துயரில் அழுந்திக் கரையேறி, கள்ளியும் பாளை போல் கண்ணீர் விட்டு, மாவின் வடுப்போன்ற விழி, தென்னாட்டு அன்னம் (பெண்), வாழ்க்கை மலர் சொரிகின்ற இன்பத்தேன், கனி இதழ் நெடி துறிஞ்சி, கனியிதழைக் காதல் மருந்தென்று தின்றான், தேனைச் சொட்டுகின்ற இதழாள், மலை நிகர் மார்பில் அலை நிகர் கண்ணீர் அருவிபோல் இழிந்தது, என்னுளம் அவனுளம் இரண்டும் பின்னின, நானும் அவனும் தேனும் சுவையும்

ஆனோம், காலை மலரக் கவிதை மலர்ந்தது, தையற் சடுகுடு பொறி, தணல் நிற மாம்பழத்தில் தமிழ் நிகர் சுவையைக் கண்டான், உள்ளத்தில் கவிதை வைத்தே உயிரினால் எழுப்பி னாள், கிளிப் பேச்சுக் கிளி, பண்டிதர்கள் பழங்கதையின் ஓட்டைக்கெல்லாம் பணிக்கை இடல் போல், மணி விளக்கும் நடுங்காமல் சன்னலுக்குள் புகுந்த தென்றல், பலாப்பழம் போல் வயிறு, வீறார்ப்பு வாழ்வு, மாணிக்க மாம்பழந்தான் மாகதத்தின் இலைக் காம்பில் ஊசலாட, கற்பாரின் நிலையேயன்றிக் கற்பிப்பார் நிலையும் உற்றாள், விரிவாழைப் பூவின் கொப்பூழ், கன்னற் பிழிவே கனிச்சாறே கண்ணுறங்கு, சேவல் கூவிற்று! வானம் சிரித்தது; இந்தச் சொற்றொடர்களில் பொதிந்திருக்கும் பல்வேறு வகை படிமங்கள் படிப்போர் மனத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன.

**கவிதை அநுபவம்:** நம் உடல் தூண்டல் - துலங்கல் என்ற உளவியல் தத்துவப்படி இயங்குகிறது. உள்ளமும் அதற்கேற்பத் துலங்குகிறது. வெளி உலகிலிருந்து தூண்டல்கள் புலன்களைத் தாக்கும்போது அவற்றிற்கேற்பப் புலன்கள் துலங்குகின்றன. அதாவது, அப்புலன்கள் அத்தூண்டல்களால் கிளர்ச்சியடை கின்றன. அதனால் ஏற்படும் உணர்ச்சியை மனம் அநுபவிக் கின்றது. இந்த உணர்ச்சிப் பெருக்கில் உண்டாகும் இன்பமே - முருகுணர்ச்சியே - சுவையாகும். எடுத்துக்காட்டாக மணப் பொருள்கள் தரும் மணத்தை நாற்றப் புல நரம்புகள் வாங்கி மூளைக்கு அனுப்புகின்றன. மனம் அப்பொருள்கள் நல்கும் மணத்தை அநுபவிக்கின்றது. எடுத்துக்காட்டு ஊதுவத்தியின் மணம். இப்படியே பிற புலன்களின் மூலம் பெறும் தூண்டல் களால் மனம் அந்தந்தப் பொருள்கள் தரும் சுவைகளைப் பெற்று அவற்றில் ஈடுபடுகின்றது. இவ்வாறு வெளியுலகத் தூண்டல் களால் அடிக்கடி மனம் பெறும் அநுபவம் பெரு மூளையில் பதிவாகி விடுகிறது. உலகை இன்ப மயமாகக் கண்டு உள்ளத்தில் பூரிப்பு அடைபவர்கள் கவிஞர்கள். அதற்கு உள்ளத்தில் கனிவு வேண்டும்.

இவ்வாறு பெரு மூளையில் பதிவாகியிருக்கும் அநுபவம் அச்சு வடிவிலுள்ள கவிதைகளைப் படிக்கும்போது நினைவாற் றலின் காரணமாக தூண்டல்களாக (Ideational level) மாறு கின்றன. அவை மூளையிலுள்ள பூத்தண்டு, மேற் பூத்தண்டு என்ற பகுதிகளின் மூலமாகப் புலன்களை அடையும்போது மூளையில் அற்புதமாக அமைந்திருக்கும் நரம்பு அமைப்பு களைத் தூண்ட, அந்நரம்புகளின் இயக்கத்தால் மாங்காய்ச் சுரப்பிகள் (Adrenal glands) போன்ற நாளமிலாச் சுரப்பிகளில் சாறுகளை ஊறச் செய்து குருதியோட்டத்தை மிகுவிக்கின்றது. உடலும் கிளர்ச்சியடைகின்றது. அப்போது கவிதைகளில் வரும் படிமங்களைப் புலன்கள் மீண்டும் மனத்தில் தோன்றச் செய்கின்றன. மனம் அக்காட்சிகளை அநுபவித்து மகிழ்கின்றது.

இத்தகைய முருகுணர்ச்சியை தம் முருகியல் நோக்கால் தம்முடைய கவிதைகளில் ஏற்றி வைக்கின்றனர் கவிஞர்கள். உலக இயல்பிற்குப் படம் போலிருக்கும் அவர்களுடைய கவிதைகளை நாம் பயிலுங்கால் அதே நோக்கை நாம் பயிற்சி யால் ஓரளவு பெற்று விடுகின்றோம். கவிஞர்கள் உலகப் பொருள்களை அநுபவித்த உணர்ச்சி சுவை வடிவமாக அவர்தம் கவிதைகளில் தேக்கி வைக்கப் பெற்றுள்ளது. அக்கவிதைகளை நாம் பயிலுங்கால் அவற்றிலுள்ள சுவைகளை நம் மனம் அநுபவித்து மகிழ்கின்றது. பாவேந்தரின் பாடல்களைப் பயின்று அநுபவிப்பவர்கள் அவருடைய முருகியல் நோக்கை மானசீக மாகக் கண்டு மகிழலாம். நம்மிடமும் அந்நோக்கு எழுவதையும் உணர்ந்து மகிழலாம். பாடல்களும் 'மம்மர் அறுக்கும் மருந்தாக' நமக்குக் களிப்பூட்டுவதையும் உணரலாம்.

# 4. விண்வெளிப் பயணம்*

**நீலவான் முகட்டை மூட்டித்**
**தாக்கிடு வோமே - இந்த**
**நீண்ட வெளி தன்னைச் சுற்றிக்**
**கொள்ளை கொள்வோமே.**

என்பது மனிதன் காணும் துணிகரமான கனவாகும். இது மானிடயியல் வரலாற்றிலேயே நடைபெற்ற மிகப் பெரிய துணிகரமான நனவுமாகும். இது திங்கள், கோள்கள், விண்மீன்கள் இவற்றைப் பற்றி ஆராய்வதற்கு சிறந்ததொரு வாய்ப்பாகவும் அமைகின்றது. அறிவியல் துறையில் மின்சார ஊழி, அணு ஊழி என்றெல்லாம் வழங்கப் பெறுவதை நாம் அறிவோம். இனி விண்வெளி ஊழி என்பதையும் சேர்த்துக் கொள்ளும் காலமும் வந்துவிட்டது. இன்று மனிதன் விண்வெளி யினைத் துருவி ஆராயத் தொடங்கி விட்டான்; அதனை ஆட் கொள்ளவும் துணிந்து விட்டான். விண்வெளிச் செலவுத்துறை இவ்வளவு விரைவாக வளர்ச்சி பெறும் என்று எந்த அறிவிய லாரும் சிந்தித்திருக்க முடியாது.

**விண்வெளி உலகுகள்:** விண்வெளியைப் பற்றி மணிவாசகப் பெருமான் வியந்து கூறியதை,

**அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்**
**அளப்பருந் தன்மை வளப்பருங் காட்சி**
**ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்**
**நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன.**[1]

என்ற கவிதைப் பகுதியில் காணலாம். தேசியகவி பாரதியாரும்,

---

* அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் ச. மெய்யப்பனாரின் மணிவிழா மலரில் (1992) வெளி வந்தது.

1. திருவா: திருவண்டப் பகுதி (1-4)

நக்கபிரான் அருளால் - இங்கு
நடைபெறும் உலகங்கள் கணக்கிலவாம்;
தொக்கன அண்டங்கள் - வளர்
தொகைபல கோடிகள் கோடிகளாம்![2]

என்று கூறுவார். இந்த விண்வெளியினைக் கரையற்ற கடல் என்று உருவகித்துக் கூறிய கவிஞர் பெருமான்,

இக்கடல் அதனகத்தே - அங்கங்
கிடையிடைத் தோன்றும்புன் குமிழிகள் போல்
தொக்கன உலகங்கள் - திசைத்
தூவெளி அதனிடை விரைந்தோடும்;
மிக்கதோர் வியப்புடைத்தாம் - இந்த
வியன்பெரு வையத்தின் காட்சி கண்டீர்.[3]

என்று எண்ணற்ற அண்டங்கள் வானவெளியில் மிதந்தோடு வதை வியந்து பாராட்டி மகிழ்வர். இந்த உலகங்களுக் கிடையேயுள்ள தூரங்களைக் கற்பனையாலும் காண முடியாது! சக்தியை வியந்து பாராட்டும் கவிஞர் பாரதியார்,

அண்ட கோடிகள் வானில் அமைத்தனை;
    அவற்றில் எண்ணற்ற வேகம் சமைத்தனை;
மண்ட லத்தை அணுவணு வாக்கினால்
    வருவ தெத்தனை அத்தனை யோசனை
கொண்ட தூரம் அவற்றிடை வைத்தனை[4]

என்று இந்தத் தூரத்தைக் கற்பனையில் கணக்கிட்டு மகிழ்வார்.

ஒவ்வொரு விண்மீன் மண்டலமும் ஒவ்வோர் அகில மாகும். ஒவ்வொரு விண்மீன் குடும்பத்திலும் ஆயிரமாயிர இலட்ச விண்மீன்கள் அடங்கியுள்ளன. அவற்றிற்கிடையேயுள்ள தூரங்கள் மிகப் பெரியவை. இந்த எல்லையற்ற விண்வெளியில்

2. பா.கா: கோமதி மகிமை - 5

3. ஷை - 7

4. ஷை மகாசக்தி வாழ்த்து - 1

நமது கதிரவன் ஒரு சாதாரண விண்மீனாகும். அஃது இந்த எண்ணற்ற விண்மீன் குடும்பங்கள் உள்ள வெளிப்பரப்பில் ஒரு தூரத்தில் மிதந்து கொண்டுள்ளது. எல்லா விதத்திலும் அஃது ஒரு சராசரி விண்மீன்தான். நம் கதிரவனை விடக் குறுக்களவில் பல்லாயிரக்கணக்கான மடங்கு பெரிய விண்மீன்களும் உள்ளன. பன்னூற்றுக் கணக்கான மடங்கு சிறிய விண்மீன்களும் உள்ளன. எண்ணற்ற விண்மீன்களைப் போலவே நம் ஞாயிறும் விண்வெளியில் பல உலகங்கள் அடங்கிய ஒரு மாபெரும் குடும்பமாகும். அக்குடும்பம் **ஞாயிற்றுக் குடும்பம்** (Solar system) என்று வழங்கப் பெறும். இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த எல்லா உலகுகளும் பிரித்தற்கியலாத நிலையில் பிணைக்கப் பெற்றுள்ளன. பல்வேறு விண்மீன்களுக்கிடையே உள்ள தூரங்க ளுடன் ஒப்பிட்டால் ஞாயிற்றுக் குடும்பத்தைச் சேர்ந்த உலகுகள் மிக அண்மையிலேயே இருப்பதாகக் கொள்ளலாம்.

**ஞாயிற்றுக் குடும்பம்:** ஞாயிற்றுக் குடும்பத்தில் உள்ள உலகுகள் யாவும் கோள்களே (Planets). இந்தக் கோள்களுள் ஒன்று நாம் வாழும் பூமி. எனவே, இந்த அகிலத்தின் மையமாக இருப்பது ஒன்பது கோள்களுள் ஒன்றானதும் சாதாரண கோளும் ஆன பூமி அன்று. ஞாயிற்றுக் குடும்பத்தில் கதிர வனுக்கு மிக அண்மையிலிருப்பது புதன்; இக்கோள் ஏனைய எல்லாவற்றிலும் மிகச் சிறியது. அடுத்து, கதிரவனுக்கு அப்பால் நகர்ந்து கொண்டே செல்வோமாயின் வெள்ளி. நாம் வாழும் பூமி, செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ் (நிருதி), நெப்டியூன் (வருணன்), புளூட்டோ (குபேரன்) என்ற வரிசையில் இக் கோள்கள் அமைந்துள்ளன என்பதை அறியலாம். செவ்வாய்க்கும், வியாழனுக்கும் இடையில் சுமார் ஐம்பதினாயிரம் கோள்கள் அடங்கிய சிறு கோளத் திரள்கள் (Asteroids) சுற்றி வருகின்றன. இவை யாவும் கதிரவனைச் சுற்றி வலம் வருகின்றன.

**துணைக் கோள்கள்:** இந்தக் கோள்கள் பலவற்றிற்கு ஒன்றும் பலவுமான துணைக்கோள் உள்ளன. பூமியின் துணைக் கோள் சந்திரன். இது பூமியைச் சுற்றி வலம் வந்து

கொண்டுள்ளது. இங்ஙனமே ஒவ்வொரு கோளைச் சுற்றிலும் அதனதன் துணைக் கோள்கள் வலம் வந்து கொண்டுள்ளன இவை பற்றிய விவரம்:

| கோள்கள் | துணைக்கோள்கள் |
|---|---|
| 1 சூரியன் | 0 |
| 2 புதன் | 0 |
| 3 வெள்ளி | 0 |
| 4 பூமி | 1 |

அடுத்து 1959 சனவரி 2இல் இரஷ்யா அனுப்பிய லூனிக்-1 11வது கோளாகச் சூரியனைச் சுற்றி வந்தது (சில ஆண்டுகள்)

| | |
|---|---|
| 5 செவ்வாய் (சிறு கோளத் திரள்கள்) | 2 |
| 6 வியாழன் | 16 |
| 7 சனி | 17 |
| 8 யுரேனஸ் | 5 |
| 9 நெப்டியூன் | 2 |
| 10 புளூட்டோ | 0 |
| | 43 |

ஒரு காலத்தின் இவ்விரு கோள்கட்கும் இடையிலிருந்த ஒரு பெருங் கோள் யாதோ ஒரு காரணத்தால் வெடித்துப் பன்னூறு துண்டுகளாகச் சிதறுண்டிருக்கலாம் என்று வான் நூலார் கருதுகின்றனர்.

**பூமியிலிருந்து பயணம்:** பூமியில் வாழும் ஆறறிவுடைய மனிதன்தான் அண்டை உலகுகளைக் காண ஆர்வம் கொள்ளு கின்றான். இவன் முதலில் தான் வாழும் பூமியைப் பற்றியும் பூமியைச் சுற்றியுள்ள காற்று மண்டலத்தைப் பற்றியும் நன்றாகச் சிந்திக்கின்றான்; ஆராய்ந்து பல உண்மைகளைக் காண்கின்றான்.

செல்ல வேண்டிய இடங்களும் செல்லும் வழிகளும் விண்வெளிப் பயணிகட்குப் புதியவை. முதலில் செல்லும் வழியின் நிலையைப் பற்றி ஆராய்வது இன்றியமையாதது.

பூமியைச் சூழ்ந்துள்ளது வளிமண்டலம் (Atmosphere). இது பூகவர் விசையால் ஈர்க்கப்பெற்று பூமியினின்றும் தப்பி யோடாமல் காக்கப் பெறுகின்றது. நாம் இதைப் பற்றி ஓரளவு அறிந்திருந்தாலும் விண்வெளிப் பயணிகள் இதனைப் பற்றி நன்றாக, விரிவாக, தெளிவாக அறிந்து கொள்ள வேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். இன்று வளிமண்டலத்தை ஐந்து அடுக்குகளாகப் பிரித்து அவற்றின் தன்மைகளை வெளியிட் டுள்ளனர்.

**முதலாவது:** பூமியையொட்டி இருக்கும் அடுக்கு அடிவளி மண்டலம் (Troposphere) என்பது. இது கடல் மட்டத்திற்கு மேல் சற்றேறக் குறைய 15.கி.மீ. உயரம் வரை பரவியுள்ள பகுதியாகும். காற்றின் ஐந்தில் நான்கு பகுதி இந்த அடுக்கில் நிரப்பப் பெற்றுள்ளது. இந்த அடுக்கின் அடிமட்டத்தில்தான் நாம் வாழ்கின்றோம். இஃது அமைதியற்ற, கொந்தளிப்புள்ள பூமண்டலத்தைச் சூழ்ந்துள்ள வளி மண்டலப் பகுதியாகும். இப்பகுதியில்தான் மேகங்கள் உண்டாகின்றன. கால நிலை தோன்றுவது இப்பகுதியில்தான். சுழல் காற்றுகள், புயல்கள், கண்ணைப் பறிக்கும் பனிப் புயல்கள், சூறாவளிகள், பருவக் காற்றுகள் ஆகியவை யாவும் இங்குதான் உருவாகின்றன. இந்த அடுக்கு மண்டலம் யாவரும் வியக்கும் வண்ணம் பல செயல் களைப் புரிகின்றது. கதிரவனிடமிருந்து வரும் புற ஊதாக் கதிர்கள் (Ultra-violet rays) பூமியில் அதிக அளவு படியாத வாறு தடுத்து நிறுத்துதல், காற்றின் உராய்வினால் விண்கற்கள் (Meteorites) தரையில் விழாதவாறு எரிந்து விடச் செய்தல், அண்டக் கதிர்களை சிறிதளவே பூமியை அடையச் செய்தல், பகலவன் வெப்பத்தால் மேலேறும் நீராவியை மழையாகப் பொழியச் செய்தல், பூமியின் மேற்பரப்பை வெதுவெதுப்பாக வைத்துக் கொள்ளல் - ஆகியவை இதன் அற்புதச் செயல்கள்.

இரண்டாவது: முதல் அடுக்கிற்கு அடுத்து உள்ள மேற்பகுதி **அடுக்கு வளி மண்டலம்** (Stratosphere) எனப்படும். இஃது அடிவளி மண்டலத்தின் உச்சியில் தொடங்கி சுமார் இருபது மைல் உயரம் வரை பரவி நிற்பது. இப்பகுதியிலும் தொடர்ந்தாற் போல் கடுங் காற்றுகள் வீசிய வண்ணம் உள்ளது. இதன் அடிப் பகுதியில் வேகமாகப் பாய்ந்து செல்லும் இரண்டு காற்றாறுகள் இப்பூமண்டலத்தைச் சுற்றி ஓடிய வண்ணம் உள்ளன.

மூன்றாவது: வளி மண்டலத்தின் மூன்றாவது அடுக்கு **வேதியியல் மண்டலம்** (Chemisphere) ஆகும். இதன் ஒரு பகுதி அடுக்கு வளி மண்டலத்தின் மீது மடிந்து கிடக்கின்றது. இந்த மெல்லிய அடுக்கில் விண்வெளியினின்று இறங்கும் காற்றின் மூலக் கூறுகளில் பெருத்த வேதியியல் மாறுபாடுகள் நடைபெறுகின்றன. இதன் காரணமாக இது 'வேதியியல் மண்டலம்' என வழங்கப் பெற்றது. இம்மண்டலம் அடுக்கு வளி மண்டலத்தின் மேல் மட்டத்திலிருந்து சுமார் 48 கி.மீ. வரை பரவியுள்ளது. இம் மண்டலத்தின் அடி மட்டத்திலிருந்து சுமார் 14 கி.மீ. உயரம் வரை ஓஸோன் (Ozone) என்ற உயிர்க் காற்று பரவியுள்ளது. ஆகவே இந்தப் பகுதி ஓஸோன் மண்டலம் (Ozonosphere) என்று வழங்கப் பெறுகின்றது. கதிரவன் காலும் புற ஊதாக் கதிர்களும் உயிரியமும் (Oxygen) சேர்ந்து மாற்றம் அடைந்து ஓஸோன் அடுக்கு ஏற்படுகின்றது. இந்த அடுக்குதான் புறஊதாக் கதிர்கள் பூமியின்மீது விழாதவாறு பாதுகாக்கின்றது.

நான்காவது: வளி மண்டலத்தின் நான்காவது அடுக்கு **அயனிமண்டலம்** (Ionosphere) என்பது. இது வேதியியல் மண்டலத்திற்கு மேல் எவ்வளவு தூரம் பரவியுள்ளது என்பதை இன்னும் ஒருவரும் அறுதியிடவில்லை. இது முதல் 320 கி.மீ. உயரம் வரை பரவியுள்ளதாக அறிவியலறிஞர்கள் ஓரளவு அறிந் துள்ளனர். எஞ்சியுள்ள பகுதி இன்னும் விளங்காப் புதிராகவே உள்ளது. இந்த அடுக்கு மின்சாரத் தன்மை கொண்டது. இது காந்தப் புயல்களின் இருப்பிடமுமாகும். இவை தாம் வானொலி களைத் தாக்கி அவற்றை இயங்கா நிலைக்குக் கொணர்கின்றன.

தக்க பாதுகாப்பின்றி எந்த ஆராய்ச்சியாளரும் இப்பகுதியில் நிலவும் கதிரவனின் ஆற்றல் மிக்க புற-ஊதாக் கதிர்கள் உயிருக்கே உலை வைக்கும் விண்கற்கள் ஆகியவற்றிலிருந்து தப்பிக்க முடியாது. இங்குதான் காற்றிலுள்ள அணுக்களும் மூலக் கூறுகளும் கதிரவனிடமிருந்து வரும் மின் காந்த அலைகளினால் (Electro-magnetic waves) மோதுண்டு மின்சாரத் தன்மை எய்தி அயனிகளாகின்றன. வானொலி அலைகளில் திருப்பம் ஏற்படுவதும் இப்பகுதியில்தான். விண்வெளியில் இந்த மின்சார ஆடி (Electrical mirror) மட்டிலும் இராவிடில் வானொலிச் செய்திகளை நெடும் தொலைவிடங்கட்கு அனுப்ப இயலாது. இரேடார் சாதனத்தின் குறுகிய குற்றலைகளும் (Ultra-short waves) தொலைக்காட்சி அலைகளும் இந்த அடுக்கினை ஊடுருவிச் செல்கின்றன.

**ஐந்தாவது:** அயனி மண்டலத்திற்கு மேலுள்ள பகுதியைப் **புறவளி மண்டலம்** (Exosphere) என்று வழங்குகின்றனர். இப் பகுதியில் காற்றின் மூலக்கூறுகள் இங்கொன்றும் அங்கொன்று மாக இருக்கலாம். படிப்படியாக இம் மண்டலம் எல்லையற்ற விசும்பு வெளியுடன் கலக்கின்றது. இந்த விண்வெளியை வெற்றிடம் என்று கருதுகின்றனர் அறிவியலறிஞர்கள். இன்னும் இம்மண்டலத்தைப் பற்றி அதிகமாக ஒன்றும் அறியக் கூடவில்லை. அயனி மண்டலத்திற்கும் புறவழி மண்டலத்திற்கும் இடையிலுள்ள பகுதியைத் துணைக் கோள்கள் (Satellites) கடந்து செல்வதில் தடையிருப்பதாக அவர்கள் கருதுகின்றனர்.

**பயணத்திற்கேற்ற ஊர்தி:** விண்வெளியில் பயணத்திற்கு ஏற்ற ஊர்தி இராக்கெட்டு விமானம் ஆகும். சாதாரணமாக இதற்கு மூன்றடுக்கு இராக் கெட்டைத்தான் பயன்படுத்து கின்றனர். இந்த அமைப்பில் மூன்று இராக்கெட்டுகள் ஒன்றன் மீது ஒன்றாக, உணவு கொண்டு செல்லும் அடுக்குகளைப் பொருத்தி வைத்திருப்பது போல், செங்குத்தாக நிறுத்தி வைக்கப் படும். செருகி வைக்கப்பட்டிருக்கும். அடிப்பகுதியிலிருப்பது முதல் நிலை இராக்கெட்டு. அதற்கு மேலிருப்பது இரண்டாவது

நிலை இராக்கெட்டு. எல்லாவற்றிற்கும் மேல் உச்சியிலுள்ளது மூன்றாவது நிலை இராக்கெட்டு. இதில்தான் விண்வெளிப் பயணத்தில் பயன்படுத்தப்படும் விண்கலம் அல்லது துணைக் கோள் பொருத்தப் பெற்றிருக்கும். இந்த அமைப்பின் நுனியில் காற்றைக் கிழித்துச் செல்லக் கூடிய கூம்பிய வடிவிலுள்ள மூக்குப் பகுதி ஒன்றிருக்கும். இராக்கெட்டு அமைப்பில் பொறிகள் யாவும் செம்மையாக இயங்குகின்றனவா என்று பொறிஞர்கள் சோதித்துப் பார்த்த பிறகு, எல்லாத் துறை அறிஞர்களும் ஆமோதித்ததும், இராக்கெட்டின் அமைப்பு இயக்கப் பெறும் நிலையில் உள்ளது என்பது உறுதி செய்யப் பெறுகின்றது.

**இயக்கப் பெறும் தத்துவம்:** ஆய்வுக்கு அனுப்பப் பெறும் விண்கலம் அல்லது ஆட்களை ஏற்றிச் செல்லும் விண்கலம் இவற்றின் எடை எவ்வளவாக இருந்த போதிலும் அஃது இயக்கப்பெற வேண்டிய வேகமும் அதனைச் சுற்று வழியில் இயக்கும் முறையும் ஒன்றேயாகும். விண்கலத்தை ஏற்றிச் செல்லும் இராக்கெட்டு மணிக்கு 28,800 கி.மீ. வேகத்தை அடைந்த பின்னர்தான் அதனைச் சுற்று வழியில் இயக்கி விட வேண்டும். அப்போதுதான் அது வட்ட வழியில் சுற்றி வரும். அதன் வேகம் அதிகரிக்க வேண்டுமாயின் அதன் பொருண்மை விகிதம் (Mass ratio) அதிகரித்தல் வேண்டும். இராக்கெட்டு பூமியை விட்டு மேலே கிளம்புவதற்கு முன் எரிபொருளுடன் கூடிய அதன் பொருண்மைக்கும் எரிபொருள் தீர்ந்த பிறகு உள்ள எஞ்சிய பொருண்மைக்கும் உள்ள விகிதமே அதன் பொருண்மை விகிதமாகும். சாதாரணமாக இராக்கெட்டிலுள்ள எரி பொருண்மை மட்டிலும் 75% இருக்கும். அதன் மேலுறை, உள்ளிருக்கும் பொறிகள், இராக்கெட்டின் உச்சியிலுள்ள விண்கலம் ஆகியவை யாவும் சேர்ந்து 25% இருக்கும். ஆகவே, எரிபொருள் கலவை தீர்ந்தபின் எஞ்சியிருக்கும் பொருண்மை 25% தான் இருக்கும். அந்த அமைப்பினைக் கொண்ட இராக்கெட்டின் பொருண்மை விகிதம் 75 + 25/25 = 4 ஆகும். பொருண்மை விகிதத்தின் அதிகரிப்பிற்கேற்ப இராக்கெட்டின்

வேகமும் அதிகரிக்கும். மேலுறை எவ்வளவு இலேசாகவும் பொறியமைப்புகளை எவ்வளவு சிறியவைகளாகவும் அமைத்த போதிலும் பொருண்மை விகிதத்தை 7க்கு மேல் அதிகப்படுத்த முடியாது என்று கண்டுள்ளனர் இராக்கெட்டுப் பொறிஞர்கள்.

**இராக்கெட்டின் இயக்கம்:** இராக்கெட்டு மூன்றடுக்கின்றி ஒன்றாக அமைந்திருந்தால் அதன் மேலுள்ள விண்கலத்தைத் தன்னிடமிருந்து கழற்றி விண்வெளியில் இயக்கும் வரையில் அதனை வீணாகச் சுமந்து செல்ல வேண்டி நேரிடும். மூன்றடுக்கு இராக்கெட்டில் அடியிலுள்ள முதல் அடுக்கு முதலில் இயங்கத் தொடங்கும். அதிலுள்ள எரிபொருள் எரிந்து தீர்ந்ததும் அது பயனற்றதாகி விடுகின்றது. வீணாக ஒரு பளுவைச் சுமக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது. எனவே அது கழற்றி நழுவ விடப் பெறலாம். இதனால் எஞ்சியுள்ள இராக்கெட்டு அமைப்பின் எடை மிகவும் குறைந்து விடுகின்றது. இந்த நிலையில் அது மணிக்கு 4,000 கி.மீ. வேகத்தில் பயணம் செய்து 48 கி.மீ. உயரத்தை எட்டுகின்றது.

முதல் அடுக்கு இராக்கெட்டு கழன்ற பிறகு இராக்கெட்டு அமைப்பின் எடை குறைவதால் அது மிகுந்த வேகத்தைப் பெறு கின்றது. இரண்டாவது அடுக்கு இராக்கெட்டு செயற்படத் தொடங்கியதும், இராக்கெட்டின் அமைப்பு பன்மடங்கு வேகத்தை அடைகின்றது. அதிலுள்ள எரிபொருள் கலவை முற்றிலும் தீர்ந்த பிறகு அதுவும் கழன்று நழுவி விழுந்து விடுகின்றது. கிட்டத்தட்ட 160 கி.மீ. உயரத்தில் அதன் வேகம் மணிக்கு 19,200 கி.மீ. ஆகி விடுகின்றது. இந்த நிலையில் காற்றை துளைத்துக் கொண்டு விரைவதற்காக அமைக்கப் பெற்ற மூக்குப் பகுதியும், காற்றே இல்லாத உயரத்தில் பயனற்றுப் போவதால், கழன்று விழுந்து அமைப்பின் எடையைக் குறைத்து இராக்கெட்டு அமைப்பின் எஞ்சிய பகுதியின் வேகத்தை அதிகரிப்பதற்கு வகை செய்கின்றது. இந்த அதிவேகமும் எடை குறைவும் மூன்றாவது நிலை இராக்கெட்டினை மேலும் பன்மடங்கு வேகத்தை அடையச் செய்கின்றது.

இப்பொழுது மூன்றாவது அடுக்கு இராக்கெட்டு தானியங்கு அமைப்பால் இயங்கத் தொடங்குகின்றது. அது தான் செல்லும் திசையில் சிறிது சிறிதாக மாறிக் கொண்டே செல்லும். இறுதியாக அது பூமியின் கிடைமட்டமான திசையில் 480 கி.மீ. உயரத்தில் செல்லுங்கால் அதன் வேகம் மணிக்கு 28,000 கி.மீ. ஆகி விடுகின்றது. இந்நிலையில் அதிலுள்ள தானியங்கி அமைப்பு இயங்கி அதன் பிடியிலுள்ள துணைக் கோளை - விண்கலத்தை - விடுவிக்கின்றது. இங்ஙனம் விண்கலத்தின் வேகம் அதிகரிக்க எல்லா வழிகளும் மேற்கொள்ளப் பெறுகின்றன.

பூமியைச் சுற்றி வரும் துணைகோள் (விண்கலம்) வட்டப் பாதையில் சுற்றி வர வேண்டுமாயின் அதன் வேகம் அதன் உயரத்திற்கேற்ற சுற்றுவழி வேகமாக (Orbital uelocity) அமைதல் வேண்டும். மற்றும் அது பூமிக்குக் கிடைமட்டமான திசையிலும் வீசப் பெறுதல் வேண்டும். இந்த இரண்டு கூறுகளில் ஒரு சிறிது மாற்றம் ஏற்பட்டாலும் விண்கலம் நீள் வட்டப் பாதையில் சுற்றி வந்து கொண்டிருக்கும். அகப்பற்றையும் புறப்பற்றையும் நீக்கிய ஆன்மா வீட்டுலகைத்தை நோக்கி விரைவது போல் மூன்றடுக்கு இராக்கெட்டுக் கவசங்களையும் மூக்குப் பகுதிகளையும் நீக்கிய விண்கலம் விண்வெளியில் தான் அடைய வேண்டிய இலக்கை நோக்கி விரைந்து செல்லுகின்றது.

**விண்வெளிப் பேரிடர்கள்:** இராக்கெட்டு விமானத்தில் விண்வெளியில் செல்வோருக்குத் தாம் புறப்பட்டது முதல் விண் வெளியில் செல்லும் வரையிலும் அதன் பிறகு அவர்கள் இந்நில உலகிற்குத் திரும்பும் வரையிலும் பல பேரிடர்கள் நேரிடலாம்.

**இடர்கள்:** விண்கலத்தினுள் இருப்பவர்கட்குக் கடுங்குளிர், அழுத்தமின்மை, வாயுவில்லாத சிரமம், அண்டக் கதிர்கள், புற ஊதாக் கதிர்கள், விண் கற்கள் போன்ற இடையூறுகளைத் தவிர்த் தாக வேண்டும். தவிரவும், அந்த வெற்றிடச் சூழ்நிலையில், அந்த ஏகாந்த மௌனப் பெருவெளியில் மனிதனது குருதி கொதிக்கத் தொடங்கி அவன் உயிர் துறக்கவும் நேரிடும். இதனால் பூமியில் அவன் வாழும் சூழ்நிலையே அவன்

செல்லும் விண்வெளிக் கூண்டினுள் அமைதல் வேண்டும். கூண்டினுள் வளி மண்டல அழுத்தத்தில் காற்று அடைக்கப் பெற்றிருக்கும். வெப்ப நிலையும் 65% இருக்குமாறு செய்வதற்கேற்ற குளிர் சாதன அமைப்பு பொருத்தப் பெற்றிருக்கும். ஈயத்தகடு கதிர் வீச்சினைத் தடுக்க வல்லதாகையால், கூண்டின் சுவரில் ஈயத் தகடுகள் பல அடுக்குகளில் பதிக்கப் பெற்றிருக்கும். விபத்துக்களின் விளைவுகளைக் குறைப்பதற்காகப் பல அறைகள் கூண்டினுள் அமைக்கப் பெற்றிருக்கும். எனினும் ஏதாவது ஓர் அறையில் காற்று வெளியேற நேரிட்டால் அழுத்தக் குறைவு ஏற்பட்டு அங்குள்ளவர் மூச்சுத் திணறலுக்கு உட்பட்டும் வெற்றிடச் சூழ்நிலைகளுக்குள்ள விளைவுகள் ஏற்பட்டும் மரணம் அடைய நேரிடும். இதனைத் தவிர்க்க ஏற்பாடுகள் செய்யப் பெறுதல் வேண்டும்.

**விண்கற்கள்:** விண்வெளியில் கணம்தோறும் இலட்சக் கணக்கான விண்கற்கள் அதி வேகமாகப் பூமியை நோக்கி வீழ்ந்து கொண்டுள்ளன. கோள்களைப் போலவே கதிரவனைக் கோடிக்கணக்கான சிறுசிறு உருண்டைகளும் துணுக்குகளும் சுற்றி வருகின்றன. அவற்றுள் சில சில சமயம் விடுதலை யடைந்து பூமியின்மீது பாய்கின்றன. சில சமயம் பூமியும் அவற்றினிடையே பாய்ந்து செல்ல நேரிடுகின்றது. செயற்கைத் துணைக் கோள் விண்கற்களால் தாக்கப் பெற்றுத் துளைக்கப் பெறின் கூண்டினுள் இருக்கும் காற்று ஒரு சில வினாடிகளில் வெளியேறி விடும். கூண்டினுள்ளிருக்கும் விண்வெளி விமானி யும் மூர்ச்சையாகி விழுந்து விடுவான். இங்ஙனம் ஏற்படும் அபாயத்தைத் தவிர்ப்பதற்காக பல்வேறு பயிற்சி முறைகள் கையாளப் பெறுகின்றன. கூண்டின் சுவரைப் பல் அடுக்குத் தகடுகளால் அமைப்பது ஒருமுறை. சாதாரணமாக விண்கற்கள் மிகச் சிறியவையாதலின் அவை இந்த அடுக்கு அமைப்பில் பட்டுத் தெறித்தும் போய் விடுகின்றன. தகடுகளைச் சில துளைக்க நேரிட்டாலும் அவை மற்றைத் தகடுகளிடையே சிக்கிக் கொண்டு விடும்.

அண்டக் கதிர்கள்: இவை இன்னும் விளங்காப் புதிர்க ளாகவே உள்ளது. இவற்றுள் சிதருண்டு அயனிகளாகும் (ions) பகுதியே அதிகக் கேடு பயக்கக் கூடியது. இக்கதிர்கள் சிறிது அளவு விண்வெளி விமானியையோ அவர்கள் செல்லும் கூண்டினையோ தாக்கினால் அதனால் யாதொரு கேடும் விளையாது என்கின்றனர் அறிவியலறிஞர்கள்.

**வேறு நெருக்கடிகள்:** இவற்றுள் முக்கியமாக (1) மின்சார அமைப்பில் நேரிடும் கோளாறுகள் (2) தீவிபத்து (3) திடீரென்று அறைகளில் அழுத்தம் குறைதல் (4) விசைச் கருவியிலும் சுக்கானிலும் (Hull) ஏற்படும் பொறியடைப்புக் கோளாறுகள் ஆகியவை. இவற்றைச் சமாளிக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப் பெற்று வருகின்றன. இதுகாறும் சென்ற விண்வெளி வீரர்கட்கு இத்தகைய இடர்ப்பாடுகள் ஏற்படவில்லை.

**விண்வெளி அநுபவங்கள்:** விண்வெளிப் பயணத்தில் ஊர்தி பழுதடைந்தால் சீர்படுத்திக் கொள்ளலாம். இதில் பயணம் செய்யும் பயண நாயகன் மனிதன். இவன் சூழ்நிலைக்கு ஏற்பத் தன்னைச் சமாளித்துக் கொள்வதற்கேற்ற ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.

மிகுதியான எடை: பூமியிலிருந்து உயரக் கிளம்புகையில் ஆற்றல் வாய்ந்த நேர்வேக வளர்ச்சியின் காரணமாகப் பயணி களின் எடை பன்மடங்கு அதிகரித்து விட்டது போன்ற உணர்ச்சி ஏற்படும். துரிதமான விசை மாற்றம் ஏற்படுவதால் பொருளின் எடை 6 மடங்கிற்கு மேல் உயர்ந்து விடுகின்றது; விண்கலத்தின் உள்ளிருக்கும் மனிதனின் நிலையும் இதுவே. 80 கி.கிராம் எடையுள்ள மனிதன் 480 கி.கிராம் எடையைத் தன் மீது வைத்தது போன்ற உணர்ச்சியை அடைவான்; இதனால் பழுவடைந்த குருதி உடலின்கீழ் பகுதிகட்கு விரைந்து செல்லு கின்றது; மேற்பகுதியின் குருதியோட்டம் பாதிக்கப் பெறு கின்றது. மயக்கமும் ஏற்படுகின்றது. பூமியில் இதைச் சமாளிக்கப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. மைய விலகு விசைக் கருவியைக் (Centrifuge) கொண்டு பயிற்சி அளிக்கின்றனர்.

**எடையின்மை:** இராக்கெட்டின் பிடியிலிருந்து விடுபட்டு விண்கலம் பூமிக்குக் கிடைமட்டமாக வட்டச் சுற்று வழியில் இயங்கிக் கொண்டிருக்கும்போது அதனுள் இருக்கும் பொருள் கட்கு எடை என்பதே இராது. சில இயற்பியலின் ஆற்றலுக்கு உட்படுவதன் விளைவாக இந்த நிறையின்மை ஏற்படுகின்றது. பூமியின் ஈர்ப்பு ஆற்றல் தன் மையத்தை நோக்கி இராக் கெட்டினை இழுக்கின்றது. ஆனால் விண்வெளியில் செல்லும் இராக்கெட்டு பூமியின் மையத்தினின்றும் மேலே நோக்கிச் செல்லுகின்றது. இராக்கெட்டு விமானம் அதிவேகமான மைய விலகு விசையுடன் செல்லுகின்றது. இவ்வாறு எதிர்த் திசையில் இழுக்கும் ஆற்றலுக்கு உட்பட்டு மையம் விலக்கு விசை அதிகரித்ததும் பூமியின் ஈர்ப்பு ஆற்றலுக்குச் சமமானதும் விண்கலத்திற்கும் அதனுள் இருப்பவர்கட்கும் எடையில்லா உணர்ச்சி ஏற்படுகின்றது. இதன் விளைவாக யாவும் அந்தரத்தில் தொங்குகின்றன. இவை மேல் நோக்கியும் போவதில்லை. கீழ் நோக்கியும் இறங்குவதில்லை. நம் வான்மதி விநாடிக்கு 102.4. கி.மீ. வீதம் சுழன்று கொண்டு அந்தரத்தில் தொங்குவதை இதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

நிறையற்ற நிலை ஏற்படுங்கால் விண்வெளிக் கலத்தினுள் சில விசித்திர நிகழ்ச்கள் நடைபெறுகின்றன. கலத்தினுள்ள சேர்த்துக் கட்டப் பெறாத பொருள்கள் யாவும் அதனுள்ளேயே பறந்து கொண்டிருக்கும். இதனால் தான் கலத்தினுள்ளிருக்கும் விமானி திருகாணிகளால் பொருத்தப் பெற்றிருக்கும் இருக்கை யுடன் சேர்த்துக் கட்டப் பெற்றிருப்பார். இல்லை எனில் அவர் இருக்கையுடன் கலத்தினுள் பறக்க வேண்டிய நிலை ஏற்படும்! எடையின்மையால் உயிருக்கு எவ்வித தீங்கும் இல்லை. குருதி யோட்டம் சிறிதும் பாதிக்கப் பெறுவதில்லை. இதயம் நன்றாகச் செயற்படுகிறது. சுவாசித்தல் இயல்பாக நடைபெறுகின்றது. செரிவின் ஆற்றலுக்கும் இடையூறு ஒன்றும் இல்லை. உடலி லுள்ள ஏனைய உறுப்புகளும் சரியாகவே இயங்குகின்றன. ஆனால் விமானி செயற்படுதலில் தடை ஏற்படும். இச்

சூழ்நிலையில் சரியாகச் செயற்படுவதற்கும் பயிற்சி தரப் பெறுதல் வேண்டும்.

**உணவு முறை:** சாதாரணமாக இப்பூமியில் மேற்கொள்ளும் பயணத்திலேயே நமது உணவு முறை பெரிய அளவில் மாறுபடுகின்றது. எடையற்ற புதிய சூழ்நிலையில் எத்தனையோ மாறுபாடுகள் இருக்கும். குவளையிலுள்ள நீரை அண்ணாந்து பருக முடியாது; குவளையினின்றும் நீர் கீழே விழாது. உறிஞ்சிதான் நீரினைப் பருகுதல் வேண்டும். பானங்கள் நீண்ட குழாய்களுடன் பொருத்தப்பெற்றிருக்கும். பாலித்தீன் புட்டிகளில் வைக்கப் பெற்றிருக்கும். புட்டிகளை அழுத்திப் பீறிட்டு வெளி வரும் பானங்களைப் பருகுதல் வேண்டும். உண்ண வேண்டிய உணவும் பசை வடிவில் பல்பசை வடிவத்திலிருப்பது போன்ற குழல்களில் அடைக்கப் பெற்றிருக்கும். அக்குழல்களை வாயில் திணித்துக் கொண்டு அமுக்கிப் பசை வடிவிலுள்ள உணவை உண்ண வேண்டும். நாக்காழ்வாரும் வயிற்றாழ்வாரும் இவ்வகை உணவினை ஏற்றுச் செயற்படுவதில் பயிற்சி பெறுதல் வேண்டும்.

இன்னொரு விசித்திர நிகழ்ச்சியினையும் உணரலாம். வயிற்றுக்குள் சென்ற பிறகும் உணவு வயிற்றின் அடிப் பகுதியை அடையாமல் மிதந்து கொண்டிருக்கும். ஆயினும் உணவு செரிமானம் ஆவதில் யாதொரு இடையூறும் ஏற்படுவதில்லை. நல்ல வேளையாக எடையற்ற நிலையில் உடலின் உள்ளுறுப்புகள் எவ்விதத் தீங்குமின்றி நன்றாகவே இயங்குகின்றன.

**சுவாசிக்கும் முறை:** விண்வெளியில் சுவாசிப்பதற்கு உயிரியம் இன்றியமையாததாகின்றது. இப்புவியில் நாம் சுவாசிக்கும் காற்றில் 21 சதவிகிதம் உயிரியமும், 78 சதவிகிதம் நைட்ரஜனும், ஒரு சதவிகிதம் ஆர்கான் என்ற வாயுவும் உள்ளன. விண்வெளியிலிருக்கும்போது இந்த விகிதம் வாயுக்கள் கலப்பதில்லை. தேவையான அளவு காற்றழுத்தம் இருக்கும் வரையில் நைட்ரஜன் நம் குருதியில் எளிதாகக் கலந்து விடுகின்றது. அழுத்தம் குறையுங்கால் அது குருதியில் கலக்காமல் குமிழிகளாகத் தோற்றமளிக்கின்றன. இதனால் ஒருவருக்கு உயிரிழப்பும்

நேரிடலாம். ஆகவே குருதியுடன் எளிதில் கலக்கக் கூடிய பரிதியம் (Helium) கலந்த உயிரியத்தை (திரவ வடிவில்) எடுத்துச் செல்கின்றனர்.

**உடை வசதிகள்:** விண்வெளி வீரர்கள் தனிப்பட்ட முறையில் தயாரிக்கப் பெற்ற விண்வெளி உடையை அணிந்து கொள்ள வேண்டும். இஃது இரு உறைகளாலான இரப்பர் சேர்ந்த நைலானாலானது. இந்த உடை விண்வெளி வீரர்களின் உடல் முழுவதையும் மூடிக் கொண்டிருக்கும். இஃது உடலைச் சுற்றித் தேவையான காற்றழுத்தம் இருக்குமாறு அமைக்கப் பெற்றிருக்கும். வியர்வை, துர்நாற்றம் இவை வெளியேறுவதற்கும் வசதிகள் உள்ளன. கூண்டிற்குள் குளோரில்லா (Chlorella) என்ற ஒருவித பாசி வளர்க்கப் பெறும். இது விண்வெளி வீரர்கள் வெளிவிடும் கரியமில வாயுவை ஏற்று மாப்பொருளைத் தயாரித்து உயிரியத்தை வெளிவிடும். இது மீண்டும் மீண்டும் சுவாசிப்பதற்குப் பயன்படும். கூண்டின் வெளியில் உலவும்போது விண்வெளி வீரர்கள் இந்த உடையுடன் தான் உலாவ வேண்டும். அம்புலியில் இறங்கிய விண்வெளி வீரர்கள் இந்த உடையுடன்தான் உலாவினர்.

**அம்புலிப் பயணம்:** விண்வெளிக் கலத்தின் மூலம் மனிதன் அம்புலியை அடைவதற்கு முன்னர்ப் பல படிகளில் சோதனைகள் மேற்கொள்ளப் பெற்றன. முதலில் ஆளில்லாத கலங்களைக் கொண்டும் அதன்பிறகு ஆளுள்ள விண்கலங்களைக் கொண்டும் இச்சோதனைகள் செய்யப் பெற்றன. அப்போலோ - 11 பயணத்தில் மனிதன் அம்புலியில் கால் எடுத்து வைத்து விட்டான்; வெற்றியுடன் திரும்பியும் விட்டான்.

**பிறகோள்கள் மீது கவனம்:** வெள்ளி, செவ்வாய் போன்ற கோள்களைப்பற்றி ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. விண்வெளியில் நிரந்தரமான சுழலும் நிலையத்தை அமைத்த பிறகு பல பிரச்சினைகட்குத் தீர்வு காணப்பெறும். பிறகோள்கட்குப் பயணம் இங்கிருந்தே தொடங்கும்.

# 5. தமிழில் நகைச்சுவை*

அண்ணாநகர் தமிழ்ச் சங்கத்தில் இத்தலைப்பில் பேச வாய்ப்பளித்தது நான் சுவையைப் பற்றிப் பல்லாண்டுகளாகச் சிந்தித்து வைத்திருந்த கருத்துக்களை மீண்டும் மனத்திற்குக் கொண்டு வந்து அசை போடவும், அக்கருத்துகளை உங்களோடு உரக்கச் சிந்தித்துப் பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பாகவும் அமைந்து விட்டது. இந்த வாய்ப்பினை நல்கிய சங்கத்தார்க்கு என் உளங்கனிந்த நன்றியைப் புலப்படுத்திக் கொள்கின்றேன். முதலில் பொதுவாக சுவைபற்றிய வடமொழியார்களின் கருத்து களை வைத்து, இயன்றவரை இவற்றைத் தொல்காப்பியரின் சுவைபற்றிய கருத்துகளுடன் இயைத்துக் காட்டி, அதன் பின்னர் நகைச்சுவை பற்றிப் பேசினால், என் பேச்சு ஒரு முழுமையான வடிவங் கொள்ளும் - பூரணத்துவம் பெறும் - என்று கருதுகின்றேன்.

**சுவை - விளக்கம்:** சுவை என்பது என்ன? அது காணப் படும் பொருளால் காண்போரகத்தின் வருவதோர் விகாரம் என்பர் இளம்பூரணர். 'இருவகை நிலத்தின் இயல்வது சுவையே' என்ற செயிற்றிய நூற்பாவினை எடுத்துக் காட்டி, 'உய்ப்போன் செய்தது காண்போர்க்கு எய்துதல்' என்ற வேறொரு செயிற்றிய நூற்பாவால் விளக்குவர். ஈண்டு உய்ப்போன் என்றது நடிகனை, நடிகன் செய்யும் அபிநயம் முதலியவற்றால் அவை காண்போ ரிடம் உண்டாதல் கூடும். இது மனத்தால் அநுபவிப்பது. 'அறு சுவைகள்' என்பதைக் கேள்வியுற்றிருக்கின்றோம். அவை இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு என்பனவாகும் என்பதை நாம் அறிவோம். இவை நாவாகிய பொறிவழியே ஒருவரது உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளாகும். இவ்

* அண்ணாநகர் தமிழ்ச்சங்கத்தில் 16.12.84 அன்று பேசியது.

வுணர்ச்சிகளைத் தரும் பொருள்கள் முறையே கரும்பு, வேம்பு, புளி, உப்பு, கடுக்காய், மிளகு போன்றவைகளாகும் என்பதையும் நாம் அறிவோம். இவைச் சுவைப் பொருள்கள் என்று வழங்கப் பெறும். கரும்பினை நாவாகிய பொறியால் சுவை உணருமிடத்து இனிப்புச் சுவை தோன்றுகின்றது. அங்ஙனம் தோன்றுங்கால் அது காரணமாக விருப்புத் தோன்றுகின்றது. இங்ஙனமே, வேம்பினைச் சுவைத்து உணருங்கால் கைப்புணர்ச்சி தோன்றுகின்றது. அது தோன்றுங்கால் வெறுப்புத் தோன்றுகின்றது. இங்ஙனம் உள்ளத்தே தோன்றும் விருப்பு வெறுப்புகள் 'உள்ளக் குறிப்புகள்' என்று வழங்கப் பெறும். இத்தகைய உள்ளக் குறிப்புகளைக் கொண்டு இச்சுவை உணர்ச்சிகள் வெளிப்படுங்கால் முகமலர்ச்சி, முகச் சுளிப்பு, முதலாய மெய்க்குறிகளைக் கொண்டு பிறர் அறியுமாறு வெளிப்படுகின்றன. இந்த மெய்க் குறிகளையே **'விறல்'**[1] அல்லது **'சத்துவம்'** என்று வழங்குவர் இலக்கண நூலார். எனவே, சுவையின் இயல்பினை அறியுமிடத்து காரண காரிய முறையாக சுவைக்கு நிலைக்களனாகிய பொருள், சுவை, குறிப்பு, விறல் என நான்கு வகைப் பொருள்களை அறிகின்றோம்.[2]

---

1. விறல் - பத்து வகைப்படும் அவை: மெய்ம்மயிர் சிலிர்த்தல், கண்ணீர் வார்தல், நடுக்கமெடுத்தல், வியர்த்தல், தேற்றம், களித்தல், விழித்தல், வெதும்பல், சாக்காடு, குரற்சிதைவு என்பன. அவ்விறல், சுவைகளிலே மனக் குறிப்பு உளதாய வழி உடம்பிலே தோன்றும்; உடம்பினும் முகத்து மிகத் தோற்றும்; முகத்தின் மிகத் தோற்றும் கண்களில்; கண்ணின் மிகத் தோற்றும் கண்களின் கடையகத்து. எட்டென்பது வடநூலார் மதம் (சிலப். பக் 84 உ.வே.சா. அய்யர் பதிப்பு) சுப்புரெட்டியார் கவிதையநுபவம் (கழக வெளியீடு) என்ற நூலினும் காண்க.

2. இங்ஙனம் இலக்கண நூலார் கூறும் சுவைக்கப்படும் பொருள், சுவை, குறிப்பு, விறல் என்பவற்றையே உளவியலார் முறையே பொருள், புலன்காட்சி, பொதுவுணர்வு (அநுபவம்), உடல்நிலை மாறுபாடுகள் என்று கூறுவர்.

'சுவை' என்ற கருத்தை வேறொரு விதமாகவும் விளக்க முயல்வேன். இதனால் இஃது ஒரு புதிய கருத்தன்று என்பது தெளியப்படும். வண்ணப் படத்தில் வரையப் பெற்ற பன்றி யொன்று சேற்றில் மூழ்கி வெளியேறிய தோற்றத்தை அப்படியே ஓவியர் காட்டுவதாக வைத்துக் கொள்வோம். அதனைப் பார்க்கும் நாம் அதனையே பன்முறை உற்று நோக்கி ஒருவித இன்பத்தை அடைகின்றோம் அல்லவா? ஆயினும், பன்றி அன்று சேற்றில் புரண்டு எழுந்து சேறும் அழுக்குமாக நம் எதிரில் தோன்றினால் நாம் அக்காட்சியைக் கண்டு அடைகின் றோமா? இல்லையன்றோ? சில சமயம் அக்காட்சியைக் காணச் சகியாமல் அருவருப்புடன் முகத்தைக் கூட வேறு பக்கமாகத் திருப்பிக் கொள்ளுகின்றோம். அதுவும் சேற்று நாற்றமும் சேர்ந்து வீசத் தொடங்கினால் சொல்ல வேண்டியதில்லை. இதிலிருந்து பெறப்படுவது என்ன? கலை நமக்கு ஊட்டுவது ஓர் இன்ப உணர்ச்சியின் விளைவு என்பதை நாம் அறிகின்றோம். இதையே இலக்கண நூலார் 'சுவை' (ரஸம்) என்று பெயரிட் டுள்ளனர். சுவையை ஒன்பது வகையாகப் பிரித்தும் காட்டி யுள்ளனர். இந்த ஒன்பதிலும் அவர்கள் எல்லாவித உணர்ச்சி விளைவுகளையுமே அடக்கியிருப்பதுதான் வியப்பினும் வியப்பேயாகும். நம்மவர்கட்கு இதில் சிறிதேனும் சிரமம் இல்லை. ஏனெனில், இசையினை, ஏழேசுரத்தின் சேர்க்கையாக உணர்த்திய அதிசயத்தை வேறு எந்த நாட்டில் காண முடியும்?

**சுவை பற்றிய வடநூலார் கொள்கை:** சுவைபற்றிய வட நூலார் கொள்கையை அறிந்து கொள்ளுதல் சாலப் பயன்தரும். முதலில் சுவைகளின் இயல்பினையும் அவை உண்டாகும் முறையினையும் நோக்குவோம். மக்கள் உள்ளத்தில் ஒவ்வொரு கால் எழும் உள வேறுபாடு **பாவம்** எனப்படும். **பாவங்களுள்** சில நிலை பெற்றிருக்கும்; பல சிறிது நேரம் நின்று மறையும். தனக்கு ஒற்றுமையுடையனவும், வேற்றுமையுடையனவுமான

பிற பாவங்களையும் கேடுறாமல்[3] ரஸமாகிச் சமையும் அளவும் நிலை நிற்கும் பாவம் ஸ்தாயி பாவம் (நிலையான பாவம்) எனப்படும். இது காதல், சோகம் முதலாக ஒன்பது வகைப்படும். அதனைப் பின்னர் விளக்குவேன். உலகியலில் உண்டாகும் காதல் முதலியவற்றிற்குக் காரணமாயும், காரியமாயும், துணைக் காரணமாயும் இருப்பவை கவிஞனின் வாக்கிலும் நடிகனின் அபிநயத்திலும் அறிவிக்கப்படும்போது முறையே விபாவம் (நன்கு தோன்றச் செய்வது) என்றும், அநுபாவம் (விபாவத் துடன் இயைந்துள்ளது) என்றும், சஞ்சாரி பாவம் (துணை செய்யும் உணர்வுகள் - இது நிலை பேரில்லாத பாவம்) என்றும் வழங்கப் பெறும். அஃதாவது,

**காரணம் - விபாவம்**
**காரியம் - அநுபாவம்**
**துணைக்காரியம் - சஞ்சாரி பாவம்**

என்று வழங்கும். இந்த விபாவ அநுபாவங்களால் வெளிப்படும் ஸ்தாயி பாவமே 'ரஸம்' அல்லது 'சுவை' என்று பெயர் பெறும்.

---

3. ஒற்றுமையுடைய பாவத்தால் கேடுறாமல் நிலை பெறுதலாவது: ஓர் அழகிய மாதினைக் கண்டு, அவளிடம் காதல் கொண்டான் ஒருவன். பின்னர் அவளைவிட அழகினையுடைய வேறொரு மாதினைக் காணும்போது பின்னவள்பால் காதல் செலுத்தாமல், முன்னைய மாதின் நினைவுண்டாகி, அவள்பால் காதல் கொள்ளுவது. வேற்றுமையுடைய பாவத்தால் கேடுறாமல் நிலை பெறுதலாவது: ஒரு மகள்பால் காதலித்தான் ஒருவன். பின்னர் இளமகள் ஒருத்தியின் சாவு, பிரிவு முதலியவற்றைக் கண்ட்விடத்தும் 'காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா' என்றவாறு அவற்றால் சோகமும் வெறுப்பும் உண்டாகி, முன் காதலிக்கப் பெற்றவளிடத்து முன்னைய காதல் கெடாதிருப்பது.

இவண் குறிப்பிட்ட விபாவம் இருவகைப்படும். அவை 'ஆலம்பன விபாவம்'[4] என்றும் 'உத்தீபன விபாவம்'[5] என்றும் பெயர் களைப் பெறும். ஒருவரின் காதல் முதலிய உள்ள நிகழ்ச்சிக்கு எப்பொருளின் சார்பு காரணமோ அப்பொருள் அதற்கு **ஆலம்பனம்** எனப்படும். எவ்வாறெனின், தலைவனின் உள்ளத்துள்ள காதல னுக்குத் தலைவியும், தலைவியின் உள்ளத் துள்ள காதலுக்குத் தலைவனும் ஆலம்பன விபாவம் ஆகும். அங்ஙனமே தலைவனின் உள்ளத்துள்ள சோகத்திற்குத் தலைவியின் இறப்பும், தலைவியின் உள்ளத்துள்ள சோகத்திற்குத் தலைவனின் மரணமும் ஆலம்பன விபாவம் ஆகும் என அறிதல் வேண்டும். இங்ஙனம் தோன்றிய காதல் முதலியவற்றை வளர்த்து விளங்கச் செய்வது உத்தீபன விபாவம் எனப்படும். அவர்களுடைய உருவின் சிறப்பு, குண நலன், செயல், அணிகலன் முதலியனவும், தென்றல், நிலா, கட லொலி முதலியனவும், உத்தீபன விபாவம் ஆகும். தொல் காப்பியர் குறிப்பிடும் செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு முதலியன இவையே என்பது ஈண்டு அறியப்படும்.[6]

இனி காரியமாகிய அநுபாவமும் இரண்டு வகைப்படும். ஒன்று அகத்தது; மற்றொன்று புறத்தது. அந்தக் கரணத்தைச் சார்ந்தனவாகிய ஸ்தம்பம், பிரளயம் முதலியவை முதற் பிரிவிற்குரியவை; அவை சாத்விக பாவம் எனப்படும்.[7] கடைக்

---

4. ஆலம்பன விபாவம்: ஆலம்பனம் - பற்றுக்கோடு; விபாவம் - தூண்டல்; அதாவது பற்றுக்கோடாய தூண்டல் 5. உத்தீபன விபாவம், உத்தீபனம் - கிளர்த்தல்; விபாவம் - தூண்டல். அதாவது கிளர்த்தும் தூண்டல். 6. மெய்ப். நூற் 3 முதல் 11 வரை நான்காகப் பிரித்துக் கூறியவை. ஆசிரியர் தொல்காப்பியனார் கூறும் முதற் பொருளும் கருப் பொருளும் உத்தீபன விபாவம் ஆகும். இவை வரும் சங்கப் பாடல்களை நோக்கி இதனை அறியலாம். 7. இது எட்டு வகைப்படும்: (i) ஸ்தம்பம் - செயலற்று நிற்றல்; (ii) பிரளயம் - மூர்ச்சித்தல்; (iii) ரோமாஞ்சம் - மயிர்க்கூச்செறிதல்; (யுஞி) சுவேதம் - வியர்த்தல்; (v) வைவர்ணயம் - நிறமாற்றம்; (vi) வேபது - உடல் நடுக்கம்; (vii) அஸ்ரு - கண்ணீர் உகுத்தல்; (viii) வைஸ்வர்யம் - குரல் வேறுபாடு; (அடிக்குறிப்பு - 1 உடன் ஒப்பிடுக).

கண் நோக்குதல் முதலிய செய்கைகள் இரண்டாம் பிரிவைச் சேர்ந்தவை. காதல் முதலிய ஸ்தாயி பாவங்களைத் துணைக் காரணமாய் நின்று வளர்க்கின்ற பிரிவு, நினைவு, விரைவு முதலியன **சஞ்சாரி பாவம்** எனப்படும். இதனை **வியபிசாரி பாவம்** என்று கூறுதலும் உண்டு. இஃது அரசனைப் பின் தொடரும் ஏவலர் போலவும், கடலில் பிறக்கும் அலை போலவும், ஸ்தாயி பாவங்களைப் புலப்படுத்தி நிற்கும். தொல்காப்பியர் கூறும் புதுமுகம் புரிதல்[8] முதலியனவும் கூழை விரித்தல்[9] முதலியனவும் **அநுபாவம்** எனற வகையினுள் அடங்கும்.

இதனை எடுத்துக்காட்டு ஒன்றால் விளக்குவேன். துஷ்யந்த னுக்குச் சகுந்தலையும் சகுந்தலைக்குத் துஷ்யந்தனும் காதலுக்கு ஆலம்பனம். இந்தக் காதல், தென்றல், நிலா, சோலை முதலிய உத்தீபன விபாவங்களால் எழுப்பப்படுகின்றன. கண்ணீர் வார்தல், கடைக்கண் நோக்குதல் முதலிய காரியங்களால் (அநுபாவங்களால்) அநுபவப்படுகின்றன. பின்னர் விரைவு, நினைவு முதலிய சஞ்சாரி பாவங்களால் வளர்க்கப் பெற்று மனத்தில் நிலை பெறுகின்றன.

இவ்வாறு தோன்றி, தெளிவாகி, வளர்ந்து வருகின்ற காதல் முதலாகிய பாவங்கட்கு நல்லறிஞர் உள்ளத்தில் உண்டாகும் பிரதி பிம்பமே 'ரஸம்' எனப்படும் என்று கொள்ள வேண்டும். தூய வெண்ணிறத்தவாகிய ஞாயிற்றின் கதிர்கள் செந்நிறக் கண்ணாடியில் படும்போது அவற்றிற்குச் செந்நிறம் உண்டாதல் போன்று, காரணம் முதலியவற்றிற்கும் காதல் முதலியவற்றிற்கும் பிரதிபலிக்கச் செய்யும் பொருளின் தன்மையை அனுசரித்துச் சில விசேட வேறுபாடுகள் உண்டாகின்றன. அதனால் காரணம் முதலி யவை விபாவம் முதலாய நிலையில் இன்ன மனிதர், இன்ன நேரம், இன்ன இடம் இவை போன்ற சிறப்பியல்புகளை விட்டுப் பொதுவாய வடிவில் அமைகின்றன. அவ்வாறே ஸ்தாயி பாவங் களுள் சோகம், இளிவரல் முதலிய மாறுபட்ட உள வேறுபாடுகளும்

8. மெய்ப். நூற். 13 (முதல் அவத்தை); அவத்தை - நிலை.

9. ஷை - 14 (இரண்டாம் அவத்தை)

அநுகூல பாவங்களாக அமைகின்றன. அதனாலே கருணம் (சோகத்தால் உண்டாவது) பீபஸ்தம் (இழிவரலால் உண்டாவது) முதலிய ரஸங்களிலும் (சுவைகளிலும்) நமக்குச் சுவையும் ஈடுபாடும் உண்டாகின்றன. மகாகவி **நீலகண்ட தீட்சிதர்** ''நிர்வேதம் (விரக்தி), பயம், சோகம், ஜுகுப்ஸ (அருவருப்பு) முதலியவையும் இலக்கியங்களில் ரஸத் தன்மையன ஆகின்றன'' என்று கூறியிருப்பது ஈண்டு அறியத் தக்கது.

நல்லறிவாளன் தன் தூய உள்ளத்தில் இந்த விபாவம் முதலியவைகளை மீட்டும் மீட்டும் நினைக்கும் செயலுக்குச் சுவைத்தல் (சர்வணம்) என்று பெயர். அவ்வாறு சுவைக்கும் நிலையில் கரும்பின் துண்டிலிருந்து இனிப்புச் சுவை உண்டாதல் போன்று விபாவம் முதலியவற்றிலிருந்து 'சிருங்காரம்' முதலிய 'ரஸங்கள்' தோன்றுகின்றன. காதல் முதலிய உள வேறுபாடுகள் நல்லறிவாளருள்ளத்தில் ஆதிகாலம் முதலே வாஸனா ரூபமாய்ப்[10] படிந்துள்ளன. அவற்றை விபாவம் முதலியன எழுப்பி விடுகின்றன. என் போலவோ எனின், பொருள்களில் அமைந்து கிடக்கின்ற நிலையியல் மின்சாரத்தை (Static electricity) தேய்த்தல் வெளிப்படுத்துவது போல் என்று கூறலாம். இவ்விபாவம் முதலியவை ஒருங்கு சேர்ந்து உண்டான சிறப்பியல் செயலால் பூர்வ வாசனைக்கு எழுச்சி வருவதனோடு உள்ளம் இராசச, தாமச குணங்கள் அகலப் பெற்று, சுத்த சத்துவமாய்ச் சமைகின்றது. ஆன்மா அஞ்ஞானத் திரையினின்று நீங்கிச் சித்பிரகாச ஆனந்த ரூபமாய் விளங்குகின்றது. இத்தகைய சத்துவ நிலையை அடைந்த உள்ளத்திற்கு இத்தகைய ஆத்தும சாட்சியாய்ப் பொருளாகின்ற அநாதி வாஸனா ரூபமாகிய காதல் முதலிய பாவமே 'ரஸம்' என அறுதியிடப் பெற்றுள்ளது.

---

10. மனம் தோன்று தொட்டுப் பொருள்களின் நிலையைப் புறக்கணித்து இன்ப துன்பங்களை அநுபவிக்கின்ற பொழுது மனத்தில் செதுக்கி விட்டுப் போன உணர்ச்சி மீண்டும் அப்பொருள்களைக் காண நேரிடுங்கால் தட்டி எழுப்பப் பெறுகின்றது. இங்ஙனம் செதுக்குண்டிருக்கும் உணர்ச்சியையே அறிஞர்கள் 'வாஸனை' என்று பெயரிட்டு வழங்குவர்.

சுவைப் பாகுபாடு: சுவைகளின் பாகுபாட்டைப் பற்றிச் சிறிது விளக்கம் இன்றியமையாததாகின்றது. நம்முடைய பேச்சும் எழுத்தும் உணர்ச்சியுடன் நின்று விடுகின்றன. ஆகவே, ரசத்தை (சுவையைப்) பாகுபாடு செய்வது இயலாததாகின்றது. சுவை நிறைந்த மாம்பழத்தைத் தின்ற ஒருவன் அதன் சுவையைப் பற்றிப் பலவாறு வருணிக்கலாம். ஆனால் அதன் சுவையை அவன் பிறரால் உணரும்படி செய்தல் இயலாது. பிறரும் அம் மாம்பழத்தைத் தின்று சுவைத்தாலன்றி அதன் சுவையை உணர முடியாது. ரஸமும் அந்த வகையைச் சார்ந்த தாகவே கொள்ள வேண்டும். ரஸம் ஒருவருடைய அநுபவம். அதைப் பிறருக்கு எடுத்துக் கூற எவராலும் இயலாது. எனவே, சுவை இலக்கண நூலார் ரஸ நிலையை வைத்துக் கொண்டு அதனை வகுத்துக் காட்ட முற்படாமல், ரஸத்திற்கு முன்னிலை யாகின்ற உணர்ச்சிகளை வைத்து ரஸங்களையும் பாகுபாடு செய்தனர். தம் மனத்தில் தோன்றக் கூடிய எண்ணற்ற உணர்ச்சி களை ஒன்பதாகப் பிரித்துள்ளனர்; அனைத்தும் இந்த ஒன்பது பிரிவுக்குள்ளேயே அடங்கும் என்பது அவர்கள் கருத்தாகும். இந்த ஒன்பதிற்கும் புறம்பான மனநிலையே இல்லை என்பது அவர்களுடைய துணிபு. உலகப் பொருள்கள் எந்தவிதமான மனோபாவங்களை எழுப்பினாலும் அவற்றை இந்த ஒன்ப துக்குள் ஒன்றாகவே பாகுபாடு செய்து விடலாம். இந்த ஒன்பது சுவைகட்கும் அவர்கள் தனித்தனியே பெயர்களிட்டுள்ளனர். அவை:

| | வடமொழி | | தமிழ் |
|---|---|---|---|
| 1. | சிருங்காரம் | - | உவகை |
| 2. | கருணம் | - | அழுகை |
| 3. | வீரம் | - | பெருமிதம் |
| 4. | ரெளத்திரம் | - | வெகுளி |
| 5. | ஹாஸ்யம் | - | நகை |

| | | | |
|---|---|---|---|
| 6. | பயானகம் | - | அச்சம் |
| 7. | பீபத்ஸம் | - | இழிவரல் |
| 8. | அற்புதம் | - | மருட்கை |
| 9. | சாந்தம் | - | (நடுவுநிலை) |

என்பனவாகும். இவற்றுள் சாந்த ரஸம் உலகியல் நீங்கினார் பெற்றியாகலின் அதனையொழித்து ஏனைய எட்டனையுமே பரத முனிவர் தமது நூலில் கூறியுள்ளார். ஆசிரியர் தொல் காப்பியனாரும் அவ்வாறே எண் சுவைகளையே தமது நூலில் கூறியுள்ளார்.

**ரஸம் சமையும் முறை:** இனி, ரஸம் சமையும் முறை பற்றியும் வடமொழியாளர் சிந்தனையையும் விளக்குவது இன்றியமையாதது. மேற்குறிப்பிட்ட ஒன்பது ரஸங்களும் ஒவ்வொரு ஸ்தாயி பாவத்தால் சமைகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிருங்காரத்திற்கு | ஸ்தாயி பாவம் | ரதி (காதல்) |
| 2. | கருணத்திற்கு | ,, | சோகம் |
| 3. | வீரத்திற்கு | ,, | உற்சாகம் |
| 4. | ரௌத்திரத்திற்கு | ,, | குரோதம் |
| 5. | ஹாஸ்யத்திற்கு | ,, | ஹாஸம் (நகை) |
| 6. | பயானத்திற்கு | ,, | பயம் |
| 7. | பீபத்ஸத்திற்கு | ,, | ஜுகுப்ஸை (அருவருப்பு) |
| 8. | அற்புதத்திற்கு | ,, | விஸ்மயம் (வியப்பு) |
| 9. | சாந்தத்திற்கு | ,, | நிர்வேதம் (விரக்தி) |

இந்நிலை பெற்ற பாவமே ரஸமாகும். உணர்ச்சிப் பெருக் கால் உள்ளம் பூரித்து மனம் அசைவற்று நிற்கும்போது அதில் ஆன்மா தெளிவாகப் பிரகாசிக்கின்றது. உடனே மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகின்றது. உள்ளம் உணர்ச்சி ததும்பிப் பூரித்து நிற்கும் நிலையில் இன்பம் பிறக்கும் என்பதற்கு வால்மீகி முனிவரின் நிலை சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். அப்பொழுது தான் இராமாயணத்தின் மூலசுலோகம் பிறந்ததாக வரலாறு. அந்த வரலாறு இது: மிதுனங்களான கிரவுஞ்சப் பறவைகளுள் பெண் பறவையின் பிரிவு தனக்கு உண்டாகுமோ என்று எப்பொழுதும் அஞ்சும் தன்மையுடைய ஆண் பறவையை வேடன் அடித்துக் கீழே தள்ளிவிட்டான். அது குருதியில் தோய்ந்து மண்ணில் பரிதவிக்கும் நிலை கல் நெஞ்சத்தையும் உருக்குந் தன்மையது.

இந்நிலையைப் பெண் பறவை கண்ணுற்றது. அச்சிறு உள்ளம் அத்துயரத்தை எவ்வாறு தாங்கும்? அது தன் துணைவ னின் பிரிவினைத் தாங்க முடியாமல் கதறியது. துடித்துத் துடித்துப் புலம்பும் காட்சியை முனிவர் கண்டார். துக்கத்தால் மனம் நிரம்பி அசைவற்று நின்றது. சோகம் அவரை ஆட் கொண்டு விட்டது. அந்நிலையில் அவரது ஆன்மா பளிச்சென்று தெரிந்தது. உடனே துன்ப வேகம் எல்லாம் இன்பப் பெருக்காய் மாறி விட்டது. அது கருண ரஸமாய்ப் பரிணமித்தது. அந் நிலையில் முனிவர் தம்மை மறந்து நின்றார். பிறகு விழித்துக் கொண்ட பொழுது, மனத்துண்டான சோகம் ஒரு சுலோகமாக, அளவற்ற இன்பத்தின் மணம் கமழ, வெளிக் கிளம்பி வந்தது. அதுவே கவிதா தேவியின் அருளோதயம். சுலோகத்தின் பொருள் இது: ''வேடனே, மிதுனங்களான கிரவுஞ்சப் பறவை களுள் காம மோகம் கொண்ட ஆணினைக் கொன்றமையால் பல நாள் இவ்வுலகில் நீ நிலைத்திராய்'' என்பது. இங்கு கடித்துக் கொல்லப் பெற்ற ஆண் பறவை ஆலம்பன விபாவம். பெண் பறவையின் கதறுகை உத்தீபன விபாவம். சோகம் ஸ்தாயி பாவம். உணரப்படும் சுவை **'கருணம்'** ஆகும். முனிவர்

துக்ககரமான நிகழ்ச்சியை ஏற்றிருப்பாராயின் அவர் வாயி னின்று கவிதை வெளிவராது என்பது திண்ணம். கவிதை ஆனந்தக் களிப்படைந்த உள்ளத்திலே உருவெடுக்கும் என்பதை நாம் நன்கு அறிவோம்.

**உலகியல் நிகழ்ச்சிகள் சுவையன்று:** இவ்விடத்தில் ஒரு முக்கிய உண்மையை மனத்திலிருத்துதல் வேண்டும். உலகியலில் நிகழும் செயல்களால் உண்டாகும் இன்பத்தை ரஸம் என்று கொள்ளுதல் பொருந்தாது. காரணம் ஒரு சுவைக்குக் கூறும் இலக்கணம் எல்லாவற்றிற்கும் பொருந்துவதில்லை. உலகியற் செயல்களுள் நகை, காதல் போன்றவற்றில் இன்பம் உண்டாதல் போல் அழுகை, இளிவரல், அச்சம், வெகுளி முதலியவற்றில் இன்பம் உண்டாதல் இல்லை என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். இதனால்தான் சுவை இலக்கண நூலார் உலகிய லின்பத்தைச் சுவை என்று கொள்ளாமல் நாடகத்திலாவது காவியத்திலாவது அச்செயல் நிகழும் பொழுது அவற்றைக் காண்டலும் கேட்டலும் செய்யும் நல்லறிவாளருள்ளத்தில் விபாவம் முதலியவற்றால் உண்டாகும் சுவையையே 'ரஸம்' என்று அறுதியிட்டனர். உலகில் ஒரு தாய் தன் இளமகன் இறந்ததைக் குறித்து அழுதலைக் கேட்குங்கால் நமக்குத் துயரம் உண்டாகின்றது. ஆனால் மேகநாதன் இறந்துபட்டபோது இராவணன், மண்டோதரி புலம்புவதாகவுள்ள பாக்களைப் படிக்கக் கேட்குமிடத்து அளவிலா மகிழ்ச்சி உண்டாகின்றது. அவலத்திலும் இன்பத்தைக் காண்பதால்தான் அப்பாக்களைப் பன்முறை கேட்டும் படித்தும் இன்புறுகின்றோம். ஆகவே, இலக்கியத்தில் காணப்பெறும் எல்லாவித உணர்ச்சிகளும் படிப்போருக்கு இன்பம் அளிப்ப தால் அவை யாவும் 'சுவைகள்' என வழங்கப் பெற்றன என்றும் உலகியல் நிகழ்ச்சிகளின் உணர்ச்சிகள் அங்ஙனம் இன்பம் அளிப்பதில்லை என்றும் ஈண்டு நாம் அறிதல் வேண்டும்.

இனி, நகைச்சுவையைப் பற்றி ஆராய்வோம். நகை என்பது சிரிப்பு. அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலும் என்று மூன்று வகைப்படும்.

**முறுவலித்து நகுதல்:** படக்காட்சிகளில் காதலர்கள் ஒருவரையொருவர் பார்த்து நகுதல், சிறிதளவு பழக்கமுடைய நண்பர்கள் எங்காவது அவசரமாகச் சந்தித்துப் பேச நேர மில்லாத சமயங்களில் நகுதல் இதனுள் அடங்கும்.

**வேத நூலில்**
**சொல்லறந் துறத்தி லாத**
**சூரியன் மரபுந் தொல்லை**
**நல்லறந் துறந்த தென்னா**
**நகைவர நாணுட் கொண்டான்.**[11]

என்பது கம்ப நாடன் வாக்கு. தன்மீது அம்பெய்தவன் இராமன் என்று உணர்ந்து வாலி இகழ்தலைக் குறிப்பது. இல்லறந் துறந்த நம்பி, 'வில்லறந் துறந்த வீரன்' என்றெல்லாம் இகழ்ச்சியாகக் குறிப்பிட்டவன், மனைவியைப் பிரிந்த கவலையால் அறிவு கலங்கி சூரிய குலத்திற்குச் சொந்தமான அரச நீதிக்கு மாறாக இராமன் தன் பக்கல் அநீதி இழைத்தமை பற்றி வாலிக்கு நகைப்பு (சிறுநகை) வருகின்றது. இராமனது பழிக்கத் தக்க செயலைக் குறித்து வாலி நாணம் கொள்ளுகின்றான். இங்கு இராமனது செயலாலான ஏளனம் பற்றிய[12] நகை வெளிப்பட்டுத் தோன்றி, அதனை வெளிக்காட்டாது அடக்கிக் கொள்ளுகின்றான்.

**அளவே சிரித்தல்:** இயற்கைக்கு மாறாக எதையாகிலும் நாம் உணர நேர்ந்தால் அது நம்மிடம் நகைப்பினை விளைவிக்கும். கலிங்கத்துப் பரணியில் பேய்கள் கூழட்டு உண்ணும் பகுதியில் நகைச்சுவையை விளைக்கும் நிகழ்ச்சிகள் வருகின்றன. இவற்றைப் படிக்கும்போது நாம் அளவே சிரிக்கின்றோம். ஒரு பேய் ஓட்டைக் கலத்தில் கூழ் பெற்று உண்கின்றது. கூழ் ஒழுகும் நிலையைப் பார்க்கக் கலத்தைக் கவிழ்த்துப் பார்க்கின்றது அப்பேய். கூழ் முழுதும் கொட்டிப் போகின்றது!

---

11. கம்பரா. கிட்கிந். வாலிவதை - 72

12. எள்ளல், இளமை பேதைமை, மடன் - என்ற நான்கு காரணம் பற்றி நகை பிறக்கும். ஈண்டு 'எள்ளல்' பற்றி நகைத் தோன்றியது.

பொல்லா ஓட்டைக் கலத்துக்கூழ்
புறத்தே ஒழுக மறித்துப்பார்த்(து)
எல்லாங் கவிழ்ந்து திகைத்திருக்கும்
இழுதைப் பேய்க்கு வாரீரே.[13]

*(இழுதை - அறிவற்ற)*

என்பது கவிஞரின் சொல்லோவியம். ஒரு பேய்க்கு உண்கலம் கிடைக்கவில்லை. அது போர்க்களத்தில் இறந்து கிடந்த யானைத் துதிக்கையின் ஒரு நுனியைப் பல்லின் மேல் நிறுத்திக் கொண்டு மறுபக்கத்தில் கூழை வார்க்கும்படி வேண்டுகின்றது.

துதிக்கைத் நுனியைப் பல்லின்மேல்
செவ்வே நிறுத்தித் துதிக்கையின்
நுதிக்கே கூழை வாரென்னும்
நோக்கப் பேய்க்கு வாரீரே.[14]

*(துணி - துண்டம்)*

என்பது கவிஞரின் வாக்கு. இந்த இரண்டு தாழிசைகளையும் படிக்கும்போது நம்மிடம் அளவே நகை தோன்றுகின்றதல்லவா?

பெருகச் சிரித்தல்: போர்க்களத்தில் வீரர்கள் வெற்றிக் களிப்பினால் சிரிப்பது; படக்காட்சிகளில் சதிகாரன் தன் சதி வெற்றியாகும்போது சிரிப்பதும் இதுவே. வாலி நகைப்பினை நாணுட் கொண்டதை மேலே கண்டோம். அவன் துன்பத்தை அநுபவித்துக் கொண்டு நிலையழிந்து சோர்கின்ற நிலையை

வெள்கிட மகுடம் சாய்க்கும்
வெடிபடச் சிரிக்கும்.[15]

என்று காட்டுவான் கம்பன். இராமனது போலி வீரத்தை எண்ணி பெரு முழக்கமிட்டுச் சிரிக்கின்றான். பின்னர், ''வீரமன்று

13. தாழிசை. 572
14. ஷை - 573
15. வாலிவதை - 73

விதியன்று மெய்ம்மையின், வாரமன்று''[16] என்று சாடும் போதும் இச்சிரிப்பு அவன் முகத்தில் தாண்டவமாடி இருக்க வேண்டும்.

**நசைதிறந் திலங்கப் பொங்கி**
**நன்றுநன் றென்ன நக்கு**
**விசைதிறந் துருமு வீழ்ந்த**
**தென்னவே தூணின் வென்றி**
**இசைதிறந் துயர்ந்த கையால்**
**எற்றினன்; எற்ற லோடும்**
**திசைதிறந் தண்டங் கீறிச்**
**சிரித்தது செங்கட் சீயம்.[17]**

இரணியன் தூணை அறைய அதனின்று நரசிங்கப் பெருமான் தோன்றுவதைக் காட்டும் பாடல் இது. இரணியன் தன் பரிகாசச் சிரிப்பு வெளிப்பட்டு விளங்கும்படி 'நன்று நன்று என்று நக்குதலும்' 'திசை திறந்து அண்டங் கீறிச் செங்கட் சீயம் சிரித்ததும்' பெருகச் சிரித்தலுக்கு எடுத்துக்காட்டுகளாகும்.

அங்கதன் இராவணனைக் குறுகி நிற்கின்றான். ''இன்று இங்கு வந்த நீ யார்? வந்த வேலை என்ன? பணியாளர் உன்னைக் கொன்று தின்னாமுன் தெளிய உணர்த்துக'' என்று இராவணன் கூறியதும்,

**வன்றிறல் வாலி சேயும்**
**வாளெயிறு இலங்க நக்கான்.[18]**

என்று 'வெடிபடச் சிரிக்கின்றான்' வாலி சேய் தன்னை 'இராம தூதன்' என்று சொல்லிக் கொண்டு அந்த வேதநாயகன் பணித்த மாற்றம் சொல்லுவதற்கு வந்ததாகக் கூறுகின்றான்.

**''உன்னை ஏவும்**
**நரன்கொலாம் உலக நாதன்**
**என்றுகொண் டரக்கன் நக்கான்.''[19]**

---

16. ஷெ - 84
17. இரணியன் வதை - 127
18. அங்கதன் தூது - 20
19. ஷெ - 22

என்று பதிலிறுத்து இராவணன் சிரித்ததும் பெருகச் சிரித்ததன் பாற்படும். இராவணன் பேதோபாயத்தால் அங்கதனை வேறுபடுத்தப் பார்த்து, ''சீதையைப் பெற்றேன்; உன்னைச் சிறுவனுமாகப் பெற்றேன்; நானே உனக்கு இமையவர் போற்ற கிட்கிந்தைக்கு மன்னனாக்கி மகுடன் சூட்டுவேன்'' என்ற போது, அங்கதன்,

> வாய்தரத் தக்க சொல்லி
> என்னையுன் வசஞ்செய் வாயேல்
> ஆய்தரத் தக்க தன்றோ
> தூதுவந் தரச தாள்கை
> நீதரக் கொள்வேன் யானே
> யிதற்கினி நிகர்வே றெண்ணில்
> நாய்தரக் கொள்ளும் சீயம்
> நல்லரசு என்று நக்கான்.[20]

இதுவும் வெடிச் சிரிப்பின் வகையைச் சேர்ந்ததாகும்.

நகைச்சுவை தோன்றும் இடங்கள்: ''நகைச்சுவைக்குப் பொருளாவன, ஆரியர் கூறும் தமிழும், குருடரும், முடவரும் செல்லும் செலவும்; பித்தரும் களியரும் சுற்றத்தாரை இகழ்ந் தாரும் குழவி கூறும் மழலையும் போல்வன''[21] என்பார் பேரா சிரியர். நகை தோன்றும் இடங்கள் மிகப் பலவாகும் என்பது 'உடனிவை தோன்றும்'[22] என்ற செயிற்றியனாரின் கூற்றினால் அறியலாகும். இங்ஙனம் பலபலவாக நகை விரியுமாயினும், அவற்றை வகைப்படுத்துமிடத்து நான்கு கூறினுள் அடங்கி விடும். தொல்காப்பியர்,

> எள்ளல் இளமை பேதைமை மடனென்(று)
> உள்ளப் பட்ட நகைநான் கென்ப.[23]

---

20. ஷை - 29
21. தொல்பொருள் மெய்ப் - நூற் 1. இன்உரை
22. மெய்ப். நூற் 4 (இளம் உரை) காண்க.
23. ஷை - நூற் 4 (இளம்)

என்ற நூற்பாவில் இந்த நான்கு கூறுகளையும் உணர்த்துவர். இவற்றுள் எள்ளல் என்பது, தான் பிறரை எள்ளி நகுதலும் பிறரால் எள்ளப்பட்ட வழித் தான் நிகழ்தலும் என இரண்டாகும். இளமை என்பது, தான் இளமையில் பிறரை நகுதலும், பிறரிளமை கண்டு தான் நகுதலும் என இரண்டு. பேதைமை என்பது, அறிவின்மை. இது தன் பேதைமையால் நகுதலும் பிறன் பேதைமையால் நகுதலும் என இரண்டு வகையாகும். மடமை என்பது, பெரும்பான்மையும் கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. இதுவும் தன் மடமையால் நகுதலும் பிறன் மடமையால் நகுதலும் என இரண்டாகும். இதுவே இளம்பூரணர் கருத்தும் என்பது. ''எள்ளல் இளமை எனப் பொதுப்பட்டு நின்ற மையால் தன் மாட்டு நிகழும் வழியும் கொள்க'' என்ற அவ ருடைய உரையால் அறியலாம். பேதைமை என்பதற்கும் மடம் என்பதற்கும் வேறுபாடு என்னையெனின், பேதைமை என்பது கேட்டதனை உணராது மெய்யாகக் கோடல் மடம் என்பது பொருண்மையறியாது திரியக் கோடல், இதனை ஐயுறாது நம்பும் இயல்பு என்று கூறலாம். சில எடுத்துக்காட்டுகளால் இக்கருத்துகள் தெளிவாகும்.

**எள்ளல் பற்றி வரும் நகை:** (1) தான் பிறர் குறை கண்டு அவரை இகழ்ந்து கூறி நகைப்பது.

தலைவி தன்னை இகழ்ந்து கூறினாள் என்று அறிகின்றாள் காதற் பரத்தை, உடனே தலைவியின் பாங்காயினார் கேட்பச் சில கூறுகின்றாள்.

**''ஊரன்**
**எம்மிற் பெருவிழி கூறித் தம்மில்**
**கையும் காலும் தூக்கத் தூக்கும்**
**ஆடிப் பாவை போல**
**மேவன செய்யுந்தன் புதல்வன் தாய்க்கே''**

என்று பரத்தை கூற்றாக வந்த குறுந்தொகைப் பாட்டில் (குறுந்.8) தலைவனைக் காதற் பரத்தை 'எம்முடைய வீட்டில் எம்மை

வளமாக்குதற்குரிய பெரு மொழிகளைச் சென்று, தம்முடைய வீட்டில் தன்புதல்வன் தாய்க்கு (மனைவிக்கு) கண்ணாடியில் தோன்றும் பாவை போல் அவள் விரும்பியவற்றைச் செய்வான்' என்று தலைவனின் குற்றை கூறி எள்ளுவதைக் காணலாம்.

(2) தன்னைப் (அன்னை) பிறர் (அறியாமையால்) இகழ்ந்து கூற, அது கண்டு தான் நகைப்பது.

ஒரு தலைவி தன் அன்னையை மதியாது இகழ்ந்து ஒரு தலைவனது கூட்டுறவினை நாடி நிற்கின்றாள். இதற்கு வழி அமைத்துத் தருபவள் (வாயில் அமைத்து தருபவள்) தோழி. ஒருநாள் இல் வந்து நின்ற தலைவனைத் தாய் கண்டு கொள்கின்றாள். இச்செய்தியைத் தோழி இரவுக் குறியில் சிறைப் புறமாக இருக்கும் தலைவன் கேட்பத் தலைமகட்குச் சொல்லு கின்றாள்.

**நகைநீ கேளாய் தோழி அல்கல்**
**..............................................**
**இல்வந்து நின்றோள் கண்டனள் அன்னை**
**வல்லே என்முகம் நோக்கி**
**நல்லை மன்னென நகூஉப்பெயர்ந் தோளே**

என்ற அகப்பாட்டடிகளால் (அகம் - 248) மக்களால் எள்ளப் பட்ட வழி தாய் நக்கதனை அறியலாம். ''அன்னை நின்றோனைக் கண்டு என் முகம் நோக்கி 'நல்லைமன்' என்று கூறி நக்குச் சென்றாள்'' என்றது ''அவன் வருகைக்கு யான் வாயிலாதல் கருதித் தீங்குடையனை இழித்துக் கூறி வெகுண்டு சென்றாள்'' என்பதாகும். 'நல்லைமன்' என்றது குறிப்பு மொழி.

இளமை பற்றி வரும் நகை: (1) தன் இளமைத் தன்மை யால் பிறரை நகுவது.

ஒரு தலைவன் தன் தலைவியை விளையாட்டாக நடுங்கச் செய்யும் விருப்பால் தான் மிகக் கொடிய காட்டின் வழியே செல்ல இருப்பதாகக் கூறுகின்றான். தன்னோடு போதுவல் என்றதனால் காட்டின் கடுமையும் அவளது மென்மையும் கூறி உடன்பட மறுத்ததற்காகக் கூறினான். இதனைக் கேட்டு ஆற்றளாய

தலைவியைத் தோழி 'அவர் நம்மோடு நகையாடிச் சொன்னாரே யன்றி பிரிவர் அல்லர்' என்று ஆறுதல் கூறுகின்றாள்.

**கடுங்குரை யருமைய காடெனி னல்லது**
**கொடுங்குழாய் துறக்குநர் அல்லர்**
**நடுங்குதல் காண்பார் நகைகுறித் தனரே**

என்ற கலிப்பாட்டடிகளில் (கலி - 13) தோழி கூற்றாக வந்துள்ளது. இது தலைவன் தன் இளமைத் தன்மையால், பிறரை அஞ்சுவித்து நக்கதாகும்.

(2) பிறர் இளமை பற்றி வரும் நகை.

தலைவியொருத்தி தன் அருமைக் குழந்தையை மடியில் வைத்து அவனுடைய தந்தையின் குறைகளைக் கூறி அவ்வாறே ஒழுகாதே என்றும், தந்தையின் நிறைகளைக் கூறி அவ்வாறு ஒழுகுவாயாக என்றும் கூறுகின்றாள். இந்நிலையில் பிரிந்து சென்ற தலைவன் தலைவியின் பின்புறம் வந்து மறைந்து நிற்கின்றான். தந்தை நிற்பதைக் குழந்தை பார்த்து விடுகின்றது; உடனே நகுகின்றது. பின் உண்மை உணர்ந்த தலைவி குழந்தையின் இளமைச் செயல் கண்டு தானும் நகைக்கின்றாள்.

**திறனல்ல யாங்கழற யாரை நகும்இம்**
**மகனல்லான் பெற்ற மகன்**

என்ற தலைவியின் கூற்றாக வந்த கலிப்பாட்டடிகளில் (கலி - 86) தலைவி கூறி நகுவதை அறியலாகும். இங்ஙனம் மகன் சிரித்த வழித் தாய்க்கு நகை தோன்றியதால் அது குழந்தையின் இளமை கண்டு தாய் நக்கதாகும்.

**பேதைமை பற்றி வரும் நகை:** (1) ஒரு தலைவி தன் தாய் தன்னை வெகுண்டதன் நலத்தினைத் தன் பேதைமையால் உணர்ந்து, அதுபற்றி நகைக்கின்றாள்.

**'நகைநீ கேளாய் தோழி'**

என்ற அகப்பாட்டடியில் (அகம்-248) தலைவி தன் பேதைமைப் பொருளாக தாயின் உரை நலம் உணராது நக்குத் தோழிக்குக்

கூறியது. தான் செய்த தவற்றிற்குத் தாய் தன்னை வெகுண்டதைத் தனக்கு நகையாகக் கொண்டாள். (பேராசிரியர் இப்பாட்டைத் தலைவி கூற்றாகக் கொண்டதால் இப்பொருள் பிறந்தது).

(2) பிறன் பேதைமைபற்றி வரும் நகை: தலைவனைப் பரத்தையிடம் கூட்டுவிக்க நினைக்கும் பாணன் தன் வீட்டருகில் யாழ் வாசித்து விட்டு அவன் இல்லம் நோக்கிச் சென்று கொண்டிருந்தபொழுது ஈன்று அணிமையுடைய பசுவொன்று அவன்மீது பாய, அவன் அதற்கு அஞ்சித் தான் வைத்திருந்த யாழைத் தெருவிலே போட்டுவிட்டு ஓடி வந்து தன் மனையில் வந்து புகுந்ததையும் தான் அவனுக்கு மறுமாற்றம் அளித்ததையும் தலைவி தோழிக்குக் கூறுகின்றாள்.

**நகையா கின்றே தோழி .....**

**..........................................**

**தண்துறை ஊரன் திண்தார் அகலம்**
**வதுவை நாளணிப் புதுவோர்ப் புணரிய**
**பரிவொடு வரூஉம் பாணன் தெருவில்**
**புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி யாழிட்டு**
**எம்மனை புகுந்தோனே; அதுகண்டு**
**மெய்ம்மலி உவகை மறையினென் எதிர்சென்று**
**இம்மனை அன்றஃ தும்மனை என்ற**
**என்னும் தன்னும் நோக்கி**
**மம்மர் நெஞ்சினோன் தொழுதுநின் றதுவே.**

என்ற அகப்பாட்டுப் பகுதியில் (அகம்-56) தலைவியைக் கண்டு கலங்கித் தொழுது நிற்கும் பாணனைக் கண்டு தலைவி நகைக்கின்றாள். இதில் பாணனின் பேதைமை கண்டு தலைவி நகைத்துத் தோழிக்குக் கூறுவதைக் காணலாம்.

மடமை பற்றி வரும் நகை: (1). தலைவியொருத்தி தலைவனை நோக்கி, ''பண்டு நீ கூறியதை மெய்யாகக் கொண்டு யான் மகிழ்ந்தேனே, உன் கூற்றுப் பொய்யாதலை என்

மடமையால் அறியாது நகைத்தேனே. அங்ஙனம் நகைத்த பற்கள் அழிவனவாக'' என்று வெறுத்துக் கூறுகின்றாள்.

**சுரஞ்சொல் யானைக் கல்லுறு கோட்டில்**
**தெற்றென இறீஇயரோ ஐய! மற்றுயாம்**
**நும்மொடு நக்க வால்வெள் எயிறே.**

என்ற குறுந்தொகையடிகளில் (குறுந்-169) தலைவியின் கூற்றால் இதனை அறியலாம். இந்நகை தோன்றிய பொழுது, தலைவி தன் மடத்தால் தலைவன் உரையை மெய்யெனக் கொண்டு நகைத்த நகையாகும்.

(2). பிறர் மடம் பொருளாக நகை தோன்றியது.

தலைவன் ஒருவன் செல்லுதற்கரிய கடிய காட்டு வழியில் தன்னுடன் வர விரும்பும் தலைவியின் கருத்தைத் தோழியின் வாயிலாக அறிகின்றான்.

**நாம்நகை யுடையம் நெஞ்சே நம்மொடு**
........................
**தான்வரும் என்ப தடமென் தோளி**

என்ற அகப்பாட்டடிகளில் (அகம்-121) தலைவியின் மடமை நோக்கித் தன் நெஞ்சினிடத்தே கூறித் தலைவன் நக்கதை அறியலாம்.

சுவைகளின் நுட்பமனைத்தும் கண்ணாலும் செவியாலும் திட்பமாக அறியவல்ல நுண்ணறிவுடைய பெருமக்களுக்கே புலப்படும்; ஏனையோர்க்கு அஃது ஆராய்ந்தறிதற்கரியது. இதனைத் தொல்காப்பியர்,

**கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்**
**உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்**
**நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே[18]**

என்று கூறுவர். ஒருவரது மனக்குறிப்பின் வழி அவர்தம் முகம் வேறுபடுதலும் மொழி வேறுபடுதலும் இயல்பாதலின்

18. தொல்.பொருள் மெய். நூற்பா. 27

அவ்வேறுபாடுகளுக்கு ஏதுவாயமைந்த அவற்றை முறையே கண்ணாலும் செவியாலும் உணர்ந்து கொள்ளுதல் கூடும்.

இலக்கியங்களை எல்லோரும் ஒரே விதமாகத் துய்த்தல் இயலாது. அது பற்றியே இலக்கியங்களைப் படைப்பதிலும் பல கருத்துகள் எழுந்தன. நம் நாட்டுப் பெரியோர்கள் இலக்கியம் மனத்திற்கு இன்பம் அளிப்பதை விட உள்ளத்திற்கும் அமைதியை நல்க வல்லதாக இருத்தல் வேண்டும் என்று கருதினர். சுவை என்பது உலகம் முழுவதிலும் பரவிக் கிடக்கின்றது என்றும், ஆன்மாவின் உருவந்தான் சுவை என்றும் உபநிடதங்கள் கூறுகின்றன. கவிஞர்கள் சுவை வடிவமான ஆன்மாவை வெளியுலகில் கண்டு அநுபவித்த பிறகு அதன் ஒளி கலந்து வீசும்படி காவியத்தை அமைக்கின்றனர். ஒரு காவியத்தைப் படிப்பதினாலோ, அல்லது சிறந்த நாடகம் அல்லது சிறந்த படக் காட்சியைக் காண்பதனாலோ சுவைஞர்கட்குப் புலன்களின் தெளிவு ஏற்படுகின்றது. இலக்கியங்களில் காணப்பெறும் சுவைகள் இப் பயனைத் தரவல்லவை; சுவைகளால் புலன்கள் தெளிவடையும். உள்ளக் கனிவுடன் இலக்கியத்தைத் துய்ப்பவர்களே இவ்வுண்மையை அறிவர். உலக இயல்பிற்குப் படம்போலிருக்கும் கலைகளிலாவது சுவைகளை உணர்ந்து கற்றுக் கொள்ளட்டும் என்றே நமது முன்னோர்கள் நாடகங்களிலும் நாட்டியங்களிலும் காவியங்களிலும் சுவைகளைத் திறமையுடன் வளர்த்துக் காட்டியுள்ளனர். துன்பக் கடல் போன்ற இவ்வுலகில் 'மம்மர் அறுக்கும் மருந்தாக' இருந்து இன்பம் பயக்க வல்ல இலக்கியங்களை நாம் கவனிக்காவிட்டால் உலகில் ஆறுதல் அளிக்கக் கூடிய பொருள்களே இல்லையாகி விடும்.

# 6. புதுக்கவிதை - சமுதாய நோக்கில்*

இன்றைய சமுதாய வாழ்க்கை மன நிறைவுத் தருவதாக இல்லை. எம்மருங்கு நோக்கினும் அவலங்கள் வெட்ட வெளிச்சமாகத் தென்படுகின்றன. சமயம், அரசியல், அரசியல் கட்சிகள், நம்பிக்கைகள், குடும்பம் இவை ஒவ்வொன்றையும் அவ்வவற்றின் தோற்ற மூல காரணங்களோடு சேர்த்துச் சிந்திக்கும் ஆற்றல் பெற்றவர்கட்கு, இந்தச் சமூகக் கேடுகள் தட்டுப்படாமல் போகா. மக்களால் மக்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களால் ஆளப் பெறும் ஆட்சிக் குடையின்கீழ்தான் நாம் வாழ்கின்றோம். அப்படியிருக்கும் போது இந்த அவலங்கட்குக் காரணம் என்ன? அரசுக் கடிவாளத்தைப் பிடித்துக் கொண்டிருக்கும் அமைச்சர்களும், நிரந்தரமாக அமைந்து அவர்கட்குத் துணை நிற்கும் அங்கமாகிய உயர் அதிகாரிகளும் அவர்களின் துணை அலுவலர்களும், ஆலை முதலாளிகளும், வணிக மன்னர்களும் சமுதாயத்தின் பொது நலத்தினைக் கருத்தினிற் கொண்டு செயற்படாதவரை இந்த அவலங்களைப் போக்க முடியாது. இவற்றிற்கு நிரந்தரமான கழுவாயையும் காண இயலாது. தன்னலம், பொது நலத்தில் 'அக்கறை இன்மை, 'சுரண்டல் தன்மை, எந்தெந்த வகைகளிளெல்லாம் சட்டங்களை மீறலாம் என்ற சிந்தனை, அங்ஙனம் மீறுபவர்களைத் தப்பவைக்கும் அரசியல் வாதிகளின் இழிந்த போக்கு இவை உள்ளவரை சமுதாயக்கேடுகள் நிலைபெற்றிருக்கும்; நிலைத்தும் நிரந்தரத் தன்மை பெற்றும் நீடித்து விடும்.

இந்த அவல நிலைகளைச் சமூகத்தில் வாழும் சிந்தனையாளர்கள் அறியாமல் இல்லை. நாள்தோறும் ஏமாறுபவர்கள், ஏமாற்றுபவர்கள், பதுக்கல்காரர்கள், சுரண்டும் மக்கள் இவர்களை அறிவியல் அடிப்படையில் அறிந்துதான் வைத்திருக்கின்றார்கள். என்ன செய்வது? வேலியே பயிரை மேய்ந்தாற்

* 1983-இல் எழுதப்பெற்றது.

போல அரசியல் வாதிகளே இத்தனைக்கும் காரணமாயிருந்தால் யார் என்ன செய்ய முடியும்? எழுத்தாளர்கள் தம் சிறு கதை களிலும் புதினங்களிலும், கவிஞர்கள் தம் கவிதைகளிலும் இவற்றை எடுத்துக் காட்டலாம். மக்கள் விழிப்படைந்து விட்டால் இவை நீங்கும்; அல்லது ஆண்டவனே அவதாரம் எடுத்து இவற்றைக் களைந்தால் கழுவாய் உண்டு. இந்தக் கலியுகத்தில் இது நடைபெறுமா? நடுத்தரவர்க்கம் தமக்குக் கீழ்மட்டத்திலுள்ள மக்களுடன் இணைந்து செயற்படத் தொடங்கி விட்டால் நிலைமை சீர்படும்.

புதுக்கவிதை எழுதுவோர் இந்த அவலங்களை எடுத்துக் காட்டுகின்றனர். இன்றைய புறவாழ்க்கையில் நாம் காணும் பல்வேறு பிரச்சினைகள், உண்மை நிகழ்ச்சிகள் புறவாழ்க்கை யுடன் நின்று போவதில்லை. அவை நம் அக வாழ்க்கையிலும் ஊடுருவுகின்றன; எதிரொலிக்கின்றன. அவை நம் அன்றாட வாழ்வில் தலை நீட்டி நம் இன்ப துன்பங்களை அறுதியிடு கின்றன. அவை நம்முடைய வறுமை, வளம், காதல், நட்பு, பக்தி, தத்துவ ஆய்வு' ஆகியவற்றிலெல்லாம் மாற்றங்களை உண்டு பண்ணுகின்றன. ஆகவே, புதுக்கவிஞர்கள் உட்பட ஒவ்வொரு படைப்பாளியும் தம் சமூகச் சுற்றுப் புறச் சூழலை உற்று நோக்குகின்றனர்; பருந்து நோக்கில் பார்க்கின்றனர். நுணுக்கமாகவும் தம் பார்வையைச் செலுத்துகின்றனர். வினாக் களை எழுப்புகின்றனர்; விசாரணை செய்கின்றனர்; நம் வாழ்க்கையில் மாற்றங்களை விளைவிக்கும் புறக் கூறுகளில் தம் சிந்தனையைச் செலுத்துகின்றனர். எனவே, சுதந்திரம், ஜன நாயகம், ஜன நாயக சோஷலிசம், ஆட்சி அமைப்பு போன்ற நம் கட்டமைப்பை இன்று வழி நடத்தும் அரசியல் இதன் விளைவுக ளான சமூகப் 'பொருளாதாரப் பிரச்சினைகள், இவற்றால் உருவாகும் நடைமுறை வாழ்க்கை ஆகியவை நம் புதுக்கவிஞர் களின் பரிசீலனைக்கு உட்படுகின்றன. இன்றைய வாழ்க்கைப் பிரச்சினைகளான வறுமை, வேலையில்லாத் திண்டாட்டம், விலைவாசி, கடத்தல், கலப்படம், கையூட்டு (லஞ்சம்), சமூகப்

பொறுப்பின்மை, அறியாமை என்ற பல துறைகளிலும் புதுக் கவிஞர்கள் தம் பார்வையைப் பதிக்கின்றனர். தம் கவிதைகளை யும் வார்க்கின்றனர். தம் சொற்களில் இந்நிகழ்ச்சிகள் விளை விக்கும் உணர்ச்சிகட்கும் உருவம் தருகின்றனர். சில தலைப்பு களில் வெளி வந்துள்ள சில கவிதைகளை ஈண்டு ஆராய்வோம்.

**சுதந்திரம்:** சுதந்திரத்தையே 'தேவியாக' உருவகித்து மகிழ்ந்தவர் பாரதியார்; அதனைப் போற்றிப் பரவினவர். இன்று நாடு விடுதலை பெற்று 55 ஆண்டுகள் ஆகின்றன. நாட்டிற்குப் பெயரளவில் 'விடிவு' ஏற்பட்டாலும் மக்களுக்கு 'விடிவு' ஏற்பட வில்லையே என்ற ஏக்கம் இருப்பதை எல்லோரும் உணர் கின்றனர். இந்த நிலை புதுக்கவிதைக்கு உள்ளடக்கமாகின்றது. இந்தக் கவிதைகளைப் படைப்பவர்கள் மக்களை நசுக்கும் மக்களுக்குச் சுதந்திரத்தை மறுக்கும் ஆளும் வர்க்கத்தையும் அதன் அமைப்புகளையும் அவர்களின் போலித்தனமான சுதந்திரச் சோஷலிசத் தத்துவங்களையும் தாக்கிப் பேசுகின்றனர். இவர்தம் கவிதைகள் சமுதாயத்தையே திறனாயும் போக்கில் ஆதிக்கச் சக்திக்கு எதிராக ஒலிக்கின்றன. சில சமயம் இக்கவிஞர்கள் கேலியும், கிண்டலுமாக, எள்ளலும் ஏசலுமாக, அமைப்புக் களையும் அவற்றின் போக்குகளையும் பழித்துப்பாடுகின்றனர்.

'பூமியைச் சுமக்கும் வானங்கள்' என்ற தலைப்பில் வெளி யானது.[1] கவிதையில் சமூக யாத்திரிகனாகிய கவிஞன் ஒரு பழத்தோட்டத்தில் ஒரு பழுத்த தேச பக்தனைப் பார்க்கின்றான். அவனை நோக்கி 'சுதந்திரம் பற்றி என்ன சொல்கிறாய்?' என்று வினவுகின்றான். தேச பக்தனின் மறு மொழியில் சில பகுதிகள்:

**"கால் விலங்கு**
**திறக்கக்**
**கையெலும்பால்**
**சாவி செய்தோம்...**

---

1. 'கல்கி' இதழ் 6.3.83 (முத்து ராமலிங்கம் எழுதியது).

விடுதலை மோதிரம்
சூடிய பின்போ
விரல்கள் கூட
விலங்கு தரித்துள்ளன...

வெள்ளைப் பூட்டுகள்
வாய் பிளக்கையில்
கறுப்புச் சங்கிலிகள்
கைகளைப் பிணைத்தன...

நாம் -
சொந்த வீட்டிலேயே
வாடகைக்கு வசிப்பவர்கள்;
அதனால் தான்
நம்
சுதந்திரத்துக்குக் கொஞ்சம்
சுவாசப் பைகளில் கோளாறு!

விலங்குகள்
சுமந்து சுமந்தே
நம் -
விடுதலைக்கும்
அடிமைப் பக்கவாதம்!...

.........................................

ரத்தாபிஷேகத்தில்
சிலிர்க்க வேண்டிய
சுதந்திர தேவி
கித்தாப்பு வெளிச்சங்களில்
கிறுகிறுத்துக் கிடக்கிறாள்!...

.........................................

'பயணத்திற் கேற்றபடி
பாதையா?...
பாதைக் கேற்றபடி
பயணமா?...

எங்கள் தலைவர்கள்
தேசத்திற்காக
வாழ்ந்தார்கள்;
உங்கள் தலைவர்களோ
தேர்தலுக்காக
வாழ்கின்றார்கள்!...

தேவைகள் தீர்க்கப்
படாவிட்டால்
ஒரு
தேசம் கூடத்
திறந்தவெளிச்
சிறைச்சாலையே!

பூமிதானம் செய்தும்
புதிய இந்தியா
மலராமல் தானே
ஆவி தானம் செய்தார்
அன்பர் வினோபா!...

..................................

என்றைக்கு
இந்நாட்டில்...
சூதும் சுயநலமும்
சுட்டெரிக்கப் பட்டு
சுரண்டலும் கொடுமையும்
சூறையாடப் படுகின்றதோ...

என்றைக்கு இங்கே...
வயல்களும் பொழில்களும்
வசந்த வனங்களும்
ஆலையும் சோலையும்
ஆக்கமும் வளமும்
மேனி வருத்தி
இந்த -

மேதினி திருத்துவோர்க்கே
என்ற
மெய்யுரிமை மலர்கின்றதோ...

என்றைக்கு இங்கே -
ஒலி பெருக்கிகளின்
ஓலத்தை விடவும்
ஆலைக் குழாய்கள்
ஆர்த்திடும் கர்ஜனை
ஆகாசமும் பூமியும்
வியாபிக்கிறதோ...

அன்றைக்கே
இந்நாட்டில்...
சமத்துவம் மணக்கும்
ஜனநாயகச் சுதந்திரம்
அமைத்திடும் திருநாள்!
என்று -
அமையுமோ அந்த
இன்பத் திருநாள்!

இன்றைய நிலைமையை அற்புதமாகச் சித்திரிக்கின்றது இக் கவிதை. சிந்திக்காதவர்களையும் சிந்திக்க வைத்து விடுகின்றது. இத்தகைய கவிதைகள் மக்களிடையே ஓர் எழுச்சியை உண் டாக்கும் என்பதற்கு எள்ளளவும் ஐயம் இல்லை.

''சும்மா சொல்லிக்க...''[2] என்ற தலைப்பில் ஒரு கவிதை. இதுவும் சுதந்திரத்தைப் பற்றியதுதான். இன்றைய நிலையில் பெரும்பாலோர் 'சுதந்திரம்' கிடைத்ததால் பயன் இல்லை என்றே கருதுகின்றனர். எங்கும் அமைதி இல்லை; அரசு ஊழல் களை அடக்குவதில்லை. சட்ட ஒழுங்கு சரியாக அமுல்படுத்துவதில்லை அரசு. இதனைப் பிரதிபலிப்பதாக அமைகின்றது கவிதை.

2. புதுக்கவிதை வெள்ளம் (சரிதா) - ஆனந்த விகடன் இதழ் 13.3.83

சும்மா சொல்லிக்க;
இந்தியா சுதந்திரநாடு என்று

நாட்டுக்கு மட்டுமா
சுதந்திரம்?
கொலை,. கொள்ளை
களவு, கற்பழிப்பு,
அனைத்துக்குந் தான்...

இடையிடையே
கதறிவிடுவார்கள்!
ஐயோ கறுப்புப் பணம்
கறுப்புப் பணம், என்று!
ஆனால்,
எடைக்கு எடை
வாங்கிடுவார்கள், ஐயா
வாங்கிடுவார்கள் வெள்ளிப்பணம்!

அட, காசா? பணமா?
சும்மா சொல்லிக்க,
இந்தியா சுதந்திர நாடு என்று!

.....................................................

வெள்ளைப் பேயிடம் விடுபட்ட
பாரதம், இந்தக்
கறுப்புப் பிசாசிடம்
இருந்து விடுபட
அதிக நேரம் இல்லை!
ஆம்! சில நூறு
ஆண்டுகள் என்பது,
அதிக நேரமில்லைதான் -
சரித்திரத்தில்

அதுவரைக்கும் போனால் போகுது
சும்மா சொல்லிக்க
இந்தியா சுதந்திரநாடு என்று!

நம்மிடையேயும் பலரிடம் இந்த உணர்ச்சி தோன்றுகின்றது. கவிதையின் வளர்ச்சி நம் உணர்ச்சியுடன் கலக்கத் தொடங்கியதும், அது உடனே 'புதுக்கவிதை' என்று அங்கீகாரம் பெற்று விடுகின்றது.

'புன்னகை மன்னன்'[3] என்ற தலைப்பில் காணப்பெறும் ஒரு கவிதை சுதந்திரத்திற்குப் பிறகு உள்ள நாட்டின் நிலையை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

**ஹே! மஹாத்மா!**

**இன்னமும்**
**இந்த நாட்டில்**
**புன்னகையோடு**
**இருப்பது -**
**உன்னுடைய**
**ஒரே முகந்தான்!**
**எங்கள் முகங்களோ -**
**புகைப்படங்களில் கூடப்**
**புன்னகைக்க**
**முடியாதவைகள்!**

**ஏனெனில் -**
**உன்னுடைய கதராடைகள்...**
**தறியாசனத்தில்**
**இருந்தவரை**
**எங்கள் கண்ணீரைத்**
**துடைத்தன.**
**அவைகள்...**
**அரியாசனத்தில்**
**அமர்ந்த பின்னர் -**
**எங்கள்**
**புன்னகைகளைத்**

3. பொய்க்கால் குதிரைகள் - பக். 48.

துடைத்து விட்டன!

.............................................

நீ
சவாலாக
எடுத்துக் கொண்டு
வாங்கித் தந்த
சுதந்திரம் -
எங்களை திவாலாக
ஆக்கிவிட்ட சேதியை
அறியாத காரணத்தால்தான்...
நீ
இன்னமும்
புன்னகைத்துக் கொண்டிருக்கிறாய்

.....................................................

இரத்தினச் சுருக்கமாக நாட்டின் நிலையை - மக்களின் வாழ்க்கை நிலையை - கவிதை எடுத்துக்காட்டி விடுகின்றது.

காதல்: இதனையும், சமுதாயத்தில் நிலவும் பிரச்சினை யாகக் கருதலாம். இதை இன்றைய புதுக் கவிஞர்களில் சிலர் அறிவியல் கருத்துகளோடு கலந்து அளிக்கின்றனர். ''உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது''[4] என்ற ஒரு கவிதை ஒருதலைக் காதலைச் சித்திரிக்கின்றது. இதில் இளைஞன் காதலுக்கு ஒரு பெண் பதில் சொல்ல வில்லை.

காதல்
கிரிக்கெட்டில்
வீசுகின்ற
விழிப்பந்துகளுக் கெல்லாம்...
விக்கெட்
விழுந்து விடுகிறதா என்ன?

என்று பேசும் இளைஞன் மேலும் பேச்சைத் தொடர்கின்றான்.

4. பொய்க்கால் குதிரைகள் - பக்.24.

ஆனால் ஒன்று...
பிள்ளைப் பிராயத்தில் -
ஆசை ஆசையாக
அழைத்த
பிஞ்சுக் கைகளுக்குப்
பிடிபடாமற் போன -
நிலா...

பிற்காலத்தில் -
ஆர்ம்ஸ்ட்ராங்கின்
அசுரக் கால்களால்
மிதிக்கப் பட்டது -
என்பதை மட்டும்
நீ மறந்து விடாதே!

இந்தப் பாடலின் இறுதியில் 'பெருந்திணை' ஒலி கேட்பது போல் தோன்றுகின்றது.

அண்மையில் 'ரோகிணி' என்ற துணைக்கோள் ஸ்ரீஹரிக் கோட்டாவிலிருந்து விண்ணுக்குச் சென்று வட்டமிடுவதைக் கண்டுகளித்தோம். விண்மீனின் பெயராகிய ரோஹிணியின் பெயர் இந்தத் துணைக் கோளுக்கு இடப் பெற்றது ஒரு புதுக் கவிஞரைக் கவர்ந்திருக்கின்றது. 'ரோஹிணியே, உன்னைக் காதலிக்கிறேன்....'[5] என்ற கவிதையில் அந்த ஆந்திர அறிவியல் நங்கையைக் காதலிக்கின்றார்.

ரோகிணி!...
அசுர வேகத்தில்
அகிலத்தை
அறிந்து கொள்வதற்காக
எங்களைச் சுற்றியே
வட்டமிடுபவளே...
உன்னைக் காதலிக்கின்றேன்!

5. ஜூனியர் ஆனந்த விகடன் 4.5.83ல் வெளிவந்தது (பம்மல் மணி மொழி)

என்காதல் ராணியே!
கன்னிப் பெண்ணின்
கர்வத்தோடு நீ
உலகினை
உலாவருவதை
உற்றுப் பார்த்திட
விஞ்ஞானிகளின்
விழிகளெல்லாம்
விண் நோக்கிய வண்ணமே
வீற்றிருக்கின்றன...

சித்திரை மாதத்தில்
நீ எங்கள் மனத்தில்
பதித்த இந்த
மகிழ்ச்சி முத்திரையை
நான் எப்படி
மறந்துவிட முடியும்?

தாவணி சிறகசைக்கும்
பருவப் பெண்ணின்
பூரிப்போடு நீ
பறந்து சென்றதைப் பார்த்த
ஒவ்வொரு இந்தியனுக்கும்
ஆண்மை
அதிகரித்தது...

.........................................

வெறும் துணிக்கடை
பதுமைகளாய்
பவனிவரும்
கன்னிப் பெண்களை
எப்படி நான்
காதலிக்க முடியும்?
எனவே தான்

ரோகிணிப் பெண்ணே!...
உன்னைக் காதலிப்பதை நான்
கெளரவமாய்
கருதுகிறேன்...

ரோகிணி கவிஞருக்கு அறிவியல் நங்கையாகத் தென்படுவதைக் கண்டு நாம் மகிழ்கின்றோம்.

ஆட்சிமுறை: கட்சி அரசியலில் ஜனநாயகம் வேரில் வெந்நீர் விட்டது போலாயிற்று. மாநிலத்துத் தலைமையமைச்சர் பதவி ஏலத்தில் போகின்றது; ஏனைய அமைச்சர்களின் பதவியும் அப்படியே, முகத் துதியும் கைத்தாளமும் இவர்கள் சாமர்த்தியமாயின. இவர்களை ஒரு புதுக்கவிஞர் பொய்க்கால் குதிரைகளாகக் காட்டி நையாண்டி செய்கின்றார்.

தேசப் பிதா -
தண்டியாத்திரை செய்ததுபோல்...
எங்கள் தலைவர்கள்
கிண்டி யாத்திரை
செய்கிறார்கள்!

......................................

வண்டிக் குதிரைகள்
வாய்ப்பூட்டோடு
நிற்க -
கிண்டிக் குதிரைகளுக்குக்
கிரீடங்கள்
சூட்டப் படுகின்றன!

பயணத்திற்குப்
பயன் படாத
இந்தப்
பந்தயக் குதிரைகளும் -
எங்கள்
இந்தியத் தலைவர்களும்
ஓர் இனமே!

ஆம்!
தேர்தல் ஓட்டத்தில்...
இந்தத் தலைவர்கள் மீது
பந்தயம் கட்டியே -
கட்சித் தொண்டர்கள்
கைக்காசை
இழக்கின்றார்கள்!

இவர்கள் -
நிஜக் குதிரைகளல்ல!
மைய அரசின்
நையாண்டி மேளத்திற் கேற்ப...
பொது நடனம்
புரியும் - பொய்க்கால் குதிரைகள்![6]

இவர்கள் பற்றிய கருத்து ஏற்கெனவே நம் மனத்தில் குடியேறியிருப்பதால் கவிஞர் இதனைத் தம் கவிதையில் ஏற்றி பவனி வரச் செய்யுங்கால் அது நம் அங்கீகாரம் பெறுகின்றது; இதனால் கவிதையும் சிறப்படைகின்றது.

**விலைவாசி:** இத்தலைப்பில் எத்தனை கவிதைகள் வேண்டுமானாலும் பிறக்கும். குடும்பக் கட்டுப்பாடு இங்கு இல்லை. 'விலை வாசி'[7] என்ற தலைப்பில் ஒரு கவிதை.

விற்போரின்
முதலிரவு
வாங்குவோரின்
வயிற்றெரிச்சல்
ஆள்வோரின்
அனாதைகள்
எதிர்த் தரப்பின்
ஏக வாரிசுகள்.

---

6. வாலி: பொய்க்கால் குதிரைகள் - பக். 153 - 154.

7. கதம்பம் (முருகன்) - பக். 25.

திரும்பத் திரும்ப கவிதையை நாம் படிக்கும் போது, இதன் தாக்கத்தை நாடோறும் அநுபவித்து வரும் நம்மிடையே சினம் சீறி எழுகின்றது. என்ன செய்வது? தீராத நோயாகி விட்டதே.

"ஓ... விலைவாசியே...'[8] என்ற தலைப்பில் ஓர் அற்புத மான கவிதை. பலர் கவனத்தையும் ஒருங்கே ஈர்ப்பது.

ஓ... விலைவாசியே...
பறக்காத பட்டத்துக்கு
உன்பேரை எழுதி
ஒட்ட வைத்துப்
பறக்க விட்டோம்!

அம்மாடி
எவ்வளவு உயரம்
போகிறது!
உன் -
சமதர்மக் கொள்கைக்குப்
பாராட்டுகள்!
ஏனெனில்
ஏழை பணக்காரன்
இருவருக்குமே
நீ -
'சிம்ம சொப்பனம்!'

இறைவனைச்
சிந்திக்கையில்
'கருணையுடன்
எங்களுக்கு இரங்கும்'
என்கிறோம்!
ஆனால் -
உன்னைச் சந்திக்கையில்

8. புதுக்கவிதை வெள்ளம் (கோவை சாரதன்) - ஆனந்த விகடன் இதழ் 13.3.83.

‘தயவு செய்து கீழே
இறங்கு’ என்கின்றோம்!
ஓ... விலைவாசிப் பேயே!
உன்னை ரகசியமாய்
ஒன்று கேட்பேன் -
பதிலைச் சொல் -
நீ
‘எமர்ஜென்ஸி’,
பூசாரிக்குத்தான்
அடங்குவாயா?

கோவை சாரதன் எழுதிய இக்கவிதை விலைவாசியால் நசித்து வரும் நம் எல்லோரிடத்தும் அங்கீகாரமும் ஒருங்கே பெற்று விடுகின்றது.

**கல்லூரிகள் நிலை:** கல்வி நிலையே ஒரு சாபக் கேடாகி விட்டது. தகுதியில்லாதவர்கள் அனைத்தையும் பெற நினைக்கின்றனர். எதையும் பண பலத்தால் அடைந்து விடலாம் என்று பெற்றோர் நினைக்கின்றனர். கல்வி நிலையங்களும் வாணிக நிலையங்களாகச் செயற்படத் தொடங்குகின்றன. பல்கலைக் கழகங்களும் இதற்கு விதி விலக்கு இல்லை. மதிப்பெண் பட்டியல் ஊழலே இதற்கு மாபெரும் சான்று. இந்நிலையை விளக்கும் கவிதையின் ஒரு பகுதி.

..........................................
செந்தமிழ் நாட்டில் தந்திரம் அறிந்தோர்
கல்லூரி கள்பல காணல் எளிதே!

ஆண்டுதோறும் ஆயிரம் ஆயிரம்
மாணவர் களையே வீணர்கள் ஆக்கிடும்
கல்லூரி களது கதையினைக் கேளாய்!
அந்நாள் வள்ளலின் அரண்மனை முன்னே
தேர்கள் நிற்கும்; ஊர்களின் மன்னர்

கப்பம் கட்டக் காத்து நிற்பர்!
இந்நாள் கல்லூரி வாயிலின் முன்னே
'கார்கள்' நிற்கும்; 'கவலையைப் பெற்றோர்'
கட்டணம் கொட்டக் காத்துக் கிடப்பர்.

கட்டட நிதிகள், கற்பனை நிதிகள்,
ஆட்ட நிதிகள், ஆசை நிதிகள்,
படிப்பு நிதிகள், நடிப்பு நிதிகள்
சிரிப்பு நிதிகள், செல்வ நிதிகள்
என்று பல்வகை நிதிகள் தவிர
கல்வி அங்கே இலவசம்.[9]

....................

கிண்டல் நிறைந்த கவிதை இது. இன்றைய நிலையைத் துல்லியமாகச் சித்திரிக்கின்றது கவிதை. கவிதை புதுக் கவிதையாக இல்லாவிடினும் கவிதையின் பாணி புதுக் கவிதையின் பாணியே. தேர்விலும் பண பலத்தால் வெற்றி பெற்று, அதே பண பலத்தால் உத்தியோகத்தையும் பெற்று விடுகின்றனர் - அரசு அலுவலகங்களில்! இவர்களிடம் நேர்மை, நாணயம் எப்படி யிருக்க முடியும்? எல்லாம் செல்லாக் காசுதான்!

இன்னொரு கவிதை[10] அறையில் நடப்பதை அம்பலப் படுத்துகின்றது.

பி.யு.சி.யா?
ஒரு நூறு போதும்.

பி.எஸ்சி பி.எட்
இருநூறு ஆகும்.

எம்.எஸ்சி. ஆயிரம்
எம்.பி.பி.எஸ்

---

9. கடற்கரைக் கவிதை - (61-62)

10. ஊசிகள் - பக். 65.

ஏழு ஆயிரம்

இங்கே
சேர வாரும்
செகத் தீரே![11]

பல ஆண்டுகட்கு முன்னர் இருந்த நிலையைக் காட்டுகின்றது கவிதை. பொருள்களின் விலைவாசி விண்ணை முட்டுவது போல் நுழைவு 'ரேட்'டும் எல்லையின்றி ஏறி விட்டது! தகுதி உள்ள மாணவர்கள், ஏழை மாணவர்கள் உயர் கல்வி பெறுவது எப்படி இந்நிலையில்? நகைச்சுவை விளைவிக்கும் எள்ளல் குறிப்பு இங்கு ஊசி போல் குத்துகின்றது. கவிஞர் 'குத்தூசியார்' மரபில் வந்தவர் போலும்!

**குடிப்பழக்கம்:** இன்று இப்பழக்கம் பேயாய் ஆட்டி வைக் கின்றது. பெரிய பங்களாக்களில் வெளிநாட்டுச் சரக்குகள். குடிசைப் பகுதிகளில் உள்நாட்டுச் சரக்குகள். காந்தி அடிகள், இராஜாஜி போன்ற நாட்டுத்தலைவர்கள் காலத்தில் செய்யப் பெற்ற முயற்சியால் (பிரசாரத்தாலும் சட்டத்தாலும்) மது அரக்கன் தமிழகத்தில் ஒழிந்தான்! சில ஆண்டுகட்கு முன் அவன் மீண்டும் தலையெடுப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. சுதந்திரத் திற்குப் பிறகு பிறந்த பல இளைஞர்கள் இப்பழக்கம் பற்றி அறிய வாய்ப்பு பெற்றனர். பொது மக்களின் எதிர்ப்புக் குரல் அரசின் செவிகட்கு எட்டியதும் மதுவிலக்கு சட்டம் மீண்டும் அமுலுக்கு வந்தது. திரும்பவும் ஆளும் கட்சியால் புதிய அரசு ஏற்பட்டதும் வருவாயைப் பெருக்க வேண்டும் என்ற கொள்கையை முன் வைத்து மதுவிலக்குச் சட்டம் ஒழிந்தது. 160 கோடி வெண் பொற்காசுகள் அரசுக் கருவூலத்திற்கு வருகின்றன. குடிப்ப வர்கள் ஏழைகள்; அவர்கள்தாம் இந்த வருமானத்தைத் தருகின் றனர். அவர்கள் தாம் வாக்குப் பதிவும் செய்கின்றனர். அதே

11. புதுக் கவிதை வெள்ளம் (திருவள்ளூர் இரா. சண்முகம்) - ஆனந்த விகடன் இதழ் 13.3.83

கட்சி மீண்டும் அரசுக் கடிவாளத்தைப் பிடித்துக் கொள்கின்றது. இப்படி வேலியே பயிரை மேய்ந்து கொண்டிருப்பதை ஏழைகள் உணர வில்லை. அது அவர்கள் வினைப் பயன் போலும். குடிசை வாழ் மக்கள் சில அரசு ஊழியர்களை, விட நல்ல வருவாய் பெற்றும் வறுமையால் வாடுவதற்கு அவர்கள் குடிப் பழக்கமே முதற்காரணம் ஆகும்; மூலகாரணமும் ஆகும்.

குடிப்பழக்கத்தை கிண்டல் பாணியில் - படிப்போர் மனத்தைத் தொடும் பாங்கில் - ''அஸ்தியும் விஸ்கியும்''[12] என்ற தலைப்பில் ஒரு புதுக்கவிதை சித்திரிக்கின்றது.

கரும்பலகையில்
கரியால். எழுதி
கண் தெரியாதவனைக்
கூப்பிட்டுப் படிக்கவிடு -
குடி
குடியைக் கெடுக்குமென
குடிக்கின்ற
புட்டியின்மேல் எழுதி
குடிகாரன் கையிலே
கொடுத்து விடு -
இரண்டும் ஒன்றுதான்!

'கடா மார்க'
சாராயம்!
கருத்து புரிகின்றதா?
எமனைத் திரவமாக்கிப்
புட்டியில்
போட்டு விட்டு
எருமைக் கடா
வாகனத்தை

12. தோணி வருகிறது - பக். 94.

வெளியே
ஒட்டி யிருக்கிறார்கள்...

இன்று,
ஜீரணமாகும்
எமன்,

வெகு விரைவில்
வாய் வழியே
எதிரில்
வரத்தான் போகிறான் -
ரத்தமாக!
அப்போதுதான் தெரியும்
உள்ளே செல்வது
வெறும் மில்லிகளா?
அல்லது
குடலை எரிக்கும்
கொள்ளிகளா என்று!

தன் குடலுக்குத்
தானே
தீ மூட்டிக் கொள்வதில்
அப்படி என்ன
போர்க்கால
வேகமும் வெறித்தனமும்?

ஆண்டவனே!
இந்த 'விளக்கங்கள்'
நேற்று
தெரிந்திருந்தும்
இன்று
குடித்திருக்கிறான்.
போகட்டும் -
நாளை குடிப்பதற்கு

அவன் இல்லை!
நாளை மறுநாள்
அவன்
அஸ்திகளுக்குப்
பால் தெளிக்க
வேண்டாம்
கொஞ்சம்
'விஸ்கி'
தெளித்து விடு -
அப்போதுதான்
அவன் ஆவி
மீண்டும்
மதுக் கடைகளைச்
சுற்றாது.

குடிப்பழக்கத்தை ஒழிக்க வேண்டும் என்பதற்கு உள்ளத்தைத் தொடும் பிரசாரக் கவிதை; அற்புதமான படைப்பு. சிலரை யாவது இது நல்வழிக்குத் திருப்பும் என்று நம்பலாம்.

விபசாரம்: இன்று சமூகத்தில் எல்லா மட்டங்களிலும் - தன வந்தர்கள், பிளேட்பாரம் வாழ் மக்கள், மாணவர்கள், ஆசிரி யர்கள், மேல் அதிகாரிகள், அமைச்சர்கள் இவர்களிடையே - தாண்டவமாடும் ஒரு கொடிய சமுதாய நோய். சங்க இலக்கி யத்தில் காணப்பெறும் 'பரத்தையர்' பிற் கால இலக்கியங்களிலும் இடம் பெறுகின்றனர். இவர்களைத் திருவள்ளுவர் 'பொதுப் பெண்டிர்' என்று குறிப்பிடுவர், புதுக்கவிஞர்கள் 'விலை மகளிர்' என்று குறிப்பிடுகின்றனர். ''நிதி வசூல்'' என்ற தலைப்பில் ஒரு கவிதை.

'ஏன்நீ விபசாரம்
செய்கின்றாய்?'
என்று கேட்டனர் அவளை
அவள்
'கண்ணகி கல்யாண மண்டபக்

கட்டடத்திற்கு
நிதி வசூல் செய்கிறேன்' என்றாள்.

விபசாரத்தையே நியாயப்படுத்தும் கவிதை இது. கவிதையில் எள்ளல் குறிப்பு காணப்படுகின்றது.

'பரத்தைகள்'[13] என்ற தலைப்பில் ஒரு கவிதை. பரத்தையர் தம்மைத் தாமே அறிமுகம் செய்து கொள்கின்றனர் இதில்.

**நாங்கள் பொம்மைகள்**
**தொங்கவும் விடலாம்**
**தூக்கியும் நிறுத்தலாம்**
**எந்த இராத்திரியும்**
**எங்கட்கு நவராத்திரியே**
**நாங்கள் பொம்மைகள்.**

கவிதையைப் படிக்கும் நம்மிடம் இவர்கள்மீது இரக்கம் பிறக்கின்றது. பொருளாதாரச் சீர்கேட்டுக்கு இரையானவர்கள் இவர்கள். இவர்கட்கு இத்தொழில் வாழ்க்கைப் பிரச்சினை. செல்வர்கட்கும் இளைஞர்கட்கும் இது காமக் களியாட்டம்.

''தரையிலே ஓடும் ரயில்கள்''[14] என்ற தலைப்பில் ''துறவி'' யின் கவிதை ஓர் அற்புதப் படைப்பு. விபசாரம் பற்றிப் பச்சை யாக - ஆனால் நாசூக்காகத் - தெரிவிக்கும் ஒரு நல்ல புதுக் கவிதை. துறவி ஒரு விபசார புரோக்கரை அறிமுகம் செய்யும் பாங்கில் இந்தத் தொழில் சுறுசுறுப்பாக நடைபெறுவதைப் பாங் காகத் தெரிவிக்கின்றார். நடைபெறும் இடம் திருச்சி அருகில் காவிரி நதிப் பிரதேசம். புரோக்கர் பெயர் துரைக்கண்ணு. ஒரு பௌர்ணமி இரவில் அவனைச் சந்திக்கின்றார். அவனைப் பற்றி:

**அவனோர்**
**தனி மனிதனல்ல...**
**அவனுள்**

---

13. கதம்பம் (மினிக் கவிதைத் தொகுப்பு) - பக். 34.

14. புதுக்கவிதை வெள்ளம் (துறவி) - ஆனந்த விகடன் இதழ் 13.3.83

தசாவதாரமே
புதைந்து கிடந்தது.

அவன் ஓர்
சமூக ஊழியன்
பேச்சாளன்
அரசியல் வாதி
சாராய வியாபாரி

இப்படி -
எத்தனை எத்தனையோ
முகங்கள் அவனுக்கு...
எல்லாவற்றையும் விட
அவன் ஒரு புரோக்கர்...

எதற்கு?
வாலிபத் தினவெடுத்து
வசீகரப்
பெண் உடம்புகளை
விலைக்குத் தேடும்
ஆண்வர்க் கத்துக்கு
அவன் ஒரு
புரோக்கர்

'துறவி' யை அவன் 'சின்ன சின்ன அழகிய சிட்டுகளை' அநுபவிக்க வருமாறு அழைக்கின்றான். அதற்குக் கட்டணம் பத்து ரூபாய் தான் என்றும் பகர்கின்றான். இந்தத் தொழில் 'ஆளுயரக் குழாய்களின் உள்ளே' நடைபெறுகின்றது என்றும் தெரிவிக்கின்றான். 'துறவி' சொல்லுகிறார்:

நான்
'வியாபாரத்துக்கு
வரலையப்பா
உன்
விநோதமான விமர்சனம்

என்
நெஞ்சுக்குள் பாய்ந்ததால்
உன்னோடு
சம்பாஷிக்கலாமே என்ற
சந்தோஷத்தினால்தான்
நின்றேன்'

என்று. விபசாரம் பற்றி அவன் தந்த விமர்சனம்:

'வறுமை
வேரோடிப் போயிருக்கும்
ஒரு தேசத்தில்
இந்த மாதிரி நிகழும்
விபத்துகளுக்கு
விமோசனமே
கிடையாது சார்...
எங்கள் ராத்திரிகளுக்கு
வெளிச்சங்கள் வழங்க
விளக்குகள்
கிடைக்காத போது
ஆறுதல் தருவதெல்லாம்
ஆகாய நிலாவின்
மெல்லிய பிரகாசங்கள் தான்.

நாங்க என்ன செய்வது?
சபிக்கப்பெற்ற
பிரஜைகள் நாங்கள்...
சாபங்களாய் விளைந்து விட்ட
எங்களின்
பாவ வறுமைக்கு
எந்த அரசாங்கமும்
ஒருதேவ விமோசனத்தை
வழங்கவில்லையே சார்...

எங்கள் மூச்சுகளுக்கு
இந்தப் பிரபஞ்சம்
காற்றை வழங்கலாம்;

ஆனால்
வயிறுகளுக்கு
எந்தக் கரங்கள்
பிடிச் சோற்றைப்
பிரியமாய்த் தருகின்றன?

இந்தத் தேசத்தின்
சட்டங்கள் யாவும்
பணக் காரனின்
வீட்டுக்கு
மாடிப் படிகளாய்
மாறிப் போய் விட்டன!
ஆனால்
எங்களுக்கோ
அவை
எங்களது
பொத்தல் குடிசைகளில்
புயல்களாகவே
புகுந்து விடுகின்றன!'

நெருப்புப் பொறி பறக்கும் இந்த புரோக்கரின் பேச்சில் 'துறவி'யின் ஆன்மா கூட ஆச்சரியத்தில் அமிழ்ந்து போகின்றது. அவர் இதயம் அசிங்கத்தால் குமட்டுகின்றது.

இந்த தேசத்தின்
புண்ணிய புஸ்தகங்கள்
போற்றிப் பேசும்
பெண்மைகள் இப்படி
ராத்திரியின் பின்னணியில்
இவ்வளவு பகிரங்கமாய்

ரணப்படுவதைக் கண்டு
கண்ணீர் உகுத்தது
என் இதயம்.

என்கின்றார். அப்போது எதிர் பிளாட்பாரத்தில் போலீஸ்காரர் ஒருவர் வந்து 'மாமூல்' வாங்கிப் போகின்றார். கவிஞர் கூறுகின்றார்:

போனது
போலீஸ்காரர்
மட்டுந் தானா?
தோளோடு
தோள் இணைந்து நீதியும்
நெடும் பயணம் போனது
அவரோடு!

இப்படி இத்தொழில் எத்தனையோ பேருக்குப் படி அளக்கின்றது!

"வெட்ட வெளியில் இப்படி
மறைவே இல்லாத
இந்த இடத்திற்கு வர
வெட்கப் படுவதில்லையா
அந்தப் பெண்கள்?"

என்ற வினாவைத் 'துறவி' விடுக்க அதற்குப் புரோக்கர் துரைக் கண்ணு தரும் மறுமொழி:

"கல்லூரி மாணவனிலிருந்து
அலுவலக
ஆபீஸர்கள் வரை
இந்த
அசிங்கத்தைத் தேடி
ஆசையோடு வரும்போது
வயிற்றின் கேள்விகளுக்கு
விடைகள் தேடும்
எங்களுக்கு
எதற்கு சார்

அசிங்கத்தைப் பற்றிய
அக்கறை?''

இந்த மறு மொழியைச் செவிமடுத்த கவிஞரின் சிந்தனை,

உடம்புகள் அழகாய்
இருக்கும்
ஒவ்வொரு மனிதனுக்கும்
ஆத்மா மட்டும்
அழுக்காகவே இருக்கிறது.

வெளிச்சத்தில்
தெரியும் மனிதனுக்கும்
இருட்டுக்குள்
நிற்கும் மனிதனுக்கும்
இடையில்தான்
எத்தனை வித்தியாசங்கள்!

என்று நெசவு செய்கின்றது. இந்த நிலையில் இருட்டைக் கீறி வெளிப்படுத்துவது போல் 'நான்கைந்து வெள்ளைச் சட்டைகள்' அந்தக் குழாய்களின் பக்கமிருந்து குதூகலத்துடன் வெளிவரு கின்றன. கவிஞர் இக்காட்சியை உற்று நோக்குகின்றார்.[15]

பூரண நிலாவின்
பொற்கதிர் வெளிச்சத்தில்
அவிழ்ந்து சரிந்துபோன
தங்களின்
ஆடைகளைச் சரிசெய்து
நிற்கும்
அந்த
இரவு மயில்களின்

15. கவிதை முழுவதுமே மீமெய்ம்மையியலுக்குச் சரியான எடுத்துக் காட்டானாலும் இதற்குக் கீழ்உள்ள பகுதி - மிகச் சிறப்பாக அமைகின்றது.

யௌவனம்
மங்கலாகத் தெரிந்தது!

என்ன தெரிந்தது என்பதைக் கவிஞரே கூறுகின்றார்:

அவர்கள்...
ராத்திரியின் பிரகாசங்கள்
ரவிவர்மாவின் ஓவியங்கள்
வாத்ஸ் யாயனின்
உரை நடைகள்
அதிவீர ராமனின்
ஆலிங்கனச் சிந்தனைகள்
வசீகரத்தின் கவிலயங்கள்
போகரூப தரிசனங்கள்...

அவர்கள்
விடியலின் விரோதிகள்
கல்யாணப் பந்தலில்
நுழைய முடியாத
நித்திய கல்யாணிகள்
கண்ணீர்ப் புத்திரிகள்...

நிலாவை விசுவாசித்தபடி
எந்த
விரலையும் வெறுக்காத
வாலிப வீணைகள்...
எந்தத்
துறையிலும் நிற்காத
காமத் தோணிகள்

எவரும்
எடுத்துப் படிக்கும்
இலக்கியங்கள்...

எல்லாவற்றையும் விட
அவர்கள்

இந்த தேச வறுமையின்
விஸ்வ ரூபங்கள்!

கவிஞரின் பச்சாதாபம் இழையோட புரோக்கரைக் கேட்கின்றார்:

'என்னப்பா லைஃப் இது
எத்தனை
நாட்களுக்குத்தான்
இப்படி வாழ்க்கையை
ஓட்ட முடியும்?'

என்று. புரோக்கரின் மறுமொழி:

ஓடற வரைக்கும்
ஓடட்டுமே சார்...
இந்த
ஓட்டத்தின் வேகத்தில்
எங்களின் வறுமைக்கு
ஓய்வு
கிடைச்சா போதும் சார்...

நாங்க
தரையிலே
ஓடற ரயில்கள் மாதிரி...

எங்களின்
ஓட்டத்துக்கு
உத்தரவாதமே
கிடையாது.

ஏதோ ஓடறோம்...
நிச்சயம்
என்றேனும் ஒருநாள்
விபத்துக்கள்...
நேரவே செய்யும்...

அதுவரைக்கும்
பிரச்னைகளின்

அச்சுறுத்தல்கள்
இல்லாமலே
வாழ்க்கை வண்டியை
ஓட்ட முடிகிறதே
அதுவே போதும் சார்...'

ஒரு தத்துவ ஞானிபோல் இவ்வாறு கூறி தன் பேச்சை நிறுத்துகின்றான். அவன் பேசியது இந்த தேசத்தின் முகத்தில் காறித்துப்பியது போல் தோன்றுகின்றது கவிஞருக்கு... உடனே சிந்திக்கத் தொடங்குகின்றார். அந்தச் சிந்தனை யோட்டம்:

அந்தப் பிரஜைகளின்
பிய்ந்து போன
இதயத்தைத் தைப்பதற்கு
இந்த
சமூகம் எதைத்தான்
சாதித்தது!

அவர்கள்
தங்களின் விரல்களுக்குத்
தங்க மோதிரங்களை
வேண்டியா
தவங்கள் செய்கிறார்கள்?
இல்லையே...
நீண்டு வளர்ந்து
தங்களையே காயப்படுத்தும்
விரல்களின் நகத்தை
வெட்டி எறியவே
பிரயாசைப் படுகிறார்கள்...
ஆனால்

கைகளையே இழந்துவிடும்
கண்ணீர் அநுபவங்களே
நேர்ந்து விடுகிறது
அவர்களுக்கு!

இந்த எண்ணங்களுடன் தங்கியிருக்குமிடத்திற்குப் புறப்படுகின்றார். வழியில் பெட்டிக் கடை போஸ்டர் ஒன்றில் அரசியல் தலைவருக்கு அறுபது ஆயிரம் அன்பளிப்பாய்த் தந்த செய்தியைக் கொட்டை எழுத்தில் காண்கின்றார். அஃது அவர் கண்களையே தீய்க்கின்றது.

இயேசுவின் மலையுச்சி சொற்பொழிவு போல் அமைகின்றது:

**ஓ....**
**என் தேசமே...**
**உன் தூங்கிப் போன**
**விழிகளில்**
**நியாயத்தின்**
**ஒளி ரேகைகள்**
**என்றுதான்**
**நுழையுமோ?**

**வறுமைக்**
**கூட்டுக்குள்ளேயே**
**சவமாகிப் போகும்**
**ஒரு வம்சத்தின்**
**விடியலுக்கு**
**வெளிச்சமே கிடைக்காதா?**

**புண்ணிய**
**தீர்த்தங்களாய்ப்**
**பொங்கிப் புரண்டோடும்**
**நதிகளினால் ஈரமாகும்**

**இந்த**
**நாட்டின் வீதிகளில்**
**சீதையின் சகோதரிகள்**
**கண்ணகியின் தங்கைகள்**
**வறுமைக் கரங்களினால்**
**கிழிக்கப்படும் கீழ்த்தரம்**

நிரந்தரமான
சம்பவங்கள் தானா?

வறுமை
மனித உடம்புகளை
மட்டுமா
சிதைத்து விடுகிறது?
அது ஒரு
கலாசாரத்தையே
அல்லவா
கொலை செய்கிறது!

.........................................

இந்த
தேசத்தின் வறுமையைவிட
அரசியலே கொடுமையாய்
இருக்கிறது
ஒவ்வொரு
அரசியல் வாதியும்
ஓராயிரம் இந்தியனின்
வாழ்க்கைச் சுகங்களைச்
சூறையாடி விடுகிறார்.

வழிகாட்டுவதாகக் கூறி
தன்னைப் பின்பற்றிவரும்
பாதங்களையே
முடமாக்கி விடுகிறார்கள்
இவர்கள்...

தான் கட்டிய கூட்டின்
குச்சி ஒன்றாலேயே
குத்தப்பட்டுக்
காயமாகிப்போன

ஒரு
பறவையைப் போலவே

இந்தப் பாரததேசத்து
ஒவ்வொரு பிரஜையும்
காயமாகிப் போய்க்
கண்ணீர் வடிக்கிறான்...
ஆத்மாவையே இழந்துவிட்ட
அரசியல் வாதிகளினால்!

ஒடுக்கப்பட்ட வர்க்கத்தின்
விழிகளுக்குள்
அக்கினி நதிகள்
ஆரம்பிக்காத வரைக்கும்
இந்த
நீசங்களை நிர்மூலமாக்க
எப்படிக் கிடைக்கும்
நெருப்புகள்?

வறுமை: இதனை நிலைபேறு அடையச் செய்தவர்கள் அரசியல் வாதிகள் என்பதை அனைவரும் ஒருமித்த குரலோடு பேசுகின்றார்கள்.

இப்படி ஒரு கவிதை:

வறுமையே!
எங்கள் தேசத்து
அரசியல் வாதிகள்
வாங்கித் தந்த
வரப் பிரசாதமே![16]

என்று தொடங்குகின்றது. இந்த அரசியல் வாதிகள் தொண்டர்கள் போல் நன்கு நடித்து வணிகர்கள்போல் பேரம் பேசுவதைக் கவிஞர் அம்பலப் படுத்துகின்றார்.

வறுமையை மூலதனமாக்கிக் கொண்டு பலர் வாழ்வதையும் கவிஞர் ஒருவர் சுட்டிக் காட்டுகின்றார் அற்புதமாக.

வறுமையின் தத்துவம்
சமய் வாதிகளுக்கு

16. அரண்மனை திராட்சைகள்

பிரசங்கத் தலைப்பு

குருவி ஜோதியக் காரனுக்கு
வயிற்றுப் பிழைப்பு
கலா சிருஷ்டியோடு
எழுதுகிறவனுக்கு
நிலாச் சோறு

கல்லூரி மாணவனுக்கு - வெறும்
பரீட்சைக் கேள்வி!

ஆதிசிவனையே 'ஆண்டியாகப்' பேசும் நமது நாட்டில் வறுமையின் தத்துவம் ஏன் நிலைக்காது?

இன்னொரு இளம் பெண் கவிஞர் வறுமைக் காட்சியை அழகாகக் காட்டுகின்றார்.

நாங்கள் சமரசவாதிகள்
வெள்ளிக் கிழமை
பள்ளி வாசலுக்கும்
சனிக் கிழமை
பெருமாள் கோயிலுக்கும்
ஞாயிற்றுக் கிழமை
சர்ச்சுக்கும்
போகிறோம்!
ஏனென்றால்
நாங்கள் பிச்சைக்காரர்கள்[17]

இன்று இதழ்களில் வெளிவரும் புதுக் கவிதைகளும் நூல் வடிவத்தில் வெளிவருபவைகளும் பெரும்பாலும் சமுதா யத்தைப் பற்றியவையே. சமுதாயத்தின் ஓர் உறுப்பினராக இருந்து வரும் நமக்குச் சமுதாய அவலங்கள் நன்கு தெரியு மாதலால் அவை பற்றிவரும் கவிதைகள் உடனே நமது உள்ளத்தைத் தொட்டு விடுகின்றன.

---

17. புதுக்கவிதை வெள்ளம் (வே. சாந்தா) - ஆனந்த விகடன் இதழ் 13.3.83

# 7. ஒவ்வாமை நிலை*

நம் உடலில் பல்வேறு பொறி நுட்பங்கள் உள்ளன. குருதியோட்ட மண்டலம், மூச்சு மண்டலம், செரிமான மண்டலம், நரம்பு மண்டலம், சுரப்பி மண்டலம், இனப்பெருக்க மண்டலம் போன்ற பல்வேறு இயக்க மண்டலங்களையும், காணல், கேட்டல், முகர்தல், சுவைத்தல், உற்று அறிதல் முதலிய புலன் உணர்ச்சியில் பங்கு பெறும் பொறிகளையும், இவற்றிற் கெல்லாம் நடு நாயகமாவுள்ள மூளையையும் எண்ணிப் பார்த்தால் மெய்ப் பொருள் இயலார்,

**காயமே இது பொய்யடா - இது**
**காற்றடைத்த பையடா**

என்று கூறும் இப்பொய்யுடலின் வியத்தகு பொறி நுட்ப செயற் பாடுகளை அறிந்து மகிழ்கின்றோம். இறைவனது படைப்பு விந்தையும் நம்மை வியக்க வைக்கின்றது. இந்த மிகச் சிக்கலான அமைப்புகளில் எத்தனை விதமான கேடுகள் ஏற்படக் கூடும் என்பதையும், பிறப்பிலேயே இவற்றில் ஏதாவது ஒன்று சரியாகச் செயற்படாதிருந்தால் என்ன நேரிடும் என்பதையும் சிந்தித்துப் பார்த்தால் எண்ணற்ற செயல் சார்ந்த குறைபாடுகள் (Functional defects) யாவை என்பதை ஓரளவு உணரலாம். இந்தக் குறை பாடுகளை அறியும் நாம் நமது நிலையை எண்ணிக் களிப்படை கின்றோம். ஆண்டவன் ஏதோ ஒரு சிலவற்றைத் தவிர ஏனைய வற்றை நமக்கு அருளாத அவனது பேரருளை நினைத்துப் போற்றுகின்றோம். சற்றுக் குறைபாடுள்ள சிற்றுந்து - மகிழ்வுந்து - என்பதைச் சரி செய்து கொண்டே பயணத்தை மேற்கொண்டு செல்ல வேண்டிய இடத்தை அடைவதைப் போல, குறைபாடுகள் உள்ள இந்த உடலைக் கொண்டே செய்ய வேண்டுவனவற்றைச் செய்து கொண்டு முக்தி உலகத்தை அடைய முயல்கின்றோம்.

---

* 20.1.91இல் சென்னை அண்ணா நகர் தமிழ்ச் சங்கத்தில் நிகழ்த்திய உரை.

திருமூலர் கூட ஒரு காலத்தில் உடம்பினை இழுக்கு என்று கருதினார்; உடம்பிற்குள் உறுபொருள் ஒன்று இருப்பதைக் கண்டார் அநுபவத்தால்; உடம்புள்ளே உத்தமன் கோவில் கொண்டான் என்று உடம்பினை ஓம்பி வருவதாகக் கூறுகின்றார்.[1] பிறிதோர் இடத்தில் 'உடம்பார் அழியில் உயிரார் அழிவர்; உடம்பை வளர்ப்ப தால் உயிர் வளர்ப்பதாகக் கருதுகின்றார்'[2] நம்மாழ்வார் இந்த உடம்பை 'அழுக்குடம்பு'[3] என்கின்றார். இந்த உடலில்தான் இறைவன் 'கரந்து' இருப்பதாக ஒருபாசுரத்தில் கூறி அந்த இறைவன் தம்முடைச் சூழலில், அருகில், ஒக்கலையில், நெஞ்சில், தோளில், நாவில், கண்ணில், நெற்றியில், தலையில் இருப்பதாகக் கூறுவர்.[4]

உடலில் கலந்திருக்கும் உயிரின் (ஆன்மா) தன்மைகளைப் பற்றி ஆன்ம நூல்கள் எடுத்துக் கூறும்; உடலோடு சார்ந்திருக்கும் அதற்கு ஏற்படும் பொறாமை, அவா, வெகுளி போன்ற நோய்களையும் அவற்றை நீக்கும் முறைகளையும் நீதி நூல்களும் நுவலும். அருளாசிரியர்களும் தம் அருளிச் செயல்களில் ஆங்காங்குக் காட்டிச் செல்வர். இவற்றை விரிப்பிற் பெருகும்.

இத்தகைய விநோதமான இவ்வுடலில் விநோதமாக எழும் ஒவ்வாமை (Allergy) நிலையை மிக நுட்ப ஊற்றுணர்வு என்றும் வழங்கலாம். ஈண்டு ஒவ்வாமைபற்றிச் சிந்திப்போம். சிலர் சில பொருள்களை ஏற்கும் போது அவர்களது உடல் உணர்வு மிகுதியால் எதிர்வினை புரிதலே ஒவ்வாமை நிலை எனப்படும். ஒவ்வாமை நிலையற்ற மனிதர்கட்கு தீங்கு பயக்காத ஒரு பொருள் ஒவ்வாமை நிலையுடையவர்களிடம் சாதாரண நிலையிலிருந்து மிகத் தீவிரமான அடையாளங்களை ஏற்படுத்தி விடும். ஒருவரிடம் எந்தக் காலத்திலும் ஒவ்வாமை தோன்றி வளர்தல் கூடும். ஆயினும் குழந்தைப் பருவத்தில் அதன் முதல் அறிகுறிகள் தோன்றுகின்றன.

---

1. திருமந்-மூன்.தந். காய சித்த உபாயம் - 2
2. ஷை - ஷை - 1
3. திருவிருத் - 1
4. திருவாய் - 1:1:7; 1.9 (பதிகம்)

ஒவ்வாமையின் சாதாரணத் தோற்றங்களாகக் காச நோய், தூசியினால் ஏற்படும் வேனிற் காலக் காய்ச்சல் (Hay-fever), ஆண்டு முழுவதும் தொடர்ந்து நிலை பெற்றிருக்கும் மூக்குச் சார்ந்த ஒவ்வாமை ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவை தவிர படை நோய், தோல் வீக்கம், குடல் வீக்கம், தொண்டை அழற்சி முதலியவை, ஒவ்வாமைத் தலைநோய், ஒவ்வாமையுள்ள செரி மானக் கோளாறுகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். கிட்டத் தட்ட எல்லா மக்களும் ஏதாவது ஒரு பொருளுக்கு ஒவ்வாமை யுடையவர்கள். இரண்டாம் உலகப் பெரும் போரில் ஒருவர் காக்கி ஆடைக்கு ஒவ்வாமையாக இருந்தமையால், பணியி லிருந்து விடுதலை அளிக்கப் பெற்றாராம். பீட்டர் பார்க்கிலுள்ள நங்கையொருத்தியின் அங்கோரா கம்பளிக் குல்லாய் அவரது ஆண் நண்பருக்கு ஒவ்வாமையாக இருந்தமையால் இதனை விற்க விளம்பரம் செய்தாளாம். ஒருவருக்கு எல்லா வித வண்ணங்களும் தும்மலை விளைவித்ததாம். கலிஃபோர்னி யாவில் ஒரு பெண்மணிக்குத் தன் கணவன் ஒவ்வாமையாக இருந்தானாம்! உண்மையில் அவள் கணவனிடம் பேரன்பு கொண்டவளே. ஆனால் அவன் நேரில் இருக்கும்பொழுது அவனைப்பற்றி யாராவது பேச்சு எடுத்தாலும் - அவள் நிலை குலைந்து உடம்பெல்லாம் தடித்து விடுமாம். அவள் காச நோயி னால் பீடிக்கப் பெற்றுக் குணம் அடைந்தவள். இவையெல்லாம் ஒவ்வாமை விநோதங்கள்.

**களைப்புத் தலைவலி (Migraine):** இதனை ஓர் ஒவ்வாமை நிலையாக அறிஞர் பலர் கருதுகின்றனர். இதனை ஒரு- தலைவலி என்றும் சொல்லலாம். தலையிலுள்ள குருதிச் சூழல்கள் அடிக்கடி வீங்குவதால் இஃது ஏற்படுகின்றது. இஃது ஓங்கி நிற்கும் ஜீனினால் (Dominant gene) நேரிடுகின்றது. ஹார்மோன்களின் செல்வாக்கும் இதற்கு உண்டு. பெரும்பாலும் மகளிர் மாதவிடாயின் பொழுது இந்நோயினால் அதிகமாகத் துன்புறுகின்றனர்.

**ஒவ்வாமை நிலையை ஏற்படுத்தும் பொருள்கள்:** ஒவ்வாமை நிலையை ஏற்படுத்தும் பொருள்கள் இப்பெயர்

களால் வழங்கப்பெறும். அவை காசநோய், சளிக் காய்ச்சல் வகை, மற்ற மூச்சுக் குழல் ஒவ்வாமை நிலைகளை ஏற்படுத்தும் பொருள்கள் வீட்டுத் தூசு, காளான் வகை இலைகள் (Mould spore) பூம்துகள் (மகர்ந்தம்), தலைப் பொடுகு (Dandruff), வீட்டுச் செல்லப் பிராணிகளின் மயிர் முதலியவையாகும். இவை தவிர சில வகை உணவுகள், மருந்துகள், ஆல்கஹால், புகையிலை, நாய்கள், பூனைகள், முதலியவை சிலருக்கு ஒவ்வாமையாக இருக்கும். உணவுப் பொருள்களில் சாக்கோலட், பசும்பால், முட்டை, கோதுமை, சில கடல் உணவுகள் (குறிப்பாக கிளிஞ்சல்) ஆகியவை அடங்கும். இவை யாவும் உடல் - வேதியியல் சரியாகச் செயற்படாமையால் விளைகின்றன. நரம்புக் கோளாறுகள் உள்ளவர்களிடம் இது அதிகமாக நேரிடுகின்றது. அடிக்கடி இந்நோய் தொடர்ந்து ஏற்படுவதாலும் சிலரிடம் நரம்புக் கோளாறும் நேரிடுகின்றது. ஆய்வாளர்கள் இஃது இரண்டுவித ஓங்கி நிற்கும் ஜீன்களால் உண்டாகின்றது என்றும், இவற்றின் இரட்டைச் சேர்க்கை பூப்பு (Puberty) அடைவதற்கு முன்னதாகக் கடுமையாக ஏற்படுகின்றதென்றும் ஒற்றை ஜீன் பூப்புக்குப் பிறகு தீவிரமற்ற நிலைமையை உண்டாக்குகின்றதென்றும் கூறுகின்றனர்.

தொடக்க கால மனிதர்கள் ஒருவேளை ஒவ்வாமை நிலைமைகளைப் பெற்றிருத்தல் கூடும்; அவை இன்றும் சில பிராணிகளிடமும் மனிதர்களிடமும் நிலை பெற்றுள்ளன. 1900 வரையிலும் மருத்துவர்கள் ஒவ்வாத நிலைகளின் திட்ட வட்டமான காரணங்களையும் அவற்றின் சிறப்பியல்புகளைப் பற்றியும் தெரிந்து கொள்ளத் தொடங்கவில்லை. ஆனால் இன்று ஒவ்வாத நிலை என்பதை மருத்துவத்தில் ஒருவித சிறப்புத் துறையாகக் குறிப்பிடப் பெறுகின்றது. ஒவ்வாத நிலை நோய்களைச் சிகிச்சை செய்யும் மருத்துவர் 'ஒவ்வாமை நிலை மருத்துவர்' (Allergist) என்றும் குறிக்கப் பெறுகின்றார்.

**ஒவ்வாமை நிலை வளர்ச்சி பெறும் போக்கு:** ஒவ்வாமை நிலையிலுள்ள மனிதரின் உடல் ஒவ்வாமை நிலையை

ஏற்படுத்தும் பொருள் அல்லது பொருள்கட்கு உட்படுத்தப் பெறும் பொழுது அஃது எதிர்வினை புரிகின்றது. இப்பொருள் அந்த உடலைத் தூண்டி எதிர்ப்பொருள்கள்[5] (Antibody) என்ற புரதங்களை விளைவிக்கின்றது. ஒவ்வாநிலைப் பொருள்களும் இந்த எதிர்ப் பொருள்களும் இணைந்து உடலின் உயிரணுக்களி லிருந்து சில பொருள்களை குருதியுள்ளும் மற்ற உடல் பாகங் களுக்குள்ளும் விடுவிக்கின்றன. இந்தப் பொருள்கள் H-பொருள்கள் என்ற பெயரினைப் பெறுகின்றன; இவை வேறு உயிரணுக்களிலும் இழையங்களிலும் எதிர்வினைகளை விளை விக்கின்றன. இந்த H-பொருள்களில் பல பிராணிகளிடமும் மனிதர்களிடமும் விளைவிக்கின்றன. மனிதர்களிடம் ஒவ்வா மையை விளைவிக்கும் முக்கியமான H-பொருள் 'ஹிஸ்டாமின்' (Histamine) என்பதாகும்.

உடலுக்குள் விடுவிக்கப் பெற்ற H-பொருள்கள் ஒவ்வா மைக்கு இலக்காகவுள்ள இழையங்களைத் தாக்குகின்றன. பெரும்பான்மையான இந்த இழையங்கள் நுண்புழைகள், (Capilleries) சளிச்சுரப்பிகள், மென்மையான தசைகள் (இதயத்தைத் தவிர இரைப்பை மற்றுமுள்ள உள்ளுறுப்புகளின் தசைகள்) ஆகியவையாகும். உடலிலுள்ள இந்த இழையங்களின் இடம் H-பொருள்கட்கேற்ப அவற்றின் குறிப்பிட்ட துலங்க லுடன் - தெளிவாகக் குறிப்பிட்ட ஒவ்வாமை நோயை உறுதி செய்கின்றது. பொதுவாக ஹிஸ்டாமின் நுண் புழையங்களைப் பெரிதாக்குகின்றது. சளிச் சுரப்பிகளைச் சுரக்கச் செய்கின்றது; மென்மையான தசைகளை இறுக்கமடையச் செய்கிறது.

ஒரு குறிப்பிட்ட ஒவ்வாமைப் பொருளின் துலக்கத்திற் கேற்ப ஒருவருடைய உடலில் எதிர்ப் பொருள்கள் உண்டாக்கப் பெற்ற பிறகு, எதிர்காலத்தில் இந்த எதிர்ப் பொருள்கட்கு உடல் இலக்காகும்போது அஃது எதிர்ப் பொருள்களின் உற்பத்தியைத்

5. இவை குருதியில் இருந்து கொண்டு உடலை நோய்கள் தாக்காமல் காப்பாற்றுகின்றன.

தூண்டுகின்றது. ஆனால் இத்தகைய எதிர்ப் பொருள்கள் ஒருவருடைய உடல் உண்டாக்கும் தொற்றுவுடன் போராடிப் பாதுகாக்கும் எதிர்ப் பொருள்களைப்போல் செயற்படுவதில்லை. பாதுகாக்கும் எதிர்ப்பொருள்கள் நோயை விளைவிக்கும் உயிரிகளுடன் போராடி அவற்றை அழிக்கின்றன; அல்லது அவற்றைத் தீங்கற்றவையாக்குகின்றன. இந்த உயிரிகள் அழிக்கப் பெற்ற பின்னர் உடல் இத்தகைய எதிர்ப் பொருள்களைத் தொடர்ந்து உண்டாக்குமேயானால் அந்த ஆள் தடுப்பாற்றலையுடையவராகின்றார்.

**மனவெழுச்சிக் கூறுகள்:** ஒவ்வாமை இலக்கு இழையங்கள் தன்னாட்சி நரம்பு மண்டலத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதால், ஒவ்வாமைப் பொருளின் - எதிர்ப்பொருள் எதிர்வினை ஒவ்வாமை நிலையை விளக்க முடிவதில்லை. தன்னாட்சி நரம்பு மண்டலம் இந்த இழையங்களை அடிப்படையில் ஒழுங்கான சம நிலையில் வைத்துப் பாதுகாக்கின்றது. ஆனால் தன்னாட்சி நரம்பு மண்டலம் மனவெழுச்சிகள் போன்ற மற்ற உடல் துலங்கலுடன் அடங்கியிருக்கின்றது. இதனால் தீவிரமான மனவெழுச்சிகள் கூட ஒவ்வாமை இலக்கான இழையத்தின் எதிர்வினையைத் தாக்குகின்றன. சினம், அச்சம், மனக்கசப்பு (Resentment), தொந்தரவு, தன்னம்பிக்கை இல்லாமை போன்ற மனவெழுச்சி வகைகள் ஒவ்வாமைத் துலங்கல்களைப் பெருகச் செய்கின்றன.

மூளையிலுள்ள நரம்பு மையங்கள் மனவெழுச்சித் துலங்கல்களுடன் பங்கு பெறுகின்றன. மேற்பூத்தண்டு (Hypothalamus) எனப்படும் மூளையின் ஒரு பகுதி தன்னாட்சி நரம்பு மண்டலத்தைத் தணிக்கை செய்து கட்டுப்படுத்துகின்றது. மேற்பூத்தண்டும் அடுத்து பெருமூளையின் மேலுறையினால் (Celebral cortex) தூண்டப் பெறுகின்றது. சில தூண்டல்கள், காணலாலு கேட்பதாலும், மூளையை அடையும் பொழுது ஒரு செய்தி மூளையின் மேலுறையில் முறைப்படுத்தப் பெறுகின்றது. அந்தச் செய்தி ஏதாவது மனவெழுச்சித் துலங்கல்களை விளைவிக்கக்

கூடுமானால் அது மேற்பூத்தண்டுக்கு அனுப்பப் பெறுகின்றது. மேற்பூத்தண்டு அடுத்து இச் செய்தியைத் தன்னாட்சி நரம்பு மண்டலத்தின் மூலம் ஒவ்வாமை இலக்குக்குரிய இழையத்திற்கு அனுப்புகின்றது. இந்த ஒவ்வாமை இலக்கு இழையங்கள் மனவெழுச்சிக்குரிய நோவு தரும் செய்தியை ஏற்க நேரிட்டால் அவை ஹிஸ்டாமினுக்கு எதிர்வினை புரிய நேரிடுகின்றன.

**குடி வழிக் கூறுகள் (Hereditory factors):** காச நோய், சளிக்காய்ச்சல், படை நோய், நிலைத்திருக்கின்ற ஒவ்வாமைத் தலைவலி, சிலவகை ஒவ்வாமைத் தலைவலிகள் சில குடும்பங் களில் வழிவழியாகத் தொடர்கின்றன. குடும்பத்தில் ஒருவரிடம் காச நோய் இருக்கலாம்; மற்றொருவரிடம் சளிக் காய்ச்சல் இருக்கலாம்; பிறிதொருவரிடம் படை நோய், சளிக்காய்ச்சல் இரண்டும் இருக்கலாம். மருத்துவர்கள் குடிவழியாக ஒவ்வாமை வளர்ச்சி இறங்கும் போக்கைக் கவனித்துள்ளனர். பெற்றோர்கள் இருவரிடம் ஒவ்வாமை காணப்பெறுமானால் ஒவ்வொரு குழந்தையிடமும் 75 விழுக்காடு ஒவ்வாமை வளர்ச்சி வாய்ப்பு இருக்கும். பெற்றோர்களில் ஒருவரிடம் மட்டிலும் ஒவ்வாமை இருக்குமானால் வாய்ப்பு 50 விழுக்காடு அல்லது அதற்குக் குறைவான வாய்ப்பு இருக்கும். குடிவழியாக ஒவ்வாமை இறங்கும் போக்கு தெளிவாகவும் திட்டமாகவும் கால்வழி இயல் விதிகளையொட்டியிருப்பதாகத் தெரியவில்லை. ஒவ்வாமை குடிவழியாக இறங்குகிறது என்று சொல்வதை விட குடும்ப வழியாக இறங்குகின்றது என்று சொல்வதே சரியானதாகும்.

**ஒவ்வாமையின் வாயில்:** மனவெழுச்சிக் கூறுகள், குடி வழிக் கூறுகள் இவற்றைத் தவிர வேறு பல கூறுகளும் ஒவ்வா மையை விளைவிக்கும் எதிர்வினைகளைத் தூண்டக் கூடும். ஒவ்வாமை நிலையையுடைய பெற்றோர்கள் எல்லோருமே ஒவ்வாமையின் வாயிலையுடையவர்கள்; இவர்கள் ஒவ்வாமை நோய்களைத் தடுக்கும் படித்தளத்தையும் உடையவர்கள். ஒரு குறிப்பிட்ட காலத்தில் நிலவும் பல்வேறு கூறுகளின் புறக்கணிக்கத் தக்க அல்லாத நிலையினையொட்டி ஒவ்வாமை நிலையின்

வாயில் மாறுகின்றது. எடுத்துக்காட்டாக மக்கள் பூப்பொடி அல்லது தூசுக்கு உட்படுத்தப்படும்போது அஃது அவர்களுடைய மனவெழுச்சி நிலை அல்லது நாள் நிலையின் மாற்றம் ஆகியவற்றைப் பொறுத்ததாகலாம். மேலும் அது அவர்கள் வேறு நோயுடன் உள்ளார்களா அல்லது அதிகக் களைப்புடன் உள்ளார்களா என்பதையும் பொறுத்ததாகலாம். இவற்றின் ஒன்று அல்லது பல கூறுகளைப் பெருகச் செய்யும் போது நோயாளியின் ஒவ்வாமையின் வாயிலைக் குறைத்து ஒவ்வாமையின் தாக்குதலுக்குக் காரணமாகலாம். மாறாக, இவற்றின் ஒன்று அல்லது பல கூறுகளைக் குறைக்கும்போது நோயாளியின் ஒவ்வாமையின் வாயிலை அதிகரிக்கச் செய்து ஒவ்வாமையின் தாக்குதலின் வாய்ப்பைக் குறைக்கலாம்.

ஒவ்வாமையை ஆய்ந்தறிந்து சிகிச்சை செய்யும் ஒவ்வாமை மருத்துவர் ஒருவர் தம்முடைய நோயாளியின் நிலைமைக்குக் காரணமாக இருக்கும் எல்லாவித காரணங்களையும் ஆழ்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும்; ஒவ்வாமைக்குச் சிகிச்சை செய்து ஒவ்வாமை என்ன என்பதை நிலை நிறுத்துவதற்கு ஏன் அதிகக் காலம் ஆகின்றது என்பதை இந்த முறை விளக்க உதவுகின்றது.

**நோயைக் கண்டறிவதும் சிகிச்சையும்:** ஒவ்வாமை நிலைக்கு முழுமையான பரிகாரம் ஒன்றும் இல்லை. மக்கள் ஒரு குறிப்பிட்ட ஒவ்வாமையை உண்டாக்கும் அறிகுறிகளினால் ஒவ்வாமைப் பொருள்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கலாம். ஆயினும் அவர்கள் அந்தப் பொருளுக்கு என்றுமே ஒவ்வாமையுடன்தான் இருப்பர். மாறாக ஒவ்வாமையைக் கட்டுப்படுத்துதலும் கூடும். அந்நோய் அடிக்கடி தோன்றும் விரைவையும் அது தாக்கும். கொடுமையையும் குறைக்கலாம்; சிக்கலான நிலைமைகளை தவிர்க்கலாம். பெரும்பான்மையான நோயாளர்களிடம் உ தோன்றும் அறிகுறிகளைக் கண்டவுடன் சிகிச்சையைத் தவறா தொடர்ந்து மேற் கொண்டால் அது நல்ல பலனைத் தருவதைக் காணலாம். சிகிச்சை செய்யப் பெறாத ஒவ்வாமை நன்மையை விடத் தீமையையே விளைவிக்கும்.

ஒவ்வாமை மருத்துவர் நோயாளியின் உடலைச் சோதித்து அறிகுறிகளை உறுதி செய்து நோயின் இருப்பைக் கண்டறி கின்றார். கவனமான கட்டுப்பாட்டுக்குள் அடங்கின சோதனை களை மேற் கொண்டு தொந்தரவை உண்டாக்கும் ஒவ்வாமைப் பொருள் இன்னதென்பதை இனம் காண்கின்றார். ஒவ்வாமை மருத்துவர் சாதாரணமாக ஒவ்வாமையாகவுள்ள பொருள் களைச் சிறிய அளவுகளில் தனித்தனியான பகுதிகளில் தோலின் அடியில் குத்திப் புகுத்துகின்றார். நோயாளிக்கு ஒவ்வாத பொருள்கள் குத்திப் புகுத்தின இடத்தில் தோல் சிவக்கவும் சற்று வீக்கம் விளைவிப்பதையும் காண்கின்றார். இந்த முறை நோயா ளிக்கு யாதொரு நலக் குறையையும் விளைவிப்பதில்லை; சிவந்த நிறமும் வீக்கமும் விரைவில் மறைகின்றன.

அடுத்து, ஒவ்வாமை மருத்துவர் தாம் மேற்கொண்ட ஒவ்வொரு தோல் சோதனையின் முடிவுகளை தம்முடைய நோயாளிகளின் உடல் சோதனையின் முடிவுகளுடனும் ஒப்பிடுகின்றார். தோல் சோதனைகள் திட்டமான விடைகளை எப்பொழுதுமே தருவதில்லை; ஆனால் அவை ஒவ்வாமைப் பொருள்களை இனங் கண்டறியத் துணை புரிகின்றன. குருதிச் சோதனைகளும் நோயாளியின் மூக்குச் சளியின் மாதிரிகளின் சோதனைகளும் நோயைக் கண்டறிவதில் துணை புரிகின்றன.

தோல்சோதனைகள் உணவு ஒவ்வாமையைக் கண்டறிவ தற்குப் பயன்படுவதில்லை. காரணம், உணவு ஏற்றுக் கொண்ட பின் செரிமானம் ஆகும் நிலையில்தான் அது ஒவ்வாமை எதிர் வினைகளை விளைவிக்கின்றது. இத்தகைய உணவு ஒவ்வா மையைக் கண்டறிவதற்கு ஒவ்வாமை மருத்துவர் தம் நோயாளி யைக் கட்டுப்பாடான உணவு முறைக்கு உட்படுத்துகின்றார். மருத்துவர் நோயாளியின் உணவினின்றும் சாதாரணமாக ஒவ்வாமை எதிர்வினைகளை விளைவிக்கும் எல்லா உணவுப் பொருள்களையும் நீக்குகின்றார். இந்த முறை அறிகுறிகளை நீக்கலாம். இது சரியாக அமைந்தால் நோயாளியின் உணவில் நீக்கிய உணவுப் பொருள்களை ஒவ்வொன்றாகச் சேர்க்கின்றார்.

இப்பொழுது உண்ணும் உணவுப் பொருளால் ஒவ்வாமை மீண்டும் திடீரென்று சிலிர்த்தெழுந்ததைக் கண்டால் அந்த நோயாளிக்கு அந்த உணவுப் பொருள் ஓரளவு ஒவ்வாதது என்பதை அறுதியிடுகின்றார்.

இவ்வாறு ஒவ்வாமை எதிர் வினையைத் திடீரென்று கிளப்பி விடும் உணவுப் பொருள் அல்லது உணவுப் பொருள்கள் இன்னவை என்று கண்டறிந்த பின்னர், நோயாளி அவற்றை இயன்ற அளவு தவிர்க்கின்றார். உணவுப் பொருள்கள் சாக்கோலெட் போன்ற தாக இருந்தாலும், அல்லது ஒரு குறிப்பிட்ட வகைப் பிராணியின் மயிராக இருந்தாலும் இது மிகவும் எளிது. ஆனால், ஒவ்வாமைப் பொருள் வீட்டுத்தூசி, அல்லது அமெரிக்கப் புல்பூண்டின் பூந்துகளாக இருப்பின் நோயாளிக்கு அது தவிர்க்க முடியாத நிலையில் ஒரு கடுஞ் சோதனைக் காலமாக இருக்கும்.

ஒவ்வாமைப் பொருள்கள் தவிர்க்க முடியாதவையாகி இருந்தால் ஒவ்வாமை மருத்துவர் சில மருந்து வகைகளைத் தந்து அந்த அறிகுறிகளைப் போக்க முயல்வார். இந்த மருந்துகளில் ஹிஸ்டாமினுக்கு எதிர்மருந்தாக இருப்பதைத் தரலாம்; மிகத் தீவிரமாக இருக்கும் நோயாளிக்கு ஸ்டெராய்டு (Steroid) போன்ற மருந்து வகைகளை நல்குவார்.

சிலவகை மூச்சுறுப்பு ஒவ்வாமை நோய்கட்கு (குறிப்பாக காசநோய், சளிக் காய்ச்சல், விடாமல் தொடரும் மூச்சுறுப்பு நோய்கள்), உயர் கூருணர்ச்சிப்பாடு (Hyposensitization) என்ற சிகிச்சை உதவியாக இருக்கும். இந்த உயர் கூருணர்ச்சிப்பாடு என்ற முறை ஒவ்வாமைப் பொருள் - நோய் எதிர்ப்பொருள் எதிர்வினைக்குச் சிறப்பான முறையில் இலக்காக்கப் பெறு கின்றது. ஒவ்வாமை மருத்துவர் முறை தவறாமல் மிக ஒழுங்காக மிகக் குறைவான முறையில் பூந்துகள் அல்லது பிற ஒவ்வாமைப் பொருளைக் குத்திப் புகுத்துகின்றார். பெரும்பாலான நோயா ளிகள் வாரத்திற்கு இரு முறை வீதம் சுமார் இரண்டு மாதங் கட்கும் அடுத்து வாரத்திற்கு ஒரு முறை வீதமும் குத்திப் புகுத்தலை ஏற்றுக் கொள்ளுகின்றனர். மருத்துவர் படிப்படியாக

ஒவ்வாமைப் பொருளின் அளவை அதிகரித்துக் கொண்டே 'பேணல் அளவு' (Maintenance doze) வரை சென்று நிறுத்து கின்றார். இவ்வாறு குத்திப் புகுத்தல்கள் உடல் நோய் எதிர்ப் பொருள்களை உற்பத்தி செய்யக் காரணமாகின்றன. இந்த நோய் எதிர்ப் பொருள்கள் 'தடுக்கும் நோய் எதிர்ப்புப் பொருள்கள்' (Blocking antibodies) என்று வழங்கப் பெறுகின்றன. இவை ஒவ்வாமைப் பொருளுடன் ஒன்று சேர்கின்றன. இவ்வாறு ஒன்று சேரும் செயல் சில ஒவ்வாமைப் பொருள்கள் விடுபடுவதில் போய் முடிகின்றது; இவை முறையாகவுள்ள ஒவ்வாமை நோய் எதிர்ப்பொருள்களுடன் எதிர் வினை புரிகின்றன.

எந்த நோயானாலும் அதனை இன்னதென்று உறுதிப் படுத்தி, அதன் தன்மை, தீவிரம் முதலியவற்றை ஆய்ந்தறிந்து சிகிச்சை முறைகளை மேற்கொள்ளுதல் இன்றியமையாதது. இதனைக் கருத்தில் கொண்டே வள்ளுவர் பெருமான்,

**நோய்நாடி நோயின் குணம்நாடி அதுதணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல்.** *(948)*

என்று கூறிப் போந்தார். இதனை மருத்துவர்களும் நோயாளர்களும் சிந்தையில் இருத்துதல் வேண்டும். இன்று நோயினை ஆராயும் மையங்கள் எம்மருங்கும் காணப் பெறுகின்றன. நோயினை உறுதிப்படுத்துவதற்கே ஏராளமான செலவுகள் நேரிடுகின்றன. பயன் ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். 1964-இல் என நினைக் கின்றேன். சென்னைப் பல்கலைக்கழகத்தில் அறபுத் துறையில் பெரும் புகழுடன் திகழ்ந்து, இடையில் இந்தோனேஷியா சென்று பெரும் பதவி வகித்து ஓய்வு பெற்றவர் என் அருமை நண்பர் டாக்டர் **முகம்மது உசேன் நயினார்.** அக்காலத்தில் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தராக இருந்தவர் பேராசிரியர் **எஸ். கோவிந்தராஜூலு நாயுடு** அவர்கள். அவர் விருப்பத்தின்படி டாக்டர் நயினார் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் அறபுப் பேராசிரியராகவும் (துறைத் தலைவ ராகவும்) பணி யாற்றினார். அவர் பசியின்மையால் துன்பப் பட்டார். உடல் நிலை சீர்கேடு அடைந்து கொண்டே வந்தது.

உடலை நன்கு சோதிப்பதற்காகச் சென்னைக்கு வந்து பல்வேறு சோதனைக்குட்பட்டு (சுமார் 750 வரை செலவு) உடலுக்கு ஒன்றுமில்லை என்று சோதனைகளால் உறுதிப்படுத்தப் பட்டு திருப்பதி திரும்பினார். ஆனால் உடல்நிலை சீர்கேடடைந்து கொண்டுதான் இருந்தது. திருப்பதிப் பல்கலைக்கழக உடல் நல மையத்தில் (Health Centre) பணியாற்றி வந்த டாக்டர் **வீரபத்திரய்யா** என்பவர் டாக்டர் நயினாரை ''மலம் எப்படிப் போகிறது?'' என்று வினவ, டாக்டர் நயினார் ''கீல்மாதிரி பாகு போல் போகிறது'' என்று பதிலிறுக்க, டாக்டர் வீரபத்திரய்யா **''கல்லீரல் புற்று''** என்று உறுதிப்படுத்தினார். டாக்டர் நயினாரும் சில நாட்களில் நபிகள் நாயகம் திருவடியைச் சேர்ந்து விட்டார். அதிகச் செலவுடன் செய்யப் பெற்ற சோதனை களால் நோயை உறுதிப்படுத்த முடியவில்லை. இத்தகைய ஆராய்ச்சி மையங்கள் தரும் முடிவுகளின் அடிப்படையில்தான் சிகிச்சைகள் மேற்கொள்ளப் பெறுகின்றன. முடிவுகள் நம்பத் தக்கவையாக இராவிடில் நோயாளர்களின் கதி என்ன? அது மருத்துவனாக வந்த மாமணிவண்ணனுக்குத் தான் வெளிச்சம்!

# 8. வரலாறு எழுதுவது எப்படி?*

ஒரு காலத்தில் வரலாறு என்றால் நாட்டு வரலாறு தான் என்ற கருத்து இருந்து வந்தது மக்களின் நினைவோட்டத்தில். இந்தக் கருத்து தவறு என்ற நிலை இன்று ஏற்பட்டுள்ளது. வரலாறு என்பதில்,

1. தன் - வரலாறு
2. வாழ்க்கை வரலாறு
3. மொழி வரலாறு
4. இலக்கிய வரலாறு
5. அறிவியல் வரலாறு
6. நாட்டு வரலாறு

என்பனவும் பிற துறைகளின் வரலாறுகளும் அடங்கும் என்பது இக்காலக் கருத்து. ஆகவே வரலாறு என்பதில் இத்தனையும் அடங்கும். இன்னும் பலவும் சேரும். இவையனைத்தும் அடங்கிய தொகுதியே வரலாறு ஆகும். எனவே இவை னைத்தும் எழுதுவது எப்படி என்பது பற்றிச் சிந்திப்போம்.

## 1. தன் வரலாறு

இது ஒருவர் தம் வரலாற்றையே எழுதுவதாகும். நேருவின் ,தன் - வரலாறு (Auto-biography) ஒரு புகழ்பெற்ற நூல். காந்தியடிகளின் 'சத்திய சோதனை' (My Experiment with Truth) யும் தன் வரலாற்று நூலே. டாக்டர் உ.வே. சாமிநாதய்யரின் 'என் சரித்திரம்' என்ற நூலும் புகழ் பெற்ற ஒரு தன் - வரலாற்று நூல் என்பதை நாம் அறிவோம். மேனாடுகளில் தன் - வரலாற்று நூல்கள் பெருகி வருவதுபோல் நம் நாட்டில் பெருகவில்லை.

* சென்னை பழகியப்ப சகோதரர்கள் பதிப்பகம் வெளியிட்ட கட்டுரைத் தொகுப்பிற்குத் தந்தது.

எத்தனையோ சூழ்நிலைகளால் புகழ்பெற்ற பெரியோர்கள் தம் வரலாற்றை எழுத அவர்கட்கு 'இடம் பொருள் ஏவல்' சரிப்பட்டு வருவதில்லை. எடுத்துக் காட்டாக 'தென்னாட்டுக் காந்தி' எனப் புகழ்பெற்ற இராஜாஜி அவர்களே தம் வரலாற்றை எழுத வில்லையென்றால் மற்றவர்களைப் பற்றிச் சொல்வானேன்?

**'தன் - வரலாறு'** எழுதுவோர் தம் வாழ்க்கையில் நேரிட்ட முக்கிய நிகழ்ச்சிகள், தாம் பொது வாழ்வில் சந்திக்க நேர்ந்த பிரச்சினைகள், அவற்றில் தாம் அடைந்த வெற்றி தோல்விகள், அவற்றைத் தீர்க்க நேரிடுங்கால் தாம் அறியாது - ஆராயாது - மேற்கொண்ட முறைகள், அதனால் தமக்கு ஏற்பட்ட தோல்வி கள், தம் வாழ்வில் தனிப்பட்ட முறையில் தாம் செய்த நற்பணி கள் - இன்னோரன்ன செய்திகள் இடம் பெறுதல் வேண்டும். அவை சுவைப் படவும் சொல்லப் பெறுதல் வேண்டும். தாம் இழைத்த தவறுகளும் அவற்றைத் திருத்திக் கொண்ட முறை களும் வருங்கால் மக்கட்குப் பயன்படுமானால் அவற்றையும் தன் - வரலாற்று நூலில் இடம் பெறச் செய்யலாம். டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்களின் **'என் சரித்திரம்'** இலக்கிய ஆசிரியர்கள் இலக்கியப் பற்றாளர்கட்கே யன்றி மற்றவர்கட்கும் பயன்படக் கூடியது. இங்ஙனமே பொது வாழ்வில் பங்கு கொள்பவர்கட்கு நேருவின் **'சுய சரிதை'**யும் காந்தியடிகளின் **'சத்திய சோதனை'**யும் வழிகாட்டிகளாக அமையலாம். டாக்டர் உ.வே. சாமிநாதய்யர் அவர்களின் **'நான் கண்டதும் கேட்டதும்' 'பழையதும் புதியதும்'** என்பன போன்ற சிறு நூல்களில் காணப்பெறும் நிகழ்ச்சிகள் தன் - வரலாற்று நூலில் இடம் பெற்றால் நூல் சிறப்புறும் எ.டு. **"டிங்கினானே"** என்ற நிகழ்ச்சி. ஓலைச் சுவடிகளைத் தேடுவதும் அவற்றைச் சோதித்து வெளியிடுவதுமான பணியே தன் வாழ்க்கைப் பணியாகக் கொண்டவர்கள் டாக்டர் உ.வே.சா. அவர்கள் என்பதை நாம் அறிவோம். அத்தகைய சுவடிகளைத் தேடிச் சென்ற பயண மொன்றில் முதலில் கேட்டதும் பின்னர் கண்டதுமாகும் இந்நிகழ்ச்சி.

ஓரிரவு அய்யர்வாள் தங்கியிருந்த இடத்தின் அருகிலுள்ள மைதான மொன்றின் பக்கமாக,

**'டிங்கினானே'**
**'டிங்கினானே'**
**..........**

என்ற ஒலிகள் கேட்ட வண்ணம் இருந்தன. அத்துடன் சதங்கை யொலிகளும் தாள ஒலிகளும், பறையொலிகளும், ஒருவர் குதித்துக் குதித்து ஆடும் ஒலிகளும் கலந்து வந்தன. அய்யர் அவர்கட்கு இச்சொற்றொடரின் பொருள் விளங்க வில்லை. ஒலிகள் வந்த பக்கமாகத் தம் காதினைத் திருப்பிக் கொண்டு மிக உன்னிப்பாகக் கேட்கத் தொடங்கினார். பின்னர்,

**'மரத்தைப் பி'**
**'மரத்தைப் பி'**
**...........**

என்ற ஒலிகள் கேட்டன. தொடர்ந்து,

**'வீமன் மரத்தைப்பி'**
**'வீமன் மரத்தைப்பி'**

என்ற ஒலிகள் வந்தன. இறுதியாக,

**'வீமன் மரத்தைப்பி**
**டிங்கினானே'**

என்ற ஒலி கேட்டது. தொடர்ந்து மக்களின் மகிழ்ச்சி ஆரவார மும் கேட்டது. பின்னர், தம் விடுப்பூக்கம் தூண்ட, நேரில் ஒலி கேட்ட இடத்திற்கே வந்தார்கள் அய்யர்வாள். அந்த இடத்தில் பாரதத்தில் **'பகாசூரன் வதம்'** என்ற கதை நடைபெற்றுக் கொண்டிருந்தது. நிகழ்ச்சியை நடத்துவோர் நாட்டுப்புற மக்களின் சுவைக் கேற்பக் கதையை நடத்திக் கொண்டிருந்ததைக் கண்டார்கள். இத்தகைய சிறு நிகழ்ச்சிகள் கூட தன் - வரலாற்றில் இடம் பெறலாம். படிப்பதற்குச் சுவையாக இருக்கின்றதல்லவா?

## 2. வாழ்க்கை வரலாறு

ஒரு பெரியாரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி இன்னொரு புகழ் பெற்ற எழுத்தாளர் எழுதுவது. இது ஆங்கில மேதையான டாக்டர் **ஜான்சனைப்** பற்றி அவருடன் நெருங்கிப் பழகிய அணுக்கத் தொண்டராக இருந்த **பாஸ் வெல்** எழுதிய வாழ்க்கை வரலாற்று நூல் உலகப்புகழ் பெற்றது. தமிழ் மொழி யிலும் இத்தகைய வாழ்க்கை வரலாற்று நூல் சில எழுந்துள்ளன. அவை பெரும் பாலும் மன நிறைவு தருவனவாக இல்லை. டாக்டர் **உ.வே.சாமி நாதய்யர்** அவர்கள் எழுதியுள்ள '**திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்**' (இரண்டு பாகங்கள்) என்னும் நூல் நன் முறையில் அமைந்த **வாழ்க்கை வரலாறு** என்று கருதலாம்.

மகா வித்துவான் அவர்கள் ஒரு பெருங் கவிஞர். 'இம்மென்னும் முன்னே எழுநூறும் எண்ணூறும், அம் என்றால் ஆயிரம் பாட்டு' பாடும் காள மேகத்தைப்பற்றி நாம் அறிவோம். இங்ஙனம் அவரே தம் பெருமையை அதிமதுரகவியிடம் சொல்லிக் கொண்டது. அவர் பாடியவற்றை விடப் பன்மடங்கு - ஏன் நூறு மடங்கிற்கு மேல் - பாடி வந்த பிள்ளை யவர்கள் பல தல புராணங்களின் ஆசிரியர். **வல்லூர் தேவராச பிள்ளை யின்** பெயரால் வெளிவந்திருக்கும் குசேலோபாக்கியானத்தின் ஆசிரியரும் இவரே. அக் காலத்தில் புலவர்கள் தம்மை ஆதரித்த வள்ளல்களின் பெயரால் நூலியற்றுவது மரபாக இருந்து வந்தது. பிள்ளையவர்களின் சொல்வளத்தை, அவர் தம் நண்பர் **இராமசாமி அய்யர்** பாடியுள்ள,

**'எனைவைத்தி, எனைவைத்தி' யெனப்பதங்கள்**
**இடையிடைநின் றிரந்து வேண்ட**
**'இனிவைப்பாம், இனிவைப்பாம், பொறுத் திடுமின்!**
**பொறுத்திடுமின்!' என்று கூறி**
**நினைவுற்ற ஒருகடிகைக் களவில்கவித்**
**தொடைதொடுத்து நிமலர் பூணப்**
**புனைவுற்ற மீனாட்சி சுந்தரவள்**
**ளலைப்போல்வார் புவியில் யாரே.**

என்ற பாடலில் கண்டு மகிழலாம். இந்தப் பாடல் பிள்ளையவர் களின் வாழ்க்கை வரலாற்றை ஏற்ற இடத்தில் சேர்க்கப் பெற் றுள்ளது. இந்தச் சரித்திரத்தில் பல சுவையான நிகழ்ச்சிகளைக் கண்டு மகிழலாம். 'தக்கார் தகவிலர்' என்ற குறளில் முதலடியி லுள்ள 'தக்கார்' என்ற சொல்லுக்கு இரண்டாவது அடியிலுள்ள 'எச்சத்தால்' என்ற சொல் சரியான எதுகையாகவில்லை என்று 'மக்களால்' என்று திருத்திய பாதிரியார் ஒருவரைக் காண்பதே பாவம் என்று வித்துவான் தியாகராசச் செட்டியார் கதவடைத்துக் கொண்ட நிகழ்ச்சி போன்ற நிகழ்ச்சிகளைச் சேர்க்கலாம்.

இன்னொரு சுவையான நிகழ்ச்சி. வித்துவான் தியாகராசச் செட்டியார் கும்பகோணம் கல்லூரியில் பணியாற்றிய பொழுது அவ்வூர் வக்கீல் ஒருவர் பள்ளி மாணாக்கர்கட்கு பயன்படும் முறையில் ஓர் இலக்கண நூல் எழுதினார். அக்காலத்தில் மிகு புகழ் வாய்ந்த தியாகராசச் செட்டியார் அவர்களிடம் ஒரு பாராட்டுரை பெற்றுவிட்டால் அரசு தம் நூலை எளிதில் அங்கீ கரித்து விடும். நூலும் நன்கு விற்பனையாகும் என்று கேள்வி யுற்று செட்டியாரவர்களை அணுகி நூலின் படியொன்றினைத் தந்து பாராட்டுரை வழங்குமாறு வேண்டினார். அதில் அன்மொழித்தொகை' யை விளக்குவதற்காக வந்த,

**தேன்மொழி வந்தாள்**
**பொற்றொடி பாடினாள்**

என்பன போன்ற எடுத்துக்காட்டுகளில் இடச்சுருக்கம் கருதி 'வந்தாள்', 'பாடினாள்' என்ற வினைச் சொற்கள் நீக்கப் பெற்று இருப்பதைக் கண்டு வெகுண்டார். "தேன் + மொழி, பொன் + தொடி என்ற சொற்கள் சேர்ந்ததால் பெற்ற ஆற்றல் - அதாவது பெண்ணை உணர்த்தும் பொருளாற்றல் - அவற்றினருகிலுள்ள வினைச் சொல்லால் தானே அன்மொழித் தொகையாகி பெண்ணை உணர்த்துகின்றன. தேன்மொழி, பொற்றொடி என்ற சொற்கள் தனியாக நிற்கும் போது 'இனிமையான மொழி', 'பொன்னாலாகிய வளையல்' என்ற பொருளை மட்டிலுமே தரும். உயிர் போன்ற வினையை நீக்கி விட்டீர்களே. நீங்கள்

ஏன் எங்கள் வழிக்கு வருகிறீர்கள்? நீதிமன்ற வழக்குகளைக் கவனித்துப் பாரும்'' என்று சொல்லிப் பாராட்டுரை' அளிப்ப தற்கு மறுத்து விட்டதாக ஒரு நிகழ்ச்சியைப் பிள்ளையவர்களின் வாழ்க்கை வரலாற்றில் அய்யரவர்கள் குறிப்பிடுகின்றார்கள். இவை போன்ற சுவையான நிகழ்ச்சிகளையும் வாழ்க்கை வரலாற்றாசிரியர்கள் தம் தம் நூலில் சேர்க்கலாம்.

## 3. மொழி வரலாறு

தமிழ் மொழி மிகப் பண்பட்ட மொழி; இலக்கிய வளமும் இலக்கணச் சிறப்பும் உடையது. வரலாற்றுக்கு எட்டாத காலம் முதல் ஆங்கில அரசு அமைந்த நாள்வரையில் இந் நாட்டின் ஆட்சி மொழியாக விளங்கி வந்தது. அதனால் நுட்பமான சொற் பொருள் முறையும் தெளிவான சொற்றொடர் அமைப்பும் உடையதாக வளர்ச்சி பெற்றது. பொதுவாக மேலை நாட்டு அறிஞர்கள் மொழியின் வரலாற்றைப்பற்றித் தம் நூல்களில் ஆங்காங்கே குறித்துள்ளனர். அம்முறையில் பரிதிமாற் கலைஞர் **வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார்** தமிழில் ஒரு நல்ல நூல் எழுதி 'தமிழ் மொழி வரலாறு' என வெளியிட்டார். அண்மைக் காலத்தில் **டாக்டர் மு. வரதராசனார்** 'மொழி வரலாறு' என்றதோர் அரிய நூலை நமக்குக் கிடைக்கச் செய்தார். சில பல ஆண்டுகளாக மொழியியல் (Linguistics) என்ற துறை விரைந்து வளர்ச்சி பெற்று வருகின்றது.

இந்தச் சூழ்நிலையில் அண்மைக் காலத்துப் புதிய கருத்து களை அறிவியல் அடிப்படையில் அமைத்து 'மொழி வரலாறு' எழுதப்பெறல் வேண்டும். இந்த வரலாற்று நூலில் பண்டிருந்து மொழிகள் வளர்ந்த கதை, பேச்சு மொழியும் எழுத்து மொழி யும், சிறந்த சமூகக் கருவி, ஒருபொருட் கிளவிகள், ஒலித் திரிபு, இலக்கிய மொழியின் செல்வாக்கு, வழக்கிறந்த மொழி, கிளை மொழிகள், மொழி நிலைகள், மொழியினங்கள், திராவிட மொழியினம், தமிழின் தொன்மைச் சிறப்பு, எதிர் காலத்தில் தமிழின் நிலை - இன்னோரன்ன கருத்துகள் அதில் இடம்

பெறுதல் வேண்டும். இதற்கு யெஸ்பர்சன், வெண்ட்ரியே போன்ற அறிஞர்களின் நூல்கள் துணை புரியும். நுண்ணிய கருத்துக்கள் சுவைபடப் பொருத்தமாக எடுத்துக்காட்டுகளுடன் விளக்கம் பெற்றால் நூல் சிறக்கும். மொழி வரலாற்றை விளக்கும் போக்கில் தமிழ் மொழியின் வரலாறு பின்னிப் பிணைந்து வருமாறு நூல் அமைதல் வேண்டும். இந்த மொழி வரலாற்றில் அடியிற் கண்ட செய்திகள் இடம் பெறுதல் வேண்டும்.

**சொற்களின் அமைப்பு:** தமிழ் மொழியின் சொற்கள் அடிச் சொற்களோடு மற்ற உறுப்புகள் சேர்ந்து ஒட்டி அமையும் சொற்கள் (Agglutinative), ஆகும். ஆகவே சொற்களின் அமைப்பு தெளிவாகத் தோன்றும். மிகப்பழைய இலக்கியங் களில் உள்ள சொற்களும் அவ்வாறு அமைந்தவை. அவற்றின் அடிச் சொற்களும் இக்காலத்துச் சொற்களின் அடிச் சொற்களும் ஒரே வகையானவை. (எ.டு) உணா (Food) என்பது பழைய சொல். ஊண், உண்டி என்பன இடைக்காலச் சொற்கள். உணவு என்பது இக்காலச் சொல். இவற்றின் அடிச்சொல் உண் என்பது. இது, இந்த மூன்றிலும் தெளிவாகத் தெரிகின்றது. விகுதி முதலியன மட்டிலுமே வேறுபடும். ஆகவே சில முறைபடித்த பிறகு, பழங்காலத்துச் செய்யுளும் பழகிய தமிழாகவே உணரப் படுகின்றது. அதனால்தான் இக்காலத்து மக்களும் ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பழைய செய்யுட்களையும் படித்து உணர முடிகின்றது. அதனாலேயே இலக்கிய வளர்ச்சியில் இடையறாத தொடர்பு இருந்து வருகின்றது.

**வாக்கிய அமைப்பு:** தமிழின் வாக்கிய அமைப்பும் (Syntax) மிகப் பழங்காலம் முதல் இன்று வரை ஏறக்குறைய ஒரே தன்மையாக இருந்து வருகின்றது. சொற்களின் வடிவங்கள் ஒவ்வொரு திராவிட மொழியிலும் ஒவ்வொரு வகையாக மாறிய போதிலும் வாக்கிய அமைப்பு மட்டிலும் மாறாமல் ஒரே வகையாக இருந்து வருகின்றது. இந்தோ ஐரோப்பிய இனம் என்று குறிக்கப்படும் வட இந்திய மொழிகளும் இவ் வகையில்

மட்டும் திராவிட மொழியினத்தோடு உறவு உள்ளவை என்று சொல்லலாம். பழந்திராவிட மொழிகளைப் பேசி வந்த மக்கள் கையாண்ட அதே வகையான வாக்கிய அமைப்பையே இன்றைய வட இந்திய மொழிகளிலும் காணலாம். மொழியின் மேற்பகுதிகள் எவ்வளவு மாறினாலும் அடிப்படையான வாக்கிய அமைப்பு மட்டும் மாறாமல் இருந்துவரும் என்ற உண்மையே இதற்குக் காரணம். ஆகவே வட இந்திய மொழி களின் வாக்கிய அமைப்பு சமஸ்கிருதம், கிரேக்கம், இலத்தீன் ஜெர்மன் முதலியவற்றின் வாக்கிய அமைப்போடு ஒத்திருக்க வில்லை. தமிழ் முதலான திராவிட மொழிகளின் வாக்கிய அமைப்போடு ஒத்திருக்கின்றது. இந்த ஒற்றுமை தென்னிந்திய மொழிகளின் நான்கையும் ஆராயும் போது மேலும் தெளிவாகப் புலனாகின்றது. இந்தப் பழங்கால வாக்கிய அமைப்பே பண்டைய தமிழ் இலக்கியம் முதல் இன்றைய சிறுகதை வரையிலும் ஒரே தன்மையாக இருப்பதும் மொழியின் தொடர்ந்த வளர்ச்சியினூடே காணத்தக்க உண்மையாகும்.

**போலி முயற்சி:** இன்று இந்தியாவில் பேச்சு வழக்கில் உள்ள மொழிகளில் தமிழ் மிகப் பழங்காலத்திலேயே பண்பட்ட மொழி. வடமொழி இலக்கிய வளர்ச்சி பெற்ற காலத்திலேயே தமிழும் இலக்கிய வளர்ச்சி பெற்று விளங்கியது. மற்ற மொழிகள் எல்லாம் அதற்குப் பிறகு சில பல நூற்றாண்டுகள் கழித்தே இலக்கியம் பெறத் தொடங்கின. அதனால் தமிழின் வளர்ச்சி பழமை உடையது. தவிர, தமிழின் பழைய இலக்கியம் தமிழகத்தின் நாட்டுப் பாடல்களிலிருந்து மலர்ந்த பாடல்கள். அந்தப் பாடல்களின் செய்யுள் வடிவமும் வேறு எந்த மொழியி லிருந்தும் கடன் வாங்கப்பட்டவை அல்ல. அவை மக்க ளிடையே வழங்கி வந்த நாட்டுப் பாடல்களிலிருந்து வடித்து அமைக்கப்பட்ட வடிவங்களே. அப்படிப்பட்ட பழமையும் தனிமையும் உடைய வளர்ச்சி தமிழ் இலக்கியத்திற்கு இருப்பதைப் பிற்கால வடமொழி அறிஞர்கள் மறந்து விட்டனர். பிற இந்திய மொழிகள் வடமொழியிலிருந்து கடன் பெற்று வளர்ந்தமை போலவே, தமிழும் வளர்ந்தது என்று தவறாகக்

கருதிவிட்டனர். அதனால் தமிழுக்குத் தர வேண்டிய உரிமை யான சிறப்பைத் தர மறுத்தனர். அது வடமொழிக்கே ஆதி முதல் கடன்பட்டது என்ற எண்ணத்தோடு தாழ்வாக நோக்கத் தொடங் கினர். எ.டு. **'இலக்கணக் கொத்து'** என்னும் நூலை வரைந்த **சுவாமிநாத தேசிகர்** என்னும் வட மொழி அறிஞர் இதை நிறுவுவதற்கு மேற்கொண்ட போலி முயற்சியே இதற்குச் சான்றாக அமைகின்றது.

**தனித்தமிழ் இயக்கம்:** தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழி களில் கலந்தமை போல் தமிழிலும் வடமொழிச் சொற்களையும் எழுத்துகளையும் மிகுதியாகக் கலக்கும் முயற்சி ஒன்று பல நூற்றாண்டுகட்கு முன்பே தோன்றியது. இது மணிப்பிரவாள நடையாகும். வடமொழி படித்த அறிஞர்களும் வைணவ அறிஞர்களும் இந்நடையை மிகுதியாகக் கையாண்டனர். கிரந்த எழுத்தை உண்டாக்கி அதனை மிகுதியாகப் பயன்படுத்தினர். இயல்பாகவே இலக்கிய வளம் பெற்றுச் சொல்வளம் நிரம்பிப் பண்பட்ட தமிழ் மொழியில் அந்த முயற்சி வெற்றிபெற வில்லை. இந்தப் போலி முயற்சியை **வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், மறைமலையடிகள், திரு.வி. கல்யாண சுந்தர முதலியார்** முதலான புலவர்கள் தோன்றி தமிழுக்கு உள்ள இலக்கிய வளத்தை எடுத்துக்காட்டின பிறகே இந்தப் போலி முயற்சி அடங்கியது. இந்த மொழி வரலாற்றில் வட மொழியும் தமிழும் சிவபெருமானின் இரு கண்கள் என்று கருதி வந்த பண்டையோர் கருத்தும் இடம் பெறலாம். ஒரு காலத்தில் மனிதன் தன் பெரும்படையோடு தேவனை எதிர்த்தான் என்றும், அதனால் தேவன் சினந்து அவர்கள் ஒற்றுமையைக் குலைக்க ஒருவர் பேசுவது மற்றவருக்கு விளங்காத பல மொழிகள் பேசுமாறு சாபம் போட்டார் என்றும், இதனால்தான் உலகில் பல மொழிகள் நின்று நிலவுகின்றன என்றும் விவிலியத்தில் ஒரு குறிப்பு உண்டு. இத்தகைய குறிப்பும் இந்த மொழி வரலாற்று நூலில் இடம் பெற்றால் நூல் சுவையுடன் அமையும். எந்தத் துறையாயினும் மூடப் பழக்கம் மனிதனின் உடன்பிறந்த சொத்தாக உள்ளது என்ற உண்மையும் தெளிவாகப் புலனாகும்.

## 4. இலக்கிய வரலாறு

பேச்சு வழக்கிலுள்ள இந்திய மொழிகளில் தமிழ் மிகப் பழமையானது; மிகப் பழைய இலக்கியச் செல்வத்தையும் கொண்டது. ஈராயிரம் ஆண்டுகட்கு மேலாகத் தொடர்ச்சியான இலக்கிய வளர்ச்சியை இம் மொழியில் காணலாம். தமிழ் இலக்கிய வரலாற்றை அமைக்கும்போது சங்க இலக்கியம், நீதி நூல் இலக்கியம், இரட்டைக் காப்பியங்கள், பக்தி 'இலக்கியங்கள், பலவகை சிற்றிலக்கியங்கள், காப்பியங்கள், சமய நூல்கள், மணிப் பிரவாள இலக்கியங்கள், சதகம் முதலியன இஸ்லாம் கிறித்தவம் தந்த இலக்கியங்கள், வெளி நாட்டார் தந்த இலக்கியங்கள், நாடகம், கட்டுரை, சிறுகதை, புதின இலக்கியங்கள், இக்காலப் பாட்டிலக்கியம், புதிய பாணியில் எழுந்து பறந்து வரும் புதுக்கவிதை போன்ற இலக்கிய வளர்ச்சி முறைகள் ஆகியவை இந்த வரலாற்றில் இடம் பெறுதல் வேண்டும். இந்த வரலாற்று ஆசிரியர் விருப்பு வெறுப்பின்றி, சமயக் காழ்ப்பின்றி, பொது நோக்கில் ஆராய்ச்சிப் பாணியில் நூலை அமைக்க வேண்டும். உரைநடை இலக்கியம் காலந்தோறும், வளர்ந்த வரலாற்றை ஆங்காங்குச் சுட்டிக் காட்ட வேண்டும்.

இந்த வரலாற்றை இவ்வாறு அமைக்கலாம்:

**பழங்காலம்:** இதில் சங்க இலக்கியம் கி.மு. 500 முதல் கி.பி. 200 வரையில் உள்ள அகம்புறம் பற்றிய பாடல்கள். நீதி இலக்கியம் கி.பி 100 முதல் கி.பி. 500 வரையில் எழுந்த திருக்குறள் முதலிய நீதி நூல்கள் கார் நாற்பது முதலிய வெண்பா நூல்கள். பழைய காப்பியங்கள் - இப்பகுப்பில் சிலப்பதிகாரம் மணிமேகலை முத் தொள்ளாயிரம் முதலியன இடம் பெறலாம்.

**இடைக்காலம்:** பக்தி இலக்கியம் கி.பி. 600 முதல் 8C வரையில் நாயன்மார், ஆழ்வார் பாடல்கள் கலம்பகம் முதலிய பலவகை நூல்கள் காப்பிய இலக்கியம், கி.பி. 900 முதல் 1200 வரையில், சீவக சிந்தாமணி, பெருங்கதை முதலிய சமண பௌத்த நூல்கள், இறையனார் களவியல் முதலிய இலக்கண

நூல்கள் சேக்கிழார் கம்பர் ஒட்டக்கூத்தர் ஔவையார் முதலியவர் களின் படைப்புகள் உலா பரணி தூது பிள்ளைத் தமிழ் இலக்கி யங்கள் இடம் பெறலாம். உரை நூல்கள்: கி.பி. 1200 முதல் 1500 வரையில் இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் சேனாவரையர், தெய்வச் சிலையார் முதலியோரின் படைப்புகள் இப் பகுதியில் இடம் பெறலாம். வைணவ விளக்க நூல்கள், சைவ சித்தாந்த சாத்திர நூல்கள், சிறு நூல்கள், தனிப் பாடல்கள், இவையும் இப்பகுதியில் அடங்கும். புராண இலக்கியம்: கி.பி. 1500 முதல் 1800 வரையில் புராணங்கள், தல புராணங்கள், இஸ்லாமிய இலக்கியம், கிறித்தவர் தமிழ்த்தொண்டு - வீரமாமுனிவர் முதலானவர்கள் - உரை நடை வளர்ச்சி.

**இக்காலம்:** 19-ஆம் நூற்றாண்டு கிறித்தவ இலக்கியம், இராமலிங்கரின் ஆறு திருமுறைகள், வேத நாயகர் முதலிய வர்கள். புதினம், சிறுகதை, கட்டுரை வளர்ச்சி இவைகாட்டப் பெறலாம். 20-ஆம் நூற்றாண்டு. பாரதி, கல்கி, பாரதிதாசன், புதுமைப்பித்தன் - சிறுகதை, புதினம் நாடகம் வாழ்க்கை வரலாறு, தன் - வரலாறு கட்டுரை, ஆராய்ச்சி பயண இலக்கி யங்கள் முதலியவை இப்பகுதியில் இடம் பெறலாம். பொது விருப்பார்வமான அறிவியல் நூல்கள். பெ. அப்புசாமி, ஈத இராஜேசுவரி அம்மையார் ஆர்.கே. விசுவநாதன், பேராசிரியர் சவரிமுத்து, பேராசிரியர் டாக்டர் ந. சுப்புரெட்டியார் முதலா னோரின் பங்கு இதில் அமையலாம்.

## 5. அறிவியல் வரலாறு

இயற்பியல், வேதியியல், புவியியல், நிலக் கூற்றியல், தாவர இயல், விலங்கியல், வானியல், வான இயல், விண்வெளி இயல், அணுவியல் இயல் போன்ற அறிவியல் துறைகளின் வரலாறுகள் தனித் தனியாக எழுதப் பெற வேண்டிய இன்றியமையாமை இருப்பினும் பொதுவாக அறிவியல் வரலாறு (History of Science) மிக மிக இன்றியமையாதது. மூட நம்பிக்கையிலிருந்து தோன்றி இன்றைய பகுத்தறிவு இயக்கம்

வரை வளர்ந்த வரலாறு இங்கு எடுத்துக்காட்டப் பெறுதல் வேண்டும். கருதுகோள் நிலை (Hypothesis) யிலிருந்து சோதனை வரையில் அது வளர்ந்த கதை காட்டப் பெறுதல் வேண்டும். எடுத்துக்காட்டாக இதில் (1) பூமியைச் சுற்றி ஏனைய கோள்கள் சுற்றி வருவதாகக் கருதப்பெற்ற உண்மை கோபர்னீகஸ் காலத்தில் கதிரவனைப் பிறகோள்கள் சுற்றி வருவதாகக் காட்டி மாற்றப் பெற்ற உண்மையானது இடம் பெறலாம். (2) ஒரு காலத்தில் மேல் நாட்டில் குதிரைக்கு எத்தனை பற்கள் இருக்கும் என்ற ஐயம் அறிஞரிடையே எழுந்த தாகும். அவர்கள் யாவரும் நூலகம் முழுவதும் அது பற்றி நுவலும் நூல்களைத் தேடித் தங்கள் மண்டையை உடைத்துக் கொண்டார்களாம். சாதாரண அறிவுடைய ஒருவர் இப்படிச் சான்றுகள் தேடி அலைவதை விட ஒரு குதிரையைப் பிடித்து நேரிலேயே பற்களைக் கணக்கிட்டு விடலாம் என்றாராம். அக்காலத்தில் மாதாக் கோயிலின் ஆதிக்கத்தில் மக்கள் அடக்கப் பட்டிருந்தமையால் அங்ஙனம் கூறியவர் கிறித்துவ மறைக்கு எதிராகச் சிந்தனை செய்கின்றார் (Free thinker) என்று கருதி அவருக்குத் தண்டனை விதிக்கப் பெற்றதாம். இத்தகைய சூழ்நிலையிலிருந்துதான் அறிவியல் வரலாறு எழுந்தது என்று சுவையாகச் சுட்டப் பெறலாம். இந்த வரலாற்றில் உண்மை களைக் காண அறிவியலறிஞர்கள் மேற் கொண்ட பல்வேறு சோதனைகளையும் இந்த ஆய்வுப் பாதை களில் அவர்கள் பட்ட துன்பங்கள், தொல்லைகள், இடர்ப் பாடுகள் ஆகியவற்றை யெல்லாம் சுவையாகச் சுட்டியுரைக்கலாம்.

## 6. நாட்டு வரலாறு

ஒரு நாட்டு வரலாற்றை அறிந்து கொள்வதற்கு அந்நாட்டில் கிடைக்கும் கல்வெட்டுகள், செப்பேடுகள், கோயில்கள், அங்கு க் காணப்பெறும் சிற்பங்கள், நாணயங்கள் இலக்கியங்கள் ஆகியன வ மூலங்களாக அமைகின்றன. இவற்றுள் காணக்கிடக்கும் ஒரு சில குறிப்புகளைக் கொண்டே வரலாற்று ஆசிரியர்கள் வரலாற்று நூலை வரைவர். ஒரு வரலாற்று நூலால் அக்கால மக்கள்

வாழ்க்கை, நாகரிகம், பண்பாடு, வாணிகம் முதலிய பல்வேறு செய்திகள் அறிந்து கொள்வனவாக அமைதல் வேண்டும். ஒரு மூலத்தால் பெறப்படும் செய்தி இன்னொரு வகை மூலத்தால் அறியப் பெறும் செய்தியுடன் ஒப்பிட்டுக் காட்டி இரண்டிலும் ஒற்றுமை இருந்தால் அதனை ஒப்புக்கொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக இராஜராஜ சோழன் மகன் இராசேந்திரன் வடநாட்டு அரசர்களை வென்ற போது கங்கைக் கரையில் களிறுகட்கு நீரூட்டினான்; பர்மா நாட்டைச் சார்ந்த கடாரத்தை வென்றான். இச் செய்திகளைக் கலிங்கத்துப் பரணி,

**களிறு கங்கைநீர் உண்ண மண்ணையிற்**
**காய்சி னத்தொடே கலவு செம்பியக்**
**குளிறு தெண்டிரைக் குரைக டாரமும்**
**கொண்டு மண்டலம் குடையுள் வைத்ததும்.**[1]

என்ற தாழிசை குறிக்கின்றது. இந் நிகழ்ச்சிகளை மூவருலாவும் முறையறிந்து போற்றுகின்றது.[2] வில்லிபாரதமும் குறிப்பிடுகின்றது.[3] பேய்களைக் குறிப்பிடுங்கால் சயங்கொண்டாரே இப்போரை மீண்டும் கூறுகின்றார். அக்காலத்தில் பர்மா நாட்டைச் சங்கிராம விசயத் துங்கவர்மன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனை வென்று அந்நாட்டைக் கைப்பற்றிக் கொண்டான் கங்கை கொண்ட சோழன். அந்தப் போர்க் களத்தில் பெருகியோடிய குருதி வெள்ளத்தில் அளவுக்கு மீறி விளையாடினமையாலும் நீந்தினமையாலும் சில பேய்களின் முதுகுகள் வளைந்து கூனாகின்றன. இச்செய்தி,

**பரக்கு மோதக்க டாரம ழித்தநாள்**
**பாய்ந்த செம்புன லாடியு நீந்தியுங்**
**குரக்கு வாதம்பி டித்தவி தத்தினிற்**
**குடிய டங்களும் கூன்முது கானவும்**[4]

1. தாழிசை - 202
2. விக்கி: உலா 33-36, குலோத். உலா 49-50 இராச. உலா 43-44
3. வில்லிபாரதம் - கன்னபர்வம் - 66
4. தாழிசை - 151

என்ற தாழிசையால் அறியப் பெறுகின்றது. இதில் 'குருதி வெள்ளம்', 'பேய்கள்' அதில் நீந்துதல், அதனால் அவற்றிற்குக் குரக்கு வாதம் வருதல் என்பதெல்லாம் சுவைக்காகக் கவிஞர் மேற்கொண்ட கற்பனை. கடாரம் அழித்தது மட்டிலும் வரலாற்றுச் செய்தி. வரலாற்று ஆசிரியன் கற்பனைகளைக் கழித்து செய்திகளை மட்டிலுமே கொள்ள வேண்டும்.

இராசேந்திரன் தன் ஆட்சிக் காலத்தில் எத்தனையோ போர்கள் நிகழ்த்தி வெற்றி பெற்றிருந்த போதிலும் இவன் கங்கையும் கடாரமும் கொண்டமை தான் அக்காலத்தில் மக்கள் மனத்தையும் புலவர்கள் உள்ளத்தையும் ஒருங்கே பிணித்துள்ளன. இதனால் இந்த வெற்றிச் சிறப்பினைச் சயங்கொண்டார் தம் நூலிலும், ஒட்டக் கூத்தர் தம் மூன்று உலாக்களிலும் போற்றிப் புகழ் வாராயினர். மேலும் இவ்வருஞ் செயல்கள் பற்றியே இராசேந்திரனுக்குக் 'கங்கை கொண்ட சோழன்', 'கடாரங் கொண்டான்' என்னும் விருதுகளும் வழங்கினவாகக் கல்வெட்டுகள் உறுதிப்படுத்துகின்றன. திருப்பதியில் 'கங்கை கொண்டான் மண்டபம்' என்ற ஒரு மண்டபமும் உண்டு. அதில் உற்சவ காலங்களில் பெருமாள் வந்து தங்குவார்.

கல்வெட்டுகளில் 'மெய்க்கீர்த்திப் பகுதி' என்பது முற் பகுதி. அதில் அக்காலத்து ஆண்ட அரசன் பட்டத்திற்கு வந்த ஆண்டு முதல் அவனது வெற்றிச் சிறப்புகளும், வீரச் சிறப்புகளும் குறிப்பது வழக்கம். சில சமயம் 'அரசியல் செல்வாக்கினால்' பொய்யான நிகழ்ச்சிகளும் ஏறிவிடுவதுமுண்டு. 'மெய்க்கீர்த்தி' பொய்க் கீர்த்தியாவதுமே உண்டு. வரலாற்று ஆசிரியன் இவற்றில் வரும் செய்திகளைப் புடைத்தெடுக்க வேண்டும். கடாரத்தில் குலோத்துங்க சோழன் போர் புரிந்த செய்தி இவனது மெய்க் கீர்த்திகளில் குறிக்கப் பெறாததால், இவளது ஆட்சிக் காலத்தில் இது நிகழவில்லை என்றும், இவனது முன்னோரும் இவனைப் போலவே பேராண்மை படைத்தவரென்பதை விளக்க

இங்கே கங்கை கொண்ட சோழன் வரலாற்றை ஆசிரியர் கூறியுள்ளார் என்றும் கருதுதல் வேண்டும்.[5]

வரலாற்று ஆசிரியன் தனக்கு முன்னர் எழுதப்பெற்றுள்ள பிற வரலாற்று நூல்களையும் படித்து அவற்றிலுள்ள செய்திகளைத் தான் கூறும் செய்திகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து முரண் இருப்பின் அதனை அறுத்தெறிதல் வேண்டும். இங்குக் குலோத்துங்கனும் சயங்கொண்டாரும் சமகாலத்தினர்; சயங்கொண்டார் குலோத்துங்கனின் அவைக்களப் புலவர். ஆகவே செய்திகளில் உண்மை இருக்கும் என்று நம்பலாம். முகத்துதிக்காகச் சேர்க்கப் பெற்ற சில புனைவுகளும் இருக்கலாம். வரலாற்று ஆசிரியன் இதனைத் துருவி ஆராய வேண்டும்.

'விடுதலைப் போரில் தமிழகம்' என்ற தலைப்பில் வெளி வந்திருக்கும். சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி.யின் நூல் ஓர் அருமையான படைப்பு. இந்திய விடுதலைப்போரில் மாநில மட்டத்தில் தானே நேராகப் பங்கு கொண்டவராதலால் தவறான செய்திகள் நூலில் இடம் பெறுவதற்கு இடமே இல்லை. விடுதலையும் தமிழும் டாக்டர் ம.பொ.சி யின் குருதியில் ஓடுகின்றன என்பதை எவரும் மறுத்தற்கில்லை. இதனால் இந் நூலில் குறிப்பிடப்பெற்றுள்ள நிகழ்ச்சிகள் யாவும் நம்பக மானவை. (Reliable) என்று சொல்லலாம். பல செய்திகளின் மறுப்பும், மறுப்புக்கு மறுப்புமாக உண்மையைக் கடைந்தெடுக்க அரும்பாடுபட்டுள்ளார் எண்பதாண்டை எட்டும் நிலையிலுள்ள இளைஞர்! ஒரு பல்கலைக்கழகமோ அல்லது ஒரு வரலாற்றாசிரியர்களின் குழுவோ செய்ய வேண்டிய ஒரு பெரும் பணியை 'ஓரேர் உழவனாக' நின்று ஆற்றியுள்ளார். ஈன்ற பொழுதில்

---

5. குலோத்துங்க சோழன் இளம்பருவத்தில் தன்பாட்டி வீட்டில் வளர்ந்தபோது தன் தாய் மாமன் வீரராசேந்திரன் ஆட்சியில் நிகழ்ந்த கடாரப் போரில் இவனும் கலந்து கொண்டு அங்குச் சென்று போர் புரிந்திருத்தல் வேண்டும் என்று கருதுகின்றார் T.V. சதாசிவ பண்டாரத்தார் (பிற்காலச் சோழர் சரித்திரம் - பகுதி III - பக்.5. (அடிக்குறிப்பு)

பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாயைப் போலவே, அச்சில் வெளியானவுடன் ஏற்பட்ட மகிழ்ச்சியைவிட பல அறிஞர்களின் பாராட்டுதலைப் பெறுங்கால் உண்மையில் பெருமிதம் கொள்வார் என்பது உறுதி. வரலாற்று நூலுக்கு இது சிறந்ததோர் எடுத்துக்காட்டு. இப்படித்தான் வரலாறு சுவையாக எழுதப்பெறுதல் வேண்டும் என்பதற்கு இஃது ஒரு வழிகாட்டியாகத் திகழும் என்பதற்கு ஐயமில்லை.

சவகர்லால் நேருவின் '**நான் கண்ட இந்தியா**' (Discovery of India) என்ற நூலும் இத்தகையதே. அஃது இந்திய மட்டத்தில் எழுதப்பெற்றது. தென்னகத்தின் செய்திகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காட்டப் பெற்றுள்ளன. வரலாற்று ஆசிரியர்கள் தாம் சொல்வனவற்றைச் சுவையாகச் சொல்ல வேண்டும். அவற்றில் உண்மையும் இருக்க வேண்டும். சுவை கருதி கற்பனைக்கோ இட்டுக் கட்டுதலுக்கோ புனைந்துரைக்கோ எவ்வாற்றானும் இடந்தருதல் கூடாது. '**நான்கண்ட இந்தியாவும்**' வரலாற்றாசிரியர்கட்கு எடுத்துக்காட்டாகத் திகழும் நூலாகும்.

ஒரு காலத்தில் நாட்டை ஆண்ட அரசர் பரம்பரைகளை எழுதுவதே நாட்டு வரலாறு என்ற மரபு இருந்து வந்தது. முடியாட்சி நிலவின காலத்தில் உலகெங்கும் இந்த முறை தான் கையாளப் பெற்று வந்தது. முடியாட்சி ஒழிந்து குடியாட்சி ஏற்பட்ட பிறகு இம்முறை கை விடப் பெற்று ஆட்சிமுறை, மக்களின் வாழ்க்கை நிலை, கல்வி நிலை, சமய நிலை, தொழில் வளர்ச்சி, வாணிக முறை, பண்பாட்டு வளர்ச்சி இவையெல்லாம் அடங்கியிருக்குமாறு எழுதுவதே உண்மையான நாட்டு வரலாறு என்று கருதப் பெறுகின்றது. இம் முறைதான் இன்று மேற்கொள்ளப் பெறுகின்றது. இதுவே நேரிய, சீரிய முறையுமாகும்.

மேற்கூறிய முறையில் பல்வேறு வரலாறுகள் எழுதப் பெறுதல் வேண்டும். நம்பகமான செய்திகள் சுவையாக எழுதப் பெறும் முறையே வரலாறு எழுதுவதன் உயிர் நாடியாகும்.

# 9. திருக்குறள் - வாழ்வுச் செல்வம்*

பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ? பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ?

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கும் வாழ்க்கைக் கூறுகள். இந்த நான்கிற்கு மேல் ஐந்தாவதாக ஓர் உறுதிப் பொருள் ஒன்று இருப்பதாக உலகில் எவரும் கூறிற்றிலர். வாழ்வின் இயற்கைகளை வடித்தெடுத்த நூற் பொருள்க ளெல்லாம் இவற்றையே மையமாக வைத்து சுற்றிச் சுற்றி வருகின்றன. ஆகவேதான் 'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே' (நன்னூல்) என்று பவணந்தி முனிவரும் துணிந்து அறுதியிட்டுக் கூறினார்.

திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந் தவர் என்றும் காலம் மாறினும் உண்மைகள் மாறுவதில்லை யாதலின், அவர் கூறிய வாழ்க்கை உண்மைகள் இன்றளவும் போற்றிக் கடைப்பிடிப்பனவாக உள்ளன. இவை எல்லா மக்களுக்கும் பயன்படுவனவாய், ஆட்சிக்குரிய சட்ட நூல்களை விடச் செல்வாக்கு உடையனவாய் மக்களின் உள்ளங்களையே கோயில்களாகக் கொண்டு வாழ்வனவாய் இருத்தலின் பகவத் கீதை, கிறித்தவர் மறையான விவிலியம், இஸ்லாமியர் மறை யான குர்-ஆன் முதலியன போல திருக்குறளும் தமிழ் மறை யாய்ச் சாதி சமயம் நிறம் நாடு முதலிய வேறுபாடு கருதாது எல்லார்க்கும் பயன்படும் வாழ்வின் வழிகாட்டியாய்த் திகழ் கின்றது. திருக்குறளை மூளை கொண்டு கற்காமல் இதயம் கொண்டு ஓதி உணர வேண்டும். திருவள்ளுவர் பல்துறை அறிஞர்; சிந்தனைச் செல்வர். இதனை அவர் நூலின் வழி உணர லாம். சிலவற்றை எடுத்துக்காட்டி விளக்குதல் இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

* உலகத் திருக்குறள் மாநாட்டு மலர் (ஆகஸ்டு - 1962)

அறிவியல்: திருவள்ளுவர் ஒரு சிறந்த அறிவியலறிஞராகக் காணப்படுகின்றார். நிலையாமையை வற்புறுத்திக் கூறும் திருக்குறளில் இவ்வுண்மை புலனாகின்றது. காலம் என்பது ஓர் அருவப் பொருள்; கண்ணுக்குப் புலனாகும் ஆகாயத்தைப் போல் கண்ணுக்குப் புலனாகாத ஒரு திரவியம். இதனைக் கூறு படுத்த முடியாது. ஆனால் ஆதித்தன், பூமி, சந்திரன் முதலிய வான மண்டலக் கோள்களால் கூறுபட்டதாகக் கொள்ளப்பட்டு நாள், மாதம், ஆண்டு என்ற அளவுகள் கணக்கிடப்படுகின்றன. பரிமேலழகரும் 'காலம் என்னும் அருவப் பொருள் உலகியல் நிகழ்தற் பொருட்டு ஆதித்தன் முதலாகிய அளவைகளால் கூறுபட்டதாக வழங்கப்படுலாவது தானாக கூறுபடாமையின்' என்பார். இனி, குறளைக் காண்போம்.

**நாளென ஒன்றுபோல் காட்டி உயிர்ஈரும்**
**வாளது உணர்வாற் பெரின்** *(334)*

என்பது. இதில் 'நாள்' என்பான் கருத்தை விளக்க மேற் கண்டவாறு கூறினார்.

இன்றைய அறிவியலறிஞர்கள் பூமி சூரியனை ஒரு முறை சுற்றி வரும் காலத்தை 360 நாட்கள் 6 மணி 9 நிமிடம் 9.54 விநாடி என்று குறிப்பிடுகின்றனர். இதனையே நாம் ஆண்டு என்கின்றோம். பூமியும் தன் அச்சில் ஒருமுறை சுழன்று வரும் காலத்தை 23 மணி 56 நிமிடம் 4.1 விநாடி என்று குறிப்பிடு கின்றனர். இதனையே நாம் நாள் என வழங்குகின்றோம். பூமியைச் சந்திரன் ஒரு முறை சுற்றிவரும் காலத்தை 29 நாட்கள், 44 நிமிடம், 2.8 விநாடி எனக் குறிப்பிடுகின்றனர். இதனை நாம் மாதம் என்கின்றோம். மேலும் நாளை வைகறை, விடியல், நண்பகல், மாலை, யாமம், எற்பாடு என்று ஆறு கூறிட்டு சிறுபொழுது என்றும் இங்ஙனமே ஆண்டை கார் (ஆவணி, புரட்டாசி), கூதிர் (ஐப்பசி, கார்த்திகை), முன்பனி (மார்கழி, தை), பின்பனி (மாசி, பங்குனி), இளவேனில் (சித்திரை, வைகாசி), முதுவேனில் (ஆனி, ஆடி) என்று ஆறு கூறிட்டு பெரும் பொழுது என்றும் வழங்குவர். இன்னும் பகல், இரவு

என்ற காலத்தை 60 நாழிகை என்றும் கணக்கிடுவர். மணிப் பொறி கண்டறிந்த பின்னர் நிமிடம் விநாடி என்ற கீழ்க் கணக்கு களும் எழுந்தன. இதுவரையில் அறிவியலுக்கு உட்பட்ட கணக் கீடுகள்.

இதற்கு மேல் மெய்ப் பொருள் அறிஞர்கள் குறிப்பிடும் கணக்கையும் காண்போம். இவர்கள் காலதத்துவத்தை சாற்று வதையும் காண்போம். ''நிமிடம் பதினைந்து கொண்டது காஷ்டை; காஷ்டை முப்பது கொண்டது கலை; கலை முப்பது கொண்டது முகூர்த்தம்; முகூர்த்தம் முப்பது கொண்டது நாள்; நாள் முப்பது கொண்டது மாதம்; மாதம் இரண்டு கொணடது இருது; இருது மூன்று கொண்டது அயனம்; அயனம் இரண்டு கொண்டது ஆண்டு... பரார்த்தம்'' இப்படி மனித ஆண்டு 360 கொண்டது ஒரு தேவ ஆண்டு. தேவ ஆண்டு 12,000 கொண்டது ஒரு சதுர்யுகம். 71 சதுர்யுகம் கொண்டது ஒரு மந்வந்தரம். 14 மந்வந்தரம் கொண்டது 1000 சதுர் யுகம். இது நான்முகனுக்கு ஒரு பகல்; 2000 சதுர்யுகம். நான்முகனுக்கு ஒருநாள். இந்த நாட்களால் மாதம் வருடங்களைப் பெருக்கி அந்த வருடங்கள் 100 ஆனால் நான்முகன் ஆயுள் முடியும். இதற்குப் பரம் என்று பெயர்.

இங்ஙனம் பல்வேறு வடிவினவாகத் தோன்றக் கடவதாய், ஆதி அந்தம் அற்றதாய், இறைவனுடைய உலகப் படைப்பு, அளிப்பு, அழிப்பு ஆகிய விளையாட்டுக் கருவியாய் இறைவ னுடைய சரீரமாக அமைந்து (சரீர - சரீரி - பாவனை) இருக்கும் கால தத்துவம். இவ்வாறு காலத்தின் கூறுகளைப் பராசர பகவான் விஷ்ணு புராணத்தில் பேசுவர். ஆதியும் அந்தமும் இல்லாத இக் காலநியமத்திற்கு உட்பட்டே இக்கர்ம லோகத்தி லுள்ள மாறுபாடுகள் எல்லாம் எம்பெருமான் சங்கற்பத்தினால் நடைபெறுகின்றன. காலம் நித்திய விபூதியில் (பரமபதத்தில்) நித்தியம்; இந்த லீலா விபூதியில் (இவ்வுலகில்) அநித்தியம். அதாவது பரம பதத்தில் காலம் நடையாடாது. இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்ற நிலைகள் அங்கு இல்லை; ஆகவே நித்தியம்.

ஆனால் முன், பின் என்ற அளவிற்கு வேறுபாடு உண்டு. ஆயினும் அதன் சம்பந்தம் இன்றி அனைத்தும் இறைவனது சங்கற்பத்தால் மட்டும் நடைபெறுகின்றனவாகும். இந்த உலகில் இஃது அநித்தியமாதலால், இறப்பு நிகழ்வு எதிர்வு என்ற பேச்சு உண்டு. இந்தக் காலத் தத்துவம் இறைவனது படைப்பின் பரிணாமங்கட்குக் காரணமாய் இருப்பது.

**வேளாண்மை:** இன்று தொலைக்காட்சியில், 'வயலும் வாழ்வும்' நிகழ்ச்சியில் 'பண்ணைச் செய்தி' என்ற பகுதியில் வேளாண்மை பற்றிய பல நவீன முறைகள் கூறப் பெறுகின்றன. கற்றறிந்த வேளாண்மை அறிஞர்கள் கல்வி அதிகம் பெறாத உழவர்கட்கு விதைப் பாதுகாப்பு, விதைக்கப் பெறுவதற்கு முன் விதைகளில் மருந்து கலக்க வேண்டிய முறைகள், நவீன முறையில் நிலத்தை உழுதல் போன்ற பல செய்திகள் பகரப் பெறுகின்றன. அநுபவம் மிக்க பெரிய பண்ணைக்காரர்கள் தம் அநுபவத்தை எடுத்துக் கூறுகின்றனர். வயலின் மண் பண்டுத்தல் பற்றிய செய்தியை,

**தொடிப்பொழுதி கஃகா உணக்கின் பிடித்தெருவும்**
**வேண்டாது சாலப் படும்** *(1037)*

என்ற குறளில் தெரிவிக்கின்றார். ஆனால் மாடுகளைக் கொண்டு உழும் சாதாரண கலப்பையினால் கீழ்மண்ணை மேல் மண்ணாகப் புரட்டிப் போட முடிவதில்லை. இயந்திரக் கலப்பை யினால்தான் இதனைச் செய்ய முடியும். ஈரமாக இருக்கும் அடி மண் நன்றாகக் காய்வதால் ஒரு பலம் புழுதி கால் பலமாக ஆகிற வரைக்கும் காயும். அவ்வாறு காயவிட்டால் ஒரு பிடி எருவும் இல்லாமல் பயிர் நன்றாகச் செழித்து வளரும்; விளையும். 'அகல உழுவதிலும் ஆழ உழுதல் நன்று' என்ற பொன்மொழியும் இதனால்தான் எழுந்தது. இன்னும் ஏர் உழுவதைவிட எரு இடுதல் நல்லது (1038) என்றும், களை யிட்ட பிறகு நீர் பாய்ச்சி விதையிட காவல் காத்தல் நல்லது என்றும் கூறுவார். பண்ணையார் அடிக்கடி நிலத்திற்குச் சென்று நிலத்தைப் பார்வையிடாவிடில் நிலம் கவனிக்கப் பெற வேண்டிய செயல்களில் குந்தகம் விளையும்.

**செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து**
**இல்லாளின் ஊடி விடும்** *(1039)*

என்று காத்தலை - மேற்பார்வை இடுதலை - விளக்குவார் ஆசிரியர். உழவன் அல்லது பண்ணையார் நாள்தோறும் சென்று நிலத்தைப் பார்த்து வேண்டியவற்றைச் செய்யாவிடில் அவனுடைய மனைவியைப் போல நிலமகளும் வெறுத்து ஊடி விடுவாள்; எதிர் பார்த்த பயன் கிடைக்காமற் போகும். நிலம் உழைக்க உழைக்கப் பயன்தரவல்லது. வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவாரைப் போல, நிலத்தை வைத்துக் கொண்டு நாம் வறுமையுற்று வருந்துகின்றோம் என்று எண்ணித் தொழில் செய்யாமல் இருப்பவனைக் கண்டால் நிலமகள் தன்னுள்ளே நகுவாள் என்கின்றார் ஆசிரியர்.

**இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலம்என்னும் நல்லாள் நகும்** *(1040)*

என்ற குறளில் இதனைக் காணலாம்.

மருத்துவம்: வள்ளுவர் ஒரு மருத்துவக் கலை நிபுணர். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற பொன் மொழியைப் பொன்னேபோல் போற்றுபவர். போற்றுவதற்குரிய வழியும் நமக்குக் காட்டுபவர். வந்த பின் காப்பதைவிட வரு முன் காப்பதே சிறந்தது என்பதை நமக்குத் தம் அநுபவத்தால் காட்டுவார். 'மருந்து' என்ற அதிகாரத்தில் 'மருந்தென வேண்டா வாம் யாக்கைக்கு' (942) என்று ஒரு புரட்சிகரமான கருத்தை வெளியிடுகின்றார். அழுக்காறு, அவா, வெகுளி போன்ற மன நோய்கட்கு பல்வேறு வகையாக மருந்து கூறிய இப்பெருமான் உடலுக்கு வரும் நோய் பற்றிய விவரங்களையும் அவற்றைப் போக்கும் கழுவாய்களையும் அநுபவத்தால் விளக்குவார்.

உடலுக்கு வரும் நோய் பெரும்பாலும் வறுமையாலும் செல்வச் செழிப்பாலும், ஒழுக்க நெறியில் தவறுவதாலும், அறியாமையாலும் வருபவை. செல்வரும் நல்கூர்ந்தாரும் அறியாமையால்தான் தம் உடல் நிலையைக் கெடுத்துக் கொள்

கின்றனர். இருவரையும் கெடுப்பது குடிப்பழக்கம். வறியவர் நாட்டுச் சரக்கை நாட, செல்வர் சீமைச் சரக்கை நாடுகின்றனர். கொள்கை இல்லாத அரசு மதுவிலக்குக் கொள்கையைத் தேர்தலையொட்டி சமயோசிதம் போல் விளையாட்டுப் பொரு ளாக்கி விடுகின்றது. ஆளும்கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் திருக்குறளைக் காட்டி மக்களை ஏய்க்கின்றனர். என்ன செய்வது? எல்லாம் பொது மக்களின் தலையெழுத்து.

வறுமையைப் போல் பொல்லாதது ஒன்றும் இல்லை. இதனை வள்ளுவப் பெருமான்,

**இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது** *(1041)*

என்று கூறுவார். வறுமையைப் போல் பொல்லாதது வறுமையே தவிர வேறொன்றும் இல்லை என்கின்றார். அதனை ‘இன்மை என ஒருபாவி’ (1042) என்று மனக் குமுறலுடன் கூறுவார். இந்தப் பாவி ஒருவனைப் பற்றினால் அவனுடைய இம்மை வாழ்வும் கெடும்; மறுமை வாழ்வும் கெட்டொழியும். இரண்டை யும் கெடுக்கும் வகையில் வறுமை வந்து சேர்கின்றது. வறுமை என்ற துன்பம் ஒன்று வந்தால் போதும். அதனுள் பலவகைத் துன்பங்களும் குவியும் (1045). இந்த வறுமையில் வயிறார உண்ண முடியாது; அரை வயிற்றுக் கஞ்சிக்கு ஆலாய்ப் பறக்க வேண்டும். பணக்காரராய் இருந்தால் கண்டவற்றைத் தின்று செரிமானத்தைக் கெடுத்துக் கொள்வர். இந்த இருவகையின ரையும் நினைத்துதான் வள்ளுவர் பெருமான் ‘‘மிகினும் குறையினும் நோய் செயும்’’ (941) என்றார் போலும்! ‘அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு’ என்பது ஒரு முதுமொழி. இதனையே வள்ளுவர்,

**அற்றால் அளவறிந்து உண்க; அஃதுடம்பு**
**பெற்றான் நெடிதுய்க்கு மாறு** *(943).*

என்பார். நாற்பது அகவையைத் தாண்டியவர்கள் அரைவயிறு உணவு, அரை வயிறு தண்ணீர் என்ற அளவுடன் உண்பது

சிறப்பு. முன் உண்ட உணவு அற்ற பிறகு உண்ண வேண்டியதை இன்ன அளவு வேண்டும் என்று அறுதியிட்டு உண்பதையே கடமையாகக் கொள்வதே உடம்பை நெடுங்காலம் காத்துச் செல்லும் வழியாகும்.

'பசித்துப் புசி' என்பது உடல் நலத்திற்கு உகந்த முதுமொழி. அறிவு பூர்வமாகக் கடைப்பிடிக்க வேண்டிய வழி. பகுத்தறிவும் எண்ணும் ஆற்றலும் வளர்ந்த பிறகு புலன்களின் இயற்கை ஆற்றல் குன்றிவிட்டது. சுவைக்கு ஆட்பட்டு கண்டதைத் தின்ன நாக்கு துடிக்கின்றது. உடலுக்கு ஏலாத பொருள்களையெல்லாம் அது தின்ன விரும்புகின்றது. உடல் நலத்திற்கு நாக்கு நம்பத்தகாததாகி விட்டது. உணவு முறையிலும் 'நாவடக்கம்' வேண்டும். பசிக்காமல் உண்ணலாகாது.

**அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல**
**துய்க்க துவறப் பசித்து** *(944)*

என்பது வள்ளுவர் காட்டும் வழி. மாறுபாடு இல்லாத உணவை அளவுடன் உண்டால் உயிர்க்கு ஊறுபாடு இல்லை (945).

நம்பத் தகாத நாக்கு எதனைத் தள்ளினாலும் வயிறு மறுக்காமல் அதனை ஏற்கின்றது. உடலுக்கு ஏலாத உணவை வாந்தியால் வெளிப்படுத்தி விடுகின்றது; சீரணிக்காமல் 'கழிச்சலாக' வயிற்றோட்டமாக - வெளிப்படுத்தி விடுகின்றது. திணிப்பையும் வற்புறுத்தலையும மேலும் நாக்கு மேற் கொள்ளுமானால் வயிறு மறுக்கும் நிலை கடந்து மானமுள்ளவர் போல் தானே கெட்டழிகின்றது. இந்த நிலையை மனம் அறிந்து 'வாந்தியும் கழிச்சலும்' உடல் நலத்தைக் காக்கும் 'சிவப்பு விளக்கு எச்சரிக்கை' எனத் தெரிந்து நாவை அடக்கி ஆள வேண்டும்.

**தீயளவு அன்றித் தெரியான் பெரிதுண்ணின்**
**நோய்அள வின்றிப் படும்.** *(947)*

பசித் தீ தான் உடல் நலத்தைக் காக்கும் அளவுகோல். அதனை மீறி உண்டால் நோயை வெற்றிலை பாக்கு வைத்து அழைப்பது போலாகும்.

**மெய்ப்பொருள்:** கால தத்துவத்தை 'நிலையாமை' என்ற பொருளை விளக்கப் பயன்படுத்துகின்றார் வள்ளுவப் பெருமான். 'நாள்' என்பதை வாழ்நாளை அறுக்கும் - அதுவும் பிறந்த நாள் தொட்டு இறக்கும் வரை இடைவிடாது அறுக்கும் - வாள் என்கின்றார் அப்பெருமான். இக்காலத்துவம் ஆளுக்கு ஆள் மனநிலைக்கு ஏற்ப நேரத்திற்கு நேரம் ஒருவித மயக்கத் தையும் தரும். எடுத்துக்காட்டாகத் திருப்பதிக்குத் திருத்தலப் பயணமாகச் செல்லும் ஒருவர் குழந்தைகளுடனும் குடும்பத் துடனும் அதிக மூட்டை முடிச்சுகளுடனும் சென்னை மத்திய இருப்பூர்தி நிலையத்துக்கு பகல் 1.00 மணிக்கு வந்து விடுகிறார். இருப்பூர்தி புறப்படும் நேரம் பகல் 2.20 அந்த வண்டி பகல் 2.00 மணிக்குத் திருப்பதியிலிருந்து வந்து 2.20க்குத் திரும்ப வேண்டியது. அன்று வண்டியும் ஏதோ காரணத்தால் 2.20 வரை வந்து சேரவில்லை. பயணிக்கு வண்டியில் ஏறும் வரைக் காலம் போவது மிக ''மெதுவாகத்'' தோன்றுகின்றது. போகட்டும். அவரே மற்றொரு நாள் குடும்பத்துடனும் குழந்தையுடனும் பகல் 2.10க்கு நிலையத்திற்கு வந்து சேர முடிகின்றது. வண்டி புறப்படும் நேரம் 2.20 மணி. வண்டியில் ஏறும் வரை பத்து நிமிட நேரம் மிக வேகமாகப் போவதாக உணர்கின்றார். ''இக் காலத்தை (நாள்) வாள் என்று உணர மாட்டாதார்'' நமக்குப் பொழுது போகா நின்றது என்று 'நாளாய் மயக்கலின்' 'காட்டி' என்று கூறுவர் ஆசிரியர். (334-இன் உரை) என்று விளக்குவர் பரிமேலழகர். இந்தக் கால வேகத்தை

> **நாச்சென்று வாக்குள்மேல் வாராமுன் நல்வினை**
> **மேற்சென்று செய்யப் படும்** *(335)*

என்ற குறளில் விளக்குவர் வள்ளுவப் பெருந்தகை.

**அரசியல்:** வள்ளுவப் பெருமான் பொருட்பாலில் கூறும் அரசியல் கருத்துகளாகப் பொது மக்களின் நன்மையைக் கருதி ஆளுதல், ஒற்றுமையை வளர்த்தல், பகையை ஒடுக்குதல், பசியும் பிணியும் நாட்டில் பரவாதபடி காத்தல், நீர்வளம், நிலவளம், தொழில்வளம் முதலியவற்றைப் பெருக்குதல்,

எல்லோருக்கும் ஒத்த உரிமை வழங்கி நடுநிலைமை தவறாமல் முறை செய்தல் முதலிய அடிப்படைகள் முடியாட்சிக்கும் வேண்டியவை; குடியாட்சிக்கும் வேண்டியவை. முடியாட்சிக் காலத்தில் வாழ்ந்த வள்ளுவப் பெருமான் மக்களின் நல் வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு பொருட்பாலை எழுதிய தால் இன்றும் அவை செல்லத் தக்கவையாக உள்ளன. இனி, எதிர்காலத்திலும் - ஏன்? என்றென்றும் - போற்றத்தக்க வாய்மொழிகளாகவும் திகழும்.

அரசியல் தலைவன் எல்லாக் கடைமைகளையும் தானே செய்ய முடியாது. தனக்குத் துணையாகப் பலரைத் தேர்ந்து எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் தக்கவர்கவரா அல்லரா என்று ஆராய்ந்து அறிதல் வேண்டும்; தெரிந்து தெளிதல் வேண்டும். வள்ளுவர் எவ்வாறு தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது பற்றிக் கூறுவார். ஒருவனை ஆராயும் போது, அறிய வேண்டியவை யாவை? அறத்தில் உறுதியான நம்பிக்கை, பொருள்வகையில் அவன் நாணயம் உடைமை, பொருள் நசையால் அறத்தைப் புறக்கணித்து வாழ்தல், தகாத வழியில் வரும் பொருளில் விருப்பம், இன்பத்தில் மூழ்கி கடமைகளை மறத்தல், இன்பத்திற்காகப் பிறர்க்கு அடிமையாதல், தன் உயிருக்காக அஞ்சி நெருக்கடியில் கை விடுதல், உயிருக்காக அஞ்சாமல் உதவி செய்யும் பண்பு, ஒருவனுடைய உயிர் வாழ்க்கைக்காக பிறர்க்கு இன்மை விழையாமை முதலிய பண்புகள் அவனிடம் உள்ளனவா என்பதை அறம், பொருள், இன்பம், உயிரச்சம் ஆகிய நான்கு வகையாலும் ஆராய்ந்த பிறகே அவன் தக்கவன் என்பதைத் தெளிந்து அவனைத் துணையாகக் கொள்ள வேண்டும் (501). இப்படி ஆராயுங்கால்,

**குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்**
**மிகைநாடி மிக்க கொளஸ் (504)**

என்ற முறையையும் தெரிவிக்கின்றார்.

அறத்துப் பாலில் இல்லறத்தார், துறவறத்தார் மேற்கொள்ள வேண்டிய முறைகளை விளக்குகின்றார். காமத்துப் பாலில் குறிக்கோள் தலைவன் - தலைவியர் வாழ்க்கை முறைகளை விளக்குகின்றார். இவை இலக்கிய இன்பம் போல் படித்து மகிழ வேண்டியவை.

ஆகவே, ஓதற்கெளிதாய் உணர்தற்கரிய விழுப்பொருளாய் இருக்கும் திருக்குறளை ஆழ்ந்து கற்க வேண்டும்; நுட்பங்களை உணர்ந்து தெளிய வேண்டும். இப்படித் தெளியும்போது அறத்தினை உணர விழைவார்க்கு ஒரு பேரற நூலாகக் காட்சியளிக்கும். அரசியலை அறிய விரும்புவார்க்கு ஓர் அரசியல் கையேடாக உதவும். ஞானத்தை விரும்புவார்க்கு ஒரு ஞானப் பெட்டகமாக ஒளிரும். கவிதைச் சுவையை விரும்புவார்க்குக் காவியக் கற்கண்டாக இனிக்கும். அகப்பொருள் சுவையை துய்க்க விழைவார்க்கு ஓர் அக இலக்கியக் கருவூலமாக அமையும். பேரின்பம் விழைவார்க்கு ஒரு பேரின்பக் களஞ்சியமாகப் பொலிவுறும். வாழ்க்கை நெறியறிய விரும்புவார்க்கு வாழ்க்கை வழி காட்டியாக நின்று நிலை பெறும். இந்நூலை ஆழ்ந்து பயில்வோர் பெரும் புலமையும் நுட்பமும் பெற்றுத் திகழ்வார். ஒவ்வொரு குறள் மணியை உள்ளுந்தொறும் உள்ளுந்தொறும் உள்ளத்தை உருக்கும். இதனால்தான்,

**எல்லாப் பொருளும் இதன்பால் உளஇன்பால்**
**இல்லாத எப்பொருளும் இல்லை.**

என்று சொல்லிப் போந்தார் மதுரைத் தமிழ் நக்கனார் என்ற சங்கப் புலவர். நாமும் இந்த நூலை வாழ்வுச் செல்வமாகக் கருதுகின்றோம்; படித்துப் பயன் பெறவும் முனைகின்றோம்.

# 10. காமராசர் பற்றிய நினைவுகள்*

தமிழகத்து அரசியல் வானில் இரண்டு படிக்காத மேதைகள். ஒருவர் ஓ.பி. இராமசாமி ரெட்டியார். ஓராண்டு காலமே இவர்தம் ஆட்சி. அதில் 'இராம ராஜ்யத்தைக்' கண்டோம். அயோத்தி இராமன் கம்பன் கருத்துப்படி ஒரு நாள் கூட ஆட்சி புரியவில்லை; ஆதலால் அங்கு இராம இராஜ்யத்தைக் காண வாய்ப்பில்லை; அந்தக் குறையை ஓ.பி.ஆர். ஓராண்டு இராம ராஜ்யத்தைக் காணச் செய்தார்.

மற்றொரு படிக்காத மேதை காமராசர். அவர் பல ஆண்டுகள் முதல் அமைச்சராக இருந்தார். அவர் காலத்தில் 'காமராஜ் யத்தை' - எல்லோரும் விரும்பும் இராஜ்யத்தை, (காமம் - விருப்பம்) - கண்டோம். அவர் காலத்தில் கல்வியமைச்சராக இருந்தவர் சி. சுப்பிரமணியம். இருவரும் ஏழை பங்காளர்கள். காமராசர் நூற்றுக்குத் தொண்ணூருக்கு மேல் இலவசக் கல்வி பெற்றிருந்ததைக் கண்டார். மீதி நூற்றுக்குப் பத்து பேர்களின் சாதிகள் முற்போக்கு சாதியினர் பட்டியலில் இருந்தமையால் (பார்ப்பனர், ரெட்டிமார்கள், தொண்டை மண்டலம் முதலியார் போன்றவர்கள்) அவர்கள் பரம ஏழைகளாக இருப்பினும் அவர்கட்கு எவ்விதச் சலுகையும் இல்லாதிருந்தது. இந்நிலை காமராசர் கவனத்திற்கு வந்தது. சிந்தித்தார்; சிந்தித்தார். நிதி நிலைமையையும் சிந்தித்தார். ஆராய்ந்தார். ஏதோ ஒரு மூலையில் தொடுபடாத நிதிப்பகுதி - நூலக செஸ் - இருப்பதைக் கண்டார். உடனே எல்லோருக்கும் இலவசக் கல்வி என்று வெளியிட்டு தாம் உண்மையிலேயே ஏழை பங்காளி என்பதை மக்கள் அறியச் செய்தார். இது நடைபெற்றது 1962-இல் என்பதாக நினைவு.

---

* வார இதழ் ஒன்றுக்கு எழுதப் பெற்றது. அதில் வெளிவரவில்லை (அக்டோபர் - 2002)

நான் திருப்பதியில் திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலம் அது (1960 - 1978). தமிழகத்தில் நடை பெறும் நிகழ்ச்சிகளை அதிகமாகக் கவனிப்பது என் வழக்கம். தவிர, அறிவியல் ஆழங்கால் பட்டு விண்வெளிப் பயணம், குடிவழி (Heredity), கால்வழி (Genetics), தொலைக்காட்சி, வானொலி முதலியவை பற்றி நன்கு பயின்று கொண்டிருந்த காலம். காமராசர் இலவசக் கல்வி எல்லோருக்கும் (உயர்நிலைப் பள்ளி கல்வி வரை) என்ற அறிவிப்பு செய்த போது **'இளைஞர் வானொலி'** (கழகம்) என்ற என் நூல் அச்சாகிக் கொண் டிருந்தது (1962). அதனை,

பயிர்காக்கும் உழவரென உயிர்கள் காக்கும்
பான்மையிலே முதலமைச்சர் வறியர் தாமும்
மயல்போக்கும் கல்வியினால் மேன்மை பெற்று
வாழ்வுபெற வழியமைத்தோன்; பார தத்தை
உயர்வாக்க உழைப்பதிலே முதன்மைத் தொண்டர்
ஒருநலமும் தாம்நாடார் காம ராசர்;
பெயர்வாழ்த்தி அவர்பிறந்த நன்னாள் வாழ்த்திப்
பெரிதுவந்து படைக்கின்றேன் இந்த நூலை.

என்ற பாடலால் அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன். அது அவரது மணி விழா ஆண்டு (அப்போது என் வயது 46) அந்த நூல் அவர்தம் ஒளிப்படம் தாங்கிய நிலையில் தமிழகத்தில் வலம் வந்து கொண்டுள்ளது. இதுகாறும் பல பதிப்புகள் வெளி வந்து விட்டன. 40க்கு மேல் விளக்கப் படங்கள் கொண்டது அந்த நூல்.

அடுத்த ஆண்டு **'அதிசய மின்னனு'** (Electronics for the young) என்ற நூல் பல்வேறு விளக்கப் படங்களுடன் வெளி வரும் தருணம் (1963). காமராசர் காலத்தில் தந்தை பெரியாரின் ஆசி சுந்தர வடிவேலுக்கு நிறைய இருந்தமையாலும், நல்ல காரியங்களுக்கு சி. சுப்பிரமணியம் குறுக்கே தடைக் கல்லாக நிற்கும் இயல்பு அற்றவராக இருந்தமையாலும், கல்வித்

துறையில் பொது இயக்குநராக இருந்த சுந்தர வடிவேலுக்கு அதிக சுதந்திரம் இருந்தது. காமராசரும் திரு. சுப்பிரமணியமும் இயல்பாகவே ஏழை பங்காளர்கள். இதனால் சுந்தர வடிவேலு வின் செயற்பாடு தடையின்றி நடைபெற்றது. மாறாக ஊக்கு விப்பும் ஆதரவும் கிடைத்தன. சுந்தர வடிவேலுவின் மதிய உணவு, சீருடைத் திட்டங்களை நாடாளுமன்றமும் பாராட்டிப் பேசியது. அதனை நினைவு கூரும் வகையில்,

**நற்றவ வடிவாம் வள்ளுவன் கம்பன்**
**நல்லிளங் கோவுயர் கபிலன்**
**கொற்றமார் கீரன் பாரதி தங்கிக்**
**குலவிய செந்தமிழ்த் தாயின்**
**பற்றுறு வயிற்றில் திருவொடு தங்கிப்**
**பண்பொடு தோன்றிய செல்வர்;**
**கற்றவர்க் கினியர்; சுந்தர வடிவேல்**
**கண்ணியர்க் குரியதிந் நூலே.**

என்ற பாடல் மூலம் இந்நூலை அப்பெருமகனுக்கு அன்புப் படையலாக்கி மகிழ்ந்தேன். இதுவும் கழக வெளியீடாக வந்து பல பதிப்புகளைக் கண்டு புகழ் பெற்றிலங்குகின்றது.

காமராசர் நிர்வாகம் சிறப்புற்றுத் திகழ்ந்த காலத்தில் அவர் கோப்புகளை எவ்வாறு முடிக்கிறார் என்பதைப் பார்க்க ஆவல் இருந்தது. எனக்கும் அவருக்கும் வேண்டிய பேருந்து முதலாளி R. கிருஷ்ணசாமி ரெட்டியார் மூலம் ஓர் அரை நாள் (மூன்று மணி நேரம்) நேரில் கவனிக்க அநுமதி பெற்றேன். கோப்பு களைக் கையாளும் முறையே அற்புதம். தலைமைச் செய லாளரை வைத்துக் கொண்டு கோப்புகளைக் கையாளுவார்.

ஒரு கோப்பை எடுக்கச் சொல்லி ''இது பேப்பர்கள் அடங்கிய கட்டு அல்ல; இஃது ஆள்; மனு போட்டாரே, அந்த ஆள். அவர் என்ன கேட்கிறார்?''

**தலைமைச் செயலர்:** ''திருச்சி பக்கத்தில் உள்ள ஓமந்தூரில் தன் நிலத்திற்குப் பக்கத்தில் நெடுக 13 அடி தரிசு நிலம் சும்மா கிடக்கின்றது. அதனைத் தன்னுடைய நிலத்துடன் சேர்த்துக் கொண்டு விவசாய நிலமாக்க எண்ணம் என்று கேட்கின்றார்'' என்று சொல்லுகின்றார்.

**காமராசர்:** அவர் தமிழில் எழுதிய விண்ணப்பத்தைப் படிக்குமாறு சொல்ல செயலர் படிக்கின்றார்.

''அவர் எழுதியது சரி. வரிசையாகப் பலர் சிபாரிசைப் படியுங்கள்'' என்று சொல்ல செயலரும் அவ்வாறே படிக்கின்றார்.

சிலர் 'தரலாம்' என்றும் சிலர் 'கூடாது' என்றும் பரிந்துரை செய்துள்ளமை தெரிகின்றது.

**காமராசர்:** ''பார்ட்டி எழுதியது ஒரு தாள். இவ்வளவு தாள்கள் சேர்ந்து ஒரு கட்டாகியுள்ளது. ஒவ்வொரு தாளிலும் பணப் புழக்கம் நேர்ந்திருக்க வேண்டும். பார்ட்டிக்கு சில நூறு ரூபாய்கள் கையைப் பிடித்திருக்க வேண்டும்'' என்று சொல்லிச் சிரிக்கின்றார்.

**தலைமைச் செயலர்:** மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் பேந்தப் பேந்த விழிக்கின்றார். அவரும் கீழ் மட்டங்களிலிருந்து பதவி உயர்வுகள் பெற்று வந்தவர் தானே. அவருக்கு ஆபீசு 'தில்லு முல்லுகள்' நன்றாகவே தெரியும். அதனால் இந்த விழிப்பு.

**காமராசர்:** ''நடந்தவை எல்லாம் இருக்கட்டும். இப்போது அரசு என்ன நினைக்கின்றது? சொல்லும்'' என்கின்றார்.

**தலைமைச் செயலர்:** ''ஒரு சிறு தொகையைக் கட்டச் சொல்லி அந்த நிலப் பகுதியைச் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கலாம்'' என்கின்றார்.

**காமராசர்:** 'அப்படியே செய்க' என்று சொல்லி கோப்பில் கையெழுத்திடுகின்றார். இந்தக் கோப்பு முடிகின்றது.

இப்படியே ஒவ்வொரு கோப்பையும் படிக்கச் சொல்லி கோப்புகளைக் கையாண்டு அவற்றை நிறைவு செய்கின்றார். ஒரு நாளைக்கு 25 கோப்புகளை நிறைவு செய்கின்றார். தேங்கிக் கிடக்கும் கோப்புகள் யாவும் செயற்பட்டு நிறைவு பெறுகின்றன.

நான் துறையூரில் உயர்நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியபோது ஒரு வகுப்பு தொடங்க விண்ணப்பிக்கும்போது திருச்சி மாவட்டக் கல்வி அதிகாரி அலுவலகம், கோவை மண்டல ஆய்வாளர் (Regional Inspector of Schools), சென்னைப் பொதுக் கல்வி இயக்ககம் போன்ற இடங்கட்குக் 'காவடி எடுத்து' அலைந்ததாலும் வரிசை யாகத் தலைமை அலுவலருக்குச் சில தொகைகளை "அழுத லாலும்" இதனை நன்கு அறிவேன்.

அங்ஙனமே திருப்பதி பல்கலைக்கழகத்தில் தமிழ் எம்.ஏ. வகுப்பு முதலியவை தொடங்க "தமிழ் நடையாடாத இடங்களில் தமிழ் வளர்ச்சிக்கு மானியம் வழங்கலாம்" என்ற அரசுக் கொள்கைப்படி மானியம் பெற பல ஆண்டுகள் (கிட்டத்தட்ட ஒன்பது ஆண்டுகள்) காவடி எடுத்தவன். தமிழ் உணர்வுள்ள திரு. சி. சுப்பிரமணியம் மைய அரசுப் பணிக்குப் போய் விட்ட தாலும், திரு. தி.சு. அவினாசிலிங்கம் போன்ற தமிழுணர் வுள்ளவர்கள் பதவியில் இல்லாததாலும் காவடி எடுக்கும் வேலை தொடர்ந்து இருந்து கொண்டே இருந்தது.

**இராசாக்கண்ணு, பெருமாள் முதலியார்** ஆகியோர் தமிழ் ஆர்வலர்கள்தாம். அவர்கள் தலைமைச் செயலகத்தில் இருந்து தமிழ் வளர்ச்சிச் செயலர்களாகச் செயற்பட்டபோது, தமிழ் வளர்ச்சிக்காக குழைந்து பேசினாலும், "அதிகாரச் செருக்கினால்" திருப்பதிக்குப் பலன் கிடைக்கவில்லை. பின்னர் 'தமிழ் வளர்ச்சி இயக்ககம்' குறளகத்திற்கு வந்த பிறகு மிக அற்புதமாகச் செயற்பட்டு வருகின்றது.

திரு. ரங்கபாஷ்யம் IAS, திரு. ரங்காராவ் IAS போன்ற திறமை மிக்கவர்கள் பணியிலிருந்தபோது செயல்பட்ட விதம் அற்புதம். கோப்புகள் அதிவேகமாக நகர்ந்தன. அமைச்சர்கள் பதவிக்காலத்தை விட ஆளுநர் பதவிக் காலத்தில் கோப்புகள் அற்புதமாக நகர்ந்தன. இவற்றையெல்லாம் ஒன்பது ஆண்டுகள் காவடி எடுத்துப் பழக்கமுள்ள நான் அறிவேன். இத்துடன் நிற்க.

காமராசரின் **"தெய்வப் பணி"** நாடறிந்தது; நல்லவர்கள் அறிந்தனர். அணு அளவு கூட சுயநலம் அற்ற தெய்வப் பணி ஆற்றிய காரணமாக மதுரைப் பல்கலைக்கழகம், காமராசர் பெயருடன் வழங்க வேண்டும் என்று "மக்கள் அரசு" நினைத்தது. "மதுரை - காமராசர் பல்கலைக்கழகம்' என்று காமராசர் பெயர் பல்கலைக்கழகத்துடன் இணைந்தது. உண்மைத் தொண்டுக்கு நிரந்தர வடிவம் அமைந்தது. தமிழ் மக்கள் உள்ளம் குளிர்ந்தது.

**வரலாற்றுணர்வு:** பல்கலைக்கழகம் தொடங்கும்போது 'மதுரை - காமராசர் பல்கலைக்கழகம்' என்ற பெயருடன் பல்கலைக்கழகம் தொடங்கப் பெறவில்லை; பின்னால் அவர் பெயர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெற்றது. 1. இதன் நினைவாக "மதுரை - காமராசர்" என்று பெயர்களுக்கிடையில் ஒரு சிறுகோடு (-) போட்டால் பின்னர் காமராசர் பெயர் இணைக்கப் பெற்றது என்பது தெரியும். 2. அப்படிச் சிறு கோடு போடாவிட்டால் மதுரை காமராசர் (விருதுநகர் காமராசர் போல்) என்று ஒருவர் இருந்து அவர் பெயரால் பல்கலைக் கழகத்தின் பெயர் அமைந்தது என்று கொள்ள நேரிடும்.

மகாத்மா காந்தி பெயரையும் அவர்தம் கொள்கையையும் காங்கிரசுகாரர்களே மறந்தனர். மக்கள் மறப்பதற்குக் காரணம் தேவை இல்லை. இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, சோனியாகாந்தி என்று பல காந்திகள் தோன்றி விட்ட பிறகு முதல் காந்தி பெயர் அடியோடு மறக்கப் பெற்றது. பள்ளி, கல்லூரி மாணவர்கள்கட்கு

ஒரே குழப்பம். அவர்கள் மகாத்மா காந்தி, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி என்ற பெயர்களைக் கூட மறந்து விட நேரிடும். மகாத்மா காந்தி, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி இந்த மூவரும் அநியாயமாகக் கொல்லப் பெற்றதால் இவர்கள் பெயர்கள் ஒருக்கால் மனத்தில் இருக்கலாம். இப்பொழுது மக்களிடையே அதிகமாக அடிபடும் பெயர் 'சோனியா காந்தி' என்ற பெயரேயாகும்.

மக்கள் மனத்தில் வரலாற்றுணர்வு மறையக் கூடும் என்று கருதி மதுரை - காமராசர் பல்கலைக்கழக கல்விப் பேரவைக் கூட்டத்தில் வாழ்நாள் உறுப்பினராக இருக்கும் நான் அடியிற் கண்ட தீர்மானம் கொணர்ந்தேன் (அக்டோபர் 2002).

> **"மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,** Madurai Kamarajar University **என்ற இரு பெயர்களும் மதுரை - காமராசர் பல்கலைக்கழகம்,** Madurai - Kamarajar University **என்ற இரு பெயர்கட்கிடையிலும் ஓர் இணைப்புக்குறி** (Hyphen) (-) **என்பது போல - இட்டு வழங்க வேண்டும்."**

நான் இதனை மிக உருக்கமாகப் பேசி முதல் மொழிந்தேன். மற்றொரு நண்பர் - ஓலைச் சுவடித் துறையைச் சேர்ந்தவர் மேலும் உருக்கமாகப் பேசி வழி மொழிந்தார். ஆட்சி உறுப்பி னர்கள் பலரும், ஏனைய உறுப்பினர்கள் சிலரும் துணை வேந்தர் முகத்தைப் புன்முறுவலுடன் நோக்கிய வண்ணம் வாளா இருந்தனர். "விருதுநகர் காமராசர்" என்ற பெயர் மறந்து, மதுரை காமராசர் என்று ஒருவர் இருந்தார். அவர் பெயரால் தான் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் தொடங்கப் பெற்றது என்ற எண்ணம் நாளடைவில் தோன்றி நிலை பெறும்" என்று சொல்லி வற்புறுத்தியும் ஒருவர் கூட எழுந்து பேசவில்லை. ஆட்சிக் குழுவில் ஓரிருவரும், பொதுக் குழுவிலுள்ள ஓரிருவரும் வற்புறுத்தி ஒட்டிப் பேசியிருந்தால் தீர்மானம் நிறைவேறி இருக்கும். அவ்வாறு ஒருவரும் பேசாதது எனக்கு மிகவும்

வருத்தத்தைத் தருகின்றது. ''போகட்டும். கல்விப் பேரவை சுமார் 250 உறுப்பினர்கள் கொண்டது. ஆனால் மக்கள் கூட்டம் எண்ணற்றவர்களைக் கொண்டது. அவர்கள் கருத்தில் இத் தீர்மானம் இருக்கட்டும்'' என்று கருதி இதனை இக் கட்டுரையில் பதிவு செய்தேன். இது நூலாக வடிவம் பெறுவதால் மக்கள் மனத்தில் வரலாறு படைத்துக் கொண்டே இருக்கும்.

''**தொண்டே செய்து வழியொழுக பண்டே பரமன் பணித்த பணி வகையே**'' என்ற ஆழ்வார் வாக்கிற்கொப்ப பணி செய்து வாழ்ந்த காமராசர் பெயர் தமிழ்மொழி உள்ள அளவும் மக்கள் மனத்தில் நிலை பெற்று நிலவட்டும்; மன்பதைக்கு அவர் வழிகாட்டியாக இருந்து வரட்டும்.

# 11. இராஜாஜி பற்றிய நினைவுகள்*

வள்ளுவன் தன்னை உலகினுக்குத் தந்து வான் புகழ் பெற்ற தமிழ்நாடு போல, சேலம் செந்தமிழ்ச் செல்வர் ஒருவரை காங்கிரசுக்குத் தந்து இமயப் புகழ் பெற்றது. அவர்தான் 'ராஜாஜி' என்று மக்கள் மனத்தில் வாழும் சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார். காந்தியடிகளின் நெருங்கிய நண்பர்; சில சமயம் ஆலோசராகவும் இருப்பவர். சர்தார் வல்லபாய் படேலின் நெருங்கிய தோழர். சுதந்திரம் பெற்ற இந்தியாவுக்கு இந்திய அரசியல் சட்டம் நிறுவப் பெறும்வரை கவர்னர் ஜெனரலாக இருந்தவர். அவர் ஆற்றிய தொண்டுகளையும் நிறைவேற்றிய செயல்களையும் எண்ணினால் அவர் ஓர் **'அரசியல் ஞானி'** என்ற நிலைக்கு உயர்ந்துள்ளார் என்பது விளங்கும். இத்தகைய பெரியாரிடம் காரைக்குடி **கம்பன் அடிப்பொடி சா. கணேசன்** மூலம் அறிமுகம் ஆகி நேரில் பழக அதிக வாய்ப்புகள் இல்லாது போயினும் கடிதத் தொடர்பு இருந்து வந்தது. தவிர, இளமை முதற் கொண்டே இவர் என் வீரவழிபாட்டிற்குரியவராக இருந்தமையாலும் எனக்கு வேண்டிய தந்தை பெரியாரிடம் இப்பெருமகனார் இணக்கம் மிக்க நெருங்கிய நண்பராக இருந்தமையாலும் இப் பெருமகனாரின் ஒவ்வொரு செயலையும் கவனித்து வந்தவன். கொள்கை வேற்றுமைகள் இவர்களைப் பிரித்து வைக்காமல் நெருக்கமாக இணக்க வைத்தது எனக்கு சொல்லொணா வியப்பினை விளைத்தது. இருவருமே பேரறிஞர் அண்ணாவின் அரசியல் குருமார்களாக (அண்ணாவே சொன்னது) இருந்தமையால் என்னுடைய வியப்பு மேலும் அதிகமாகியது. 87 வயதுள்ள நான் இப்பெருமகனாரைப் பற்றிய நினைவுகள் சிலவற்றை ஈண்டுப் பதிவு செய்து மகிழ்கின்றேன். இப்பெரியார்

---

* வார இதழ் ஒன்றுக்காக எழுதப் பெற்றது. அதில் வெளிவரவில்லை (அக்டோபர் - 2002)

துன்பத்தையும் சிரித்து இன்பமாக்கிக் கொள்ள வல்லவர். தாம் ஏதேனும் குற்றங்கள் புரிந்ததாகக் கருதினால் அவற்றைப் பகிரங்கமாகச் சொல்லித் திருத்திக் கொள்ளும் உத்தமர்.

1. இவர் கவர்னர் ஜெனரலாக இருந்தபோது செட்டி நாட்டிற்கு வருகை புரிந்தார். இவர்தம் நெருங்கிய நண்பராகவும் மாபெரும் காங்கிரசுத் தொண்டராகவும் இருந்த **கம்பனடிப் பொடி** காரைக்குடிக்கு அருகிலுள்ள அமராவதிப்புதூரில் சீர்திருத்தச் செம்மல் **சொ. முருகப்பா** அவர்கள் நடத்தி வந்த மகளிர் இல்ல வளாகத்தில் தங்க வைத்தார். அப்போது இராஜாஜி சொன்னது: ''கள்ள நோட்டு அடிக்கிறவர்கள் மிஷின் தயாரிப்பதற்கும் உரிய தாள் சேகரிப்பதற்கும் மிகவும் சிரமப்படு கிறார்கள். சில சமயம் மாட்டிக் கொள்ளுகிறார்கள். இவர்களைப் போன்ற 'திருடர்கள்' அச்சடிக்கும் நாசிக் அச்சகத்திலும் இருக் கிறார்கள். நேராக அங்குச் சென்று திருமணப் பத்திரிகை அடிப்பது போல 20 லட்சம் நல்ல நோட்டுகள் தந்து இரண்டு கோடி கள்ள நோட்டு அடித்துக் கொள்ளலாமே. இப்படிச் செய்தால் மாட்டிக் கொள்ள வேண்டிய வாய்ப்பே இராது'' என்று சொல்லிச் சிரித்தார். இதனைக் கேட்கும் நாம் சிரித்துக் கொண்டே இருக்கலாம். நகைச்சுவையும் ஏளனக்குறிப்பும் நம்மை வியக்க வைக்கின்றன.

2. காந்தியடிகள் காங்கிரசைக் கலைத்து விட்டு வேறு பெயரில் கட்சி தொடங்குமாறு யோசனை கூறினார். கட்சியிலுள்ள ''பெருச்சாளிகள்'' கேட்கவில்லை. பெருங்காயம் இல்லாமல் ''பெருங்காய டப்பாவைக்'' கொண்டு காலங் கழித்து அக்கட்சி யைக் குட்டிச் சுவராக்கி விட்டார்கள். 47-48இல் திண்ணனூர் தமிழ்நாடு காங்கிரசு மகாநாட்டில் (கல்வியமைச்சர் திரு. தி.சு. அவினாசிலிங்கம் தலைமையில் நடைபெற்றது) கதர் குல்லாய் அணிந்திருந்த சாதாரணத் தொண்டர்களின் ஆணவம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. அப்படி யானால் தலைவர்களின் ஆணவம் எந்நிலையில் இருக்கும்?

விளைவு காங்கிரசு 1952 தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை தொகையினர் இல்லாத நிலை ஏற்பட்டது. இராஜாஜியை நாடினார்கள். புடம் போட்ட தொண்டரின் மூளையல்லவா அவரது மூளை? சில உதிரிக் கட்சியினருக்குப் பதவிகள் தருவ தாக ஆசை காட்டி அவர்களை 'அஸோசியேட் மெம்பாக்கி' அறுதி பெரும்பான்மை உண்டாக்கி ஆட்சி அமைத்தார். இரண்டரை ஆண்டு கழித்து அவரைச் சாம்பாரிலுள்ள கறிவேப்பிலையைப் போல் கருதி அதனை எடுத்தெறிவது போல இவரை நீக்கி விட்டார்கள். (அக்காலத்தில் காமராசருக்கும் இராஜாஜிக்கும் இருந்த கருத்து வேறுபாடு மிகவும் வருந்தத்தக்கது) இராஜாஜி அவர்கள் பெரிய பதவி, சிறிய பதவி என்ற வேறுபாடு கருதாமல் தொண்டாற்றிய மகான்.

3. இப்பெருமகன் முதல் அமைச்சராக இருந்த காலத்தில் ஒருநாள் காவலர்கள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். காவலர் சங்கத் தலைவர் இராஜாஜியவர்களை அணுகி ''ஐயா, இன்று ஒருநாள் தாங்கள் கோட்டை அலுவலகத்திற்கு வர வேண்டா. நாங்கள் மெய்காப்புக்கு (பந்தோபஸ்துக்கு) வாரோம்'' என்று விண்ணப்பிக்க, ''தம்பீ, இந்தக் கிழவனுக்கு வீட்டில் பொழுது போகாது. அலுவலகத்திற்கு வந்தால் ஏதாவது கோப்புகளை நோக்கிக் காலம் கழியும். சாலையில் வரும்போது எனக்கு ஏதாவது விபத்து நேரிட்டால் அங்கு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் காவலர் பார்த்துக் கொண்டு வாளா இரார். கட்டாயம் என்னைப் பாதுகாப்பார் என்ற நம்பிக்கை என்பால் உண்டு. கவலை வேண்டா'' என்று சொல்லி அன்று அலுவலகத் திற்கு வந்தார். என்ன செய்தார்? ''காவல் சங்கத்தின் அங்கீகாரம் இந்த விநாடி முதல் ரத்து. தமிழகத்திலுள்ள அனைத்து அலுவல கங்களும் படையினர் (மிலிடரி) பாதுகாப்பில் அமையும்'' என்ற ஆணை பிறப்பித்தார். காவலர்களின் சர்வ நாடியும் அடங்கிப் போயிற்று. பதவியில் விருப்பு வெறுப்பட்ட நிலையும் நெஞ்சில் உரமும் இருந்தாலொழிய இத்தகைய துணிவு எவருக்கும்

ஏற்படாது. மின்சாரம், குடிநீர் விநியோகப் பணியாளர்கள், காவலர்கள், அஞ்சல் நிலையத்தினர் போன்றோர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடக் கூடாது என்ற வரன்முறை வேண்டும். பிரச்சினைகளைப் பேச்சு மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும். வேலை நிறுத்தத்தால் பொது மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கக் கூடாது. வேலை நிறுத்தத்தால் அதன் விளைவாகத் தொடரும் ஊர்வலம், எழுப்பும் கோஷங்கள், உண்ணாவிரதம் போன்றவற்றால் பொதுமக்கள் ஆதரவு கிட்டும் என்று நினைப்பது தவறு; மாறாக வெறுப்புதான் நேரிடும்.

4. **ஹெயிசன்பெர்க்** எழுதிய Nuclear Physics என்ற நூலை மொழி பெயர்க்கும் திட்டத்தைச் சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்டது. 53 பேர் எழுதியதாகத் தகவல். அவர் களில் ஒருவனாகிய நான் எழுதிய மொழி பெயர்ப்பு (1954-56) பரிசினைப் பெற்றது. இந்த அறிவியல் குழந்தை பத்தாண்டு கட்குப் பின்னர் 'நாமகரணம்' பெற்று வெளி வந்தது (1966). இயற்பியல் கற்ற இராஜாஜியிடம் அணிந்துரை பெற அணுகி னேன். 'தமிழில் முடியுமா?' என்ற நூலும் 'திண்ணை ரசாயனம்' என்ற நூலும் அவரைத் தமிழ் உலகிற்கு அறிமுகம் செய்தன. அதற்கு அவர் ''உங்கட்குப் பல்கலைக்கழகப் பணி. துணை வேந்தரை அணுகி அவரிடம் அணிந்துரை பெற்றால் உங்கள் எதிர்காலம் சிறக்கும். இந்தக் கிழவனை விட்டு விடுங்கள்'' என்று எழுதினார். நான் ''ஐயா, நான் உழைப்பினால் உயர நினைப்பவன். துணை வேந்தரை அணுகினால் அவர் இயற் பியல் பேராசிரியரை எழுதச் சொல்லி அதில் அவர் கையெழுத் திட்டு அனுப்புவார். வாசகம் இயற்பியல் பேராசிரியரின் உடையதாகவும் கையெழுத்து துணை வேந்தருடையதாகவும் இருக்கும். நான் இதை விரும்பவில்லை. தாங்கள் எழுதினால் இரண்டும் தங்களுடையனவாக இருக்கும். அதில் தங்கள் ஆசியும் இருக்கும். நான் வேண்டுவது உங்கள் ஆசியே. அணிந் துரை ஆங்கிலத்தில் இருத்தல் வேண்டும். காரணம் Gottuigen

என்ற ஊரிலுள்ள Max plank Institution Physics என்ற நிறுவனத்தின் இயக்குநராக இருக்கும் இதன் ஆசிரியராகிய W. Heisenberg என்பாருக்கு ஒருபடி அனுப்ப நினைக்கின்றேன். அணிந்துரை ஆங்கிலத்தில் இருப்பின் நூல் தம்முடையது என்பது அவருக்குத் தெரியும். அணிந்துரை ஒரு சில வாக்கியங் களில் அமைந்தால் கூடப் போதும்'' என்று எழுதினேன். ஒரு சிறு அணிந்துரை மறு அஞ்சலில் வந்து விட்டது. அஃது இது:

"Foreword. I can understand the difficulties of a translator of Scientific Books and I tender my congratulations to Prof. N. Subba Reddiar on his having won the prize for the best translation of Heisenlevg's Nuclear physics Madras 29.3.1966 C. Rajagopalachari இதனை அப்படியே நூலில் பதிப்பித்து அந்த நூலின் ஒரு படியை மூல நூலாசிரியருக்கு அனுப்பி மகிழ்ந்தேன்; பெரு மிதமும் கொண்டேன். (அப்போது நான் திருப்பதியில் பணியாற்றிக் கொண்டிருந்தேன்).

5. **இந்தி எதிர்ப்பு:** 1937-இல் (பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில்) நம் இராஜாஜி சென்னை மாநிலத்துக் காங்கிரசு முதல் அமைச்சர். கட்சிக் கொள்கைப்படி மாநிலத்துப் பள்ளிகளில் இந்தி கட்டாயமாகப் புகுத்தப் பெற்றது. இதற்கு நாடெங்கும் கடும் எதிர்ப்பு. **தந்தை பெரியார், கி.ஆ.பெ. விசுவநாதம்** முதலியோர் எதிர்ப்பில் பங்கு பெற்றனர். இராஜாஜி என்ற அமைச்சரிடமுள்ள இராஜாஜி என்ற மனிதர் செயற்பட்டார். சில மாற்றங்களுடன் இந்தத் திணிப்பு செயற்படுத்தப் பெற்றது. ''எல்லாப் பள்ளிகளிலும்'' என்றிருந்த திட்டம், 125 பள்ளி களிலும் (பரீட்சார்த்தமாக) என்று ஆயிற்று. படிக்க வேண்டி யதும் முதல் மூன்று படிவங்களில் தாம். இந்த தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. திட்டம் பிசுபிசுத்தது. இராஜாஜி மக்கள் நாடியை அறிவார். ஏனைய காங்கிரசுகாரர் போல் திமிர் பிடித்தவர் அல்லர். இங்கிதம் அறிந்த ஒரு மகான்.

6. இக்காலத்தில் சொந்தப் பலனையொட்டி கட்சி மாற்றங்கள் நடைபெறுகின்றன. 'பெரிய மனிதர்கள்' கூடுவிட்டுக் கூடு பாய்கின்றனர். இராஜாஜி அப்பழுக்கற்ற மனிதர். காங்கிரசு கொள்கை தமக்கு ஒவ்வாமையால் காங்கிரசை விட்டு விலகி **'சுதந்திர கட்சி'**யைத் தோற்றுவித்தார். தி.மு.க. ஆட்சியைப் பிடித்தது. அவர்கள் வேண்டுகோட்கிணங்கி சில சமயம் ஆலோசனை கூறுவார். சென்னையில் (1967) பெரிய ஊர்வலம். ஏழு மைல் நீளம். ''வால் கோடம்பாக்கத்திலிருந்தது தலை மாநாட்டுப் பந்தலை எட்டியது'' (கல்கியில் - முரசொலி மாறன்).

7. **இராஜாஜியின் வாழ்த்து:** தலைமையில் ''இப்பொழுது நமது 11 - இலட்சம் பேசுவார் (11 இலட்சம் - என்பது கலைஞர். அக்காலத்தில் அண்ணா பேச்சுக்கு டிக்கெட் வைத்து 11-இலட்சம் கட்சிக்கு சம்பாதித்தவர். டிக்கெட் ஒரு ரூபா. இறுதியாக இராஜாஜி வாழ்த்தும் போது ''காங்கிரசு தேச நன்மையை மறந்து ஒவ்வாத பிடிவாதத்தால் தவறுகள் செய்து வந்ததால் 21 ஆண்டுகளில் பதவியிலிருந்து தள்ளப்பட்டது. இது தி.மு.க.விற்கு நல்ல பாடமாக உதவட்டும்'' என்று வாழ்த்தினார்.

தொடர்ந்து அவரே கல்கியில் தலையங்கமாகக் கட்டுரை எழுதினார். அதில்,

**அடங்கு எழில் சம்பத்து**
**அடங்கக் கண்டு, ஈசன்**
**அடங்கு எழில் அஃதுஎன்று**
**அடங்குக உள்ளே** *(திருவாய் 1:2:7)*

என்ற நம்மாழ்வார் பாசுரத்தை எடுத்துக் காட்டியிருந்தார். ''உலகம் அனைத்தும் அடங்க செல்வம் முழுவதையும் பார்த்து, அஃது இறைவனுடைய செல்வமாகுமென்று நினைந்து அச் செல்வத்திற்குள் நீயும் அடங்குவாய்'' என்று நினைக்க வேண்டும். அப்படி நினைந்து ஆட்சி புரிந்தால் நாம் இறைவனுடைய பிரதிநிதி ஆவோம். அங்ஙனம் கருதாமல் நாம் வேறு,

தேசம் வேறு என்று கருதி நம் விருப்பப்படி நாம் என்ன வேண்டு மானாலும் செய்யலாம் என்று நினைத்து ஆட்சி புரிந்தால் அது இமாலயத் தவறு. அப்படி நினைந்து ஆட்சி புரியாததால்தான் காங்கிரசு 21 ஆண்டுக்குள் அழிந்தது. தி.மு.க. இதனை ஒரு எச்சரிக்கையாகக் கொள்ளாமல் தான் தோன்றித்தனமாக நடந்து ஆட்சி புரிந்தால் அதன் ஆட்சி 21 நாட்கள் கூட நிலைத்திராத நிலைமை உருவாகி விடும்'' என்று எழுதியிருந்தார்.

8. அமெரிக்காவில் **ஜான் கென்னடி** தலைவராக இருந்து ஆட்சி புரிந்த காலத்தில் நம் இந்தியக் குடியரசு அணுசக்தியை அமைதிக்காகத்தான் பயன்படுத்த வேண்டும் என்ற கொள்கையை நிலை நாட்ட இப்பெருமகனை அமெரிக்காவுக்கு தூதராக அனுப்பி வைத்தது. அங்கு நடைபெற்ற ஆட்சி முறைகளை யெல்லாம் கவனித்து தம் கடமையை வெற்றியுடன் நிறை வேற்றிக் கொண்டு திரும்பினார் இராஜாஜி.

9. வந்தவுடன் அமெரிக்க ஆட்சிக்கு எச்சரிக்கை இருக்கும் பொருட்டு மேற் குறிப்பிட்ட நம்மாழ்வார் பாசுரத்தையே குறிப்பிட்டு மீண்டும் கல்கியில் தலையங்கமாக கட்டுரை வெளியிட்டு மகிழ்ந் தார். ஒரு சில மாதங்களில் காரில் விரைவாகச் சென்று கொண் டிருந்த பொழுது எதிரியால் சுட்டுக் கொல்லப்பட்டார் கென்னடி. அண்மையில் நான் அமெரிக்கா சென்றிருந்த பொழுது (மார்ச் 30 - ஜூன் 25, 2002) கென்னடி சுடப் பெற்ற இடத்தையும் தலைநகர் வாஷிங்டனில் அவருக்கு வைக்கப் பெற்றுள்ள நினைவுச் சின்னத்தையும் பார்க்கும் வாய்ப்புப் பெற்றேன்.

10. **அறிஞர் அண்ணா** ஆட்சியின் போது நான் திருப்பதி யில் பணியாற்றினேன். தமிழ் வளர்ச்சிக்கு மானியம் பெறுவதற் காக சென்னை வந்த பொழுது இராஜாஜி அண்ணாமலை மன்றத்தில் ஏதோ ஒரு பெரிய அரசியல் விழா நடைபெற்றது. அறிஞர் அண்ணா தலைமை. அவ்விழாவைக் காண நானும் ஒரு மூலையில் ஒரு வரிசையில் அமர்ந்திருந்தேன். மண்டபம்

வழியும்படியான கூட்டம். முன்வரிசையில் தந்தை பெரியாரும் இராஜாஜியும் அருகருகே அமர்ந்திருந்தனர். மண்டபத்தில் நுழைந்த அண்ணா இவர்களைக் கண்டவுடன் அருகே சென்று காலைத் தொட்டு வணங்கும் பாணியில் குனிந்து முதலில் தந்தை பெரியாரையும் அடுத்து இராஜாஜியையும் வணங்கி விட்டு மேடைக்குச் சென்றார். மண்டபம் அதிரும்படியாக அவையோர் கைதட்டி ஆர்த்தனர். பேசத் தொடங்குமுன் அண்ணா ''நான் ஏன் அவர்களை வணங்கினேன் தெரியுமா? அவர்கள் இருவரும் என் **அரசியல் குருமார்கள்.** நான் தாடியுள்ளவரிடம் 'காலில் முள் தைத்து விட்டது. வலி தாங்க முடியவில்லை. என்ன செய்வது?' என்று கேட்டால், 'காலை எடுத்து விடு; வேறு கால் வைத்து விடு' என்று சொல்வார். அருகிலுள்ள இராஜாஜியைக் கேட்டால் 'கவனத்துடன் முள்ளை நீக்கி டிங்க்சர் அயோடின் போடு; சரியாய் விடும்' என்பார். இதுதான் இவர்களிடம் நான் காண்பது'' என்று சிரிக்காமல் சொன்னார். 'கட்டடம் விழுந்து விடுமோ?' என்று அதிருமாறு மீண்டும் அவையோர் கையொலி எழுப்பிச் சிரிப்புடன் ஆர்ப்பரித்தனர். இங்கு எனக்கு மூவருடைய மனப்பான்மையையும் தெளிவாயிற்று.

11. **நேர்மை, தூய்மை:** நாட்டு நலம், மக்கள் நலம் என்று அரசியல் இயங்காமல், சாதி, அரசியல், குடும்ப அரசியல் என்ற பாணியில் இன்று இயங்குவதைக் காணும் நமக்கு இராஜாஜி அவர்கள் நேர்மையுடனும் தூய்மையுடனும் பணியாற்றிய பெருமையை மக்கள் கண்டனர். அமைச்சர் பதவியில் இருந்த காலத்தில் பரம்பரையாக வாழ்ந்து வந்த தி. நகர் பசுலுல்லா சாலையிலுள்ள தம் சிறு வீட்டில்தான் வாசம். தம் மகன் **நரசிம்மன்** முன்னேற்றத்தில் எந்தவிதமான முயற்சியும் எடுக்க வில்லை. ''அவனது தொண்டால் அவன் உயரட்டும்'' என்று வாளா இருந்து விட்டார். மகனும் தன் சேவையில் எம்.பி.வரை உயர்ந்தார். இராஜாஜி நினைத்திருந்தால் தம் மகனை மத்திய அமைச்சரவையில் இடம் பெறச் செய்திருக்கலாம். ஆனால்

அவ்வாறு செய்யவில்லை. தமது நேர்மையையும் தூய்மையை யும் கெடாமல் காத்தார். இதனை நாம் எண்ணிப் போற்ற வேண்டும்.

12. **பழக்கவழக்கங்கள்:** அவருடைய பேச்சாலும் **கம்பன் அடிப்பொடி சா. கணேசன்** அவர்களுடைய கூற்றுகளாலும் அவருடைய பழக்கவழக்கங்களை ஓரளவு அறிந்துள்ளேன். அவருக்குப் 'புளியோதரை' பிடிக்கும்; விருப்பத்துடன் சிறிதளவு தான் உண்பார். மீதூண் விரும்புவதில்லை. வைணவர்கள் புளியோதரை தயாரிப்பில் பேர் போனவர்கள்; பிறர் அப்படிச் செய்தாலும் உலக வழக்கில் வைணவர்கட்குத் தான் பேரும் புகழும். திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலில் புளியோதரை பெரும் புகழ் வாய்ந்தது. தயாரிப்பது வைணவர்கள் அல்லர்; யாரோ சமையல்காரர்கள்.

(அ) நம்மாழ்வார் புளிய மரத்தின் கீழ் (திருப்புலியாழ்வாரின் கீழ்) அமர்ந்து இருந்தார் என்பதும் 35 திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம் பெருமான்கள் நேரில் வந்து பாசுரங் களைப் பெற்றுப் போனார்கள் என்பதும் சம்பிரதாயமாக வழி வழி வரும் நம்பிக்கைகள். அந்தப் புளிய மரம் **'உறங்காப்புளி'** என்ற பெயரால் வழங்கும். அது காய்ப்பதும் இல்லை. இது காரணமாக உணவில் 'புளியோதரை' சிறப்புப் பெயர் பெற்றது போலும் எனக் கருத இடம் உண்டு.

(ஆ) இராஜாஜி அவர்கள் தாம் பயன்படுத்தும் கழிப்பறை யைத் தாமே தூய்மை செய்வார்கள். கழிப்பறையையும் பூஜை யறையைப்போல் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்று சொல்வார்களாம். எந்தப் பணியையும் உயர்ந்தது தாழ்ந்தது என்று வேறுபாடு கருதாமல் பணியாற்றி வந்த மகான் அவர்.

(இ) இராஜாஜி அவர்களுக்கு இறுதிக் காலத்தில் மலக்குடல் சரியாக இயங்குவதில்லை. 'இனிமா' உதவி கொண்டுதான் மலம் கழிப்பார்கள். இஃது அவர்களுக்கு துன்பம் தரும் செயல்.

எனினும் இதையும் மகிழ்ச்சியானதாகக் கொண்டு செயற் படுவார்களாம். ''இனிமா பயன்படுத்துவதால் குடல் நிர்மலமாகி விடுகிறது. இயல்பாகக் கழிப்பவர்கள் குடலில் அங்ஙனம் தூய்மையாவதில்லை'' என்று நம்மை நோக்கி அந்த மகான் கூறும்போது உதட்டில் மகிழ்ச்சி காட்டினாலும் முகத்தில் சோகக் களை தட்டுப்படும். தம் குறை உள் மனத்திலிருந்து 'சோகக் களையாக' வெளிப்படுவதை அவரை உற்று நோக்குவாருக்குத் தெளிவாகும். சுக துக்கங்களை ஒன்றாகப் பாவிக்கும் பக்குவப் பட்ட மனத்தையுடைய மகான் அவர். சைவ சித்தாந்தப்படி இருவினையொப்பு என்பதைக் கடைப்பிடித்தவர் ஆகின்றார்.

# 12. சாதி ஒழிப்பு*

'சாதி ஒழிப்பு' என்பது இன்றைய அரசியலில் பேசப் பெறும் ஒரு நகைச்சுவைச் சொற்றொடர். தொல்காப்பியத்தில் 'சாதிப் பெயர்கள்' பற்றிய குறிப்பு வருகின்றது. அங்கு அகத் திணை ஒழுகலாற்றுக்குரிய மக்களை வகைப்படுத்திக் கூறிய நிலையிலும், புறத்திணை ஒழுகலாற்றில் வாகைத் திணைப் பகுதி களை கூறிய நிலையிலும் மக்களை ஆசிரியர் தொல்காப்பியனார் அவர்கள் வாழும் நிலத்தாலும் அவர்கள் மேற்கொண்ட தொழில் வகையாலும் பகுத்துரைத்தனரேயன்றிப் பிறப்பு வகையால் அன்று என்பது தெளிவு.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்.** *(குறள் 972)*

என்ற வள்ளுவப் பெருமானின் வாக்கும் இது பற்றியே என்பதும் ஈண்டு சிந்திக்கத் தக்கது. தொல்காப்பியத்தில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற சாதிப் பாகுபாடு காணப் பெறுகின்றது. இவற்றிற்கு விளக்கந்தரும் நூற்பாக்களும் பிரித்துரைக்கும் நெறியினை ஆசிரியர் மேற் கொள்ளவில்லை. உரையாசிரியர்கள்தம் சாதிப் பிரிவுபற்றிய கொள்கையை வற்புறுத்தி எழுதியுள்ளனர். **'சாதி'** என்னும் சொல் தொல் காப்பியத்திலேயே காணப்பெறினும் அச்சொல் ஓரிடத்திலேனும் மக்களைக் குறிக்கும் சொல்லாக வழங்கப் பெறவில்லை. அது நீரிலேயே வாழும் உயிர்களையே குறிக்கின்றது.

**நீர்வாழ் சாதியுள் அறுபிறப்பு உரிய**[1]

என்றும்,

---

* வார இதழ் ஒன்றுக்காக எழுதப் பெற்றது. அதில் வெளிவரவில்லை. (ஆகஸ்டு - 2002)

1. தொல். பொருள் - மரபியல் - நூற் 44

நீர்வாழ் சாதியுள் நந்தும் நாகே[2]

என்றும் வருவதைக் காணலாம்.[3]

இன்று **'சாதி'** என்னும் சொல் பிறப்பிலேயே வேற்றுமை உண்டு என்பதைக் குறிப்பதாகும். பிறப்பினால் உயர்வு தாழ்வு உண்டு என்ற கொள்கை தொல்காப்பியர் காலத்தில் தமிழ் நாட்டில் இல்லை. தொழில், ஒழுக்கம், கல்வியறிவு, திறமை என்ற இவற்றின் காரணமாகவே வகுப்புப் பிரிவுகள் தோன்றின. நாளடைவில் மக்கள் செய்யும் தொழில்களில் பெருமை சிறுமை பாராட்டத் தொடங்கினர். இவையே உயர்வு தாழ்வுகட்கு உறைவிடமாயின. வேத - உபநிடத - சுமிருதிகளும் இவ் வுண்மையை ஒப்புக் கொள்கின்றன. சாதிப் பிரிவுகள் தமிழகத்தில் தாமே தோன்றியனவே யன்றி யாராலும் புகுத்தப் பெற்றவையல்ல என்றே தோன்றுகின்றது.

**'நால்வகைச் சாதி**
**இந்நாட்டினில் காட்டினீர்'**

என்ற கபிலரகவலைச் சான்றாகக் கொண்டு வேண்டாதார்மீது வீண் பழி சுமத்துவது அறிவுடைமைக்கு அழகன்று. இன்றுள்ளது போல் அன்றும் சாதிப் பிரிவு பொருளாதார அடிப்படையில் தோன்றியிருக்க வேண்டும். மக்கள் தத்தம் அறிவுத் திறனுக் கேற்றவாறு பல தொழில்களை மேற்கொண்டு பொருளீட்டி வாழ்க்கை நடத்தியிருக்க வேண்டும். ஒவ்வொரு தொழிலையும் மேற்கொண்டவர்கள் தமது தொழில் முறைக்கேற்ப அத்தொழில் செய்வாரிடமே கொண்டு கொடுத்து வந்து நாளடைவில் வெவ்வேறு குலத்தினராகி இருக்க வேண்டும். காலப் போக்கில் அது தொடர்பற்ற வெவ்வேறு குலமெனக் கருதும் நிலை வந்துவிட்டது. ஒவ்வொருவரும் தம் பேதைமையால் **'குலப் புராணம்'** பாடும் இயல்புடையவராக மாறி விட்டனர். எனவே சாதிப் பிரிவிற்கு எந்த ஒரு வகுப்பாரும் பொறுப்பாளர் அல்லர் என்றே தோன்றுகின்றது. இத்தகைய சாதிப் பிரிவுகளால்

2. மேல் - நூற் 64.

3. சாதி - ஜாதி, ஜம் - பிறப்பு. ஜனித்தல் - பிறத்தல். ஜன்மம் - பிறப்பு.

போட்டி, பொறாமை, ஏளனப் பேச்சுகள் முதலியவற்றால் சமூகக் கொடுமைகள் தோன்றி சமூகத்தையே அலக்கழித்து வந்ததை அறிஞர்கள் அருளாளர்கள் கவனத்தையும் ஈர்த்து விட்டன. அதனால் அவர்களும் இக்கொடுமைகளைக் கடிகின்றனர்; பல கருத்துகள் இன்று நூல் வடிவத்தில் கிடைக்கின்றன.

1. **வள்ளல் பெருமான்:** இராமலிங்கர் தம் காலத்தில் இருந்த இத்தகைய பல்வேறு கொடுமைகளைக் கடிந்த போக்கினை அவர்தம் பாடல்களால் அறிய முடிகின்றது. அவர்தம் உயரிய கொள்கை பரவுவதற்கு சாதி சமய வேறுபாடுகள் தடைக் கற்களாக இருந்தன. சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய குறிக்கோள் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை. இறைவனிடத்துச் செய்து கொண்ட சுத்த சன்மார்க்க சத்தியச் சிறுவிண்ணப்பத்தில் அடிகள் இதனை அழகாகக் கூறுவர். ''எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத்தடையாகிய சமயங்கள், மதங்கள், மார்க்கங்கள் என்ப வற்றின் ஆசாரங்கள், விகற்பங்கள் எங்கள் மனத்தில் பற்றாத வண்ணம் அருள் செய்தல் வேண்டும். **சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய இலட்சியமாகிய ஆன்ம நேய ஒருமைப்பாட் டுரிமை எங்களுக்குள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவும் விலகாமல் நிறைந்து விளங்கச் செய்தருளல் வேண்டும்''** என்பது பரம்பொருளை நோக்கிய அடிகளாரின் விண்ணப்பம்!

இத்தடைகளைத் தகர்த்தெறியக் கருதினவர்கள் மலை போன்ற தடைகளை உளி கொண்டு பிளக்கவில்லை. வெடி வைத்தே தகர்த்தார்கள். எல்லாம் **''பாட்டு வெடிகள்!''** அவற்றால் தூள் தூளாக்கினார். அடிகளாரின்,

சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரசண் டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்!
அலைந்தலைந்து வீணேநீர் அழிதல்அழ களவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே நிறுத்த
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர்அவர்தாமே

வீதியிலே அருட்சோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம்இது கூவுகின்றேன் உமையே

*-6 (முடி) புனித குலம் பெறுமாறு புகலல் -1*

என்ற பாடலில் இக் கூவுதலைக் காணலாம்.

சாதி சமயங்களிலே வீதி பல வகுத்த சாத்திரக் குப்பைகள் எல்லாம் பாத்திரம் அன்று என்கின்றார்.

சாதிசம யங்களிலே வீதிபல வகுத்த
சாத்திரக்குப் பைகள்எல்லாம் பாத்திரம்அன் றெனவே
ஆதியில்என் உளத்திருந்தே அறிவித்த படியே
அன்பால்இன் றுண்மைநிலை அறிவிக்க அறிந்தேன்
ஓதிஉணர்ந் தோர்புகழும் சமரசன் மார்க்கம்
உற்றேன்சிற் சபைகாணப் பெற்றேன்மெய்ப்பொருளாம்
சோதிநடத் தரசைஎன்றன் உயிர்க்குயிராம் பதியைச்
சுத்தசிவ நிறைவைஉள்ளே பெற்றுமகிழ்ந் தேனே.

*- 6(முடி) அநுபவமாலை - 92*

என்ற பாடலில் இதனைக் கண்டு மகிழலாம்.

இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பைகளை எல்லாம் எருவாக்கி குழி வெட்டி மண் மூடிப் போட்டு அருட்சோதி வீதியில் தம்மை ஆடச் செய்தான் ஆண்டவன் என்பதை,

இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு
மருட்சாதி சமயங்கள் மதங்களைச் சிரம
வழக்கெல்லாம் குழிக்கொட்டி மண்மூடிப் போட்டுத்
தெருட்சாருஞ் சுத்தசன் மார்க்கநன் வீதி
சிறந்து விளங்கஓர் சிற்சபை காட்டும்
அருட்சோதி வீதியில் ஆடச்செய் தீரே
அருட்பெருஞ் சோதிஎன் ஆண்டவர் நீரே.

*- 6 (முடி) சிவானந்தத்தழுந்தல் - 10*

என்ற பாடலில் காட்டுகின்றார்.

சாதியும் சமயமும் மதமும் தவிர்த்துச் சுத்தச் சன்மார்க்க வீதியில் தாம் நிறுவுவதாக மக்களை நோக்கி அழைப்பதை,

**ஆதியும் நடுவும் அந்தமும் இல்லா**
**அருட்பெருஞ் சோதிஎன் உளத்தே**
**நீதியில் கலந்து நிறைந்தது நானும்**
**நித்தியன் ஆயினேன் உலகீர்!**
**சாதியும் மதமும் சமயமும் தவிர்த்தே**
**சத்தியச் சுத்தசன் மார்க்க**
**வீதியில் உமைத்தான் நிறுவல் உண்மை**
**விளம்பினேன் வம்மினோ விரைந்தே.**

*- 6 (முடி) தனித்திரு மாலை (9) 21*

நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலான கலைச் சரிதம் எல்லாம் **'பிள்ளை விளையாட்டு'** என்றும், தோல்வருணம்[4] கண்டு மேல்வருணம் அறிவார் இல்லை என்றும் கூறுவதை,

**நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் எல்லாம்**
**நவின்றகலைச் சரிதம் எலாம் பிள்ளைவிளை யாட்டே**
**மேல்வருணம் தோல்வருணம் கண்டறிவார் இலைநீ**
**விழித்துபார் என்றெனக்கு விளம்பியசற் குருவே**
**கால்வருணம் கலையாதே வீணில்அலை யாதே**
**காண்பனஎல் லாம்எனக்குக் காட்டியமெய்ப் பொருளே**
**மால்வருணம் கடந்தவரை மேல்வருணத் தேற்ற**
**வயங்குநடத் தரசேஎன் மாலைஅணிந் தருளே.**

*- 6 (இடை) அருள்விளக்க மாலை - 85.*

என்ற பாடலில் கண்டு மகிழலாம்.

'எம்குலம் எம் இனம்' என்பதை

---

4. தோல் வருணம் - உடல் தோலின் நிறம். மேல் வருணம் - சாதி.

**'எம்குலம் எம்மினம்' என்பதோண் ணூற்றாறு**
**அங்குலம் என்றருள அருட்பெருஞ் சோதி**

*- அருட்பெருஞ்சோதி அகவல் அடி (219-220)*

என்று காட்டுவார். தொண்ணூற்றாறு அங்குலம் என்றது உடம்பை. உடம்பு அவரவர்கையால் எட்டுச் சாண்.[5] ஒரு சாண் - பன்னிரண்டு அங்குலம். எட்டுச் சாண் = 96 அங்குலம். 'எம்குலம் எம் இனம்' என்பது எண்சாண் (96 அங்குலம்) உடம்புக்கேயன்றி அவ்வுடம்பின் உறுபொருளாகிய உயிருக் கன்று என்பது கருத்து. இதனை அருட் பெருஞ்சோதியே (கடவுளே) தனக்கு அருளிற்று என்பார் 'என்றருள் அருட் பெருஞ்சோதி' என்றார். அந்த அருட்பெருஞ்சோதியை,

**சாதியும் மதமும் சமயமும் காணா**
**ஆதிஅ நாதியாம் அருட்பெருஞ் சோதி**

*- மேலது. அடி (115-116)*

என்று கூறுவார். சாதியும் மதமும் சமயமும் அருட்பெருஞ் சோதியைக் காணத் துணை செய்யாது. அருட்பெருஞ் சோதியைச் சாதியாலும் மதத்தாலும் சமயத்தாலும் காண இயலாது என்பது கருத்து. இந்த அருட்பெருஞ்சோதியே. ஆதியில் இவை அனைத்தும் பொய் என்பதாக உணர்த்தியதை,

**சாதியும் மதமும் சமயமும் பொய்என**
**ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ் சோதி.**

*- மேலது. அடி (211-212)*

என்று காட்டுவார். இவற்றை எல்லாம் தவிர்த்துத்தான் இறைவன் தன்னை மேலேற்றினான் என்பதை,

**சாதிகுலம் சமயம் எலாம் தவிர்த்தெனைமேல் ஏற்றித்**
**தனித்ததிரு அமுதளித்த தனித்தலைமைப் பொருளே**
**ஆதிநடுக் கடைகாட்டா தண்டபகிர் அண்டம்**
**ஆம்உயிர்கள் அகம்புறம்மற் றனைத்தும்நிறை ஒளியே**

---

5. 'எண் சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்' என்ற உலக வழக்கை உன்னுக.

ஓதிஉணர்ந் தவர்எல்லாம் எனைக்கேட்க எனைத்தான்
ஓதாமல் உணர்ந்துணர்வர் உருவுறச்செய் உறவே
சோதிமய மாய்விளங்கித் தனிப்பொதுவில் நடிக்கும்
தூயநடத் தரசேஎன் சொல்லும்அணிந் தருளே.

*- 6 (இடை) அருள்விளக்க மாலை - 23*

என்ற பாடலால் விளக்கி அருள்வார்.

சாதி முதலியவற்றை எல்லாம் விடுவித்து தம்மை ஞான நீதியிலே சுத்த சிவஞான மார்க்க நிலைதனிலே இறைவன் நிறுத்தியதை,

சாதியைநீள் சமயத்தை மதத்தைஎலாம்
விடுவித்தென் தன்னை ஞான
நீதியிலே சுத்தசிவ சன்மார்க்க
நிலைதனிலே நிறுத்தி னானைப்
பாதியைஒன் றானவனைப் பரம்பரனைப்
பராபரனைப் பதிஅ னாதி
ஆதியைச்சிற் றம்பலத்தென் அருட்பெருஞ்சோ
தியைப்பெற்றேன் அச்சோ அச்சோ.

*- 6 (முடி) அச்சோபத்து - 10*

என்ற பாடலால் விளக்கிக் காட்டி அருள்வார்.

வாய்ச் சழக்கான இந்த சாதி மதம் என்பவற்றை யெல்லாம் தவிர்த்தவன் இறைவன். இதனை,

ஆதிஅந்தம் தோற்றாத அரும்பெருஞ்சோ தியனே
அம்மேஎன் அப்பாஎன் ஐயாஎன் அரசே
ஓதிஎந்த வகையாலும் உணர்ந்துகொளற் கரிதாய்
உள்ளபடி இயற்கையிலே உள்ளஒரு பொருளே
ஊதியந்தந் தெனையாட்கொண் டுள்ளிடத்தும் புறத்தும்
ஓவாமல் விளங்குகின்ற உடையவனே இந்தச்
சாதிஇந்த மதம்எனும் வாய்ச் சழக்கையெல்லாம் தவிர்த்த
சத்தியனே உணர்கின்றேன் சத்தியத்தெள் அமுதே.

*- 6 (முடி) பெறாப்பேறு - 3*

என்ற பாடலில் உணர்த்தியருள்கின்றனர் அடிகள் பெருமான்.

அடிகள் இறைவனை அழைப்பதை,

ஆதியும் அந்தமும் இன்றிஒன் றாகி
அகம்புறம் அகப்புறம் புறப்புறம் நிறைந்தே
ஓதியும் உணர்ந்தும்இங் கறிவரும் பொருளே
உளங்கொள்சிற் சபைநடு விளங்குமெய்ப் பதியே
சோதியும் சோதியின் முதலுந்தான் ஆகிச்
சூழ்ந்தெனை வளர்க்கின்ற சுதந்தர அமுதே
சாதியும் சமயமுந் தவிர்த்தவர் உறவே
தனிநட ராஜஎன் சற்குரு மணியே

*- 6 (இடை) சற்குரு மணிமாலை - 20*

என்ற பாடலில் கண்டு மகிழலாம். உள்ளம் குழைந்து அடிகள் உறவாடுவதை உளமார அநுபவிக்கலாம்.

இறைவன் சாதி முதலியவற்றைக் கடந்த தனிப் பெரும் பொருள் என்பதை,

ஆதியும் அந்தமும் இல்லாத்
தனிச்சுட ராகிஇன்ப
நீதியும் நேர்மையும் ஓங்கப்
பொதுவில் நிருத்தமிடும்
சோதியும் வேதியும் நான்அறிந்
தேன்இச் செகதலத்தில்
சாதியும் பேதச் சமயமும்
நீங்கித் தனித்தனனே.

*- 6 (முடி) சிவானந்தப்பற்று - 6*

என்ற பாடலில் தெளிவாகத் தெளிவிப்பார்.

இங்ஙனம் சாதி சமய வேறுபாடுகளைக் கடிந்து, கண்டித்து, அடிகள் அருளிய பாடல்கள் அவர்தம் திருவருட்பா பலவாகும். அடிகளின் திருமுன்னர் சாதி வேற்றுமைக்கு இடமே இருந்த தில்லை. பார்ப்பனர் சபாபதி சிவாச்சாரியர் முதல் பறையன் அமாவாசை வரை எல்லாச் சாதியாரும் அடிகளிடம் சமமாகப்

பழகி ஒழுகினர். முன்னவர் தம் பூணூலையும் சிகையையும் நீக்கி விட்டு அனைவருடனும் சமமாகப் பழகி ஒரே பந்தியில் உண்டு வந்தார். இவ்வாறு வள்ளல் பெருமான் ஆன்மிக நெறிக்கு சாதி மத சமய சாத்திரங்கள் முதலியவை பெருந் தடைக் கற்கள் என்பதை மன்பதைக்குக் காட்டி அவற்றைத் தவிர்த்தார்; கடிந்தார். ஒழித்துக் கட்ட ஒல்லும் வகையெல்லாம் முயன்றார். இஃது ஒரு வகையில் ஆன்ம நெறியில் ஒழுகுவார்க்கு அமைதி யாகக் காட்டப் பெறும் ஒருவகைச் **'சாதி ஒழிப்பு'** ஆகும்.

2. **தந்தை பெரியார்:** தந்தை பெரியார் காட்டும் 'சாதி ஒழிப்பு' முறை உலக வாழ்க்கை பற்றியதாகும். அமைதியான உலக வாழ்க்கைக்கு இன்றியமையாத நெறியுமாகும். சாதி வேறு பாட்டிற்கு மூலகாரணம் கடவுள் என்று கருதி அதனை முதலில் ஒழிக்க வேண்டும் என்று கூறுபவர் தந்தை பெரியார். இதனால் இவர்தம் அணுகுமுறை சற்று வேறுபட்டதாகின்றது. ஓரிடத்தில் ''நான் தீவிர சீவாதார எண்ணமுடையவன். எனக்குச் சாதி என்பதோ, சாதி என்பதன் பெயரால் கற்பிக்கப்பெறும் உயர்வு தாழ்வுகளோ இல்லை. அத்தகைய எண்ணத்தையே நான் எதிர்ப் பவன். ஆதரிப்பவன் அல்லன்'' என்று கூறுவார். சிறு வயது முதற் கொண்டே இதனைக் கருதுபவர் இம்மகான். சுமார் நாற்ப தாண்டுக் காலத்திற்குமேல் 'சாதிய் ஒழிய வேண்டும், மதம் ஒழிய வேண்டும், சாத்திரம் ஒழிய வேண்டும்' என்று சொல்லி யும் எழுதியும் வந்தவர். வாய்ப் பேச்சுடன் நிற்காமல், கடவுள் ஒழிய வேண்டும் என்பதை பிள்ளையார் சிலைகளை நடுத் தெருவில் போட்டு உடைத்தார். இராமர் படத்தைச் செருப்பால் அடித்தார். அதனைத் தீயிட்டுக் கொளுத்தினார். இராமாயணம், கீதை, மனுதர்மம் போன்ற நூல்களை நெருப்பில் போட்டு மக்கள் முன் பொசுக்கினார். தமக்கு வந்த அமைச்சர் பதவி, ஆளுநர் பதவி ஆகியவற்றையெல்லாம் உதறித் தள்ளி விட்டு நாற்பதாண்டுக் காலத்திற்கு மேல் கடவுள் சாதி ஒழிப்புக்காகப் பாடுபட்டு வந்த மாபெரும் மனிதர் இவர். ஈரோட்டிலுள்ள

வாய்க்காலில் நான்கு படித்துறைகள், பார்ப்பானுக்கு ஒன்று, அவனுக்கு ஒன்று, இவனுக்கு ஒன்று என்று இருந்தவற்றை யெல்லாம் ஒன்றாக்கி சமூகச் சீர்திருத்தம் செய்தவர் பெரியார்; உண்மையிலே வாய்ச் சொல் வீரராக இராமல், செயல் வீரராகத் திகழ்ந்தவர். ''சொல்லிய வண்ணம் செய்த'' மாபெரும் மனிதர்.

குரு - சீடர் முறையில் உபதேசிக்கப் பெற்ற திருமந்திரத்தை - ஓம் நாராயணயா நம, என்ற எட்டெழுத்து மந்திரத்தை - ''தான் அறப் பெய்துமாயும் தடமுகிலை'' ஒத்த இராமாநுசர் திருக்கோட்டியூர் கோபுரத்தின் மீதேறி அனைவரும் கேட்க முழங்கினார். இவரைப் போலவே தந்தை பெரியாரும் தம் வாழ்நாள் முழுவதும் பார்ப்பனரல்லாத சமூகத்திற்காக - சாதி பேதமின்றி - தம் பணியைச் செய்தவர்.

**காரேய் கருணை இராமாநுசர் இக்கட லிடத்தில்**
**ஆரே அறியவர்நின் அருளின் தன்மை** *(இரா.நூற்.25)*

என்று திருவரங்கத்தமுதனார் இராமாநுசருக்குச் சொன்ன வாக்குச் சான்று தந்தை பெரியாருக்கு முற்றிலும் பொருந்தும் என்று சொல்லுவது மிகையன்று. சாதி ஒழிப்புபற்றி அவர் பேசிய பேச்சு பற்றி தொகுத்து எழுதினால் ஒரு காவியமே எழுதலாம். உள்ளத்தால் பொய்யாது ஒழுகிய காரணத்தால் தந்தை பெரியார் உலகத்தார் உள்ளத்தினில் எல்லாம் வாழ்கின்றார்.

**3. அரசுகள்:** மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற அரசுகள் சாதி ஒழிப்புக்காக மேற்கொள்ளும் செயல்கள் நகைச்சுவை நாடகங்களாகத் திகழ்கின்றன.

(அ) ஓர் அரசு தெருவிலுள்ள சாதிப் பெயர்களை அகற்ற வழிவகுத்து செய்றபடுத்தியது. 'கிருஷ்ணமாச்சாரியார் சாலை' என்பதிலுள்ள 'ச்சாரியார்' என்ற பகுதியை நீக்கினார்கள். (நுங்கம்பாக்கத்தில்). கிருஷ்ணமா சாலை என்று இப்போது நிற்கிறது. காஞ்சிபுரத்தில் 'அய்யர் தெரு' என்று ஒரு தெரு உள்ளது. புதுச்சேரியில் 'செட்டித் தெரு' என்று உள்ளது.

இவற்றி லுள்ள சாதிப் பகுதியை நீக்கி விட்டால் என்னவாகும்? 'தெரு' என்ற பெயர் தெருவில் நிற்கும்! இவை போலவே பிள்ளைமார் தெரு, முதலியார் தெரு, பிராமணர் தெரு என்றெல்லாம் உள்ளன. அவற்றின் சாதிப் பெயர்களை நீக்கிவிட்டால் **'சாதி ஒழிப்பு'** நீங்கி விடுமா?

(ஆ) இன்னோர் அரசு வாக்காளர் பட்டியலிலுள்ள சாதிப் பெயர்களை நீக்கியது. ஆள் மாறாட்டம் நடைபெறுகின்றது. இம்மாற்றத்தால் **'சாதி ஒழிப்பு'** செய்யப் பெற்றதாகிவிடுமா?

(இ) சொத்துக்களை விற்பனை செய்யும்போது அல்லது வாங்கும்போது ''முருகேசம் பிள்ளை என்பவரிடம் வாங்கி மூக்கையாதேவர் என்ற நான் அநுபவித்து வரும் அடியிற் கண்ட சொத்துகளை இப்போது விற்கிறேன்'' என்பதிலுள்ள 'பிள்ளை', 'தேவர்' என்ற பெயர்களை நீக்கிப் பதிவு செய்ய முடியுமா? சொத்து மாறி விடாதா? அடையாளத்திற்காக உள்ளவற்றை மாற்றுவது அறிவுடைமையாகுமா? என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(ஈ) சாதி விகிதாச்சாரப்படி பள்ளி கல்லூரிகளில் சேர்க்கும் திட்டம், அரசு உத்தியோகங்கள் சாதி விகிதாச்சாரப்படி வழங்குதல் நடைமுறையில் உள்ளன. இத்திட்டங்கள் உள்ளவரை **'சாதி ஒழிப்பு'** எப்படிச் செயற்பட முடியும்?

4. **பல்கலைக்கழகங்கள்:** இங்கும் மேற்குறிப்பிட்ட நிலைமைகள் தாம். சாதி அடிப்படையில் மாணவர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்தல், சாதி அடிப்படையில் அலுவலர்களை பேராசிரியர் களை நியமித்தல் நடைபெறுகின்றது. சாதிபற்றி சான்றிதழ்கள் அதிகாரிகளிடம் பெறுவதில் கையூட்டு தலை விரித்தாடுகின்றது. சாதி ஓர் **'உரிமம்'** போல் ஆய்விட்டது. பொருளாதாரமும் சாதியும் சார்ந்த அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப் பெறுதலை வற்புறுத்தல் மிகமிக அவசியம். யானறிந்த ஓர் தலைமைச் செயலர் திருக்குலத்து வகுப்பினர். பல்லாயிரம்

ஊதியம் பெற்றவர். ஓய்வு பெற்ற பின் பல கோடி மதிப்புடைய சொத்துக்குரியவர். அவர்தம் பிள்ளைகட்குச் சாதி அடிப்படையில் எல்லாச் சலுகைகளும் பெற வாய்ப்பு உண்டு. பொருளாதார அடிப்படையும் சேர்ந்தால் இவர்கள் சலுகை பெற வாய்ப்பு இருக்காது. ''சாதி'' உரிமம்போல் ஆகக் கூடாது.

பல்கலைக்கழக நிகழ்ச்சி ஒன்று நகைப்பிற்கு இடமாகின்றது. நான் பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு இருபத்தையாயிரம் வெண் பொற்காசுகள் அனுப்பி என் பெயரில் ஓர் அறக்கட்டளை நிறுவுமாறு கேட்டுக் கொண்டேன். பல்கலைக்கழகம் அறக்கட்டளைக்கு இலட்சம் ரூபாய் என்று பதிலிறுத்தது. தமிழ் எம்.ஏ.யில் முதல் வகுப்பில் முதல்நிலை மாணவனாகத் தேர்ச்சிப் பெறுபவர்க்குரிய பரிசுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு எழுதினேன். முதலில் பல்கலைக்கழகம் அதற்கு ஒப்புக் கொண்டது. சின்னாட்கள் சென்ற பிறகு ''சுப்புரெட்டியார் என்ற பெயரில் 'ரெட்டியார்' என்ற சாதிக் குறிப்பு உள்ளதால் சாதியாரிடமிருந்து தொகை பெறுவதில்லை'' என்று எழுதியது. நான் தொகையைத் திருப்பி அனுப்புமாறு எழுதிப் பெற்று அதனை **இலயோலா கல்லூரி** (சென்னை)யில் அருட்தந்தை ஜெரோம் டி சௌசா - என் பெயர் சேர்ந்த பெயரில் அறக் கட்டளையை நிறுவி விட்டேன். மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகமும் இவ்வாறு அறக்கட்டளைக்கு இலட்சம் என்று கேட்டதால் இருபத்தையாயிரம் வெண் பொற்காவுகளை தங்கப் பதக்கத்திற்கு வைத்துக் கொள்ளுமாறு எழுதிவிட்டேன்.

இருபத்தையாயிரம் வீதம் ஏழு பல்கலைக்கழகங்களில் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளேன். நான் செல்வச் செழிப்புள்ளவன் அல்லன். ஓய்வு ஊதியத்தில் வாழ்பவன். விருதுகள் பெறுவதில் கிடைக்கும் தொகைகளை எல்லாம் இங்ஙனம் ஒதுக்கி விடுகிறேன். இன்னும் மூன்று பல்கலைக்கழகங்களில் நிறுவ வேண்டும். நிதி வரும் வாய்ப்புகள் வரின் என் விருப்பம் நிறைவேறும். இளமை முதல் இன்றுவரை (அகவை 87) உயர்

கல்வியில் அக்கறை காட்டி வருபவன். அத்தகைய மனப்பான்மையை அளித்துள்ளான் அடியேனுக்கு இறைவன்.

அரசு நிறுவனங்கள், பல்கலைக்கழங்கள் இவை செயற்படுவதைக் கவனித்தால் அதை சாதி அடிப்படையில் இயங்குகின்றன என்பது தெரிய வரும். சாதி வேறுபாடு ஒழிய வேண்டும் என்று ஒரு புறம் கூறிக் கொண்டு சாதி இருப்பை நிலை நாட்டும் போக்கில் நடைபெறுவதைக் கவனிக்கும்போது இங்ஙனம் முரண் பட்ட கொள்கைகளைக் கடைப்பிடிப்பதைக் கண்டு படிப்பறிவில்லாத வர்களின் ஏளனத்திற்குக் கூட இடம் அளிக்கின்றது. சாதிச் சங்கங்கள் பெருகி வருவதையும் காண்கின்றோம். சமூகத்தின் இந்த நிலையைக் கண்டு வாக்காளர் வங்கியை நம்பும் அரசியல் வாதிகள் தேர்தலில் சாதி அடிப்படையில் ஆட்களை நிறுத்துகின்றனர். வெற்றியும் பெறுகின்றனர். இவர்களே பின்னர் சாதி வேறுபாடு கூடாது என்று ''வாய்ச் சவடால்'' அடித்துக் கொண்டு சாதி இருப்பை நிலை நிறுத்தும் செயல்களைச் செய்து வருகின்றனர்.

மனித இனத்தில், அறிவியல் அடிப்படையில் நோக்கினால், சாதிகள் இல்லை. கோவை ஆலைகளில் பருத்தியால், அல்லது வேறு பொருள்களாலான ஆடைகள் உற்பத்தியாகின்றன. வெளி வந்த துணிகளின்மீது பெயர்களை அச்சிட்டு துணிகளை வேறுபடுத்திக் காட்டுகின்றனர். மனிதன் பிறக்கிறான். பிறக்கும் போது சாதி அடையாளம் இல்லை. பின்னர் பெற்றோர் சாதி முத்திரை இடுகின்றனர். இதனை,

**எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்பது அறிவு.** *(குறள்-355)*

என்ற **'மெய்யுணர்தல்'** அதிகாரத்திலுள்ள குறளுக்கு உரை காணும் பரிமேலழகர் உரையில் இக்குறிப்பு காணப் பெறுகின்றது. ''பொருள் தோறும் உலகத்தார் கற்பித்துக் கொண்டு நின்ற உண்மையைக் காண்பது என்றவாறாயிற்று. அஃதாவது,

'கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும் பொறை' என்ற வழி 'கோ' என்பதால் அரசன் என்பதோர் சாதியும், 'சேரமான்' என்பதால் ஒரு குடியும், 'யானைக் கண்' என்பதால் வேழ நோக்குடையான் என்பதோர் வடிவும், 'சேய்' என்பதால் ஓர் இயற்பெயரும், 'மாந்தரஞ் சேரல் இரும்பொறை' என்பதால் ஓர் சிறப்புப் பெயரும் ஒரு பொருளின்கண் கற்பனை யாதலின், அவ்வாறு உணராது நிலம் முதல் உயிர் ஈறாகிய தத்துவங்களின் தொகுதி என உணர்ந்து, அவற்றை நிலம் முதலாகத் தத்தம் காரணங்களில் ஒடுக்கிக் கொண்டு சென்றால் காரண காரியங்கள் இரண்டுமின்றி முடிவாய் நிற்பதனை உணரலாம். 'எப்பொருள்' எனப் பொதுமையால் இயங்கு திணையும் நிலைத் திணையுமாகிய பொருளெல்லாம் இவ்வாறே உணரப் பெறும்.'' இந்த உரையில் 'சாதி' என்ற ஒன்று இல்லை என்பது தெள்ளிதின் உணரப் பெறும்.

இன்னோர் உண்மையையும் ஈண்டுக் காண்போம்.

**பெற்றமும் எருமையும் பிறப்பினில் வேறே**
**அவ்விரு சாதியில் ஆண்பெண் மாறிக்**
**கலந்து கருப்பொறல் கண்ட துண்டோ?**
**ஒருவகைச் சாதியாம் மக்கட் பிறப்பில்**
**இருவகை யாகநீர் இயம்பிய குலத்து**
**ஆண்பெண் மாறி அணைதலும் அணைந்தபின்**
**கருப்பொறை உயிர்ப்பதும் காண்கின் றிலரோ?**
**எந்நிலத் தெந்தவித திடப்படு கின்றதோ**
**அந்நிலத் தந்தவித் தங்குரித் திடுமலால்**
**மாறிவே றாகும் வழக்கமொன் றிலையே.**[6]

*(கருப்பொறை உயிர்ப்பு - பிள்ளை பெறுதல் - அங்குரித்தல்-முளைத்தல்)*

என்ற கபில ரகவலைக் காண்க.

---

6. கபிலரகவல் - ஆடி (68-77)

பசுவேறு, எருமை வேறு; இதில் காளை புணர்ந்து எருமையில் கரு உண்டாவதில்லை. எருமைக் கடா புணர்ந்து பசுவிடம் கரு உண்டாவதில்லை. பெற்றமும் எருமையும் பேதமாய்த் தோன்றல்போல மாந்தரில் பேத வடிவு காணப் பெறவில்லை.

**பூசுரர் புணர்ந்து புலைச்சியர் ஈன்ற**
**புத்திரர் ஆயினோர் பூசுரர் அல்லரோ?**[7]

என்று கேட்கின்றார். இதனால் மாந்தர் யாவரும் ஓர் இனம் என்பது உறுதிப்படுகின்றது. மாந்தரில் சாதி இயற்கையன்று; செயற்கை. நாமே இட்டது என்பது பெறப்படுகின்றது. எனவே மானிடத்தில் சாதி வகை இல்லை என்பது உண்மை. அதனைக் களைவது அறிவுடைமையாகும்.

இன்னொரு புதுக் கவிதை. ஒரு பக்தன் தன் அருகே வந்த நாயை அடித்துத் துரத்தி ஆண்டவனைத் தரிசிக்க ஆலயத்துக்குள் புகுகின்றான். அவனைப் பார்த்து கவிஞர் பேசுகின்றார்.[8]

**............**
**நாயும் கடவுளும்**
**ஒரே பிரம்மம்தான்**
**என்பதை அறிவாயோநீ?**
**வேண்டுமானால்**
**அந்த இரண்டுக்குமுரிய**
**ஆங்கிலச் சொல்லின்**
**எழுத்துகளை**
**மாறிப் போட்டுப்பார்.**[9]

---

7. மேலது - அடி (78-79)
8. கோதண்டம், கொ.மா. கோழிக் குட்டிகளும் பன்றிக் குஞ்சுகளும் - பக். 23
9. Dog -God

ஆன்மாநுபவம் பெற்ற கைவல்யார்த்திக்கே இரண்டும் ஒன்றாகத் தெரியும். இறையநுபவம் பெற்ற உண்மை பக்தனுக்கு இந்தத் தத்துஉண்மை கட்டாயம் தட்டுப்படும். வேதாந்த இரகசியம் இது! இத்தகையவற்றைப் படிக்கும் மக்களிடம் இவை நல்ல மனமாற்றத்தை விளைவிக்கும் என்று கருதலாம்.

இங்கு சாதி வேறுபாடு இருப்பதுபோல் அமெரிக்காவில் நிற வேறுபாடு - கறுப்பர், வெள்ளையர் என்ற வேறுபாடு உண்டு. அவ்வேறுபாடு எப்படியோ ஓரளவு நீங்கி - இன்று எல்லாப் பதவிகளிலும் கறுப்பர்கள் பணியாற்றி வருவதைக் கருதலாம். இவையெல்லாம் புறத் தோற்றங்கள். இவ்வேறுபாடுகள் மன மாற்றத்தால் மாறி மனிதர்கள் யாவரும் ஓர் இனம் என்பதை உணர்ந்தால் அந்த நாள்தான் பண்பட்ட 'மனித நாகரிகம்' கண்டதாக அமையும். சாதி வேறுபாடு, நிறவேறுபாடு போன்றவை மன்பதையை விட்டு நீங்கும். அந்த நாளை எதிர்பார்ப்போமாக.

# 13. வைணவ சிகரப் பேரொளி*

இளையாழ்வார் என்று வழங்கப்பெறும் இராமாநுசர் தொண்டை நாட்டைச் சார்ந்த ஸ்ரீபெரும்புதூரில் பிறந்தார். காஞ்சியில் கல்வி கற்றார். வரதராசருக்குத் தீர்த்த கைங்கரியம் புரிந்தார். இறையருளால் ஆளவந்தார்க்கு அடுத்து வைணவ சமயத்தைப் பரப்பும் பெரும்பணியில் ஆசாரிய சிகாமணியாகத் திகழ்ந்து 120 ஆண்டுகள் வாழ்ந்தார். இப்பணி திருவரங்கத்தில் நடைபெற்றது. சைவ சமயத்தைச் சார்ந்த சோழ மன்னனால் உயிருக்கே ஊறு ஏற்படும் ஆபத்தைக் கருதி இவருடைய சீடர்கள் வெள்ளையாடை புனைவித்துத் தப்ப வைத்தனர். ஐந்து சீடர்களுடன் மேற்கு நோக்கி நடந்து நீலகிரி வழியாக மைசூர்ப் பகுதியைச் சார்ந்த மேல்கோட்டையில் தங்கி இறைபணியைத் தொடர்ந்தார். இவருடைய வாழ்வையும் பணியையும் விரித்து எழுதினால் ஓர் இதிகாசமாக வளரும்.

மேல்கோட்டையில் பணி: மேல்கோட்டை திருநாராயண புரம் என்ற பெயராலும் வழங்குகிறது. தாம் துளசி வனத்தில் கண்டெடுத்த விக்கிரகத்தைத் திருநாராயணபுரத்தில் பிரதிட்டை செய்து ஒரு திருக்கோவில் எழுப்புவித்தார். விட்டல் தேவராயன் என்ற சமண அரசன் வைணவ சமயத்தைத் தழுவினான். இராமாநுசர் அவனுக்கு விஷ்ணுவர்த்தன் ராயன் என்ற பாகவதப் புனை பெயரான தாஸ்ய நாமத்தைச் சூட்டினார். அவனுடைய மகளுக்கும் பிடித்திருந்த பேயும் விலகியது. உடையவர் அருளால் திருநாராயணபுரத்துத் திருக்கோவில் எழும்புவதற்கு இவ்வரசன் புரிந்த உதவி மிகப் பெரிது. திருநாராயணபுரத்துப் பெருமானை 'திருநாராயணன்' என்ற திருப்பெயரால் வழிபட்டனர். திருக்கோயிலில் பல விழாக்களுக்கு

* சர்வமங்கள நகர் - நங்கை நல்லூர் (சென்னை - 51) ஸ்ரீ தர்மலிங்கேசுவரர் ஆலயம் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேக சிறப்பு மலரில் (14-9-1992) வெளிவந்தது.

ஏற்பாடு செய்தார். இராமாநுசர் டில்லி சென்று நவாப்பு வசமிருந்த இராமப் பிரியரை மீட்டார். அதற்குச் 'செல்வப் பிள்ளை' என்ற திருப்பெயரையும் சாத்தி அவரை உற்சவராகக் கொண்டு பல விழாக்கள் எடுப்பித்தார்.

அப்பகுதியில் தாழ்ந்த குலத்தினராகக் கருதப் பெற்ற அரிசனங்கள் இராமாநுசருக்குக் கைம்மாறு கருதாது பல்வேறு உதவிகள் செய்தனர்.

**அற்றவர்சேர் திருவரங்கப் பெருமாள் தோழர்**
**அவதரித்த திருக்குலமென்(று) அறியாய் போலும்!**

என்பது திவ்விய கவியின் வாக்கு. இந்த வாக்கில் வரும் **"திருக்குலம்"** என்ற பெயர் இராமாநுசர் அரிசனக் குலத்திற்குச் சூட்டிய பெயராகும். இவர்கட்கு ஆலயப் பிரவேசமும் செய்து வைத்தார். இப்பகுதியில் 700 மடங்களை நிறுவினார். எண்ணற்ற சீடர்கள் ஏற்பட்டனர். அவர்களுள் 52 பேர் முக்கியமானவர்கள். இப்பகுதியில் உடையவர் பன்னிரண்டாண்டுகள் இருந்ததாக வரலாறு தெரிவிக்கின்றது. தமக்குத் தீமை இழைக்க நினைத்த அரசன் இறந்தான் எனக் கேள்வியுற்றுத் திருவரங்கம் திரும்ப நினைத்தார். சீடர்களும், ஊர்மக்களும் அவர் பிரிவை நினைத்து வருந்தினர். அங்குள்ளவரின் விருப்பத்திற்கிணங்க தம்மைப் போல் ஒரு படிவம் அமைக்க இசைவு தந்து அதற்குத் தம் சக்தியைத் தந்து உதவினார். இப்படிவம் 'தானான உருவம்'. கோவில் வழிபாட்டு முறைகளை அங்குள்ள வைணவர்கட்கு உணர்த்தி விட்டு அவர்களிடம் விடை பெற்றுத் திருவரங்கம் திரும்பினார்.

**திருவரங்கத்துப் பணி:** மைசூர்ப்பகுதியிலிருந்து இராமாநுசர் திருவரங்கத்திற்குத் திரும்பும்போது அவரது அகவை நூறுக்கு மேலாகிவிட்டது. எனினும் குதூகலமாகவே காலட் சேபங்கள் நடத்தித் தமது வைணவப் பெருந்தொண்டைத் தொடர்ந்து நிறைவு செய்ய விரும்பினார். தமது தரிசனமாகிய பக்தி சமயம் மேலும் மேலும் தொடர்ந்து நடைபெற ஆசாரியப்பரம்பரையும்

இடையறாது வளர்ந்து வருவது நலமாகும் என்று கருதினார். தம் நோக்கம் இனிது நிறைவேறுவதற்கு 74 ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைச் '**சிம்மாசனாதிபதிகள்**' என்ற பெயரால் வழங்கும்படிச் செய்தார். இவர்கட்குத் துணை செய்ய எழுநூறு துறவிகளையும் வேறு பல்லாயிரம் பாகவதர்களையும் நியமித்தார். இந்தச் சிம்மாசனாதிபதிகளில் ஆளவந்தாரின் புதல்வர் சொட்டை நம்பி, பெரிய நம்பியின் புதல்வர், திருக் கோட்டியூர் நம்பியின் புதல்வர் தெற்காழ்வான் ஆகியோர் இடம் பெற்றனர். ஆளவந்தாரின் பேரர் எண்ணாச்சான். அவர் பிள்ளை ஆகியோர் உடையவரின் சீடர்களாய்ப் பயிற்சி பெற்றுச் சிம்மாசனாதிபதிகளின் குழுவில் இடம் பெற்றனர். முதலி யாண்டான் (இராமாநுசரின் மருகர்) அவர் புதல்வர் கந்தாடை யாண்டான் எம்பார், கிடாம்பியாச்சான், திருமலைநல்லான், அருளாளப்பெருமான், எம்பெருமானார், யாதவப் பிரகாசர், திருக்குருகைப் பிரான் பிள்ளான், மாறொன்றில்லா மாருதிச் சிறியாண்டான், மாருதிப் பெரியாண்டான், அம்மாள், ஆட்கொண்ட வில்லி, சீயர், வடுக நம்பி ஆகியோரும் சிம்மாசனாதிபதிக ளாயினர்.

முதலியாண்டானின் மகன் கந்தாடை ஆண்டான் முயற்சி யால் இராமாநுசரின் திருமேனி உண்டாக்கப்பெற்றது. உடை யவர் உகப்புடன் அதனைத் தழுவிக் கொண்டார். தமது சர்வ சக்தியும் அதில் தங்கும்படித் தழுவிக் கொண்டதாக ஐதிகம். இந்தத் திருமேனிப் படிவம் '**தான் உகந்த உருவம்**' என வழங்கப் பெற்று சீர் பெரும்பூதூரில் பிரதிட்டைச் செய்யப் பெற்றது.

இராமாநுசரின் புகழ் மக்களுக்கு இதய கீதமாயிற்று. இதனை இலக்கிய வடிவமாக்கி இராமாநுச நூற்றந்தாதி என்ற பெயருடன் வெளியிட்டவர் **திருவரங்கத் தமுதனார்** என்ற கூரத்தாழ்வானின் சீடர். இந்தப் பிரபந்தம் இராமாநுசரின் காலத்திலேயே நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்தில் இயற்பா பகுதியில் இடம் பெற்று விட்டது. இது பிரபந்த காயத்திரி என்ற

திருப்பெயராலும் வழங்கி வருகின்றது. உடையவரின் புகழ்க் கோபுரமாகவும் திகழ்கின்றது.

இராமாநுசருக்கு வலக்கையாக இருந்த கூரத்தாழ்வானும் அபிமானப் புத்திரனாகத் திகழ்ந்த பிள்ளையுறங்கா வில்லிதாசரும் இக்காலத்தில் ஒருவர்பின் ஒருவராகத் திருநாடு அலங்கரித்தனர். இந்த நிகழ்ச்சிகளும், வேறு சிலவும் இராமாநுசருக்கு உலக வாழ்வில் அருசி ஏற்படக் காரணமாயின. இவருக்குப்பின் இத்தரிசனத்தை வளர்க்கத் தக்கவர் பராசரபட்ட ரென்பது உறுதியாயிற்று. இராமாநுசரே இதனை பாகவதர்கட்குச் சுட்டிக் காட்டினார். பிள்ளானையும், கிடாம்பியாச்சானையும் அழைத்துச் சில சிறப்பான பொருள்களை அருளிச் செய்தார். இவர்கள் வாயிலாக இத்தரிசனம் நிலை நிற்கும் என்பது அரங்க நகர் அப்பனின் திருவுள்ளம் என்பதையும் தெரிவித்தார். கோயிலுக்கு நேரே பிள்ளான் மடியில் திருமுடியும், கிடாம்பி ஆச்சான் மடியில் திருவடியுமாகக் கண் வளர்ந்து மீளா உலகம் புகுந்தார். ஆயினும் இன்றும் திருவரங்கத்தில் **'தானேயான'** அவர்தம் திருமேனியைச் சேவிக்கலாம். இவரது திருவுருவம் காஞ்சியில் நடாதூராழ்வானால் பிரதிட்டை செய்யப்பெற்றது. திருப்பதி திருமலை, வேறுபல திருப்பதிகளிலும் இவரது திருமேனி பிரதிட்டைச் செய்யப் பெற்றது. இராமாநுசர் மறைந்தும் மறையாத சோதியாக வைணவச் சிகரப் பேரொளி யாகத் திகழ்கின்றார்.

# பின்னிணைப்பு

## பயன்பட்ட நூல்கள்


| | | |
|---|---|---|
| ஆழ்வார்கள் | : | நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் (கி. வேங்கடசாமி ரெட்டியார் பதிப்பு) |
| இராமலிங்க சுவாமிகள் | : | ஆறாம் திருமுறை (இராமலிங்கர் பணிமன்ற வெளியீடு) |
| சங்கப் புலவர்கள் | : | புறநானூறு (அவ்வை துரைசாமி பதிப்பு) |
| கம்பர் | : | கம்பராமாயணம் - பாலகாண்டம், யுத்த காண்டம் (வை.மு.கோ.பதிப்பு) |
| சுந்தரம் பிள்ளை | : | மனோன்மணீயம் |
| சுப்புரெட்டியார். ந | : | அம்புலிப் பயணம் (கழக வெளியீடு) |
| ,, | : | தொலை உலகச் செலவு (கழக வெளியீடு) |
| ,, | : | புதுக்கவிதை போக்கும் நோக்கும் (பாரி நிலையம்) |
| | | பரணிப் பொழிவுகள் (திருவேங்கடம் பல்கலைக் கழகம்) |

| | | |
|---|---|---|
| தாயுமானவர் | : | தாயுமானவர் பாடல்கள் (தருமபுர ஆதீன வெளியீடு) |
| திருத்தக்கதேவர் | : | சீவகசிந்தாமணி (உ.வே.சா. பதிப்பு) |
| திருமூலர் | : | திருமந்திரமாலை |
| திருவள்ளுவர் | : | திருக்குறள் - பரிமேலழகர் உரை (கழக வெளியீடு) |
| தொல்காப்பியர் | : | தொல்.சொல். இளம்பூரணம் (கழகம்) |
| ,, | : | தொல்.சொல். இளம்பூரணம் (கழகம்) |
| பாரதிதாசன் கவிதைகள் | : | (எல்லாத்தொகுதிகளும்) |
| பாரதியார் கவிதைகள் | : | சுப்பு ரெட்டியார் (பதிப்பு) ஐந்திணை வெளியீடு |
| புகழேந்தி | : | நளவெண்பா (கழகம்) |
| மாணிக்கவாசகர் | : | திருவாசகம் தருமபுர ஆதீன வெளியீடு |
| (குமரகுருபரர் | | திருமந்திர மாலை சங்கம், சீவை குண்டம்) |
| வரதராசன். மு | : | திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் |
| வாலி, கவிஞர் | : | பொய்க்கால் குதிரைகள் (வானதி பதிப்பகம்) |

| | | |
|---|---|---|
| மலர்களும் இதழ்களும் | : | உலகத்திருக்குறள் மாநாட்டு மலர் - 1992 |
| | | நங்கை நல்லூர் ஆலயம் குடமுழுக்கு விழா - மலர் |
| | | ஆனந்த விகடன் இதழ் - 13.3.1983 |
| | | கல்கி இதழ் - 6.3.1983 |

# பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியாரின் நூல்கள்

## ஆசிரியம் (5)

1. தமிழ் பயிற்றும் முறை
2. அறிவியல் பயிற்றும் முறை
3. கவிதை பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனெஸ்கோ: அறிவியல் பயிற்றும் மூல முதல் நூல்

## இலக்கியம் (16)

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. அறிவியல் தமிழ்
11. திருக்குறள் கருத்தரங்கு மலர் - 1974 பதிப்பு
12. கம்பனில் மக்கள் குரல்
13. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
14. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
15. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
16. தமிழ் இலக்கியங்களில் - அறம், நீதி, முறை
17. புதுவை(மை)க் கவிஞர் - சுப்பிரமணிய பாரதியார்: ஒரு கண்ணோட்டம்
18. பாவேந்தர் பாரதிதாசன்: ஒரு கண்ணோட்டம்

19. திருக்குறள் தெளிவு
20. வாய்மொழியும் வாசகமும்
21. மாபெருங் கவிஞர் பாரதியார் கவிதைகள் (பதிப்பு)

## சமயம், தத்துவம்
## (அ) விளக்க நூல்கள் (20)

22. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
23. சைவ சமய விளக்கு
24. சைவ சித்தாந்தம் - ஓர் அறிமுகம்
25. சைவமும் தமிழும்
26. வைணமும் தமிழும்
27. ஆன்மிகமும் அறிவியலும்
28. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம், சம்வாதம்)
29. கலியன் குரல் (அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு)
30. கீதைக் குறள் (பதிப்பு)
31. கண்ணன் எழில்காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)
32. ஆண்டாள் பாவையும் அழகு தமிழும் (பதிப்பு)
33. கண்ணன் துதி (பதிப்பு)
34. இராமர் தோத்திரம் (பதிப்பு)
35. முருகன் துதியமுது (பதிப்பு)
36. திருப்பாவை விளக்கம் (திருமலை - திருப்பதி தேவஸ்தான வெளியீடு)
37. நவவிதசம்பந்தம்
38. அர்த்த பஞ்சகம்

39. அர்ச்சிராதி
40. ஐந்து இரகசியங்கள்
41. வைணவப் புராணங்கள்

## (ஆ) திருத்தலப் பயண நூல்கள் (11)

42. மலைநாட்டுத் திருப்பதிகள்
43. தொண்டைநாட்டுத் திருப்பதிகள்
44. பாண்டிநாட்டுத் திருப்பதிகள்
45. வடநாட்டுத் திருப்பதிகள்
46. சோழநாட்டுத் திருப்பதிகள் - முதற் பகுதி (தமிழ்நாடு அரசு பரிசு பெற்றது)
47. சோழநாட்டுத் திருப்பதிகள் - இரண்டாம் பகுதி (தமிழ்நாடு அரசு பரிசு பெற்றது)
48. தம்பிரான் தோழர்
49. நாவுக்கரசர்
50. ஞானசம்பந்தர்
51. மாணிக்கவாசகர்
52. என் அமெரிக்கப் பயணம்

## திறனாய்வு (28)

53. பாட்டுத்திறன்
54. தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை
55. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
56. அகத்திணைக் கொள்கைகள்
57. கவிதையநுபவம்

58. அண்ணல் அநுமன்
59. புதுக்கவிதை போக்கும் நோக்கும்
60. கண்ணன் பாட்டுத் திறன்
61. பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு
62. பாரதீயம் (தமிழ்நாடு அரசு பரிசு பெற்றது)
63. குயில் பாட்டு: ஒரு மதிப்பீடு
64. உயிர்தந்த உத்தமன் (பதிப்பு)
65. ஆழ்வார்கள் ஆரா அமுது
66. விட்டு சித்தன் விரித்த தமிழ்
67. சடகோபன் செந்தமிழ்
68. பரகாலன் பைந்தமிழ்
69. பாவேந்தர் பாட்டுத் திறன்
70. பாண்டியன் பரிசு - ஒரு மதிப்பீடு
71. கவிஞர் வாலியின் அவதார புருஷன் - ஒரு மதிப்பீடு
72. கவிஞர் வாலியின் பாண்டவர் பூமி - ஒரு மதிப்பீடு
73. வாழும் கவிஞர்கள்
74. அறிவியல் நோக்கில் - இலக்கியம், சமயம், தத்துவம்
75. தந்தை பெரியார் சிந்தனைகள்
76. பண்பாட்டு நோக்கில் கம்பர் காவியம்
77. இலக்கிய வகையின் வளர்ச்சியும் இக்கால இலக்கியங்களும்
78. கவிமணியின் தமிழ்ப்பணி - ஒரு மதிப்பீடு
79. அண்ணல் அநுமன்
80. பல்சுவை விருந்து

## வரலாறு, தன் வரலாறு (17)

81. நினைவுக் குமிழிகள் - முதற்பகுதி
82. நினைவுக் குமிழிகள் - இரண்டாம் பகுதி
83. நினைவுக் குமிழிகள் - மூன்றாம் பகுதி
84. நினைவுக் குமிழிகள் - நான்காம் பகுதி
85. நினைவுக் குமிழிகள் - ஐந்தாம் பகுதி
86. மலரும் நினைவுகள்
87. நீங்காத நினைவுகள்
88. வேமனர்
89. குரஜாட
90. சி.ஆர். ரெட்டி
91. தாயுமானவர்
92. பட்டினத்தடிகள்
93. வள்ளல் இராமலிங்கர்
94. இராமாநுசர்
95. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்க ராசாரிய சுவாமிகள்
96. தமிழ்க்கடல் ராய.சொ.
97. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம்

## அறிவியல் (16)

98. மானிட உடல்
99. அணுவின் ஆக்கம்
100. இளைஞர் வானொலி
101. இளைஞர் தொலைக்காட்சி
102. அதிசய மின்னணு

103. நமது உடல் (தமிழக அரசு பரிசு பெற்றது)
104. அம்புலிப்பயணம்
105. தொலை உலகச் செலவு
106. அணுக்கரு பௌதிகம் (செ.ப.க. பரிசு பெற்றது)
107. இல்லற நெறி
108. வாழையடி வாழை
109. அறிவியல் விருந்து (தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றது)
110. தமிழில் அறிவியல் - அன்றும் இன்றும் (உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு)
111. விண்வெளிப் பயணம் (தமிழக அரசு பரிசு பெற்றது)
112. இராக்கெட்டுகள் (தமிழக அரசு பரிசு பெற்றது)
113. தமிழில் அறிவியல் செல்வம்

## ஆராய்ச்சி (7)

114. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
115. வைணவச் செம்மல் - முதற் பகுதி (தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு)
116. வைணவச் செம்மல் - இரண்டாம் பகுதி (தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு)
117. வட வேங்கடமும் திருவேங்கடமும்
118. Religion and Philosophy of Nalayiram with Special reference to Nammalvar
119. Studies in Arts and Science (61st Birth day commemoration Volume)
120. Collected papers

★



## இந்நூலாசிரியர் பற்றி

87 அகவையைக் கடந்தவர் பணிகள்:

1. 9 ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் (1941-50)

2. 10 ஆண்டுகள் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி - தமிழ்ப் பேராசிரியர் துறைத் தலைவர் (1950-60)

3. திருவேங்கடப் பல்கலைக் கழகத் தமிழ்த் தலைவர் (1960-70)

ஒய்வுக்குப் பின்னர் பணிகள்:

1. 15 திங்கள் தமிழ்க் கலைக் களஞ்சிய முதன்மைப் பதிப்பாசிரியர்.

2. 18 திங்கள் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் - காஞ்சித் தத்துவ மையம் மதிப்பியல் பேராசிரியர்.

3. சென்னைப் பல்கலைக்கழகம் - தமிழ் இலக்கியத்துறை வாழ்நாள் மதிப்பியல் பேராசிரியர்.

4. மதிப்பியல் இயக்குநர் மரபியல் பண்பாட்டு நிறுவனம் (சென்னைப் பல்கலைக்கழகம்)

பிறபணிகள்:

திருப்பதி, மதுரை, பெங்களூர், மைசூர், திருவனந்தபுரம், சென்னைப் பல்கலைக்கழகங்களில் பல்வேறு பணிகள் - பொறுப்புகள்.

பெற்ற பரிசுகள்: 14 நூல்கள் பரிசு பெற்றவை.

பெற்ற விருதுகள்: பத்துக்கு மேல் - பல்வேறு நிறுவனங்களின் மூலம்.